# தமிழ் இலக்கியக் கதைகள்



நா.பார்த்தசாரதி

தமிழ்ப்புத்தகாலயம்

# தமிழ் இலக்கியக் கதைகள்

## நா. பார்த்தசாரதி


**தமிழ்ப் புத்தகாலயம்**

G3/8, மாசிலாமணி தெரு, பாண்டி பஜார்

தி.நகர் சென்னை - 600 017 ☎ 4345904

மின்அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com

வலைப்பக்கம் : http://expage.com/tamilputhakalayam

http://akilan.50mpegs.com

தமிழ் இலக்கியக் கதைகள்

முதற் பதிப்பு : அக்டோபர் 1977
இரண்டாம் பதிப்பு : ஜனவரி 1980
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2001

விலை ரூ. 55.00

**TAMIL ILAKKIYA KATHAIGAL**
Tales from Sangam Literature
by Naa. Parthasarathy
© Sundaravalli Parthasarathy
Third edition : December 2001
Cover design : K. Uma
Total Page : 200

**TAMIL PUTHAKALAYAM**
G3/8, Masilamani Street
Pondybazaar, T. Nagar
Chennai - 600 017
E-mail: tamilputhakalayam@vsnl.com
Website:http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com

**Prize : Rs. 55.00**

Laser Typeset at : **Stanbic Laser Graphics**, Ph : 8239192
Printed at : Jaiganesh Offset Printers, Chennai-4

# உதிரிப் பூக்கள்

## முன்னுரை

சரமாகத் தொடுக்கும் பூக்களைவிட, ஆரமாக அணியும் பூக்களை விட, மாலையாக அணியும் மலர்களைவிடப் புதுமை நலங்குன்றாமல் உதிர்ந்த உதிரிப் பூக்களை அப்படியே திரட்டி நுகர்வது சுவையான அநுபவத்தைத் தரக் கூடியது. உதிரிப் பூக்களின் பலம் அவை உதிரியாக இருப்பதுதான். உதிரியாகவும் தனித்தனியாகவும் இருப்பதே ஒரு வகையில் அவற்றின் சிறப்பு.

தமிழ் இலக்கிய வரலாற்றில் புறநானூறு போன்ற தொகை நூல்களில் உள்ள பாடல்களே உதிரிப் பூக்கள்தான். அவற்றைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும்தான் பின்னாட்களில் ஒரு தொகுதியாக்கினார்கள். 'புறம்' என்னும் ஒரு பொருள் தொடர்பில் அவை தொகுக்கப்பட்டதுபோல் பொருள் தொடர்பு இல்லாத பல உதிரிப் பாடல்கள் பிற்காலத்துத் தனிப்பாடல் திரட்டிலும் பெருந்தொகையிலும் உள்ளன. இந்நூல்களில் பல பாடல்கள் அநுபவத்தின் விளைவுகள்.

பாடியவர்களின் அனுபவங்கள், பாடியவர்களோடு பழகியவர்களின் அனுபவங்கள், உலக அனுபவங்கள், கண்டவை, கேட்டவை, இரசித்தவை எல்லாம் இந்நூல்களில் கவிதைகளாகி இருக்கின்றன. இவற்றில் ஒரு சில சிலேடைப் பாடல்கள்தான் திரும்பத் திரும்பப் பள்ளி மாணவர்களுக்குப் பாடங்களாக வருகின்றன. ஆசிரியர்கள் பதவுரை, பொழிப்புரை, இலக்கணக் குறிப்புக்களோடு மாணவர்களுக்கு அவற்றை நடத்தி விடுகிறார்கள்.

ஆனால் அந்தக் கவிதைக் களஞ்சியத்தின் செல்வங்களில் அதன் பெருமையை அடையாளம் காட்டுவனவற்றை முழுமையாக மாணவர்கள் இரசிக்க முடிவதில்லை. அப்படி அடையாளம் காட்டும் பாடல்களாகத் தொகுக்கப்பட்டுக் கதைகளைப் போன்று சொல்லும் முறையோடு இங்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றில் சில, வரலாறாக இருக்கலாம். சில, வழி வழியாக வரும் கர்ண பரம்பரைச் சொலவடையாக மட்டும் இருக்கலாம். சில, புலவர்களின் வாழ்க்கை அநுபவங்களாகவும் இருக்கலாம்.

எப்படி இருப்பினும் இந்த அநுபவங்கள் தமிழ் இலக்கியத்துக்குச் சொந்தம். இவை தமிழ் இலக்கியத்தின் அநுபவங்கள் அல்லது இலக்கியப் படைப்பாளிகளின் அநுபவங்கள். இந்த அநுபவங்களின் சொந்தக்காரர்கள் தமிழர்கள்; இரசித்து மகிழும் முதல் உரிமையைப் பெற்றவர்களும் தமிழர்கள்.

என்ன காரணத்தாலோ சங்க இலக்கியப் பாடல்களும் புராணங்களும் காப்பியங்களும் பிரபலமாக இருக்கிற அளவு தனிப்பாடல்கள் பிரபலமாக வில்லை. மற்றவற்றைக் காட்டிலும் பாமர மக்களைச் சென்றடையும் எளிமையும் இனிமையும் இவற்றுக்கே உண்டு.

நகைச் சுவைக்குத் தமிழ் இலக்கியத்தின் எந்தப் பகுதியிலாவது அதிக இடம் உண்டு என்றால் அது தனிப்பாடற் பகுதிதான்.

தனிப்பாடல்களின் இனிப்பைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தினாலே ஒரு சுவைக் களஞ்சியத்தின் பிரதான வாயிலைத் திறந்துவிட்ட மாதிரி ஆகும்.

இந்த நூல் அப்படி ஒரு முயற்சியே. 'இனிப்பான தனிப்பாடல்' என்ற பெயரிலும், 'கதம்பக் கவிமலர்கள்' என்ற பெயரிலும் சுதேசமித்திரன் ஞாயிறு மலரிலும், கல்கி வார இதழிலும் முன்பு நான் எழுதியவையும், பிறவும் அப்போது தொகுக்கப்பெற்று இந்நூலாக இங்கு உருப் பெறுகின்றன.

இனி இக்கதைகள் தமிழிலக்கிய இரசனைக்கு உரியவை. தமிழ்ப் புத்தகாலயத்தார் இதனை இப்போது நூலுருவில் கொண்டுவருகிறார்கள்.

இதற்கு மேல் இந்த நூலுக்கும் வாசகர்களுக்கும் நடுவே நின்று தடுக்க ஒரு முன்னுரைக்கு இங்கே உரிமை இல்லை என்று எண்ணுகிறேன்.

நன்றி, வணக்கம்

**நா. பார்த்தசாரதி**

தீபம்

**சென்னை**

**12–10–1977**

# தமிழ் இலக்கியக் கதைகள்

## 1. என்று விடியும்?

கண்ணும் காதும் படைத்த மனிதர்கள்தாம் கவிஞர்களாக இருக்க வேண்டுமென்ற நியதி இல்லையே? கற்றுத் தேர்ந்து முற்றிய கவிஞர் , வாழ்வின் இடையே அவற்றை இழக்க நேரிட்டாலும் கவிதைக்கு என்றும் அழிவேயில்லை. அது சாகாக் கலை: சிதைவுகளை வென்றுகொண்டே வளரும் சீரிய கலை.

பதினெட்டு முதல் இருபது நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் அங்கங்கே அவ்வப்போது தாம் வாழ்ந்த காலத்தில் புலவர் பலர் பாடிய சில்லறைப் பாடல்களின் தொகுதியே தனிப்பாடல் திரட்டு. பல சந்தர்ப்பங்களின் இயற்கையான உணர்வுடன் பாடிய இத் தனிப் பாடல்கள் எல்லாம் படிக்க அருஞ்சுவையும் இனிமையும் நல்குவன. கடையில் கூடைகூடையாக வைத்திருக்கும் கொய்யாப்பழங்களைக் காட்டிலும் தோட்டத்தில் மரத்திலிருந்து உதிர்ந்த கொய்யாப்பழம் அணில் கடித்ததாக இருப்பினும் சுவை மிக்கதாகத் தெரிகிறதல்லவா? அதுபோல வரன் முறை வகுப்புக்கள் பிறழாமல் இயற்றப்பட்ட காவியங்களும் பிரபந்தங் களும் ஒருபுறம் இருந்தாலும் நினைத்தபோது நினைத்தவாறு பாடிய தனிப்பாடல்களின் சுவை தனிப்பட்ட இனிப்பை உடையது. இந்த உண்மையை மெய்ப்பிப்பது போல அமைந் துள்ளன தனிப்பாடல் திரட்டில் காணப்படும் இரட்டையர் கவிதைகள். அந்த இன்பம் இரட்டையர்கள் பாடல் மூலம் முதலில் இங்கே தோற்றுவாய் செய்யப்படுகிறது.

மலையடிவாரம். அடர்ந்து வளர்ந்திருந்த காடு. இருவர் நடந்து போகின்றனர்; இல்லை, ஒருவர் நடந்து போகிறார். நொண்டியாகிய மற்றொருவர் அவருடைய முதுகில் ஏறிக் கொண்டிருக்கிறார். நடப்பவர் குருடர். முதுகில் அமர்ந்திருக்கும் நொண்டி அவருக்கு வழியைக் காட்டுகிறார். காண முடியாத குருடர் காண முடிந்த நொண்டியைச் சுமந்து அவர் உதவியால் வழி நடக்கிறார். அவர்களுக்கிடையில் உள்ள தொடர்பு இந்த அளவில்மட்டும் அமைந்துவிடவில்லை. இருவரும் நண்பர்கள். தமிழில் தேர்ந்த புலமை பெற்றவர்கள். பழு மரங்களை நாடிச்செல்லும் பறவைகளைப்போல் வள்ளல்களை நாடிச் சென்று தங்கள் புலமையைப் பாட்டுருவில் வெளிக்காட்டிப் பரிசில் பெறுவதுதான் அவர்கள் வாழ்க்கை. ஆனால் வள்ளல்கள் எல்லோருமா இரசிகர்களாக இருக்கிறார்கள்? இல்லையே. சிலரிடம் இகழ்ச்சியும் வேறு சிலரிடம் இல்லையென்ற பெரும் பொய்யும் 'சிறப்பான பாட்டு' என்ற கையாலாகாத வாய்ப் பாராட்டும்கூடப் பெறவேண்டியிருந்தது. முழு மனிதர்களாக இருந்தாலாவது இந்தத் துன்பத்தை ஒருவாறு தாங்கிக் கொள்ள இயலும். குருடரும் நொண்டியும் கூடிவாழும் கூட்டுறவு வாழ்க்கை. ஒருவரின்றி மற்றொருவர் ஓரணுக்கூட அசைய முடியாது. கண் தெரிந்த நொண்டி வழியைச் சொன்னாலும் கண் தெரியாத குருடருக்கு, காட்டிலும் மலையிலும் மேட்டிலும் பள்ளத்திலும் நடப்பது பெருந் தொல்லையாக இருந்தது. இவ்வளவு தொல்லைகளையும் மீறித் தோன்றுகின்ற பெரிய தொல்லை 'இல்லை' என்று கூறும் வள்ளல்களின் கூசாத எதிர்மறை வாய்ச்சொல்.

நடந்து கொண்டிருந்த குருடர் ஒரு சிறு பள்ளத்தில் தெரியாமல் காலை விட்டுவிடுகிறார். சிறிது தடுமாறுகிறது. மேலே கொஞ்சநேரம் எங்கேயோ பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த நொண்டி, "மெல்ல, மெல்லப் பார்த்து நடவுங்கள்" என்கிறார். அதைக் கேட்டு 'என்னடா இவன் நம் முதுகில் சவாரி விடுவதும் அல்லாமல் என்னென்வோ பேசுகிறானே' என்று வருத்தப் பட்டிருக்க வேண்டும் குருடர். அதுதான் இல்லை. அமைதியான

*அவர் முகத்தில் புன்சிரிப்பின் சாயை நிழலிட்டது. இருவரும் சமதரையிலே செல்லும் நல்ல வழிக்கு வந்துவிட்டனர். இப்போது குருடர் அந்தப் பிரதேசத்தில் கணீரென்று எதிரொலிக்கும் படியாக எடுப்பான குரலில் இதோ பாடுகின்றார்.*

'குன்றும் குழியும் குறுகி வழி நடப்ப(து)
என்று விடியும்? எமக்கென் கோவே'

*அதே புன்சிரிப்புக் கொஞ்சும் முகபாவத்துடன் பாடிச் சற்றே நிறுத்தினார் குருடர்.*

'ஒன்றும் கொடாதானைக் கோ வென்றும் கா என்றும் கூறில்
இடாதோ நமக்கிவ் விடி'

(கோ–அரசு, கா–கற்பகம், இடி–துன்பம்)

*என்று வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே குருடர் பாடிய முதலிரண்டு அடிகளைப் பூர்த்தி செய்தார், மேலே முதுகிலிருந்த நொண்டி. துன்பத்திலும் இன்பம் காணும் புலமை வாழ்க்கையில் பசி முதலிய துன்பங்களை வெல்லும் தூய கருவி சிரிப்புத்தானே! சிரிப்போடுகூட 'என்று விடியுமோ?' என்ற கேள்வியும் எதிரொலிக்கிறது.*

## 2. சத்திரத்துச் சாப்பாடு

**ப**கல் பன்னிரண்டு நாழிகை ஆகியிருக்கும். உச்சிவெயில் படை பதைக்கும்படி காய்ந்து கொண்டிருந்தது. ஓ வென்ற பேராரவாரத்துடன் முட்டிமோதும் கடல் அலைகளின் ஒலி பயங்கரமாக இருந்தது. அதைவிடப் பயங்கரமாக இருந்தது. காளமேகத்தின் வயிற்றுப் பசி. காதை அடைத்தது. கண்கள் பஞ்சடைந்துபோய் ஒளி குன்றியிருந்தன. நாகப்பட்டினத்துக் கடற்கரை ஓரமாக நடக்க முடியாமல் தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று கொண்டிருந்தார் காளமேகப் புலவர். எதிரே கட்டு

மரத்தை இழுத்துக்கொண்டிருந்த செம்படவர்கள் சிலர் எதிர்ப்பட்டனர்.

பசி, முகம் அறிந்து இடமறிந்தா விசாரிக்க விடுகிறது? அந்தச் செம்படவர்களிடம் "பக்கத்தில் ஏதாவது சத்திரம் கித்திரம் இருக்கிறதா?" என்று விசாரித்தார் காளமேகப் புலவர். "காத்தான் சத்திரத்திற்குச் செல்லுங்கள் ஐயா, ஒரு வேளை உணவு கிடைக்கலாம்" என்று அவர்களில் ஒரு செம்படவன் மறுமொழி கூறினான். போகும் வழியை விவரமாக அறிந்து கொண்டு செல்லத் தொடங்கினார் புலவர். விரைவில் நடு நடுவே வழி கேட்டறிந்து கொண்டு காத்தான் சத்திரத்தை அடைந்தும் விட்டார்.

* * * *

சாப்பாடு தயாராவதற்குச் சிறிது நேரமாகுமென்றும் அதுவரை காத்திருக்குமாறும் சத்திரத்தில் இருந்தவர் கூறினார். நடந்து வந்த களைப்பும் பசியும் ஒன்று சேர்ந்து கொண்டன. ஒரே ஓய்வாக வந்தது. திண்ணையில் காலை நீட்டிக்கொண்டு முடங்கியபடியே உறங்கி விட்டார் காளமேகம். எவ்வளவு நேரம் உறங்கினாரோ? அவருக்கு நினைவேயில்லை. தம்மை மறந்து தூங்கினார். சாப்பாட்டைப் பற்றிய நினைவுகூடத் தூக்கத்தில் ஐக்கியமாகிவிட்டது.

கண் விழித்தபோது புலவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. சுற்றி இருள் படர ஆரம்பித்திருந்தது. அந்திப் பொழுதுவரை தூங்கியிருந்தார். அதே கடலலைகளின் ஓசை முன்னிலும் பன்மடங்கு தூரத்திலிருந்து பேரொலி செய்து கொண்டிருந்தது. 'சத்திரத்தில் சாப்பாடு தீர்ந்து போய்விட்டதோ?' என்ற பயத்துடன் சுருட்டி வாரிக்கொண்டு உள்ளே நுழைந்தார் காளமேகம். ஆனால் நுழைந்த வேகத்தில் திரும்பி வர வேண்டியதாகப் போயிற்று. இன்னும் உள்ளே அடுப்புகூட பற்றவைக்கவில்லை என்று தெரிந்தது. ஏமாற்றத்தோடு திண்ணைக்கு வந்தார். அப்போதுதான் கூடை நிறையக் கொழி அரிசியுடன் உள்ளே நுழைந்தான் சத்திரத்து வேலைக்காரன்.

*காளமேகத்திற்குக் கொட்டாவி மேல் கொட்டாவியாக வந்தது. உள்ளிருந்து கொழியரிசி குத்தும் உலக்கை ஒலி கேட்டது. தூக்கம் மீண்டும் கண்ணைச் சொருகியது. சத்திரத்து வாசற்படியில் உட்கார்ந்தவாறே தூங்கிவிட்டார். இரண்டாம் முறையாக அவர் கண் விழித்தபோது ஊர் அரவம் அடங்கிப் போயிருந்தது. ஏறக்குறைய நள்ளிரவு என்று சொல்லும் அளவுக்கு இரவு வளர்ந்திருந்து. உள்ளேபோய்ப் பார்த்தார். அரிசியை அள்ளி உலையிலிட்டுக் கொண்டிருந்தான் சமையற்காரன். மறுபடியும் ஏமாற்றத்துடன் வாசலுக்குத் திரும்பி வந்தார்.*

*"ஏய்! யாரது வாசற்படியிலே கிடந்து உறங்குவது? எழுந்திருந்து வழியை விடு ஐயா!" அதட்டலைக் கேட்டுக் கண்விழித்தார் காளமேகப் புலவர். இருள் மெல்ல விலகத் தொடங்கியிருந்தது. கிழக்கே வெள்ளி முளைக்கும் நேரம். பொழுது விடிய இன்னும் சில நாழிகைகளே இருந்தன. உள்ளே யிருந்து அழைப்பு என்ற பேரில் "சாப்பிடுகிறவர்கள் உடனே வரலாம். இலையில் சோறு இட்டாய் விட்டது" என்ற குரல் வந்தது. காளமேகமும் உள்ளே சென்றார். முதல் நாள் பன்னிரண்டு நாழிகைக்குப் பசியோடு வந்தவர், மறுநாள் விடிவெள்ளி எழுகின்ற போதிலே இரண்டு வாய்சோற்றை அள்ளி உண்டார். உடம்பிலே கொஞ்சம்தெம்பு பிறந்தது. தெம்பில் ஒரு பாட்டு உருவாயிற்று. எச்சில் கையும் தானுமாக இலைக்கு முன்னால் அமர்ந்து பாட ஆரம்பித்துவிட்டார் காளமேகப் புலவர்; குறும்புச் சிரிப்பு அவர் முகத்தில் நெளிந்தது.*

"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்"

*சத்திரத்துக்காரர் முகத்தில் விளக்கெண்ணெய் வழிந்தது.*

# 3. அங்கும் துன்பமே

புலமை வாழ்க்கை, கற்றறிந்தவர்கள் கைகொடுத்து உதவி புகழும் பெருமையும் செய்யும் இன்பம் நிறைந்ததுதான். ஆனால் அத்தகைய கற்றவர்களோ, அறிந்தவர்களோ, கவிதையை உணர்ந்து பாராட்டுபவர்களோ இல்லாதபோது அது பாலை வனத்தில் மல்லிகைப் பதியனாய்ப் பாழ்பட்டுப் போவது ஒரு தலை. தன் படைப்புக்களையும் சொல் நயத்தையும் அதியற்புத மனோபாவப் பிணிப்புக்களையும் தானே சுவைப்பது, படைத்த சில விநாடிகள் மட்டும்தான் கவிஞனுக்கு இயலும். அந்தச் சில விநாடிகளுக்கு அப்பால் அவற்றைப் போற்றிப் புகழ்ந்து பேண இரசிகன் என்ற பெயரில் இரண்டாவது மனிதன் ஒருவன் தேவை. அப்படிப் போற்றிப் பேணி ஆதரிக்கும் இரசிகன் ஒருவன் கிடையாதபோதுதான் இராமச்சந்திர கவிராயருக்கு எல்லாம் ஒரே சூனியமாகத் தோன்றியது. மனிதர்களின் கலை உணர்ச்சியைப் பற்றியே சந்தேகமாகிவிட்டது அவருக்கு. மனத்தளர்ச்சி சாதாரண மனிதனைக் காட்டிலும் நுண்ணுணர்வு மிக்க கவிஞர்களுக்கு ஏற்பட்டுவிட்டால் அவர்களைப் பூரணமாகத் தன்னில் ஆழ்த்திக் கொண்டு விடுகிறது. இந்த நியதி வரம்பிற்கு இராமச்சந்திர கவிராயர் மட்டும் விதி விலக்கா என்ன?

நாள் முழுவதும் தாம் பாடியஅரிய பாடல்களுடன் பல வள்ளல்களிடம் அலைந்து அலைந்து கால்கடுத்துவிட்டது. தங்கள் உள்ளத்தைப் போலவே வீட்டுத் தலைவாயிலின் நிலைப் படியையும் குறுகலாகவே வைத்திருந்த இரண்டோர் வீடுகளில் வாசல் நிலையில் முட்டிக் கொள்ளவும் நேர்ந்தது. 'ரஸனைக்குக் கூட வஞ்சகமா? என் பாட்டு நன்றாக இருக்கிறது என்று உணருகிறார்கள். பாராட்ட வேண்டுமென்று ஆசைப்படு கிறார்கள். ஆனால் துணிவில்லை! மனச்சாட்சிக்கு வஞ்சனை புரியும் இவர்களை வஞ்சகர்கள் என்றால் தவறென்ன?'

சிந்தனை வேகத்துடன் போட்டியிடுவதுபோல நடந்து கொண்டிருந்தார் கவிராயர். எதிரே பிரம்மாண்டமான

*கோபுரத்துடன் 'பெண்ணொருபாகனார்' திருக்கோயில் தென் பட்டது. அதன் மகாமண்டபத்துக் குறட்டில் தலையில் கையை வைத்தவாறு உட்கார்ந்து கொண்டார் கவிராயர். தாம் பாடிய பாடல்களை மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டும்போல இருந்தது அவருக்கு! சுவடியை அவிழ்த்தார். முதலிலிருந்து இறுதிவரை நன்றாகப் படித்தார். இரண்டாவது மனிதன் அவற்றைப் படித்தால் எவ்வளவில் ஈடுபாடு கொள்ள முடியும் என்று எண்ணிப் பார்த்தார். அதிலுள்ள செஞ்சொற்களும் சீரிய பொருள் நயமும் அவனைக் கவரத் தவறமாட்டா என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது! ஆனால் இந்த எண்ணம் ஒரு நொடிதான் நிலைத்தது. மறு நொடி 'ஏதோ உதவாத வெற்றுரை போலும்! அதனால்தான் கவனிப்பாரில்லை' என்று எண்ணினார். இவ்வாறு உணர்ச்சிவசப்பட்ட தீர்மானங்களுடன் போராடிப் போராடி அவர் மனம் புண்பட்டுப் போனது. மன அமைதியை நாடிப் பெண்ணொருபாகனார் கோவிலக்குள் சென்றார். கோவிலின் மூலத் தானத்தை அடைந்ததும் பெருமானைப் பாட வேண்டுமென்று கூறியது அவரது உள்ளுணர்வு. தன் துயரை அவனாவது அறியட்டுமே என்பதுதான் அவர் எண்ணமோ என்னவோ! பாடுகிறார்,*

"வஞ்சகர்பால் நடந்திளைத்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன் பாற்சேர்ந்தே னப்பா!"

*கவிராயர் பாட்டை இன்னும் முடிக்கவில்லை. அதற்குள் சிவபெருமானின் திருவிளையாடல்களைப்பற்றிச் சுவரில் எழுதி யிருந்த சில சித்திரங்கள் அவருடைய கண்ணில்படுகின்றன. ஒன்று - பிட்டுக்கு மண்சுமந்த இறைவன் பிரம்படிபடுவதைச் சித்திரித்தது. மற்றொன்று, கண்ணப்பன் ஒரு காலால் பெருமானை உதைத்துக் கொண்டு அவருக்குக் கண்ணளிக்கும் காட்சியை விளக்கியது. இன்னொன்றில், அருச்சுனன் கைலாயத்தில் இறைவனை அவன் வேடனுருவாக வந்தபோது வில்லால் அடிப்பதைக் காட்டியது.*

"இங்கும் அந்தத் துன்பம்தானா?" எனக் கூறிக் கொண்டே கவிராயர் பாட்டைத் தொடர்ந்தார்,

"கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்த புண்ணும் கோபமாகப்
பஞ்சவரில் அன்றொருவன் வில்லாலடித்த புண்ணும்
பாரென்றே காட்டி நின்றான் பரமன்றானோ!"

பாட்டு முடிந்தது. பெண்ணொரு பாகனாரிடம் தன் துன்பத்தை முறையிட வந்தார் இராமச்சந்திர கவி. அவரோ தம் துன்பத்தைக் கவிராயரிடம் காட்டாமல் காட்டி முறையிட்டு விட்டார்.

## 4. துயரின்மேல் துயர்

துயரம் வருவதும் அதைப் பொறுத்துக்கொள்வதும் சகஜம்தான். ஆனால் அடுக்கடுக்காக ஒன்றை ஒன்று விஞ்சும் நிலையில் வரும்போது இன்னது என்று புரியாத குழப்ப நிலைக்கு ஆளாகின்றான் மனிதன். குழப்ப நிலையில் ஒரேயடியாக மனங் குமைந்து கல்லாய்ச் சமைந்துவிடுவர் சிலர். அழுவதா சிரிப்பதா என்று பேதலிப்பு அடைந்து விடுவர் மற்றுஞ் சிலர். இந்த விபரீத நிலையை வேடிக்கையாகக் கூறும் சுவைமிக்க தனிப் பாடல் ஒன்று உண்டு. துயரின் மேல் துயராக அடுக்கி, அவ்வடுக்குச் சூழலின் நடுவே ஒரு தனி மனிதனை நிறுத்திக் காட்டும் முறையில் அமைந்த இரசனை அனுபவித்து மகிழத்தக்கதாக இருக்கிறது. இதனைப் பாடியவரும் இராமச்சந்திர கவிராயரே.

நல்ல அடைமழைக் காலம். மழை! மழை! இடைவிடாமல் கொட்டு கொட்டென்று கொட்டிக் கொண்டிருக்கிறது. அது ஒரு மண்குடிசை. நான்கு புறச் சுவரும் மண்ணால் எடுக்கப் பெற்றவை. மேலே பனை ஓலை வேய்ந்த கூரை. குடிசையின் ஒருபுறம் மாட்டுக் கொட்டமாக மறித்து விடப்பட்டிருந்தது. கொட்டத்திலே சினைமாடு கட்டப்பட்டிருந்தது. சிறிது நேரஞ் சென்ற அளவில்

பசுமாடு கன்று போட்டுவிடுகிறது: அவசரத்தில் மண்ணைக் குழைத்து அள்ளிக் கட்டியிருந்த மாட்டுக் கொட்டத்தின் சுவர்கள் நன்றாக ஈரித்துப் போயிருந்தன. 'சோ'வென்று பொழியும் மழை வேகத்தைத் தாங்கிக்கொண்டு அந்த ஈரச் சுவர்கள் எவ்வளவு நேரந்தான் நிற்கும்? மாடு கன்று ஈன்ற சற்று நேரத்தில் சுவர்கள் விழுந்துவிட்டன. வீட்டுக்குரியவனின் மனைவி கர்ப்பவதியாயிருந்தாள். அவளுக்கு அது நிறைமாதம். இன்றோ நாளையோ குழந்தை பிறந்துவிடும் என்று மருத்துவச்சி சொல்லிவிட்டுப் போயிருந்தாள். வீட்டிற்குள் பாயில் உடலைக் கிடத்தியவாறே அவள் பிரசவ வேதனை பட்டுக் கொண்டிருந்தாள். வீட்டுக்குரிய தலைமகன் அன்று வயலுக்கு விதை விதைக்கப் போக வேண்டியிருந்தது. முதல் நாள் நல்ல ஈரப்பதம் பார்த்து வயலை உழுது தொழி கலக்கி விதைப்பதற்கு ஏற்றவாறு வைத்துவிட்டு வந்திருந்தான். வீட்டில் வேலை பார்த்து வந்த பண்ணைக்காரப் பணியாளுக்குக் குளிர் ஜுரம் வந்து சாகக் கிடக்கிறான். ஐந்து நாட்களாக அவன் வேலைக்கே வரவில்லை. எமனோடு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். இந்த நிலையில் என்ன செய்வதென்றே தெரியவில்லை குடும்பத் தலைவனுக்கு.

'விதைக்கப் போகலாம்' என்றால் வீட்டிலே மாடு கன்று போட்டி ருக்கிறது. சுவர்கள் மழை தாங்காமல் சாய்ந்து விட்டன; மனைவியோ உடலில் வலி பொறுக்க முடியாமல் பிரசவ வேதனையால் துடிதுடித்துக் கொண்டிருக்கிறாள். அப்படியே மலைத்துப் போய் நின்று விட்டான் வீட்டிற்குரியவன். அப்பொழுது தலைவிரி கோலமாக ஓடிவந்தான் ஒருவன். அழுகையும் புலம்பலுமாக அந்த வீட்டுப் பண்ணைக்காரன் குளிர் ஜுரத்தினால் இறந்துபோன செய்தியைக் கூறியபின் மூக்கைச் சிந்திவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு திரும்பினான் வந்தவன். வீட்டுத் தலைவனுடைய குழப்பம் முன்னிலும் பெருகியது. 'எது எப்படியானாலும் சரி! விதைக்கப் பதமாக இருக்கும் வயலை ஈரம் போகும்படி காயவிட்டுவிட்டால், அப்புறம் வருடம் முழுவதும் வயிறு காயவேண்டியதுதான்! ஆகவே ஓடோடியும் சென்று விதையை விதைத்துவிட்டு

வந்தவிடுவோமென்று விதைக் கூடையுடன் வயலை நோக்கித் தலைதெறிக்க ஓடினான் அவன்.

"எங்கே அண்ணே! அவசரமாக விதையும் கையுமாகப் புறப்பட்டு விட்டாற் போலிருக்கிறது. ஆளைப்பாரு ஆளை... வாங்கின கடனைக் கொடுக்க வக்கில்லை...விதைக்கப் புறப்பட்டு விட்டார் துரை...ஏன் ஐயா? உனக்கு வெட்கமில்லை? கடன்வாங்கி எத்தனை நாள் ஆகிறது?" ஏகத்தாளமும் கேலியுமாக ஈட்டி குத்துவதுபோன்ற சொற்களுடன் கடன் கொடுத்த புண்ணியவான் அவனை மறித்துக் கொண்டார். விதைக்கூடையும் கையுமாக வந்து கொண்டிருந்த அவன் ஒன்றும் மறுமொழி கூற முடியாமல் தலை குனிந்தான். எவ்வளவு நேரந்தான் அவன் அப்படி நின்று கொண்டிருந்தானோ? கடன்காரர் இன்னும் ஏதேதோ திட்டிக் கொண்டிருந்தார். அவன் கொட்டுகிற மழையில் விதையுடன் நனைந்து கொண்டே நின்றான். அவர் குடை பிடித்திருந்தார். கடைசியில் உடல் வெடவெடவென்று நடுங்கிய அவன் பொறுமைக்கும் ஓர் எல்லை வந்து சேர்ந்தது. தலை நிமிர்ந்தான் அவன். அவன் கண்கள் கடன்காரரை ஏறிட்டுப் பார்ப்பதற்கு முன் வேறொருவனைக் கண்டன. ஆம்! வெளியூரினனான அவன் நெருங்கிய உறவினன் ஒருவன் வந்து கொண்டிருந்தான். அவன் வாட்டத்தோடு காணப்பட்டான். நெருங்கி வந்ததும் அவன் ஓர் உறவினரின் சாவுச் செய்தி கொண்டு வந்திருக்கிறான் என்பது வெளிப்பட்டது. கடன்காரர் மெல்ல நழுவிவிட்டார். இப்போதும் அங்கே நிற்க அவருக்குப் பைத்தியமா என்ன? செத்தவர் நெருங்கிய உறவு முறையினர். எப்படியும் போய் வரவேண்டும்.

சாவோலை கொண்டு வந்தவனையும் கூட்டிக்கொண்டு வீட்டில் சொல்லிவிட்டு வரப் புறப்பட்டான். வீட்டில் நுழைந்த அவனுக்கு ஒருகணம் மூச்சு நின்று விடும்போலத் திகைப்பு ஏற்பட்டது. அங்கே அவனுடைய மனைவியின் தமக்கை கணவனுடனும் குழந்தை குட்டிகளுடனும் விருந்தாக வந்து அப்போது தான் இறங்கியிருந்தாள். அவர்களை வரவேற்றுவிட்டுக் கூடவந்தவனை வாசலில் உட்காரச் சொல்லியபின் கொல்லையில் கொட்டத்திற்குள் ஈன்ற பசு எவ்வாறிருக்கிறதென்று பார்க்கச்

சென்றான். விதைக்கூடை நனைந்த விதைகளுடன் ஒருமூலையில் விட்டெறியப்பட்டுக்கிடந்தது. கொல்லையில் மல்லிகைப் புதரடியில் அவன் கண்ட காட்சி! தூக்கிவாரிப் போட்டது! ஒரு சிறு நல்லபாம்பு அவனுடைய ஆறு வயது பையனின் கையைச் சுற்றிப் படமெடுத்துக் கொண்டிருந்தது. அதைக் கையிலிருந்து உதற வழி தெரியாமல் 'ஐயோ அப்பா' என்று பையன் கூக்குரலிட ஆரம்பித்தான். மாட்டுக்கொட்டத்தில் நுழைய இருந்த அவனை அந்தக் குரல்தான் கொல்லைப்புறம் திரும்பவைத்தது. பக்கத்திலிருந்த தார்க்குச்சியை எடுத்துக்கொண்டு ஓடினான் அவன். ஆனால் அதற்குள் அந்தப் பாம்பு பையனின் முன்கையில் மணிக்கட்டின்மேல் தன் கொடு விஷத்தைப் பாய்ச்சிவிட்டது. சரசவென்று இறங்கிப் புதருக்குள் ஓடி ஒளிந்த பாம்பை அவனால் அடிக்கவும் முடியவில்லை. வாசலில் மூன்று இருசாலாகத் தீர்வை போடவில்லை என்று ஊர்கணக்கன் நிலத் தீர்வை நோட்டீசுடன் ஜப்தி செய்ய வந்திருந்தான். தெருவோடு போய்க்கொண்டிருந்த குருக்கள், "என்றோ அவன் திதி கொடுத்ததற்குத் தட்சிணை வைக்கவில்லை" என்று வாய் நிறைய வைது கொண்டே நடந்தார். என்ன செய்வான் ஒருவன்? அழவில்லை! சிரித்தான். நினைவுடன் கூடிய சிரிப்பல்ல அது. அவன் பைத்தியமாகிவிட்டான். துயரின் ஒருமை வரவைப் பொறுத்துக்கொள்ளமுடியும்! துயரின் பன்மை அடுக்கடுக்காக மேல் மேல்வந்தால் ஒருவன் பைத்தியமாகத்தானே ஆகவேண்டும்?

"ஆ ஈன மழைபொழிய இல்லம் வீழ
அகத்து அடியாள் மெய் நோவ அடிமை சாக
மா ஈரம் போகுதென்று விதை கொண்டு ஓட
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ளச்
சா வோலை கொண்டொருவன் எதிரே போகத்
தள்ள ஒண்ணா விருந்து வரச் சர்ப்பம் தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்
குருக்களோ தட்சிணைகள் கொடு என்றாரே."

எவ்வளவு அருமையான மனோபாவப் பிடிப்பை விளக்குகிறது பாட்டு. கதையின் துரிதம் முழுமையும் பாட்டின் கருத்து வேகத்தில் அமைந்தவை.

## 5. கட்டுச்சோறு பறிபோனது

இன்பத்தையோ துன்பத்தையோ, இரண்டுங் கலந்த நிலைகளையோ அனுபவிப்பதும், அனுபவித்து மறந்து விடுவதும் எளிதுதான். ஆனால், அந்த அனுபவத்தைச் சுவைகுன்றாமல் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வது தனிப்பட்ட ஒரு கலை. தனிப்பாடல் திரட்டிலுள்ள கவிதைகளில் பெரும்பாலானவை இந்த அனுபவ வெளியீட்டுக் கலைக்கு ஒரு முத்திரை வைத்தாற் போல விளங்குகின்றன. வாழ்க்கையின் சிறியவும் பெரியவும் ஆகிய இன்ப துன்ப அனுபவங்களை, அனுபவித்தவரே வெளியிடும் சிறப்பும் இவைகட்கு உண்டு. சொந்த அனுபவத்திலிருந்து பிறக்கும் எதிலுமே மனோபாவக் கலப்பு இருக்கும்.

வீரராகவ முதலியார் குருடர். ஆனால், ஒளி படைத்த அறிவுக் கண்கள் பெற்ற தமிழ்ப் புலவர். ஒருமுறை இவர் தம் நண்பர் ஒருவரின் துணைகொண்டு பக்கத்து ஊருக்குக் கால்நடையாகச் சென்று கொண்டிருந்தார். புலவருக்கும் தமக்கும் இடைவழியிலே பசி தீர்த்துக்கொள்ள உதவுமென்று கருதி, வழிகாட்டி அழைத்துச் செல்லும் நண்பர் கட்டுச்சோற்று மூட்டையொன்று கொண்டு வந்திருந்தார். வழிநடைத் துன்பம் தெரியாதிருக்க ஒருவருக்கொருவர் வேடிக்கையாகப் பேசிக் கொண்டே நடந்தனர். பாதி வழி நடந்ததும் இருவருக்கும் வயிற்றில் பசி எடுத்தது. பொழுதும் நடுப்பகல் ஆகியிருந்தது. வைகறையில் பயணத்தை ஆரம்பித்த அவர்கள் புறப்படுவதற்கு முன் அவசர அவசரமாக இரண்டு வாய் சோற்றை அள்ளிப் போட்டுக்கொண்டு புறப்பட்டிருந்தார்கள். நடந்துவந்த களைப்பும், உச்சிப் பொழுதின் வெய்யிற் கடுமையுமாக வயிற்றில் பசியைக்கிளறிவிட்டிருக்க வேண்டும். எதிரில் வழியோரமாக ஒரு

நீர்ப்பொய்கை. அதன் அக்கரையில் ஒரு பெரிய வாழைத் தோட்டம். அதைக் காவல் காக்கும் தோட்டக்காரனின் சிறு குடிசை. இப்படியாகத் தோன்றிய ஓர் இடத்திற்கு வந்தவுடன் நண்பர் கட்டுச்சோற்று மூட்டையை அவிழ்த்து அந்தப் பொய்கைக் கரையிலேயே உணவை முடித்துக் கொள்ளக் கருதினார். புலவரிடம் கூறியபோது அவரும் அப்படிச் செய்வதே நல்லதென்றார். இருவரும் கைகால்களைக் கழுவித் தூய்மை செய்துகொண்டு பொய்கைக் கரையில் உட்கார்ந்தனர். கீழே ஒரே கரம்பை மண்ணாக இருந்ததால் ஒரு வாழைஇலை கொண்டுவரப் புறப்பட்டார் நண்பர்.

புறப்படும்போது புலவர் குருடராகையால் பக்கத்தில் பொய்கை என்பதைக் கூறி எச்சரித்துச் சோற்று மூட்டையை அவர் பக்கத்தில் நகர்த்தி வைத்துவிட்டுப்போனார். தோட்டக் காரனின் குடிசையை நெருங்கியதும் அவரை முதன் முதலில் வரவேற்றது காவலுக்காக அவன் வளர்த்து வந்த சொறி நாய்தான். பார்க்க நோஞ்சலாகச் சொறிபிடித்துத் தோன்றிய அந்த நாய் அவரைக் கண்டதும் உயிரைப் பிடித்துக்கொண்டு கத்துவது போல் குரைத்துக் கொண்டே பொய்கை பக்கமாக ஓடிவிட்டது. அவர் தோட்டக்காரனைச் சந்தித்து ஓர் இலை வேண்டுமென்று கேட்டார். அவன் நன்றாக வளர்ந்த பெரிய இலை ஒன்றைக் கிள்ளிக் கொடுத்தான். நண்பர் பெற்றுக்கொண்டு திரும்பினார். வாழைத் தோட்டத்திலிருந்து பொய்கைக் கரைக்கு வரும் வழியில் பாதி தூரம் நடந்திருப்பார். எதிரே அந்தச் சொறி நாய் இரைக்க இரைக்க ஓடி வந்து கொண்டிருந்தது. அது மட்டும் வந்திருந்தால் அவர் கவலைப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. அதன் வாயில் கவ்விக்கொண்டு வந்து கட்டுச்சோற்று மூட்டையைக் கண்டதும்தான் அவருக்கு அடிவயிற்றில் 'பகீ'ரென்றது. இலையும் கையுமாக நாயை விரட்டினார். அந்த அப்பாவி நோஞ்சல் நாய் பொய்கைக்கும் தோட்டத்திற்கும் நடுவில் இருந்த சேறும் சகதியுமான வாய்க்காலைத் தாண்டும்போது மூட்டையை அதற்குள் தவற விட்டுவிட்டு ஓடிப்போயிற்று. மூட்டை அவிழ்ந்து சோறு சேற்றோடு கலந்துவிட்டது. தலைவிதியே என்று வாழை

*இலையைத் தூர எறிந்துவிட்டு வீரராகவ முதலியாரிடம் திரும்பி வந்தார் நண்பர்.*

*"இலை கிடைத்ததா இல்லையா? இங்கே சிறிது நேரத்திற்கு முன் ஏதோ ஒரு நாய் வந்து குரைத்துக்கொண்டே இருந்தது..." புலவர் ஒன்றும் தெரியாதவர்போலப் பேசினார். குருடராகிய அவருக்குத் தெரிந்திருக்கவில்லை என்றால் அது நியாயந்தானே? நண்பர் எல்லாவற்றையும் சொன்னார். வேறு வழியின்றிப் பசியோடு பயணத்தைத் தொடர்ந்தனர். வயிற்றில்தானே பசி? கற்பனைக்கும் உள்ளத்துக்கும் பசி இருக்க வேண்டியதில்லை! இந்த நிகழ்ச்சி புலவரால் பாட்டாகியது.*

"சீராடையற்ற பைரவன்
　　வாகனம் சேரவந்து
பாராரும் நான்முகன் வாகனத்
　　தன்னை முன்பற்றிக்கவ்வி
நாராயணன் உயர்வாகனம்
　　ஆயிற்று நம்மைமுகம்
பாரான் மைவாகனன்
　　வந்தேவயிற்றிற் பற்றினனே"

பைரவன் வாகனம் = நாய், நான் முகன் வாகனம் = அன்னம் (கட்டுச்சோறு), நாராயணன் உயர் வாகனமாயிற்று = கருடனைப் போல வேகமாகப் பறந்து ஓடிப் போயிற்று. மைவாகனன் = அக்னி, வயிற்றில்பற்றல் = பசி எடுத்தல், முகம்பாரான் தாட்சண்யமில்லாமல்.

*பாட்டின் பொருளைச் சங்கேதமாக மறைத்துச் சொல்வதிலும் ஓர் அழகே காண்கிறோம்.*

# 6. கம்பஞ் சோற்று விருந்து

"சோழநாடு பாழ் போகிறதா என்ன? நினைத்த இடங்களில் எல்லாம் பூம்பொய்கையும் ஆற்றுக் கால்களுமாக இருக்க, நீர்வேட்கையைத் தணித்துக் கொள்ள இயற்கை வசதி சிறிதும் இல்லையே! மற்றவர்களின் உதவியை நாடித்தான் ஆகவேண்டும் போலிருக்கின்றன!" கம்பருக்குத் தண்ணீர் தாகம் ஒரேயடியாக நாவறண்டு போகச் செய்கிறது. 'சோழ நாட்டிலே எல்லா வளமும் இருந்தது. கூற்றிலும் பாவலர் கொடியவர் என்றான் சிந்தனையுணர்ச்சி அற்ற அந்தச் சோழ மன்னன். உடலை வருத்தித் துன்புறுத்தினாலும் பொறுத்துக்கொண்டு இருந்துவிடலாம். உண்மைக்கு நேர்மாறான கருத்தைக்கொண்டு உள்ளத்தை வருத்துவதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது, "நீ முனிந்தால் எங்கட்கு இல்லையோ இடம்?" என்று கூறி அவன் கருத்தை எதிர்த்துவிட்டுப் புறப்பட்டேன். இங்கோ கொங்கு நாட்டில் வந்து பார்த்தால் இப்படி இருக்கிறது! எங்கே பார்த்தாலும் கல்லும் பாறையுமாகத் தெரிகின்ற கல்லாங் காடுகள். காணப் பசுமை மிகுந்து தோன்றும் சோழ நாடெங்கே? கொங்கு நாடெங்கே?' சிந்தித்துக்கொண்டே வந்த கம்பர் தாம் ஒரு சிற்றூரை நெருங்குவதை உணர்ந்தார். தண்ணீர் வேட்கை அவரை நடையில் வேகங்கொள்ளச் செய்தது.

ஊருக்குள் இரண்டோர் வீடுகளில் மனையேறித் தண்ணீர் கேட்கும் நிலைக்காகக்கூட அவர் நாணவில்லை. ஆனால் அப்படிக் கேட்டும் பாராமுகமாக நடந்துகொண்ட அம் மனைக் குரியவர்களின் பண்பாட்டுக்காக நாணினார். இதை விடத் தண்ணீர் குடியாமலே மேற்சென்று விடுவது நல்லது என்று வழிநடையைத் தொடர்ந்த அவரை ஓர் இனிய குரல் திரும்ப வைத்தது. "ஐயா, எங்கள் வீட்டிற்கு வரலாமே" கம்பர் திரும்பிப் பார்த்தார். இருபது இருபத்திரண்டு வயது மதிக்கலாம். ஒரு வேளாளப் பெண் தயங்கித் தயங்கி நின்றுகொண்டே அவரை அழைத்தாள். அவள் இடுப்பில் தண்ணீர்க்குடம் இருந்தது. "ஏன் அம்மணி! இங்கேயே சிறிது தண்ணீர் வார்த்தால் உண்டு

செல்வேன்" என்றார் கம்பர். " இல்லை, நீங்கள் மிகவும் களைப் படைந்தவராகத் தென்படுகிறீர்கள். எங்கள் மனைக்கு வந்து சிறிது உணவருந்தி விட்டுப் போகவேண்டும்." அவள் குரலில் கெஞ்சுகின்ற பாவம் இருந்தது. மறுத்துரைக்க முடியாமல் கம்பர் பின்தொடர்ந்தார். வீட்டு வாயிலில் அவள் கணவன் என்று மதிப்பிடத் தக்க ஆடவன் ஒருவன் அமர்ந்து கொண்டிருந்தான். குறிப்புணரும் திறம்மிக்கவனாக இருக்க வேண்டும் அவன். தண்ணீர்க் குடத்தோடு மனைவி உள்ளே சென்றதும் ஒரு நொடியில் உள்ளே சென்று யாவற்றையும் அறிந்துகொண்டு வாசலுக்கு வந்து கம்பரை வரவேற்று அமரச் செய்தான். கம்பர் தண்ணீர் வேண்டும் என்றார். அவன், "உணவருந்த வேண்டும்" என்றான். " ஆகட்டும், நான் மறுக்கவில்லை. முதலில் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்று அவர் கூறவும், அவன் நன்றாக விளக்கிய ஒரு செம்பு நிறையக் குளிர்ந்த நீர் கொண்டு வந்து கொடுத்தான். தாகந் தீரப் பருகினார் கம்பர். பசுமைமிக்க சோழ நாட்டில் அந்நாடு முழுமையும் ஆளும் சோழ வேந்தனுக்கு இல்லாத மனப் பசுமை, கல்லும் மண்ணுமாகக் காட்சியளிக்கும் இந்தப் பசுமையற்ற கொங்கு நாட்டில் ஓர் ஏழை வேளாளன் மனைவிக்கும் வேளாளனுக்கும் இருந்ததை அவர் உணர்ந்தார். அவன் பெயர் செல்லன் எனவும் தம்மை அழைத்து வந்தவள் அவன் மனைவி எனவும் தெரிந்து கொண்டார்.

சிறிது நேரத்தில் உள்ளேயிருந்த கதவிடுக்கில் அந்த வேளாளப் பெண்ணின் தலை தெரிந்தது. அவனுக்கு ஏதோ சைகை செய்தாள். அவன் கம்பரை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றான். உள்ளே இரண்டு இலைகளில் 'கமகம' வென்ற மணத்துடன் ஆவி பறக்கும் கம்பஞ் சோறு படைக்கப் பட்டிருந்தது. கம்பருக்கு நல்ல பசி. வயிறார அந்தக் கம்பஞ்சோற்று விருந்தை நுகர்ந்தார். செல்லன் மனைவியின் அன்புக் கரங்கள் விருப்போடு படைக்கும்போது மனத்தயக்கம் ஏற்படக் காரணமே இல்லையே! கைகழுவி முடிந்ததும் கம்பர் அந்தக் கம்பஞ் சோற்று விருந்தையும் செல்லன் மனைவியையும் பாராட்டிப் பாடினார். அதில் நன்றி உணர்வு தொனித்தது.

"கல்லங்காடு தனில்விளையாக்
கடுக நிலத்திற் றான்முளையா
அல்லனிருந்த கருங்கூந்தல்
அணங்குக்கு அணங்குபோல்வாள்
செல்லன்தேவி மனைகள்தொறும்
தேடித் திரிந்துங் காணாத
நெல்லஞ்சோறே கம்பஞ்சோற்றினை
நீ சுமந்து திரிவாயே"

*உள்ளமில்லாத எத்தனையோ பேர்களுக்கு நடுவே அன்பே உள்ளமாக இருந்த செல்லனையும், அவன் மனைவியையும் அவர்களிட்ட கம்பஞ் சோற்று விருந்தையும் பாடியதில் அவருக்கு ஒரு திருப்தி.*

## 7. பாணனும் பாடினியும்

*பதார்த்த உணர்விற்கு மட்டும் போதும் என்ற அளவில் வெறும் சொற்கோவையாக அமைந்துவிடும் கவிதைகள் கவர்ச்சி யற்றவை ஆகிவிடுகின்றன. பதத்தையும் பதத்தின் பொருளையும் தழுவி நடக்கின்ற அணி அலங்கார வேலைப் பாடுகளும் வேண்டும். பல பொருள் தருவதற்குரிய சில சொற்களைக் கொண்டு இருவர் வினா விடையாக உரையாடிக் கொள்வ தாகவும், ஒருவர் எந்தப் பொருளோடு கூறுகிறாரோ, அது அல்லாத பிறிதோர் பொருளில் கேட்பவர் அதை உணர்ந்து மறுமொழி கூறியதாகவும் சொற்பொருளணி செறிந்த சித்திரமான வினாவுத்தரச் செய்யுள் தனிப்பாடல் திரட்டில் பலவுண்டு. பாடல்களைப் பாடி வேண்டிய பதிசில் பெற்று வாழும் ஒரு பாணனும் அவன் மனைவியாகிய பாடினி ஒருத்தியும் தம்முள் உரையாடுவதாக அமைந்துள்ள தனிப்பாடல் ஒன்றை இங்கே காண்போம். சுவைமிக்க பாடல் அது.*

*'இராமன்' என்ற இயற்பெயரையுடைய வள்ளல் ஒருவனிடம் சென்று இசைப்பாடல்களைப் பாடிய அந்தப் பாணனுக்கு இந்த வள்ளல் தக்க பரிசும் கொடுக்கவில்லை. வெறுங்கையுடன் வீடு திரும்பிய பாணனைக் கண்ட பாடினி 'என்ன பரிசில் பெற்று வந்தீர்கள்?' என்று கேட்கிறாள். ஏமாற்ற உணர்வை மறைக்க, வேடிக்கையாக இரு பொருள்படும் பரிசுக் குரிய பெயர்களைக் கூறுகிறான் பாணன். அவ்வாறு அவன் கூறும் பரிசுப் பெயர்களுக்கு அவள் வேறொரு பொருள் கண்டு குதர்க்கமாக அவனை இடைமறித்துப் பேசுகின்றாள். இதுதான் பாடலிற் கொடுத்துள்ள கருத்தின் மொத்தமான சுருக்கம்.*

*பாடினி: என்ன, ஆகாயத்திற்கும் பூமிக்குமாக இராமனுடைய புகழை ஒரேயடியாக அளந்து பாடியதற்குப் பரிசில்களாக எவை எவை பெற்று வந்தீர்கள்?*

*பாடினியினது இந்த வினா பாணனைத் திடுக்கிடச் செய்தது. தன் ஏமாற்றத்தை அவளறியாமல் 'ஒரு பெரிய யானையைப் பரிசிலாகக் கொடுத்தான். வாங்கி வந்தேன்' என்பதை நயமாக யானைக்கு உரிய ஒவ்வொரு சொற்களாலும் கூறக் கருதினான் அவன். சொல்லப் போவதென்னவோ பொய்தான்! அதை வேடிக்கையாகச் சொல்வதிலும் பரிசில் கிடைப்பது போன்ற இன்பம் இருக்கிறதல்லவா? அந்த இன்பத்திற்காகத்தான் பாணன் அவளை இப்படி வம்புக்கு இழுத்தான். அவள் மட்டும் லேசுப்பட்டவளா என்ன?*

*பாணன்: ஏன்? களபத்தைப் பரிசிலாகப் பெற்று வந்தேன்!*

**(களபமென்பதற்கு யானை என்றும் கலவைச் சந்தனம் என்றும் இரு பொருள்கள்)**

*பாடினி: (ஒரு குறுநகையுடன் உதட்டைக் கடித்துக் கொண்டே) அப்படியா? நன்றாக உடம்பு குளிரப் பூசிக் கொள்ளுங்கள்! சரிதானே?*

*பாணன் : (சற்றே சினங் கொண்டவன் போன்ற முக பாவத்துடன்) அதென்ன? அவ்வளவு சுலபமாகச் சொல்லி*

*விட்டாய்? மாதங்கம் பரிசிலாகக் கிடைத்துவிடுவது அவ்வளவு எளிதா என்ன?'*

**(மாதங்கம் யானையென்றும் பெரிய பொன் என்றும் பொருள்படும்)**

*பாடினி : (சிரித்துக்கொண்டே) அடடே! மாதங்கமா? இனி நமக்கு ஒரு குறையும் இல்லை என்று சொல்லுங்கள்... அவ்வளவு தங்கமிருந்தால் வேறு என்ன குறை?*

*பாணன் : (கடுகடுப்பான நோக்குடன்) மறுபடியும் மறுபடியும் வம்பு செய்கிறாயே! நான், கிடைத்த பரிசில் 'வேழம்' என்று சொல்லுகிறேன். நீ என்னவோ புரியாமல் பேசுகிறாயே!*

**(வேழம் = கரும்பு, யானை என்று இரு பொருளுக்கும் உரிய சொல்)**

*பாடினி: (ஆச்சரியப்பட்டவள் போன்ற குறிப்புடன்) 'வேழமா! நன்றாகக் கடித்து இனிய சாற்றை உறிஞ்சலாமே?'*

*பாணன் : நாசமாய்ப் போயிற்றுப் போ! நான் 'பகடு' என்று சொல்லிக்கொண்டே இருக்கிறேன்...நீ என்னடா என்றால்...?*

**(பகடு = எருது, யானை என்ற இரு பொருள்களும்தரும்)**

*பாடினி : (இடைமறித்து) பகடா? ஏறில் கட்டி நிலத்தை உழலாமே ...நல்லதாய்ப் போயிற்று!*

*பாணன் : இந்தா! சும்மா ஆளைப் பைத்தியம் ஆக்கிவிடப் பார்க்காதே! நான் சொல்லியது 'கம்பமா' தான் நமக்குக் கிடைத்த பரிசில் என்பதையே அன்றி வேறு ஒன்றும் இல்லை!*

**(கம்பமா= கம்பத்தில் கட்டப்படும் விலங்காகிய யானை, கம்பு என்ற தானியத்தின் மாவு)**

*பாடினி: கம்ப மா! களி கிளறிச் சாப்பிடலாமே? அந்தக் கம்ப மாவு தானே?...சாப்பிடச் சுவையாயிருக்குமே! (சிரிப்பை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டு சொல்லுகிறாள்)*

*பாணன் : (உட்கார்ந்திருந்தவன் எழுந்துகொண்டே) சரி! சரி! உனக்குப் பைத்தியந்தான் பிடித்து விட்டது. பெற்று வந்த பரிசில் 'கைம்மா'! அதுதான் 'யானை...' 'ஆமாம் யானை!'*

*(கைம்மா = துதிக்கையை உடைய விலங்காகிய 'யானை') (பாணன் ஒரு ஏமாற்றத்தோடு கூடிய வெடிச்சிரிப்புச் சிரிக்கிறான்)*

*பாடினி: (கலக்கத்துடன்) அப்படியானால் உங்களுடைய பரிபாஷையில், ஒன்றுமில்லை என்று பொருள்...! பரிசில் பூஜ்யந்தான் என்று சொல்லுங்கள்...! (துயரும் கலக்கமும் தொனிக்கும் குரலில் சொன்னாள். ஒரு பரிசிலும் தராதவர்களை 'யானை தந்தான்' என்று சொல்லி வேடிக்கையாகப் பேசுவது அந்தப் பாணனுக்கு வழக்கம்.)*

*பாணன் : அப்படித்தான் என்று வைத்துக்கொள்ளேன்!*

இம்பர்வான் எல்லை
இராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணா
நீயென்றாள் பாணி
வம்பதாம் களபகம் என்றேன்
பூசும் என்றாள்
மாதங்கம் என்றேன், யாம்
வாழ்ந்தோம் என்றாள்
பம்பூசீர் வேழும் என்றேன்,
தின்னும் என்றாள்
பகடு என்றேன், உழும்
என்றாள் பழனந் தன்னைக்
கம்பமா என்றேன்,
நற்களியாம் என்றாள்
கைம்மா என்றேன்,
சும்மா கலங்கினாளே.

**இம்பர் = இவ்வுலகில். வான் எல்லை = வானளாவ.**

கையில் ஒரு பரிசுமில்லாமல் வீடு திரும்பினாலும் கேலிக்கும் கிண்டலுக்கும் குறைவில்லாத தாம்பத்தியம் அவர்களுடையது. ஒன்றுமில்லை என்பதை 'யானை' என்பதற்குரிய பொருள் தரும் பல சொற்களால் சொன்னான் பாணன். அதற்குப் பல பொருள்கள் இருப்பதாகக் கற்பிப்பது போல் மடக்கிப் பேசினாள் பாடினி. முடிவில் அவ்வளவும் வெற்றுப் பேச்சு என்பது தெரிந்தாலும் அதுவரை அனுபவித்த வேடிக்கை இன்பமாவது ஊதியமாகக் கிட்டியதே! இப்படி ஒவ்வொரு ஏமாற்ற நிலையிலும் வேடிக்கையால் அதை மறைத்துச் சிரித்து மகிழும் மனோபாவம் எல்லோருக்குமா வந்துவிடுகிறது?

## 8. பாக்குவெட்டி மறைந்த மாயம்

'கூழுக்கும் துணிக்கும் பாடிய சில்லறைப் பாடல்களில் கவிதையென்ன, நயமென்ன வேண்டிக்கிடக்கிறது?' என்று பலர் தனிப்பாடல்களைப்பற்றி மட்டமான எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர். நயமும் கவித்துவமும் சொந்த வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட காவிய சிருஷ்டிகளில்தான் இருக்க வேண்டுமென்று ஏதாவது நியதி உண்டா என்ன? வாழ்க்கையில் சொந்த அனுபவங்களை ஒட்டி வெளியிடப் பெற்ற எந்த ஒரு தனிப் பாடலும் அதனதன் நிலையில் நோக்கும்போது நயமும் கவித்துவமும் உடையவைதாம். இந்த உண்மையை மறந்து விடுகின்றனர் மேற்கூறிய எண்ணமுடையோர்.

வெற்றிலை போடும் பழக்கமுடையவர் அந்தக் கவிராயர். சதா வெற்றிலைச் செல்லமும் கையுமாக இருக்கும் அவருக்கு அது ஒரு பொழுதுபோக்குக் கலையைப் போல. உருண்டை உருண்டையாக இருக்கும் முழுக் கொட்டைப் பாக்குகளைப் பாக்கு வெட்டியால் வெட்டிச் 'சீவல்' செய்து போட்டுக் கொள்வதில் அவருக்கு ஒரு தனி இன்பம். 'நறுக் நறுக்' கென்று கொட்டைப் பாக்கின் மண்டையைச் சீவித் தூள் செய்யும் அந்தக் கூரிய பாக்கு வெட்டியின் வெட்டுவாயைப் பார்த்துக்கொண்டே

அதை ஓர் அலாதி வேலையாகக் கருதிச் செய்வார். அந்தப் பாக்கு வெட்டியில் வெட்டிய சீவலை மென்றுகொண்டே வெற்றிலையை நரம்பு உரித்துக் காம்பு கிள்ளிச் சுண்ணாம்பு தடவும் போதுகூட அவருக்கு அவ்வளவு சுகமாக இருக்காது. பாக்கு வெட்டியை எடுத்துச் சீவுவதில்தான் கொள்ளை ஆசை. வளர்ப்பானேன்! வெற்றிலை போடுவது அவருக்கு எவ்வளவு அவசியமோ அதைக் காட்டிலும் பன்மடங்கு அவசியத்திற்கும் ஆசைக்கும் உரிய பொருளாக இருந்தது அந்தப் பாக்கு வெட்டி!

உலக இன்பங்களை வெறுத்த ஞானிகள் பொன்னையும் பொருளையும் மண்ணையும் பெண்ணையும்தான் துறப்பதற்குரிய பெரும்பொருள்களாகக் கூறுகிறார்கள். ஆசாபாசங்களில் சிக்கி உழலும் சாதாரண மனிதர்களில் பெரும்பாலோர் இவைகளெல்லாம் அல்லாத சில சாதாரணப் பொருள்கள் மீதும் இவைகளின் மேல் உள்ளதைக்காட்டிலும் மிகுதியான பற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையைச் சேர்ந்ததுதான் வெற்றிலை போடுவதில் தொடங்கி அதன் சாதனமாக வந்த பாக்கு வெட்டியில் கவிராயருக்கு ஏற்பட்ட இந்த அளவு கடந்த காதல். காரண காரியத் தொடர்பு கற்பிக்க முடியாதது அல்ல. விறகு வெட்டிக்குக் கோடரியும், சமையற்காரிக்கு அரிவாள்மணையும் சாதனங்கள்தாம். ஆனால் அவைகளைப் பற்றுடன் போற்றிப் பேணுவதாகச் சொல்லிவிட முடியாது. பேணுவார்களேயானால் அது பொருளின் அருமையை உணரத்தக்க, ‘அது கிடையாமற் போதல், கைதவறிப் போதல்’ ஆகிய சந்தர்ப்பங்களிலேதான் இருக்கும். இந்த உதாரண விஷயம் காரண காரியத்தொடர்புடையது. ஆனாலும் புலவருக்குப் பாக்கு வெட்டியின் மேலிருந்த காதல் இந்தத் தொடர்பின் குறுக்கமான எல்லையைக் காட்டிலும் பெரியதுதான். ஒருவகைப் பிரமையோடு கூடிய பற்று.

இந்த நிலையில், அந்தப் பாக்கு வெட்டியை இழந்து விட்டால் கவிராயர் என்ன பாடுபடுகிறார் என்று பார்க்கவிரும்பிய சிலர் அதை ஒரு நாள் அவருக்குத் தெரியாமல் எடுத்து ஒளித்து வைத்துவிட்டனர். கை ஒடிந்து விட்டதுபோலத் திண்டாடினார் கவிராயர். அன்று முழுவதும் அவருக்கு ஒன்றுமே

ஓடவில்லை. காலையிலிருந்து அவருக்குச் சாப்பாடுகூட வேண்டி யிருக்கவில்லை. 'பாக்குவெட்டி! பாக்குவெட்டி!' என்று பறந்தார். சுவடி முடிச்சிலிருந்து சுண்டைக் காய்ப் பானைவரை வீட்டில் தேடியாகிவிட்டது, அங்கெல்லாம் இருந்தால்தானே அது கிடைக்கும்? இதையெல்லாம் விடப்பெரிய ஆச்சரியம் என்ன வென்றால் அன்று முழுவதும் அதுவரை அவர் வெற்றிலையே போடவில்லை. பாக்கு இல்லாதகுறை என்று சொல்வதற்கு இல்லை. ஏற்கனவே சீவி வைத்திருந்த சீவல் போதுமான அளவு இருந்தது. இருந்தும் பாக்குவெட்டி போன வருத்தத்தில் அவருக்கு ஒன்றுமே ஓடவில்லை. இன்பத்திலும் துன்பத்திலும் பாடிப் பழகிய நாவல்லவா? பாக்குவெட்டி போன துயரம் ஒரு பாட்டாக உருப்பெற்று அநுதாபங்கொள்ளத்தக்க நிலைக்கு வந்து சேர்ந்தது.

'விறகுதறிக்க கறிநறுக்க
 வெண்சோற்று உப்புக்கு அடகு வைக்கப்
பிறகு பிளவு கிடைத்த
 தென்றால் நாலாறாகப் பிளந்து கொள்ளப்
பறகு பறகென்றே சொறியப்
 பதமாயிருந்த பாக்குவெட்டி
இறகு முளைத்துப் போவதுண்டோ?
 எடுத்தீராயிற் கொடுப்பீரே.'

புலவர் பாட்டை முடிக்கவும் பாக்குவெட்டியுடன் அம்பலவாணன் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது. "சோதனையில் உமக்குத்தான் கவிரயாரே வெற்றி. ஆனால், எங்களுக்கும் தோல்வி கிடையாது" என்று கூறி, வந்த அம்பலவாணன் தங்கள் சூழ்ச்சியை விவரித்தான். 'எப்படியோ உங்களிடமிருந்து பாக்கு வெட்டியைப் பற்றி ஒரு பாடல் சம்பாதித்துவிட்டோமல்லவா? அதுதான் எங்கள் வெற்றி.' கூறிக்கொண்டே பாக்குவெட்டியை முன்வைத்துவிட்டு நகர்ந்தான், இந்த அரிய திட்டத்தை நடத்தி முடித்த 'விடலைப் பயல்' அம்பலவாணன்.

# 9. சந்திப்பு

சுவைகளிலே சிருங்காரம் நிகரற்றது. கவிஞனோ, ரஸிகனோ அந்தச் சுவையில் ஈடுபடுவது நுணுக்கமான ஒரு கலையைப் போன்றது. அதை எடுத்துச் சொல்லும் முறையும் அதிலே ரசனை படிந்திருக்குமாறு செய்வதும் மிகப் பெரிய காவிய சாகஸம். மென்மையை நிலைக்களனாகக் கொண்ட சிருங்கார ரசப் பயிற்சியை முற்றும் பெற்ற கவிஞர்களை விரல்விட்டு எண்ணிவிடமுடியும். வடமொழியிலோ, தென் மொழியிலோ சிலரே அதில் தேர்ந்து பழுத்தவராகத் தெரிகின்றனர். காவியங்களில் சந்தேச நூல்களில், சிருங்காரச் சுவையை அமைத்து வெற்றி பெற்றவர்கள் அவர்கள். ஆனால், தனிப்பாடல்களில் அந்தச் சுவையை வரம்பு கட்டி வடித்துக்கொடுக்கும் அழகை நாம் கண்டால் ஆச்சரியப்பட நேரிடும். அத்தகைய தனிப்பாடல் ஒன்றைக் காண்போம்.

மறுநாள் காலை திருமணம் செய்துகொள்ள இருக்கும் நம்பியும் ஒரு நங்கையும் தற்செயலாக ஒரு நிலைப்படிக்கு அருகே நேர் எதிர் எதிரே சந்திக்கின்றார்கள். தனக்குக் கணவனாகப் போகின்றவன் அவன் என்பது அவளுக்கும், தன்னுடைய மனைவியாகப் போகின்றவள் அவள் என்பது அவனுக்கும் தெரியும். வேறு முன்னோபின்னோ எந்தவிதமான பழக்கமு மில்லை. நிலைப்படியிலோ ஒரு சமயத்தில் ஒருவர்தான் நுழைய முடியும். எனவே இருவரில் யாராவது ஒருவர் வழியை விட்டுக் கொடுத்தே தீரவேண்டும். அவன் தன்னையே வைத்த கண் வாங்காமல் ஊடுருவி நோக்குதல் கண்டு அவள் நாணத்தோடு தலைகுனிந்தாள். தன்னுடைய பார்வையின் அழுத்தம் தாங்காமல் அவள் கூச்சமும் நாணமும் அடைவது கண்ட அவன் தன் நிலையைப் புரிந்து வெட்கித் தலை சாய்த்துக் கொண்டான். இதே நிலை நீடித்தால் தமக்கும் காண்பவர்களுக்கும் சங்கடம் என்ற அளவிற்கு இருவரும் வந்து சேர்ந்தனர்.

'சரி! அவள்தான் முதலில் போய்விடட்டுமே' என்று அவன் வழி விட்டு ஒதுங்கிக் கொண்டான். கீழே தரையைப் பார்த்த

*வண்ணமிருந்த அவள் 'அவன் வரப் போகிறான்' என்றெண்ணித் தானும் வழியை விட்டு ஒதுங்கினாள். கடைசியில் இரண்டு பேருமே போகவில்லை. வழி காலியாக இருந்தது. ஒருவர் மற்றொருவருக்கு வழிவிடவேண்டுமென்று ஒதுங்க, மற்றொரு வரும் அதே கருத்துடன் ஒதுங்கி விட்டால் அப்புறம் வழி வெறுமனே இருக்க வேண்டிய தானே? 'நாம் வழிவிட்டோம்! அவள் போகவில்லை. அவளும் ஒதுங்கிக் கொண்டாள்... நாம்தான் முன்னால்போய் விடுவோமே' என்று அவன் முன் வந்தான்! அதே தீர்மானத்துடன் அவளும் முன் வந்தாள்!.. இரண்டு பேரும் மிகவும் நெருங்கி விட்டனர். முட்டிக் கொள்ளாத குறைதான்!... பின்னால் எப்பொழுதும் முட்டிக்கொள்ளும் தம்பதிகளாக ஆகப்போகும் அவர்களுக்கு அப்போது நெருங்கவே நாணம். கடைசியில் ஒரு வழியாக விலகி ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளாமல் நிலைப்படியைக் கடந்து போய்ச் சேர்ந்தனர். பாட்டில் சிருங்கார ரசத்தின் ஒளி, பட்டை தீட்டிய வைரம் போல மின்னுகின்றது.*

"புதுமணத்த காதலனும் பூவையும்புன் வாயில்
எதிருற்று நாண்தமர்கண்டு எய்திக்–கதுமென்று
ஒருவர்க்கொருவர் வழிவிடப்பல் காற்பின்
இருவரும் போய் மீள்வர் எதிர்"

பூவை = காதலி, புள்வாயில் = சிறியவாயில், தமர் = நம்மவர், எதிர் = நேருக்கு நேர்.

*காட்சி, மானசீக உருவிற் கண்முன்னே தோற்றுவது போன்ற சித்திரத் தன்மையை இதிற் காண்கின்றோம். வழி விடுவதும் விலகுவதுமாகத் தங்களை அறியாமல் நாணத்தாலும் வெட்கத் தாலும் அவர்கள் விளையாடும் இந்தக் காதல் விளையாட்டைப் பாடிய கவி, சிருங்கார ரசத்தில் கை தேர்ந்தவன் போலும். எதைச் செய்துவிடக் கூடாது என்று அவர்கள் நாணி ஒதுங்குகிறார்களோ அந்த 'மோதல்' இயற்கையாக எதிர்பாராத வகையில் நடந்தேவிடுகிறது!*

# 10 இன்றைக்கு மட்டும் இரு!

நின்றையூரின் ஆறு போல அகன்ற வீதிகளுக்குள் நுழைந்து காளத்திநாத முதலியாரின் வீட்டைக் கண்டு பிடித்தபோது எவ்வளவு மகிழ்ச்சி இருந்ததோ அவ்வளவும் அவர் ஊரிலில்லை என்று தெரிந்ததும் ஏமாற்றமாக மாறிவிட்டது மதுர கவிராயருக்கு. மறுநாள் காலை எப்படியும் அவரை வீட்டில் பார்க்க முடியும் என்று அறிந்து கொண்டார். அப்போதுதான் மாலை நேரங் கழித்து சுற்றி இருள்பட ஆரம்பித்திருந்தது. அன்றைக்கு ஒரு நாள் இரவை எங்கேயாவது, எப்படியாவது கழித்துவிட்டால் மறுநாள் காலை காளத்தி நாதரைக் கண்டு வறுமை தீரப் பரிசில் பெற்றுவிடமுடியும். புலவர்க்கும் ஏழைகட்கும் பொருள் கொடுத்துக் காக்கும் இரட்சகனாக இருந்தார் காளத்திநாதர். வள்ளலென்ற தமிழ்ப் பெயர் அவருக்காகவே உண்டாகியிருக்க வேண்டுமென்று கூறினாலும் அதில் மிகை சிறிது மிருக்க முடியாது.

அழுக்கடைந்த கந்தல் ஆடை. சோறு கண்டு சிலநாள் ஆகிய வயிறு. குழி விழுந்த, ஆனால் ஒளி நிறைந்த மலர்ந்த கண்கள். கலைகளின் தேஜஸ் முகத்திலே நன்றாகத் தெரிந்தது. ஓர் இடிந்துபோன சத்திரத்துத் திண்ணை முடங்கிக் கொள்ள இடமளித்தது. வறுமையோடு போராடும் அந்த ஏழைக் கவிஞனுக்கு வயிறு பசியால் முற்றிலும் வாடும்போது, உறக்கம் எங்கிருந்து வரும்? அதோடு பொழுது விடிந்தால் காளத்தி நாதரைக் கண்டுவிடலாம் என்ற ஆர்வமும் சேர்ந்துகொண்டது. அவனுக்குத் தூக்கம் வரவில்லை. மறுநாள் காலை காளத்தி நாதரைப் பார்த்த பிறகு தன் நிலையைக் கற்பனை செய்தவண்ணம் ஓடியது அவன் சிந்தனை.'இன்று வரை நம்மிடமிருந்து விலகாமல் நிழல் போலப் பின்பற்றி வாட்டும் வறுமைக்கு நாளைக் காலை நம்மிடமிருந்து விடுதலை! கவிஞர்களைப் போற்றிப் பேணுவதையே கடமையாகக் கொண்ட அந்த வள்ளல் நமக்கு உறுதியாக உதவி செய்வார். ஐயோ பாவம்! நம்மோடு விடாமற் சுற்றிச் சுற்றிக் கழுத்தறுத்த இவ்வறுமை இன்றைக்கு மட்டும் தன்

சுதந்திரத்தோடு இருக்கட்டும். நாளை வைகறையில் வறுமை எங்கேயோ? நான் எங்கேயோ?' இப்படி எண்ணங்கள் அவன் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தன.

கவியின் மனத்தில் எழும் எந்த எண்ணங்களும் எண்ணங்களாகவே தங்கிவிடுவதில்லையே? அவைகள் பாட்டுருவம் பெற்றுவிடத் தவறமாட்டா. எண்ணங்களை எண்ணி வெளியிடுவதில் சாதாரண மனிதனுக்கும் கவிஞனுக்கும் உள்ள வேறுபாடு கூட அதுதான். அந்தக் கவிஞனுடைய எண்ணங்கள் 'வறுமையை' முன்னிலைப்படுத்தி அதை நோக்கியே அனுதாபத்தோடு பாடும் ஒரு வெண்பாவாக வெளிவருகின்றது.

"நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழற்போல
நாளைக்கு இருப்பாயோ நல்குரவே—காளத்தி
நிறைக்கே சென்றக்கால் நீயெங்கோ நானெங்கோ
இன்றைக்கே சற்றே இரு"

இடிந்துபோன அந்தச் சத்திரத்தின் திண்ணையில் பல நாட்களாக உண்ணாத நிலையில் இத்தகைய வேடிக்கையான பாட்டுத் தோன்ற எப்படிப்பட்ட மனோபாவ எளிமை வேண்டும்? அது அந்தக் கவிக்குப் பூரணமாக இருந்திருக்கிறது போலும்!

## 11. பொய் சொன்ன வாய்

பரிசில் கொடுக்காது தம்மைப் போக்குக் காட்டி அனுப்பிவிட்ட செல்வர்களை எல்லாம் வரிசையாக எண்ணிப் பார்த்தார் கவிராயர். 'ஆமாம்! அவர்கள் எல்லாரையும் வாயலுக்கப் பாடி வைத்தோமே? அதற்குச் சரியான பாடம் கற்பித்து விட்டார்கள். கல்லுக்கும் இறுக்கமான இவர்கள் நெஞ்சு சொல்லுக்கா உருகிவிடப் போகிறது? ஒருபோதும் இல்லை. காசு பணம் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை! கவிதையை உணரக்கூட இவர்களுடைய உள்ளம் இயலாததாக

இருக்கின்றதே? குட்டிச் சுவருக்குக்கூட உணர்ச்சியும் சுவையும் தட்டுப்பட்டுவிடலாம்! இந்தக் கஞ்சப் பிரபுக்களுக்கு எங்கே? பொன்னும் முத்தும் பட்டுப் பீதாம்பரமுமாகத் தங்கள் பருத்த உடலை மறைக்க அழகு செய்துகொண்டு வெளிக்குப் பெரிய மனிதர்களாக நடிக்கிறார்கள். ஒரு வேளை நடப்பது இப்படியும் இருக்குமோ?' கவிராயரின் குயுக்தி வேலை செய்கிறது. பண்பாடுகளிடம் மழைக்குக்கூட ஒதுங்கி இருக்காத இவர்களை, இவர்களிடம் இல்லாத பண்பாடுகளையெல்லாம் இருப்பதாகப் பாடிவைத்ததால்தான் நமக்கும் இல்லை என்று சொல்லி விட்டார்களோ? ஆமாம்? அதுதான் காரணமாயிருக்க வேண்டும்! பொய் சொன்ன வாய்க்குத் தகுந்த தண்டனை வேண்டுமல்லவா? கவிராயர் தமக்குள் சிரித்துக் கொள்கிறார், அது கேலிச் சிரிப்பு!

"அசல் மடையனைப் பெரிய அறிவாளிபோல இருக்கும்படி கருத்தமையப் பாடினேன். வெறும் காட்டுப் பயலை நாகரிகந் தெரிந்த நாட்டுக்குத் தலைமை சான்றவன் என்றேன், கொலை, கொள்ளை, வஞ்சகம் இவைகளை எல்லாவற்றையும் ஒன்று விடாமல் செய்துவிட்டுக் 'கௌரவப்' போர்வைக்குள் மறைந்து கொள்ளும் அந்தப் பிரபுவை மிக நல்லவன் என்ற பொருள் தோன்றப் பாட்டில் கூறினேன். போர் முகத்தைச் சித்திரத்திலே கூட பார்த்திருக்காத ( ஒரு வேளை பார்த்திருந்தாலும் மூர்ச்சித்து விழுகின்ற) ஒரு கோழையைப் போரிலே புலி எனப் புனைந்துரைத்தேன். கையும் காலும் உடம்புமாக மொத்தத்தில் ஒரு தோலால் மூடப்பட்ட எலும்புக் கூடு போன்ற நோஞ்சல் மனிதனை " மல்விளையாடிய பெரிய புயத்தையுடையவனே!" என்று முழுப் பொய்யாகப் புகழ்ந்தேன். கனவில்கூட எச்சிற் கையை உதறியறியாத கஞ்சனை, வள்ளல் என்றேன். இவ்வளவும் கவிதைக்காக நான் மிகுதியாகப் புனைந்துரைத்த பொய்யுரைகள். இப்படி இல்லாதவற்றை எல்லாம் சொன்னதற்காகத்தான் அவர்களெல்லாரும் கூடிப் பேசிக்கொண்டவர்களைப் போல் எனக்கும் இல்லையென்று கையை விரித்துவிட்டார்கள். கவிராயர் இப்போது வாய்விட்டுச் சிரித்தார்.

"கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்
காடெறியும் மறவனை நாடாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனை நான் நல்லாய் என்றேன்
போர் முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனை தான் வள்ளலென்றேன்
இல்லாது சென்னேனுக்கு இல்லையென்றார்
யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேனே!"

*சிரிப்பொலி நின்றதும் இந்தப் பாட்டொலி வந்தது. கவிராயர் புனைந்துரைத்ததும், கஞ்சர்களான பிரபுக்கள் கையைவிரித்ததும் ஒன்றுமில்லாத வெற்று நிகழ்ச்சிகள்தாம். ஆனால் இவர் சமத்காரமாக 'இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்' எனத் துன்ப மிகுதியால் நெஞ்சு துடித்துப் புண்ணாக வேண்டிய நிலையில் புன்முறுவல் பூப்பதுதான் இலட்சிய வாதிகள் சொந்த மனச் சமாதானத்தை அடையும் முறைக்கு ஒரு சிறு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சாதாரணமானவர்களால் பாதிக்கப்படும்போது குறிக்கோள் கொண்ட இலட்சிய முடையவர்கள் பெரிய சாதனைகளால் அந்த வேதனைகளை வெல்வதில்லை. வெறும் சிரிப்பைக் கொண்டேகூட வென்று விடுகிறார்கள்.*

## 12. அவரவர் திறமை

**சோ**ழன் கூறிய அந்தக் கருத்து ஔவையாருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. "சிலர் சில செயல்களுக்காகவே தனித் திறமையுடன் பிறக்கிறார்கள். அவர்களைத் தவிர அந்தச் செயல்களை அதே திறமையுடன் செய்ய வேறு எவராலும் முடிவதில்லை." இதுதான் சோழன் கூற்று. தன்னுடைய சித்தாந்தத்திற்கு மேற்கோளாகச் சில துறைகளில் சிறந்த தனி ஆற்றல் பெற்ற சிலரையும் குறிப்பிட்டு நிரூபிக்க முயன்றான் சோழ

மன்னன். "பெருங்காப்பியம் பாடுவதில் தமிழ் இலக்கிய உலகத்திலேயே இன்னார்தான் சிறந்தவர். அவருக்கு இணையாக வேறு எவருமே இல்லை" என்று ஒருவரைக் குறிப்பிட்டு அவன் உயர்த்திப் பேசிய போது அதுவரை மௌனமாக இருந்த ஔவையார் வாய் திறந்து அவனுக்கு மறமொழி கூறவேண்டிய அவசியம் ஏற்பட்டது. திறமைக்கும் திறமையுடையவனுக்கும் உள்ள தொடர்பை அந்த மறுமொழி மூலம் சோழனுக்கு நன்றாக விளக்கினார். " திறமை என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் முழுமையாக அமைந்திருக்கும். அதைக்கொண்டு மற்றவர்கள் திறமையற்றவர்கள் என்று முடிவு கட்டுவது பெரிய தவறு." ஔவையார் சோழனுக்கு அதை விளக்க இந்த அடிப்படையை மேற்கொண்டார். சோழன் தன் முடிவைப் பற்றிச் சிந்திக்கும்படி இருந்தது ஔவையார் தக்க சான்றுகளோடு அவனுக்குக் கூறிய மறுமொழி.

செத்தை, நார் இவைகளைக் கொண்டு தூக்கணாங்குருவி கட்டுகின்ற கூட்டை நாம் ஆறறிவு படைத்த மனிதர்களாக இருந்தும் கட்ட முடியாது. இவ்வளவுக்கும் அந்தத் தூக்கணாங் குருவி நம்மினும் இழிவான அஃறிணையைச் சேர்ந்த ஒரு சிறு பறவைதான். அது பின்னுகிற ஒரு கூட்டை நாம் பின்ன முடியவில்லை என்பதனால் நம்மைத் திறமையற்றவர்களாகத் தீர்மானித்துவிட முடியுமா? அதுதான் போகட்டும்! சிறு சிறு மண் சிகரங்களோடு கரையான் சமைத்துக் கொள்ளும் புற்றுக்களைப் போல் ஒன்றாவது நம்மால் சமைக்க முடியுமா? காற்றில் பறந்துவிடுமோ என்று சந்தேகம் கொள்ளத்தக்க சிறிய உருவம். அது படைக்கிறது அழகு அழகான மண்புற்றுக்களை! மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கட்டி வனப்புச் செய்யும் மனிதக் கரங்கள் கேவலம் இந்தக் கறையான் புற்றுக்களைக் கட்டிவிட முடியாதா? முடியாதென்று இல்லை! ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு வேலையிலே திறமை. அவ்வளவு தான். அதுவே வேண்டாம்! மரக்கொம்பிலே கட்டுகின்ற தேன் கூட்டைப்போல் ஒரு கூடு கட்ட அந்தத் தேனீயைக் காட்டிலும் பல வகையிலும் உயர்ந்த மனிதனால் முடியுமா? சிறு சிறு

துவாரங்களுடன் அமைந்திருக்கும் நுண்ணிய தேன் அடையைச் சில சிறிய ஈக்கள் அல்லவா செய்துவிடுகின்றன? அப்படிச் செய்ய முடிவதனால் மட்டும் தூக்கணாங்குருவியும் கரையானும் தேனீயும் மனிதர்களைக் காட்டிலும் நாங்கள் உயர்ந்தவர்கள் என்று தலை நிமிர்ந்து சொல்லிக் கொண்டுவிட முடிகின்றதா, என்ன? இதே போலத்தான் அவரவருக்கென்று அமையும் திறமையும்!

"வான்குருவியின் கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் – யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாம் காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்று எளிது"

**வான் குருவி = தூக்கணாங் குருவி, சிலம்பி = சிலந்தி, கரையான் = கரையானின் புற்று.**

ஔவையார் பாடி முடித்தார். சோழன் தலை குனிந்தான். தன் கருத்தில் இருந்த பிழையை எடுத்துக் காட்டியதற்காக அவருக்கு மனமார்ந்த நன்றி செலுத்தி வணங்கினான். செயலையும் செயல் வன்மையையும் பொறுத்து எழுகின்ற வன்மை, மென்மை உணர்ச்சிகளைப் பற்றிய அருமையான சித்தாந்தம் ஒன்றை யாவருக்கும் விளக்கி விடுகின்றது இந்த வெண்பா.

## 13. உலகம்பெறும் உணவு

வந்த விருந்தினர் பசியால் வெந்தாலும் ஏனென்று கேட்க மாட்டார்கள் புல்வேளூர்ப் 'பெருமக்கள்'. தாங்கள் உண்டு தங்கள் வயிறுண்டு என்ற 'கட்டுப்பாடான' கொள்கைக்காரர்கள் புல்வேளூரார். பனந் தோட்டத்திற்கு நடுவில் ஒரு பலா மரம் போல் 'பூதன்' ஒருவன்தான் அந்த ஊரிலேயே மற்றவர்களைப் பற்றி நினைப்பவனாக இருந்தான். பசித்து வந்த விருந்தினரைக் கண்டால் பண்போடு உபசரிப்பான்; 'யாருக்கு வந்த விருந்தோ?' என்று எவரையும் அலட்சியம் செய்வதே இல்லை. புல்வேளூரில்

நல்ல மனிதனாக அந்த ஒருவன் பூதன் என்ற பெயரோடு இருந்து வந்ததனால்தான் மழை பெய்து வந்தது.

உச்சி வெய்யில் மண்டையைப் பிளந்து கொண்டிருக்கும் அந்த நேரத்தில், வயிறு காய வந்த ஔவையார், நல்லவேளையாகப் பூதனுடைய கண்ணிலே பட்டார். புல்வேளூரைப் பற்றி அதற்கு முன்பு தெரிந்துகொள்ளாத அவர் பூதனைக் காண்பதற்கு முன் சந்தித்த இரண்டொருவர் மூலம் அது எத்தகைய ஊர் என்பதைத் தெரிந்துகொண்டார். விருந்து கண்டால் வருந்தி ஒளிந்து கொள்பவர் புல்வேளூர்ப் பொது மக்கள் என்ற நிலையைப் புரிந்து கொள்ள ஔவையாருக்கு வெகு நேரம் ஆகவில்லை. காளான் களுக்கு நடுவில் குண்டு மல்லிகைபோல் பூதன் அங்கே இருப்பதும் தெரிந்தது. வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்திட்டான் பூதன். அவன் அந்த அரும்பசிப் போதில் அள்ளி இட்ட வரகரிசிச் சோறு அமுதமாக இருந்தது.

அப்போதுதான் வடித்து இறக்கியிருந்த வரகரிசிச் சோற்றையும் கத்தரிக்காய் வதக்கலையும் ஆவி பறக்கும் சூட்டோடு இலையில் படைத்தபோது ஔவையார் இந்த உலகத்தையே மறந்து சுவைத்து உண்டார். மொர மொரவென்று புளித்த கெட்டியான மோரை ஊற்றினபோது அந்தச் சுவை பன் மடங்காயிற்று. தரமாகச் சமைத்திருந்தாள் புல்வேளூர்ப் பூதனின் மனைவி. வரகரிசியைக் குத்திப்புடைத்துச் சோறு சமைக்கும் பழக்கம் அவளுக்குக் கைவந்த பயிற்சி. எண்ணெய் கொட்டி வாட்டியிருந்த கத்தரிக்காய் வதக்கல் உலகம் பெறும். பசியார உண்டபின் பூதனுடைய காலமறிந்து செய்த நன்றிக்கு என்றும் அழியாத ஒரு பதில் நன்றியைத் தாமும் செய்ய விரும்பினார் ஔவையார்.

> "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
> முரமு ரெனவே புளித்த மோரும் — தரமுடனே
> புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்து பரிந் திட்ட சோறு
> எல்லா உலகும் பெறும்"

வழுதுணங்காய் = கத்தரிக்காய், பரித்து = அன்பு கொண்டு.

இப்பாடல் மூலமாகப் புல்வேளூர்ப் பூதனின் விருந்தோம்பும் பண்பை என்றென்றும் நிலைக்கச் செய்துவிட்டார் ஔவையார். ஒரு நாளைக்கு ஒருவேளை உணவை அன்போடு இட்டான் பூதன். அந்த அன்புக்கு நன்றி, காலத்துக்கு வளைந்து கொடுத்து அழிந்துபோகாத ஒரு கவிதையாகக் கிடைத்தது. புல்வேளூரில் பூதனிருந்த இடம் புல்முளைத்துப் போயிருக்கலாம். ஆனால் அந்தப் பரோபகார சிகாமணியின் பெயருக்குத் தமிழ்ப் பாட்டியார் கொடுத்த நற்சான்றுச் செய்யுள் தமிழ் மொழி உள்ளவரை அழியப் போவதில்லை. காலத்தை வென்று கொண்டே வளரும் பூதன் புகழ்.

அவன் அளித்த வரகரிசிச் சோற்றையும் கத்தரிக்காய் வதக்கலையும் புளித்த மோரையும் உலகம் பெறும் உணவாகக் குறிப்பிட்டு மகிழ்கிறார் ஔவையார். 'அவன் தன்னைப் புகழ்ந்து கொண்டே பரிவுடன் அந்த உணவை அளித்தான்' என்பதையும் பாட்டிலே நன்கு கூறியுள்ளார் ஔவையார். நன்றி செய்தவன் அழிவுக்கு அப்பாற்பட்ட நன்றியைப் பதிலுக்குப் பெற்று விட்டான்.

## 14. கறவைப் பசு ஒன்று தருக!

பொன் விளைந்த களத்தூர் படிக்காசுத் தம்பிரான் தலை சிறந்த தமிழ்ப் புலவர். புலமைக்கு உரிய தகுதிகளில் வறுமையும் ஒன்று என்ற நியதி ஏற்பட்டிருக்கும்போது அது அவரை மட்டும் விட்டு விடுமா என்ன? வல்லைமாநகர்க் காளத்தியப்பர் கொடையுள்ளம் படைத்த செல்வர். புலவர் மேல் அனுதாபங்கொண்டு சமய சந்தர்ப்பங்களில் உதவி வருபவரும்கூட, தகுதியுள்ள இத்தகைய செல்வர் சிலர் வாழ்ந்ததனாலேதான் தமிழ்ப் புலவர்கள் வறுமையை மறந்து வாழ முடிந்தது. துயரப் பிடியில் சிக்கி உழலாமல் பாடிவர முடிந்தது.

அப்போது படிக்காசுக்குக் குழந்தை பிறந்திருந்த சமயம். அவர் மனைவி தங்கச் சிலைபோல ஓர் ஆண் குழந்தையைப்

பெற்றிருந்தாள். குழந்தைக்குத் தாய்ப்பால் மட்டும் போதவில்லை. அக்கம் பக்கத்து வீட்டில் வாங்கியளிக்க உதவுபவர்களும் இல்லை. பசுவின் பால் கிடைக்காது என்று இல்லை. அதைச் சமயமறிந்து வாங்கி அளிக்க வீட்டில் சிற்றாட்கள் ஒருவரும் கிடையாது. அந்தக் குறைதான். "குறை தீரக் குழந்தைக்கு வேளா வேளைக்குப் பால் கிடைக்கச் செய்ய என்ன வழி?" என்று யோசித்தார் படிக்காசுத் தம்பிரான். யோசனை ஒரு முடிவுக்கு வந்தது. ஏட்டை எடுத்தார். வல்லை மாநகர்க் காளத்தியப்பருக்கு ஒரு சீட்டுக் கவி எழுதினார். காரியம் வெற்றியே என்ற நம்பிக்கையுடன் ஓராள் வசம் ஏட்டைக் கொடுத்துக் காளத்தியிடம் அனுப்பினார்.

"பெற்றாள் ஒரு பிள்ளை என்மனை
யாட்டி அப்பிள்ளைக்குப் பால்
பற்றாது கஞ்சிகுடிக்கும்
தரமல்ல பால் இரக்கச்
சிற்றாளும் இல்லை இவ்வெல்லா
வருத்தமும் தீர ஒரு
கற்றா தரவல்லையா? வல்லைமா
நகர்க் காளத்தியே!"

**தரம் = பருவம், இரக்க = கேட்டு வாங்கிவர, சிற்றாள்= வேலையாள், கற்றா = கன்றுடன் கூடிய ஈன்ற பசு.**

மறுநாள் பொழுது சாய்கின்ற நேரத்திற்கு ஏடு கொண்டு போன ஆள் தலை ஈத்துப் பசு ஒன்றும் அதன் கன்றும் உடன்கொண்டு வந்து சேர்ந்தான். புலவர் கண்களில் ஈரப்பசை தட்டியது. காளத்தி நாதரின் பரந்த மனத்தையும் தம் வாக்கிற்கு அவர் கொடுத்த மதிப்பையும் நினைத்தபோது, அவருக்கு ஆனந்தக் கண்ணீர் வந்தது. கொல்லையில் புதிதாகக் கீற்று வேய்ந்த மாட்டுக் கொட்டம் ஒன்று உண்டாக்க வேண்டிய அவசியம் இப்போது அவருக்கு ஏற்பட்டது.

'கறவைப் பசு தருக!' என்று அதிகாரியைப்போல ஏடெழுதிக் கேட்டார். கனிந்த உள்ளத்துடன் கன்றோடு கூடிய பசுவை அனுப்பினார் காளத்தியப்பர்.

# 15. பரம்பரைக் குணம்

திருச்சிராப்பள்ளிக்கு வந்தும் உச்சிப்பிள்ளையாரைத் தரிசனம் செய்யாமல் ஊர் திரும்ப மனம் இல்லை இராம கவிராயருக்கு. கையில் மிகுந்திருந்த பொருளை மேலே போர்த்தியிருந்த சரிகைத் துப்பட்டாவின் முன் தானையில் முடிந்துகொண்டே மலைக் கோட்டையை நோக்கி நடந்தார். அந்தி மயங்கும் நேரம். பூக்கடைகளும் சந்தனக் கடைகளுமாக மலைக்கோட்டை வாயில் மாலை நேரத்துப் பொலிவுடன் விளங்கியது. மல்லிகை, பிச்சி முதலிய பூக்களின் நறுமணத்தோடு கலவைச் சந்தனத்தின் புதுமணமும் மூக்கைத் துளைத்தது. 'கணீர் கணீர்' என்று வந்த தாயுமானவர் கோவில் மணியோசை கோவிலில் சந்தியாகால பூஜை நடக்கிறது என்பதை ஊருக்கு அறிவித்தது.

கீழே, கடையில் வெற்றிலைப் பாக்கு, தேங்காய், பழம், கொஞ்சம் பூ இவைகளை வாங்கி மேலே போர்த்துக் கொண்டிருந்த அந்தச் சால்வையில் சுற்றியவண்ணம் படிகளில் ஏற ஆரம்பித்தார் கவிராயர். எந்தக் காலத்திலோ எவனோ ஒரு வள்ளல் மனம் விரும்பிக் கொடுத்த பரிசே அந்தச் சால்வை. கவிராயர் எங்காவது வெளியூர் புறப்பட்டால்தான் பொட்டியிலே உறங்கும் அந்தச் சால்வையும் அவரோடு உடன் போகும். ஏறக்குறைய இருபத்தைந்து வருட உபயோகமாகிய அதன் சேவையில்பட்ட வீரத் தழும்புகள்போல இரண்டோர் கிழிசல்கள் அதை அலங்கரித்தன. ஒரு கோடியில் காசு முடிச்சுடன் தேங்காய், பழம் முதலியவற்றையும் தாங்கியவாறே கவிராயரின் இடுப்பைச் சுற்றிவிளங்கும் பேறு பெற்றது சால்வை. மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கப் படியேறித் தாயுமானவர் கோவிலை அடைந்த கவிராயர் தேவார, திருவாசகப் பாடல்களைப் பாடிக்கொண்டே தரிசனத்தைத் தொடங்கினார். தாயுமானவப் பெருமானை வழி பட்டு முடிந்தபின் உச்சிப் பிள்ளையாரை நோக்கி உயர ஏறிச் சென்றார். யாருக்காக ஊருக்குப் புறப்பட்டவர் பயணத்தை நிறுத்திவிட்டுத் திரும்பி வந்தாரோ, அவரைத் தரிசிக்காமல்

போய்விட்டால் எப்படி? உச்சிப் பிள்ளையாரைப் பார்க்க வேண்டும் என்று ஆவலும் உந்தித் தள்ளப் படிகளைத் தாண்டி மேலே வேகமாக ஏறினார்.

இரண்டு நாழிகை கழிந்தபின் உச்சிப் பிள்ளையார் வழிபாட்டை முடித்துக்கொண்டு மறுபடியும் கீழே இறங்கினவர் இரண்டு மூன்று படிகளைத்தான் கடந்திருப்பார்...! சால்வையின் முன்தானை கனங்குறைந்து லேசாக இருந்ததைக் கண்டு மேலே இழுத்துப் பார்த்த அவருக்குத் தூக்கி வாரிப் போட்டது! காசு முடிச்சை எந்தப் பயலோ அவிழ்த்துக் கொண்டு போயிருந்தான். தம்மை மறந்த பக்தியுடன் அவர் தரிசனம் செய்து கொண்டிருந்த போது எந்த முடிச்சவிழ்க்கும் பயலோ அந்த வேலையைச் செய்திருந்தான். உச்சிப் பிள்ளையார் மீது அவருக்குப் பெரிய கோபம் வந்துவிட்டது. அந்தப் பொல்லாத பிள்ளையாரைத் தரிசிக்க வந்ததனாலேதான் காசு பறிபோயிற்று! பிள்ளையாரையே முடிச்சவிழ்த்தவராக எண்ணி அது அவருடைய பரம்பரைக் குணம் போலும் என்றும் கூறிவிடுகிறார்! வேடிக்கையாகத்தான் சொல்கிறார் வேறொன்றுமில்லை.

"ஏ! உச்சிப் பிள்ளையாரே! உன் தம்பியாகிய முருகன் மாறுவேடத்தில் வள்ளியைத் திருடி மணந்து கொண்டான். மாமனாகிய திருமாலோ கண்ணனாக இருந்தபோது வெண்ணெயைத் திருடி உண்டான். நீரோ இன்று என்னுடைய முடிச்சை அவிழ்த்துக் காசைப் பறித்துக் கொள்ளச் செய்து விட்டீர்! இந்தத் திருட்டு உம்முடைய கோத்திரத்திற்கே உரிய பரம்பரைக் குணமா? என்ன..?" இராம கவிராயர் வயிற்றெரிச்சல் தீரப் பிள்ளையாரை வைது தீர்த்தார்.

"தம்பியோ பெண் திருடி தாயாருடன் பிறந்த
வம்பனோ நெய்திருடி மாயனாம்–அம்புவியில்
மூத்தபிள்ளை யாரே முடிச்சவிழ்த்துக் கொண்டீரே
கோத்திரத்தில் உள்ள குணம்"

**தம்பி = முருகன், வம்பன் = கண்ணன், அம்புவி = அழகிய உலகு.**

உச்சிப் பிள்ளையாரைக் காணவந்த வைபோகத்தில் சோற்றுக் கடைக்குக் கொடுக்க வைத்திருந்த காஸ்ச முடிச்சவிழ்க்கக் கொடுத்துவிட்டுக் கையில் எஞ்சிய தேங்காய் மூடிபழங்களுடன் இறங்கினார் கவிராயர். முடிச்சைப் பறிகொடுத்ததோ எமாற்றம் அடைந்ததுவோ பெரிதில்லை. அதைப் பிள்ளையாரோடு தொடர்பு படுத்தி வேறு சில பரம்பரைச் செய்திகளையும் ஒட்டவைத்துக் கோத்திரத்துக்கு உள்ள குணம் என்று சமத்காரமாகச் சொன்னாரே பாட்டாக, அதுதான் பெரிய சாமர்த்தியம். தனிப்பாடல் திரட்டிலுள்ள பாட்டுக்களிலே மிகப் பல இம்மாதிரிச் சந்தர்ப்பத்தை ஒட்டி இயற்றப்பட்டவைதாம். சந்தர்ப்ப அனுபவமும் சாதுரியமும் அவ்வாறு பாடும்போது ஒன்று சேருவதனால் அசாதாரணத் திறமையாக வெளிப்பட்டு நம்மை வியக்கச் செய்கிறது.

## 16. சீரகம் வேண்டும்!

ஏரகத்து முருகன் கோவிலில் தூணோடு தூணாகச் சாய்ந்துகொண்டிருந்த காளமேகம் காலையில் தமக்குச் சீரகம் தர மறுத்துவிட்ட வயிரவநாதன் செட்டியார் (மளிகைக்கடை முதலாளி) கோவிலுக்குள் நுழைவதைக் கண்டார். காலையில் மண்டையை பிடித்து உலுக்கும் தலைக்குத்துத் தீர அரைத்துப் பூசிக் கொள்ளலாம் என்று நாலு சீரகம் கேட்டார் அந்தச் செட்டியாரிடம். வாய் கூசாமல் இல்லையென்று சொல்லி விட்டார் அந்தச் செட்டியார். அதோடு போகாமல் காள மேகத்தின் பேரில் தற்செயலாக நடந்த ஒரு தவற்றுக்காக ஒரு பெரிய திருட்டுப் பழியையும் சுமத்தப் பார்த்தார். ஈரித்துக் கசிந்துபோயிருந்த பெருங்காயக் கட்டி ஒன்று காளமேகத்தின் மேல் போர்வை நுனியில் ஒட்டிக் கொண்டுவிட்டது. சீரகம் கிடையாத ஏமாற்றத்துடன் திரும்பிய காளமேகத்தை, "என்ன கவிராயரே, பெருங்காயத்தைத் திருடிக்கொண்டு போகலாம் என்று பார்த்தீர்களோ?" என்று திரும்பி அழைத்தவாறே

துணியிலிருந்து பெருங்காயத்தைப் பிய்த்து எடுத்துக்கொண்டு ஆளைத் திருப்பி அனுப்பினார் செட்டியார். காளமேகம் அவரை மனத்தினுள் வைதுகொண்டே திரும்பிச் சென்று விட்டார்.

அதற்குப் பிறகு இப்போதுதான் அந்த வயிரவன் செட்டியாரைக் கோவிலில் பார்க்கிறார். அந்தச் செட்டியாரை எப்படிப் பழி வாங்கலாம் என்றெண்ணிக் கொண்டிருந்த காளமேகத்திற்குத் திடீரென்று ஒரு யுக்தி தோன்றியது. 'கோவிலிலுள்ள முருகனைப் பாடுவதுபோல ஒரு வெண்பா பாடுவோம். அந்த வெண் பாவையே வேறு ஒருவகையாகப் பார்த்தால் செட்டியாரைத் திட்டுவதாயும் அமையவேண்டுமாறு பாடிவிடுவோம்' இந்தத் தீர்மானத்தோடு தூணில் சாய்வதிலிருந்து விடுபட்டுச் செட்டியாரைப் பின்பற்றி மூலத்தானத்தை நோக்கி நடந்தார் காளமேகப் புலவர்.

செட்டியார் தோத்திரப் பாடல்களை வரிசையாகப் பாடி வழிபாட்டை முடிக்கவும், பின்னாலிருந்து வேறோர் குரல் வழிபாட்டைத் தொடங்கியது. எங்கேயோ கேட்ட குரல் போல் இருக்கவே வயிரவநாதன் செட்டியார் திரும்பிப் பார்த்தார். காளமேகம் ஒன்றும் அறியாதவர்போலப் பரம பக்தராக உருகி உருகிப் பாடிக்கொண்டிருந்தார். பாட்டை உற்றுக் கவனித்த செட்டியாருக்கு யாரோ ஓங்கி மண்டையில் அடிமேல் அடியாக அடிப்பது போலிருந்தது. ஒன்றும் பேசி வம்புக்கு இழுக்க முடியாத இரண்டுங்கெட்ட பொருளுடன் பாட்டு அமைந்திருந்ததால் செட்டியார் காளமேகத்தை முறைத்துப் பார்த்துக் கொண்டே அங்கிருந்து நழுவி விட்டார்.

"வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தால் ஆவதென்ன?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை–மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டி யாரே!"

வெங்காயம் = வெம்மையான உடல், சுக்காதல் = வறண்டு போதல்.

வெந்த தயம் = ஒரு மருந்துச் சரக்கு, உடலின் பாரம்.

சீரகம் = மோட்சம், காயம் = உடல்

என்று பாடிக்கொண்டே உதடுகளில் விஷமப் புன்னகையை நெளியவிட்டார் காளமேகம்.

"வெம்மையான உடல் வறண்டு போனால் வெந்து போன அயச் செந்தூரமென்னும் மருந்தினாலும் அந்த வறட்சி தீராது. வீண் பாரமான இந்த உடற்சரக்கை யார் சுமப்பார்? சீர்மையான அகமாகிய மோட்சத்தை அளித்தால் இந்தப் பெரிய உடலைத் தேடமாட்டேன்! ஏரகத்து முருகனே!" என்று வெளிப்படை யாகவும், "வெங்காயம் முதலிய சரக்குகளைக் கட்டி அழுது சுமப்பதால் பயனென்ன? தலைவலிக்குச் சீரகம் தந்திருந்தால் பெருங்காயத்தைத் திருடியிருக்கமாட்டேன்! ஏரகத்து வயிரவநாதன் செட்டியாரே!" என்று உள்ளே வேறு ஒரு பொருளும் பொதிந்துள்ளது.

## 17. கையாலாகாதவர்கள்

கலையையும் கவிதையையும் உரிய முறையில் கௌரவித்துப் பாராட்டி இரசிக்காமல், வெறும் வாய்ப்பந்தலினாலேயே இரசிப்பதுபோலப் பாவனை செய்யும் கையாலாகாதவர்கள் எப்போதும் இருக்கத்தான் இருக்கிறார்கள்.

இராமானுஜப் பாவலர் காலத்திலும் அத்தகையவர்கள் குறைவின்றி நிறைந்திருந்தார்கள் போலும். 'கண்ணெடுத்துப் பாராமல் விலகி இருந்துவிட்டாலும் பரவாயில்லை. கண்டு சுவைத்து மகிழ்வதுபோல் நடிக்கும் போலி நேயர்கள்தாம் கவிஞர்களின் முதல் எதிரி, சத்துரு எல்லாம். 'அழகு! அழகு!' என்று வாய்கிழிய வளர்த்து வானளாவப் புகழ்வது. வயிறு காயும்போது வடித்த கஞ்சிகூடத் தராமல் கதவை அடைத்து விடுவது; இவர்களா நேயர்கள்? இவர்களா இரசிகர்கள்? 'ரசனை'

என்ற சொல்லுக்கே அவமானம். இவர்களை ரசிகர்கள் என்று சொன்னால், இவர்கள் அசல் முதல் வரிசைக் கையாலா காதவர்கள். எச்சிற் கையால் காக்காய் ஓட்ட முடியாதவன் எல்லாம் ரசிகனாக வேஷம் போடுகிறான். பசித்தபோது ஒரு கவளம் சோறும், கிழிந்தபோது நாலு முழம் துணியும் கலைஞனுக்குத் தர அஞ்சுகின்ற கயவர்களுக்கு ரசனை உணர்வும் இருக்கிறதா? அப்படியானால் ரசனை உணர்வு என்ற ஒன்று இன்றே இப்போதே மண்ணோடு மண்ணாக அழிந்து போய் விடட்டுமே!' இப்படி எண்ணி மனங்குமைந்தார் இராமானுஜப் பாவலர். தொண்டை வலிக்க இனிய குரலில் அழகிய செந்தமிழ்ப் பாடல்களால் பல வள்ளல்களைப் பாடிப் பாடி அலுத்து விட்டது அவருக்கு. பாடி முடிகின்றவரை "ஆகா! அற்புதம்! அபாரம்! என்ன ஞானம்! என்ன கலை! இதுவன்றோ கவிதை!" என்றெல்லாம் புகழ்ந்தனர். முடிந்ததும் பரிசில் என்றால் கடிந்து மொழிகிறார்கள். கதவை அடைக்கிறார்கள். சற்றே வெளியேறக் காலந் தாழ்த்தினால் கழுத்தைப் பிடித்துக்கூட வெளியே தள்ளிவிடுவார்கள் போலிருக்கிறது, இந்தக் கையாலாகாத கலாரசிக 'சீமான்கள்!'

வறுமை முட்களில் சிக்கித்தவித்த அவருடைய ரோஜா உள்ளம் ஆதரவிழந்து தவித்தது. முடிவில் ரோஜாப் பூவின் முட்கள் போலக் கையாலாகாத இந்த ரசிகர்களைக் குத்தி வாட்டும் சொற்கள் அவருடைய ரோஜா உள்ளத்திலிருந்து வெடித்துச் சிதறுகின்றன. கனல் கக்கும் எரிமலைக் குழம்பு போலப் பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலை ஒத்த சொற்களால் வாய்ப் பந்தல்காரர்களுக்கு ஒரு சூடு கொடுக்கிறார். அந்தச் சூடு நெருப்பிலே காய்ச்சிய சூட்டுக்கோலால் இடப்பட்ட சூடாக இருந்தால் மறைந்து தழும்பு ஆறிப்போயிருக்கும். ஆனால் அது சொல்லிலே காய்ச்சிச் செய்யுளுருவிலே கொடுத்த சூடு! என்றும் ஆறாத சூடு. ஏன்? ஆற்றிக்கொள்ள முடியாத சூடு. கையாலாகாத வர்களின் போலி ரசனைக்குப் பரம்பரையாக நிலைத்துவிட்ட சூடு. சூட்டைக் கொடுக்கும் பாடல் இன்றும் சுடச்சுட வாழ்ந்து வருகிறது. 'அவர்கள்' உள்ள வரையில் அதுவும் வாழத்தானே வாழும்.

எண்ணான்கு முப்பத்திரண்டு பற்காட்டி இசையுடனே
பண்ணாகச் செந்தமிழ்பாடி வந்தாலும் இப்பாரிலுள்ளோர்
அண்ணாந்து கேட்பர் அழகு அழகு என்பர் அதன் பிறகு
சுண்ணாம்பு பட்ட வெற்றிலையும் கொடார் கவி சொன்னவர்க்கே.

வறுமையில் ஏமாறிய கலைஞனின் மனோபாவம் துயர் வடிவமாக இந்தப் பாட்டில் அடியிலிருந்து முடி வரை அமைந்து கிடக்கிறது. இராமனுஜப் பாவலரைப்போல் எத்தனையோ கலைஞர்கள், கவிஞர்கள், திறமைசாலிகள் கலையுலகத்தில் ஏமாற்றம் என்ற உணர்விற்கு ஒரு பாரம்பரிய வாரிசாக விளங்கி வருகிறார்கள். என்றைக்கும் அந்த ஒரு பரம்பரை மூலையில் ஒதுங்கிக் கிடக்கிறது. அப்படி ஒதுங்கி முடங்கச் செய்யும் கையாலாகாத 'ரசிக பரம்பரை'க்கும் பஞ்சமே இல்லை.

## 18. அழியாக் கலை

திருவோலக்க மண்டபத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்தார் ஒளவையார். பல காத தூரம் பயணம் செய்த களைப்பில் உடல் சோர்வுற்றிருந்தது. குலோத்துங்க சோழனைக் காண்பதற்காக வந்திருந்த அவர் வாயில் காவலனிடம் உள்ளே செல்ல ஏற்ற சமயமறிந்து, தம் வரவைத் தெரிவித்துவிட்டு வருமாறு கூறி, மண்டபத்திற்குள் அனுப்பியிருந்தார். அவன் மீண்டு வந்த மறுமொழி அளித்ததும் உள்ளே செல்லலாம் என்ற கருத்துடனேயே அவர் சபா மண்டபத்திற்கு வெளியே காத்திருந்தார்.

பொழுது விரைவாகச் சென்று கொண்டிருந்தது. உள்ளே சென்ற காவலன் இன்னும் வரக்காணோம். கால் கடுக்க நின்றுகொண்டிருந்தார் தமிழ் மூதாட்டியார். வெகு நேரத்திற்குப் பிறகு காவலன் கையில் ஒரு புத்தம் புதிய நூற்சேலையுடன் வெளியே வந்தான்.

"தாயே தாங்கள் கூறியபடி, 'பெண்பாற் புலவர் ஒருவர் காண வந்திருக்கிறார், உள்ளே வர அனுமதி நோக்கிக் காத்திருக்கின்றார், திருவுள்ளம் எப்படியோ?' என்று மன்னர் பிரானிடம் சென்று உரைத்தேன். அவர் இப்போது இன்றியமையாத வேலையாக அமைச்சர்களுடன் கலந்து சிந்தித்துக் கொண்டிருப்பதால், இந்தப் புதிய நூல் புடவையைத் தங்களுக்குப் பரிசிலாகக் கொடுத்து அனுப்புமாறு எளியேனுக்கு ஆணையிட்டார்" என்று கூறிக் கொண்டே அந்த நூற்சேலையுடன் ஔவையாரை நெருங்கினான் காவலன்.

ஔவையாரின் புலமை நெஞ்சம் புண்பட்டது. 'பிச்சை கொடுப்பது போல முகங் காணாமல் காவலனிடம் புடைவையைக் கொடுத்து விட்டா கவிஞரை மனமகிழச் செய்ய முடியும்? சோழன் மனத்திலா இந்த நினைவு? நம்ப முடியாத சிறுமை!'

"உன்னைப் பார்க்க வந்தேன்; பாட வந்தேன். பார்க்கவும் பாடவும் விலை கேட்கவா வந்தேன்? விலையாகக் கருதி நீ பரிசில் கொடுத்தாலும் இந்தக் கிழிந்துபோகும் நூற்சேலையா என் அழியாத பாட்டிற்கு ஈடு? அழியாக் கலைக்கு அழியும் விலை கொடுக்கும் பேதைமை நிறைந்த பித்தன்தானோ இந்தக் குலோத்துங்கன்?" வரவழைத்துப் பாடல் கேட்க விருப்பமில்லை என்றாலும் 'உடுக்கத்துணி தேடி உலவும் யாரோ ஒரு பேதைப் பெண்! பாடி வயிறு வளர்ப்பவள்' என்ற நினைவில்தான் இவன் இவ்வாறு செய்திருக்கிறான்.

ஔவையார் அமைதியாக நின்றுகொண்டே இருந்தார். அவர் மனத்தில் இந்த எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன.

எதிரே கையில் நூற்சேலையுடன் நின்றிருந்த காவலன் பொறுமையிழந்து "என்ன பாட்டி? இப்படியே நின்று கொண்டிருந்தால்? உங்களுக்கு இந்தச் சேலை வேண்டாமா?" என்று கேட்டான்.

ஔவையார் அவனைக் கையமர்த்திச் சைகை செய்து சற்று அமைதியாக இருக்குமாறு வேண்டிக்கொண்டு தோளிலிருந்த முடிப்பை அவிழ்த்து ஓலை நறுக்கையும் எழுத்தாணியையும் எடுத்தார். சில நொடி நேரத்தில் ஓலை நறுக்கில் ஏதோ எழுதிக் காவலன் கையிலிருக்கும் நூற்சேலையின் மேல் வைத்து "இதை இந்தச் சேலையோடு உங்கள் மன்னரிடம் காட்டு. நான் அதுவரை இங்கிருக்கிறேன். எனக்காக நீ இதைச்செய்ய வேண்டும்" என்று அவனை வேண்டிக் கொண்டார். அவன் ஓலை நறுக்கையும் சேலையையும் கொண்டு உள்ளே சென்றான்.

அரை நாழிகை சென்றது. காவலனும் அமைச்சர்களும் பின்தொடரப் பதறியடித்துக்கொண்டு வாசலுக்கு ஓடி வந்தான் குலோத்துங்கன். வாசலில் அவனுடைய கண்கள் தேடிய உருவம் காணப்படவில்லை. வாசல் சூன்யமாக விளங்கிற்று. தொலைவில் நான்காம் கோட்டையின் பிரம்மாண்டமான வாயிலுக்கு அடியில் ஒரு வயதான கிழவி கோலூன்றித் திரும்பி நடந்து கொண்டிருந்தாள். கிழப்பருவத்திலும் புலமைக்குரிய தேஜஸ், எடுப்பான நடை எல்லாமிருந்தன அவளிடம். இங்கே குலோத்துங்கன் கையில் இருந்த ஓலை நறுக்கு அவனைப் பார்த்து நகைத்தது.

"நூற்றுப் பத்தாயிரம் பொன் பெறினும் நூற் சீலை
நாற்றிங்கள் தன்னிற் கிழிந்துபோம்—மாற்றவரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வேல் அகளங்கா
என்றும் கிழியாது என் பாட்டு"

**திங்கள் = மாதம், பொன்ற = சாகும்படியாக,**

**அகளங்கன் = குலோத்துங்கன்.**

என்ற பாடல் அந்த ஓலை நறுக்கில் காட்சியளித்தது.

## 19. ஒரு வாயும் நால் வாயும்

சாதுரியமாக மற்றவர்களைப் புகழ்வதும் ஒரு கலையைப் போன்றது. அது நூல் ஏணியில் ஆற்று வெள்ளத்தைக் கடப்பதுபோன்ற கடினமான வேலை. அதைப் பிழைபடாமல் செய்வதற்கு உயரிய கலைத்திறன் வேண்டும். ஒருவரைப் பழிப்பது போலவும் புகழலாம், புகழ்வது போலவும் பழிக்கலாம். ஆனால் இரண்டுமே வரையறை பிறழாத பொருளமைப்பும் அதைச் சொல்லும் விதமும் அமையப் பெற்றவையாக இருக்கவேண்டும். தனிப் பாடல்களில் மன்னர்களையும் வள்ளல்களையும் பிறரையும் புகழ்ந்து பாடப்பெற்ற பாடல்கள் அத்தகைய அமைப்பு குன்றாத பொருள்திறன் பெற்று விளங்குகின்றன.

இலங்கை அரசன் பரராசசிங்கன் வள்ளல். கொடுக்கத் தயங்கி அறியாத கொடைஞன். பாடி வந்தாலும் சரி, எந்தவிதத் திறமையுமின்றிக் கை நீட்டியே வாழ்வோ ராயினும் சரி கொடுத்து மகிழ்கின்றவன். தன்னுடைய பொருளைப் பிறர்க்குக் கொடுத்து அதை அவர்கள் நுகர்கின்றபோது தானும் கண்டு மகிழும் அனுபவம் இன்பம் மிக்கது. செல்வர்களாக இருந்தாலும் எல்லோருக்கும் அந்த அனுபவத்தின் மேன்மை தெரிவதில்லை. அதில் கிடைக்கும் இன்பத்தில் தியாகமும் திருப்தியும் கலந்த ஒரு வகையான மனச்சந்துஷ்டி உண்டு. அதை அறிந்து தெளிந்தவன் பரராசசிங்கன்.

தமிழ்க் கவி வீரராகவருக்கு இவனைக் கண்டு பாடி வேண்டுவன பெற்று வரவேண்டு மென்ற ஆசை இருந்தது. பரராசசிங்கன் கொடுக்கும் கொடையால் வாழ்க்கை வறுமையைப் போக்கிக் கொள்ளலாம் என்று கருதிச் சென்றார். எதிர்பார்த்தது போலவே மனம் மகிழ வரவேற்று, உபசரித்தான். மதுரமயமான பாடல்களைக் கேட்டுச் சுவைத்தான். நாடாளும் அரசன் பாடல்களை அனுபவிக்கும்போது கவிதை மன்னராகிய வீரராகவருக்கு அடியாள்போல நடந்து கொண்டது அவருக்கே வியப்பளித்தது. இரசிகன் கவிக்கு முன்னால் குழந்தையுள்ளம் பெற்று ஈடுபாடு கொண்டால்தான் சுவையுணர்ந்து கவிதைகளை

அறியமுடியும் என்பது பரராசசிங்கனுக்கு நன்றாகத் தெரியும். அதுவே அவன் கலையுணர்ச்சிக்கு அடிப்படையான கொள்கையுமாகும். புலவருக்கோ மகிழ்ச்சி வெறி பிடித்துவிட்டது. குழந்தையோடு விளையாடும் தாய்போல அரசனோடு கவிதை விளக்கத்தில் ஈடுபட்டார்.

பரிசு பெற வேண்டிய போதும் வந்தது. ஒரு பெரிய யானையையும் அதை வைத்துக் காப்பாற்றுவதற்குரிய பெரிய செல்வத்தையும் கொடுத்தான் பரராசசிங்கன். முதலில் யானையைப் பரிசிலாக அளிக்க இருப்பது அறிந்த புலவர் நடுங்கிப்போனார். "ஒரு வாய்க்குச் சோறு கிடையாமல் திண்டாடும் நான் நால் வாயைக் (நால் வாய் = யானை) கட்டி மேய்க்க முடியுமா?" என்றுதான் அவர் அஞ்சினார். அரசன்மேல் அதே கருத்தமைய ஒரு பாடல் பாடினார். அந்தப் பாடல் பழிப்பதுபோலப் பரராசசிங்கனைப் புகழ்கிறது. 'அப்பாவிப் புலவன் யானையிடம் அகப்பட்டுக் கொண்டு சாகட்டுமே என்று கருதிக் கொடுத்துவிட்டானோ?' என்ற எண்ணம், அச்சந் தொனிக்க எழுகின்றது பாடலில். "சோறும் துணியும் வேண்டி வந்தால் யானையைக் கொடுத்துத் தொல்லைப்படுத்துவதுதான் அரசருக்கு அழகோ?" என்ற கூற்றும் நயமாகப் புகழ்கிறது.

"பல்லை விரித்து
இரந்தக்கால் வெண் சோறும்
பழந்தூசும் பாலியாமல்
கொல்ல நினைந்தே
தனது நால் வாயைப்
பரிசென்று கொடுத்தான்
பார்க்குள் தொல்லை எனது
ஒரு வாய்க்கும் நால்வாய்க்கும்
இரை எங்கே துரப்புவேனே"

இரத்தல் = பணிவாக வேண்டல், தூசு = ஆடை, பாலியாமல் = கொடுக்காமல், பார்க்குள் = உலகத்தில், இரை = உணவு, துரப்பல் = தேடுதல்.

*யானையின் வாய் தொங்கிக் கொண்டிருப்பதனால் தமிழில் யானைக்கு நால்வாய் என்றொரு பெயருண்டு. "இனிமேல் நான் என்னுடைய ஒரு வாய்க்கும் நால்வாய்க்கும் இரை தேட வேண்டும்" என்று முடியாதுபோல மலைத்து வருந்துவதாகக் கவி வீரராகவர் பேசும் கவிப்பேச்சில் பரராச சிங்கனைப் புகழ்கின்ற புகழ்ச்சி பழிப்பது போன்ற பிறிதோர் உருவில் வெளிப்படுகின்றது. 'ஒரு வாய்' 'நால் வாய்' என்ற சொற்கள் பாடலின் பொருளுக்குச் சுவையூட்டுகின்றன.*

*மேலாடையோடு கைவீசிக்கொண்டு பரராசசிங்கனிடம் வந்த புலவர் யானைமேல் ஏறி அலங்காரமாக மீண்டு சென்ற காட்சி பெருமிதத்தோடு விளங்கிற்று. "ஒரு வாயையும், நால் வாயையும் எவ்வாறு காப்பேன்?" என்றவர் அதற்குரிய செல்வமும் பெற்றுவிட்டோம் என்ற கவலை கலவாத மகிழ்ச்சியை இப்போது அடைந்துவிட்டார். ஒரு வாயும் நால் வாயும் உண்ணப் போதியது கிடைத்துவிட்டது அல்லவா?*

## 20. வடுகநாத வள்ளல்

*செங்கலங்கை நகர் வடுகநாத முதலியார் என்ற பெயரைக் கேட்டவுடன் அவருடைய சொன்ன சொல் தவறாத நேர்மையே நினைவுக்கு வரும். தருமன், அரிச்சந்திரன் முதலிய இதிகாச புருஷர்களின் மறு பிறப்போ என்று மதித்து மரியாதை செய்வர் அவரை.*

*கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதில் உயிரையே ஈடு கொடுக்க வேண்டுமென்றாலும் கொடுக்கத் தயங்காத கொடைஞர் அவர். இப்படிப்பட்ட வள்ளல் ஒருமுறை புகழேந்திப் புலவரைச் சந்தித்து அளவளாவும் வாய்ப்பைப் பெற்றார். முடிவில் விடைபெற்றுக்கொள்ளும்போது வடுகநாதர் புகழேந்திப் புலவரை ஒருநாள் தம் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தார். புகழேந்திப் புலவரும் அப்படியே விருந்துண்ண வருவதாக*

ஒப்புக்கொண்டார். கொடை வள்ளலும் கவி வள்ளலும் ஒருவரை ஒருவர் மதித்து அன்புடன் பழகும்போது மறுப்புக்கு இடமிருக்க முடியாதல்லவா? அடுத்த இரண்டொரு நாட்களில் விருந்துக்கு ஏற்ற நாள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு வடுகநாதர் சென்றார்.

விருந்து நாள் வந்தது. வீட்டில் வடுகநாத முதலியாரின் தம்பி ஒருவன் வெகு நாட்களாகச் சூலை நோயோடு படுத்த படுக்கையாகக் கிடந்தான். வடுகநாதருக்கு அந்தத் தம்பியின்மேல் அளவு கடந்த ஆசை. அவன் நோய் தீர விதவிதமான வைத்திய வித்தகர்களையெல்லாம் கொண்டு மருந்து கொடுத்து வந்தார். துரதிருஷ்டவசமாகப் புகழேந்திப் புலவருக்கு விருந்திட வேண்டிய அன்று அவனுடைய நோய் வேதனை மிகுந்து 'நம்ப முடியாத' கட்டத்தை அடைந்திருந்தது.

ஏற்கெனவே விருந்துக்குரிய ஏற்பாடுகளையெல்லாம் செய்தாகிவிட்டது. வடுகநாதர் புகழேந்திப் புலவரை அவர் தங்கியிருக்கும் இடத்திலிருந்து மேளதாள மரியாதைகளோடு அழைத்து வந்தார். தம்பியின் நிலையை எண்ணிப் பதைத்தது அவர் நெஞ்சு. அதே சமயத்தில் 'அழைத்த விருந்தை நிறுத்தினான்' என்ற பழியும் ஏற்படக்கூடாது என்பதை எண்ணி மலர்ந்த முகமும் புன் சிரிப்புமாக உபசாரங்களை நடத்தினார். புலவரை ஆசனமிட்டு அமர்த்தி உண்ணச்சொல்லித் தாமும் மனைவி யுமாகச் சேர்ந்து உபசரித்தனர். புகழேந்திப் புலவர் உண்டு கொண்டிருந்தார். இடையே யாரோ வந்து அழைக்கவே வடுகநாதர் வீட்டின் மறுபுறத்திலுள்ள சிறு கட்டிடம்வரை போய்த் திரும்பி வந்தார். இப்போது அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்த புகழேந்திப் புலவருக்கு அவர் எதையோ மறைத்து நடிப்பதுபோலத் தெரிந்தது. வடுகநாதர் முகத்தில் ஈயாடவில்லை. கண்கள் சற்றே கலங்கிச் சிவந்திருந்தன. வாய் சிரிக்க முயன்றது. முகத்தை மலர்ச்சியாக வைத்துக்கொள்ள அவர் முயன்றார். "என்ன வடுகநாதரே! ஏதாவது வருந்தத்தக்க செய்தியா?..." என்று சோற்றைப் பிசைந்துகொண்டே அண்ணாந்து பார்த்தபடி கேட்டார் புகழேந்தி.

"இல்லையே. ஒன்றுமில்லை..." என்று ஏதோ மழுப்பி விட்டு மறுபடியும் சிரிக்க முயன்றார் வடுகநாதர். எங்கோ வீட்டின் ஒரு மூலையில் அழுகையோடு இலேசாக விசும்பும் ஒலிகள் புகழேந்தியின் காதில் அரைகுறையாக விழுந்தது. புலவர் தயங்கினார். வடுகநாதர் இந்தக் குறிப்பை உணர்ந்து கொண்டாரோ என்னவோ, எங்கோ எழுந்து போய்விட்டு வந்தார். இப்போது 'விசும்பல்' ஒலி கேட்கவில்லை.

விருந்து முடிந்தது. புகழேந்திப் புலவர் தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் வடுகநாதர் அடக்க ஒடுக்கத்தோடு நின்றவண்ணம் இருந்தார். சற்று நேரத்தில் புகழேந்திப்புலவர் விடை பெற்றுக் கொண்டார்.

வடுகநாதர் வீட்டு வாசற்படியை விட்டு இறங்கி நாலு எட்டு நடந்திருப்பார். பக்கத்தில் ஒரு வீட்டிலிருந்து வந்த பேச்சொலி தெளிவாக அவர் காதில் விழுந்தது.

"என்னதான் வள்ளலாக இருக்கட்டுமே! அதற்காகத் தம்பி இறந்து போனால் அவன் பிணத்தையும் மூடி வைத்து விட்டு விருந்திட வேண்டுமா என்ன?" நெருப்பாகப் பாய்ந்து தாக்குவது போலிருந்தது புலவருக்கு. வடுகநாதரின் வள்ளன்மைத் தியாகம் எவ்வளவு பெரிது என்று அளவிட முடியாமல் தவித்தது அவர் மனம். பயங்கரமான ஆனால், பண்பாடு என்ற பிடிவாதம் பொருந்திய வடுகநாத வள்ளலின் தியாகத்தைப் பாட்டாகப் பாடியவாறே நடந்தார் புகழேந்திப் புலவர்.

"தன்னுடன் கூடப் பிறந்த
சகோதரத் தம்பி உயிர்
அந்நிலை மாண்டது தோன்றாமல்
மூடிவைத்து அன்னமிட்டான்
மன்னவர் போற்றிடவாழ்
செங்கலங்கை வடுகனுக்குக்
கன்னனும் சோமனுமோ
இணையாகக் கழறுவதே."

அன்னம் = விருந்துச்சோறு, கர்ணன், சோமன் = வள்ளல்கள், கழல் = கூறல்.

*கர்ணனையும் சோமனையும்கூட வடுகநாதனுக்கு இணையாகக் கருத முடியவில்லை புலவரால்.*

## 21. வயிற்றுப் பசி

*ஆங்கூரில் அன்று சிவன் கோவிலில் உற்சவம். அலங்காரமான தோற்றத்துடன் ரிஷப வாகனரூடராய்த் திருவீதி உலா வந்து கொண்டிருந்தார் சுவாமி. கொட்டுமேளம், நாயனம் முதலிய வாத்தியங்களின் இனிய ஒலி ஒருபுறம். சங்கு, திருச்சின்னம், மத்தளம், எக்காளம் முதலிய இசைக் கருவிகளின் பேராரவாரம் மற்றொருபுறம், பக்தர்களின் ஆரவாரமும் இந்த ஆரவாரத்தோடு கலந்து கோலாகலமாக விளங்கியது.*

*உலா வரும் சுவாமி பொன்னம்பலத்தார் மடத்தின் பக்கம் நெருங்கவும், முடங்கிக் கிடந்த இரட்டையர்கள் விழித்துக் கொண்டனர். பசியால் உடல் சோர்ந்து மடத்துத் திண்ணையில் இடத்தை நாடி ஒதுங்கிய அவர்கள், நான்கு நாட்களாகச் சோற்றைக் கண்ணால்கூடக் காணவில்லை. அடி வயிறு காய்ந்து கிடந்தனர். மயக்கமடைந்தவர்கள் போலத் தளர்ந்து விழுந்து கிடந்த அவர்களைக் கொட்டும் மேளமுமாகச் செய்த ஒலிகள் எழுப்பின. அவர்களுக்கு இருந்த பசியில் சங்கு ஒலியும் எக்காள சப்தமும்கூட அதிர்வேட்டுப் போலக் காதில் பட்டு உடலை ஓர் உலுக்கு உலுக்கி நடுங்கச் செய்தது. வயிற்றுப்பசி வாட்டும்போது நடந்து சென்று சுவாமி தரிசனம் செய்யவா முடிகிறது? அப்படியே மடத்துத் தூணில் சாய்ந்துகொண்டு வீதியில் எழுந்தருளும் சுவாமியை நோக்கி,*

"தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனே அல்லாளி யப்பா
நாங்கள் பசித்திருத்தல் ஞாயமோ?..."

ஞாயம் = நியாயம்

*என்று குருடர் பாடத்தொடங்கவும், பசி வேதனை பொறுக்க முடியாத நொண்டியான மற்றொருவர்,*

"–போங்காணும்!
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்?"

**தோல் முரசு = தோல் போர்த்த முரசு.**

*என்று வார்த்தைகளை அள்ளி ஆத்திரத்தோடு தெளித்தார். கூட்டத்தோடு கூட்டமாகச் " சுவாமியைப் பின்பற்றிச் செல்லும் அத்தனை பேரில் கொட்டும் மேளமும் கேட்டவரின்றிச் சோற்றைக் கண்டவர் யார்?" என்று கேட்டுப் பசி நேரத்திலும் அந்தக் குறும்புத்தனமான காரியத்தால் கொஞ்சம் மனமகிழ்ச்சி அடைந்தார் முடவர். குருடர் கூற்றில் இரக்கம் தொனிக்கிறது. முடவர் கூற்றிலோ வயிற்றுப் பசியையும் மறந்த பரிகாசம் தொனிக்கிறது. பாடுவது அவர்களுக்குப் பொழுதுபோக்கு, பசியால் மட்டும் அது நின்றுவிடுமா என்ன?*

## 22. கொடுப்பவர் பெருமை

*கொடையின் பயன்தான் கேட்டுப் பெறுகின்றவர்களுக்கு உரியது. கொடையின் பெருமை, கொடுப்பவர்களுக்கு மட்டுமே உரியது. உதவி நாடி வந்து கேட்கின்றவர்கள் எதைக் கொடுத்தாலும் பெற்றுக் கொள்வார்கள். கொடுக்கப்பட்ட பொருளை உயர்வு தாழ்வு ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். " தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பதா?" என்று ஒரு பழமொழி கூட உண்டு. ஆனால் கொடுக்கின்றவன்தான் தராதரம் அறிந்து தன்னுடைய தகுதியையும் கேட்கின்றவருடைய தகுதியையும் சீர்தூக்கி நிர்ணயித்துக் கொடுக்க வேண்டும். ஏன் என்றால் கொடுப்பவனுடைய தகுதியின் உயர்வு-தாழ்வு கொடுக்கின்ற கொடையின் தரத்தையே பொறுத்ததாக இருக்கிறது!*

ஔவையாருடைய வாழ்வில் நிகழ்ந்த இரு சம்பவங்களைப்பற்றி அவரே பாடியனவாகக் கிடைக்கும் இரண்டு பாடல்களில் கொடுப்பவர், கொடுக்கப்படுபவர் ஆகிய இருவருக்கும் இடையில் உள்ள இத் தராதரம் அற்புதமாக விளக்கப் பெற்றிருக்கின்றது.

மலைவளம் நிறைந்த சேர நாட்டையும் சேர அரசனையும் காண வேண்டும் என்ற அவாவுடன் ஔவையார் ஒருமுறை சேரநாடு சென்றிருந்தார். சேர நாட்டின் தொடக்கத்தில் 'நாஞ்சில் நாடு' என்ற வளமும் வனப்பும் பொருந்திய பகுதி இருக்கின்றது. அப்போது இந்த நாஞ்சில் நாட்டுப் பகுதியை நாஞ்சில் வள்ளுவன் என்ற சிற்றரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஔவையார் சேர நாட்டிற்கு வர இருக்கிறார் என்பதை அறிந்த அவ்வரசன் அவரைச் சிறந்த முறையில் வரவேற்பதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்தான்.

ஔவையாருடன் பாணர் குடியைச் சேர்ந்த வேறு சில விறலிய மகளிரும் வந்திருந்தனர். நாஞ்சில் வள்ளுவன் எல்லோரையும் அன்போடு வரவேற்றுத் தன் விருந்தினர்களாகத் தங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அவன் ஔவையாரிடம் மிக்க அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டான். அவனது விருந்தினர்களாகத் தங்கியிருந்தாலும் ஔவையாரும் உடன் வந்த பெண்களும் தாங்கள் உண்ணுவதற்குப் போதுமான உணவை தங்கள் கையாலேயே சமைத்துக் கொண்டுவிட வேண்டும் என்று விரும்பினர். ஔவையாரும் அதற்குச் சம்மதித்துவிட்டார். அவர்கள் விருப்பப்படியே அரண்மனையில் உணவு சமைத்துக் கொள்வதற்கு ஒரு பகுதியில் அவர்களுக்கு வசதி செய்து கொடுத்தான் நாஞ்சில் வள்ளுவன்.

நாஞ்சில் நாட்டிலே கீரை மலிந்து கிடைக்கும் காலம் அது. மனைக்கு மனை கீரை பயிரிட்டிருந்தார்கள். விறலியர்கள் தங்கள் வளையணிந்த கைகள் சிவக்க நிறையக் கீரை பறித்துவந்து சமைத்தார்கள். கீரைக் கூட்டுக்குத் தாளிதம் செய்வதற்கு

முன்னால். வறுத்த அரிசியைப் பொடி செய்த மாவைச் சிறிது தூவிவிட்டுத் தாளிப்பது வழக்கம். கூட்டு தண்ணீராக நெகிழ்ந்து போய்விடக்கூடாது என்பதற்காகவும், வாசனைக்காகவும் இப்படி 'மாவு' தூவுவது அவசியமாக இருந்தது. விறலியர்கள் இதைக் கூறவும் ஔவையார் அரண்மனை உக்கிராணத்திலிருந்து ஒரு சிறங்கை அரிசி வாங்கி வருமாறு ஆள் ஒருவனை அனுப்பித்தார். அந்த ஆள் உக்கிராணத்திற்குச் செல்லும்போது நாஞ்சில் வள்ளுவனே ஏதோ காரியமாக அங்கே வந்திருந்தான். 'ஔவையார் ஒரு சிறங்கை அரிசி கேட்டு விட்டார்' என்று வந்த ஆள் கூறியதும், உக்கிராணத்து மேற்பார்வையாளன் ஒரு பிடித்த பிடி அரிசியை எடுத்து, வந்தவனுடைய மேலாடையில் இடுவதற்குச் சென்றான். அப்போது நாஞ்சில் வள்ளுவன் சட்டென்று அவன் கையைப் பிடித்துத் தடுத்தான்.

"இதைக் கேட்டு அனுப்பிய தமிழ்ப் புலமை அரசி இவ்வளவு கொடுத்தாலும் பெற்றுக் கொண்டு விடுவார். பிடி அரிசியாயிற்றே என்று அவர் மறுக்கப்போவதில்லை. ஆனால் ஒரு பெரும் புலமைச் செல்வி வாய்திறந்து கேட்டுவிட்டிருக்கும்போது, நாம் ஒரு சிறங்கை அரிசியை மட்டும் கொடுத்தோம் ஆயின் அது நமக்கு எவ்வளவு பெரிய இழிவு தெரியுமா? போய் உடனே பட்டத்து யானையை இங்கே கொண்டு வா! கொண்டுவந்து, அது சுமக்கும் அளவு அரிசிப் பொதிகளை அதன்மேல் ஏற்றித் தாமதம் செய்யாமல் ஔவையாரிடம் அனுப்பு! நம் பெருமையை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? நான் சொன்னபடி உடனே செய்" என்று உக்கிராண மேற்பார்வையாளனுக்கு அப்போதே நாஞ்சில் வள்ளுவன் கட்டளை இட்டான். 'கொடையின் பெருமை அதைக் கொடுப்பவர்க்கே' என்பதை அவன் நன்கு உணர்ந்து கொண்டவனாக இருக்க வேண்டும். எனவேதான் கீரைமேல் தூவும் மாவுக்கு அவருக்கு ஒரு சிறங்கை அரிசி போதும் என்று அறிந்திருந்தும் இவ்வாறு செய்தான் அவன். இந்தச் சம்பவத்தைப் புறநானூற்றுப் பாடல் ஒன்றில் ஔவையார் நயமாகப் பாடியுள்ளார். (புறம். 140)

இன்னொருமுறை, சேரநாடு முழுவதையுமே ஆண்டு வந்த வேறு ஒரு பேரரசனைக் காணச் சென்றிருந்தார் ஔவையார். புலவர்களைப் போற்றும் இயல்புமிக்கவன் ஆகையால் அவனும் அவரை அன்போடு வரவேற்று உபசரித்தான். தமிழ்விருந்து போல அவர் பாடிய பாடல்களையும் கூறிய நல்லுரைகளையும் செவியாரப் பருகி இன்புற்றான் அவன்.

அந்தச் சமயத்தில், தொண்டை வலியும் இருமலுமாக ஔவையார் சற்றே நோய்வாய்ப்பட்டிருந்தார். விவரமறிந்த மருத்துவர் ஒருவர் வெள்ளாட்டுப் பால் மிகுதியாக உண்டு வந்தால் அந்த நோவு விரைவில் நீங்கிவிடும் என்று கூறினார்.

ஔவையார், சேர அரசனிடம் பால் ஆடு ஒன்று வேண்டும் என்று கேட்டார். சேரன் உடனே தருவதாக வாக்களித்துவிட்டுத் தனக்குள் சிந்திக்கலானன். "ஔவையார் போன்ற ஒரு பெரும்புலவர் ஒரு கறவை ஆடு கேட்டார். அவருக்கு ஒரு கறவை ஆட்டை மட்டுமே நாம் பரிசிலாகக் கொடுத்தோம் என்று நாளைக்கு மற்ற அரசர்கள் நம் கொடைப் பெருமையை இழிவாக மதிப்பிட்டு விடக் கூடாது! எனவே நாம் வெறும் கறவை ஆடு மட்டும் அவருக்குக் கொடுப்பதில் பயனில்லை. கறவை ஆட்டையும் கொடுத்து அதோடு கண்டவர் வியக்கத்தக்க வேறு ஒரு பெரும் பரிசிலையும் அவருக்கு அளிக்க வேண்டும்" என்று அவன் முடிவு செய்து வைத்துக் கொண்டான்.

மறுநாள் ஔவையார் ஆட்டைப் பெற்றுக்கொண்டு போவதற்காக அவைக்கு வந்தார். சேரன் முதலில் அவருக்கு அவர் கேட்டபடி கறவை ஆடு ஒன்றை அளித்தான். அடுத்தபடியாக அவன் அளித்த பரிசிலைக் கண்டு ஔவையாரே திகைத்துப் போனார். அவருக்கு முதலில் கொடுத்த கறவை ஆடு எவ்வளவு நிறை இருந்ததோ அவ்வளவு நிறை பொன்னால் அதேபோல் ஓர் ஆடு செய்து இரண்டாவதாக அவருக்கு அளிந்திருந்தான் சேரன்! கேட்பவர் எதையும் பெற்றுக் கொள்வர் என்றாலும் கொடுக்கின்ற தன் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிந்தவன் அவன்!

சிரப்பால் மணிமவுலிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடு யான் கேட்பப் பொன் ஆடு ஒன்று ஈந்தான்
இரப்பவர் என்பெறினும் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தம் கொடையின் சீர்

சிரப்பால் = தலையில், மணமவுலி = அழகிய கிரீடம், சீர் = பெருமை

*என்று ஔவையாரே இதைப் பாடியுள்ளார்.*

## 23. படைத்தவன் குற்றம்!

*'இளமையில் விரும்பி விரும்பிப் படித்த தமிழின் பயன் எவ்வளவு வேதனை நிறைந்தது என்று இப்போதல்லவா தெரிகிறது! வளம் நிறைந்த வாழ்வுக்கு எவ்வளவோ வழிகள் இருக்கின்றன! ஆனால் தமிழைப் படித்த 'குற்றத்திற்காகவும்' நாலு பாடல்களைப் பாடத்தெரிந்ததற்காகவும் அந்த வளங்களெல்லாம் நம்மைப் புறக்கணிக்க வேண்டுமா என்ன? தமிழ்த் தாய்க்கும் திருமகளுக்கும் நிரந்தரமாக நிலைத்துவிட்ட பகை ஏதாவது இருக்கிறதோ என்னவோ? வாழ்க்கை வசதிகள், குறைந்தபட்சம் உண்ணவும் உடுக்கவும் போதிய அளவுகூட இல்லையானால் கற்றும் கவிபாடியும் காணும் பயன் என்னதான் வேண்டிக் கிடக்கிறது?' இப்படிப்பட்ட வேதனை கவிந்த நினைவுகளோடு கால்போன போக்கில் அந்த நீண்ட சாலையில் இராமச்சந்திர கவிராயர் நடந்து சென்று கொண்டிருந்தார்.*

*அவருடைய புலமையுள்ளம் மென்மையானது. மெய்யான திறமையை ஏமாற்றுபவர்களின் அலட்சியத்தைத் தாங்கிக் கொள்ளக்கூடிய அவ்வளவு வன்மை அவருக்கு அந்த உள்ளத்தில் எப்படி ஏற்பட முடியும்? இரண்டொரு நாட்களாக உணவு கண்டறியாத தளர்ச்சியில் நடைகூடத்தள்ளாடியது. தொடர்ந்த ஏமாற்றத்தின் வரிசை வரிசையான அனுபவங்கள், தம் பேரிலும், சொல்லப் போனால் தாம் கற்றுத் 'தொலைத்த' தமிழின் மேலும்*

அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது. பாடுகின்ற பாட்டைக் கேட்டுவிட்டுப் பொன்னையும் பொருளையும் வாரியிறைத்து விடவேண்டாம், மனமார ஒருவேளை உணவளித்து உபசரிக்கக் கூடாவா இவர்கள் உள்ளங்களில் கருணை மலரவில்லை?

சிந்தித்துக் கொண்டே நடந்த அவர் நிற்கும்படி செய்தான் பக்கத்து மரத்தடியிலிருந்து நொண்டிக்கொண்டே ஓடிவந்த அந்தப் பிச்சைக்காரன். அவருக்கு முன் வந்து நின்ற அவன், அவர் கையிலிருந்த சுவடி மூட்டையில் கண்களை ஓடவிட்டவாறே ஆவலோடு கட்கத்தில் இடுக்கிக் கொண்டிருந்த தன் திரு ஓட்டை எடுத்து நீட்டினான். அந்தப் பிச்சைக்காரன் முகத்தை நிமிர்ந்து பார்த்த கவிராயருக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அந்த முகத்தில் நெளிந்த நம்பிக்கையின் சாயலும், கெஞ்சும் பாவமும், உதடுகள் அகல விரிந்து வெளித் தெரிந்த அத்தனை பற்களும் அவரையே சற்று வருந்தித் திகைக்கச் செய்து விட்டன. இரண்டு நாட்களாகச் சோறு காணாத அவர் எங்கே போவார் அவனுக்குச் சோறு கொடுக்க?

“அப்பனே! இது கட்டுச் சோற்று மூட்டையல்ல! வெறும் ஏட்டுச் சுவடிகள்!” -என்று அவர் அவனை நோக்கிச் சொல்லி விட்டு நகர்ந்தபோது, அவனுடைய இளித்த பற்களிலும் இரங்கிய முகத்திலும் தெரிந்த நம்பிக்கையின் வீழ்ச்சி அவருக்கே வேதனையாக இருந்தது. ஏமாற்றத்தோடு மரத்தடியை நோக்கித் திரும்பினான் அந்தப் பிச்சைக்காரன்.

கவிராயர் சிந்தனை தொடர நடையையும் தொடர்ந்தார். இப்போது அவருக்கு ஒருவகையில் திருப்தி. “தமிழ் படிக்காத புலமையற்றவர்களிலும் கூடச் சோற்றுக்குத் திண்டாடுவோர் இருக்கத்தான் இருக்கிறார்கள்” என்பதுதான் அது. பொன்னையும் பொருளையும் கொடுத்து ஒரு சிலரை உயர்ந்த முறையில் இரட்சிக்கிறான் படைத்தவன். போகட்டும்! பொன்னும் பொருளும் கொடுத்து இரட்சிக்க முடியாதவர்களுக்குக் கல்லையும் மண்ணையும் உணவாகக் காய்ச்சிக் குடிக்கலாம் என்றாவது வழி செய்திருக்கக் கூடாதா? அவைகளை உணவாக

ஏற்று உண்ணுவதற்கு ஒப்புக் கொள்ளும்படியாக வயிற்றைப் படைத்திருக்கக் கூடத் தெரியவில்லையே இந்த நான்முகனுக்கு? ஒருவன் மற்றொருவனிடம் பல்லைத் திறந்து பிச்சை கேட்கும்படியாக அல்லவா படைத்திருக்கிறான்? இது யார் குற்றம்? பல்லைத் திறந்து பிச்சை கேட்பவனுடைய குற்றமா? இல்லை, படைத்தவன் குற்றம்தான். இப்படி நினைத்துக்கொண்டு வரும்போதே இந்த எண்ணங்கள் ஒரு பாட்டாக உருவாகி வெளிப்படுகின்றன.

"கல்லைத்தான் மண்ணைத்தான்
காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தான்
எனக்குத்தான் கொடுத்துத்தான் இரட்சித்தானா
அல்லைத்தான் சொல்லித்தான்
ஆரைத்தான் நோவத்தான் ஐயோ எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்
புவியில் தான் பண்ணினானே."

பதுமத்தான் = பிரம்மன், நோவா = வருத்த.

பாடிக்கொண்டே நடந்தார் புலவர். பாட்டில் வரும் 'தான்' 'தான்' என்ற ஒவ்வொரு சொல்லும் அவரது உள்ள உருக்கத்தை நன்கு உணர்த்துகிறது.

## 24. புலவர்கள் பாவம்

பொதிய மலையின் அடிவாரம். 'சோ' என்ற பேரொலியுடன் நுரைத்து வீழும் அருவிக் கரையில் கம்பீரமாகக் காட்சியளித்தது பெரியநாயகியம்மை கோவிலின் பிரதான வாசலின் கோபுரம். கோபுரத்தை ஒட்டிப் பின்னணியில் ஒரு பெரிய வெள்ளை முத்து மாலைபோல மலைமுகட்டிலிருந்து விழுந்து கொண்டிருந்தது நீர் அருவி. இந்த அற்புதமான இயற்கை அழகை எண்ணி

வியந்தவாறே வந்து கொண்டிருந்தார் கவிராயர். பசி, தாகம், இளப்பு, களைப்பு இவைகளெல்லாம் வயிற்றுக்கும் உடலுக்கும் தானே?...இரசனைக்கு இல்லையே? அவர் கவிதையுள்ளம் படைத்தவர். வயிறு வற்றி வாயுலர்ந்து போனாலும் இரசனையை வற்றவிடாத அளவுக்கு உள்ளம் பரந்து விரிந்து பண்பட்டவர். மலையும் அதன் சிகரங்களை அணைத்துச் செல்லும் மேகக் கூட்டமும், பொங்கிப் பாயும் அருவியின் பொலிவும், மலைச் சாரலில் எடுப்பாக அமைந்திருந்த கோவிலும் அவர் கவனத்தைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

மேளதாள ஆரவாரத்தோடு கோவிலுக்கு வந்து கொண்டிருந்த ஒரு கூட்டம் அவரது ஆழ்ந்த சிந்தனையைக் கலைத்து நிறுத்தியது. கவிராயர் விலகி நின்றுகொண்டு கூட்டத்தைக் கவனித்தார். 'கூட்டத்தின் நடுநாயகமாக விளங்கிய ஒருவர் படாடோபமான தோற்றத்துடன் மிக்கசெல்வந்தர் போலக் காணப்பட்டார். அலங்காரமான பட்டு ஆடை மேலே ஒளி வீசும் பீதாம்பரம். காதில் ஜாஜ் வல்யமாகப் பிரகாசிக்கும் நீலநிறத்து வைரக் கடுக்கன்கள். நெற்றியில் சவ்வாதுப்பொட்டு. மார்பில் ஒளிவிடும் நவமணி மாலை. கைவிரல்கள் ஐந்திலுமே மோதிரங்கள். அவரைச் சுற்றிச் சென்றவர்கள் கோயிலில் வழிபாடு செய்வதற்கு வேண்டிய பலவகைப் பொருள்களை ஏந்திச் சென்றனர்.

கூட்டத்தையும் அவரையும் கவனித்துக் கொண்டிருந்த புலவர் கவனத்தை, பின்புறம் நின்றுகொண்டு இதே காட்சியைக் கண்டு கொண்டிருந்த வேறு இருவர் பேசிக் கொள்வது கவர்ந்தது.

"தம்பீ! இவனுக்கு வந்த யோகத்தைப் பார்! எனக்குத் தெரிந்து மலைச் சாரலிலிருந்து புல்லும் விறகுக் கட்டும் சுமந்து கொண்டிருந்தவன்! இப்பொழுது பார்த்தால் அப்படிச் சொல்ல முடியுமா? கையிலும் நல்ல இருப்பு. நிலங்கரைகளோ...? அவ்வளவும் நன்செய்! நாள் ஒன்றுக்கு நூறு பொதிக்குக் குறையாமல் களஞ்சியத்தில் நெல்லைக் கொட்டுகிறான், இதைத்தான் தம்பீ, பெரியவர்கள் அதிர்ஷ்டம் என்கிறார்கள்

போலும்-” இப்படிப் பேசிக் கொண்டே அவ்விருவரும் கோவிலுக்கு எதிர்த் திசையில் நடந்தனர். புலவருக்கு மின்னலென ஒருயோசனை உதித்தது. ‘இளமையில் புல்லும் விறகும் சுமந்து கஷ்டப்பட்டவனாக இருப்பதனால் இவன் வீட்டிற்குச் சென்றால் நம் குரலுக்கு நிச்சயம் இவன் இரங்கிச் செவி கொடுப்பான்’ என்று எண்ணினார். இப்படி எண்ணியவாறே கோவிலுக்குள் போகலாமா வேண்டாமா என்று தயங்கிக் கொண்டிருந்த அவர் மேளதாளத்தோடு உள்ளே சென்ற கூட்டம் திரும்பி வருவதைக் கண்டார். பிறர் சந்தேகம் கொள்ளாதபடி அவரும் கூட்டத்தைப் பின்பற்றிச் சென்றார். இரண்டு மூன்று தெருக்கள் கடந்தபின் அரண்மனைபோல் பெரிதாகச் சிறந்து விளங்கிய ஒரு வீட்டிற்குள் புகுந்தது கூட்டம். கோவிலிலிருந்து வந்த அவசரத்தில் உடனே தாமும் உள்ளே போய்த் தம் குறையைச் சொல்லுவது நன்றாக இராது என்று கருதியவராய் வீட்டெதிரே இருந்த மரத்தடியில் அரை நாழிகை தாமதித்தார் புலவர்.

வீட்டில் ஒரு வழியாக ஆரவாரம் குறைந்து அமைதி யுற்றதுபோல் தென்பட்டபோது, கவிராயர் மெல்ல தாமும் உள்ளே நுழைந்தார். நடையைக் கடந்து கூடத்திற்குள் நுழைய இருந்த அவரைப் பக்கத்திலிருந்து வந்த அதட்டும் குரல் அப்படியே நிறுத்தியது. புலவர் திரும்பிப் பார்த்தார். நடையோரமாகச் சாய்வு மெத்தையில் அதே செல்வர் சாய்ந்து கொண்டிருந்தார்! “யாரையா நீர்?” என்ற அந்த இடிக்குரலுக்குப் பதில் சொல்லாமல் கிட்ட நெருங்கிப் பவ்யமாகத் தம் நிலையைச் சொல்லி, அந்தச் செல்வரைப்போற்றி இரண்டொரு பாடல் களையும் பாடினார் புலவர். சாய்ந்து கொண்டிருந்த செல்வரின் முகத்திலோ நொடிக்கு நொடி கடுமை வளர்ந்து வந்தது. புலவருக்குப் பெருத்த ஏமாற்றம். திட்டாத குறையாக அவரை வாசல் வரை கொண்டுவந்து விட்டபின் திட்டி வாசலின் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டுபோனான் அந்தச் சீமான்.

“புல்லுக்கட்டும் விறகும் சுமந்த பேர்
பூர்வகாலத்துப் புண்ணிய வசத்தினால்

நீலக்கல்லிற் கடுக்கனும் போடுவார்
சொல்லுக் கட்டும் புலவரைக் கண்டக்கால்
தூறிப் பாய்ந்து கதவை அடைத்தெதிர்
மல்லுக் கட்டும் மடையரைப் பாடவோ
மலையச் சாரலில் வாழ் பெரியம்மையே''

தூறி = ஆத்திரமடைந்து, மலையம் = பொதியமலை, மல்லுக்கட்டும் = சண்டையிடும்.

*தம் பாவத்தை இப்படி நொந்தவாறே பெரியம்மை கோவிலை நோக்கி மீண்டும் அந்தப் புலவர் நடந்து கொண்டிருந்தார்.*

## 25. தடை மோதிரம்

*"திறமை, புலமை இவைகளை உண்மையாகவே பாராட்டி ஊக்குவிக்கும் வள்ளல்களைக் கதைகளிலும் காவியங்களிலும் தான் பார்க்கமுடியும் போலும். வாழ்க்கையில் அத்தகைய மனிதர்கள் இருப்பதாக எண்ணுவதோ, நம்புவதோ கானல் நீரைத் தண்ணீர் என்று கருதிக் குடிக்க ஆசை கொள்ளுவது போன்றது தான். 'பொருள் செறிந்த பாடல்! அற்புதமாக அமைந்துவிட்டது. இதை அந்த வள்ளலிடம் பாடிக் காட்டினோமானால் அவர் வாரி வழங்குவது நிச்சயம்' என்றெல்லாம் ஆர்வமும் நம்பிக்கையும் தூண்டச் சுவடியைத் தூக்கிக்கொண்டு போனால், 'பாட்டா? தமிழிலா? அது என்ன அது? ஏதாவது புது மோடி வித்தையா? இதுவரை நான் பார்த்ததில்லையே?' என்று, இதுபோல அறியாமையை வெளிப்படுத்தும் மனிதர்களைக் காண முடிகின்றதே அன்றிக் கவிதை அறிவும், கலை உணர்ச்சியும், கொடுக்கும் இயல்பும் ஒருங்கே அமைந்த வள்ளல் ஒருவனையேனும் காண முடிவதில்லை. இந்த மூன்றும் ஒருங்கே அமைந்த உள்ளம் எங்காவது அத்தி பூத்தாற்போல அகப்பட்டால்*

அந்த உள்ளத்தின் விரிவுக்கேற்ப உடைமையின் விரிவு அங்கே இல்லை."

நமச்சிவாயப் புலவர் இப்படியெல்லாம் எண்ணி உள்ளம் வெதும்பி வாடியதெல்லாம் செல்லூர் வள்ளலைக் காண்பதற்கு முன்னால்தான். செல்லூர் வள்ளலைக் கண்ட பிறகு, அவருடைய இனிய மொழிகளாலும் வரவேற்பாலும் அன்புப் பணிகளாலும் மேற்கூறிய மூன்று இயல்புகளும் அவரிடம் குறைவற நிறைந்திருப்பதைப் புலவர் அறிந்துகொள்ள நேர்ந்தது. அப்படி ஒரு மனிதர் இருப்பார் என்று அதுவரை அவர் கனவிலும் நினைத்துப் பார்த்ததில்லை. புலவர்களோடு பழகுவதிலும் அவர்களைப் போற்றுவதிலும் அவர்கள் புலமையை இரசிப்பதிலும் இவ்வளவு பேரார்வம் உள்ள ஒரு வள்ளலைக் கற்பனையில்கூட அவர் எண்ணியதில்லை. அவ்வளவு அருங்குணங்களும் செல்லூர் வள்ளலினிடம் மிக மிகச் சிறப்பாகக் குடி கொண்டிருந்தன. இப்படிப்பட்ட ஒரு வள்ளலைத் தம் ஆயுள் முழுவதும் வாய்ஓயாமல் பாடிக் கொண்டிருக்கலாம் போலத் தோன்றியது நமச்சிவாயப் புலவருக்கு. சில நாள் அந்த வள்ளலுடைய விருப்பத்தைத் தட்ட முடியாமல் அவருடனேயே இருந்தார் புலவர். ஜன்மம் முழுவதும் அப்படி இருந்துவிடக்கூட அவர் மறுத்திருக்கமாட்டார். ஆனால், ஊரில் மனைவி மக்களின் நிலைதான் வள்ளலிடம் விரைவில் புலவரை ஊர் செல்ல விடை கொடுக்குமாறு கேட்பதற்குத் தூண்டியது.

அரை மனத்துடன், புலவரைப் பிரிய மனமின்றி விடை அளித்த செல்லூர் வள்ளல், நிறைந்த பெரும் பரிசில்களை அவருக்குக் கொடுத்தார். ஊருக்குப் புறப்படும்போது இரண்டாவதாக மீண்டும் வள்ளலிடம் சொல்லிக்கொள்வதற்காக உள்ளே சென்றார் புலவர். உள்ளே வள்ளலைக் கண்டு கை கூப்பி வணங்கியவாறே போய் வருவதாகச் சொன்ன அவரது கூப்பிய கையைக் கூர்ந்து நோக்கிய வள்ளல், புலவருக்குப் பதில் வணக்கம் செய்துவிட்டு அவரை அருகில் வருமாறு அழைத்தார்.

'வள்ளல் எதற்காக அருகில் வருமாறு அழைக்கிறார்' என்ற காரணம் புரியாத வியப்புடன் புலவர் அவரருகே சென்றார். தம் அருகே வந்த புலவரைப் பக்கத்தில் மரியாதையாக அமரச் செய்த வள்ளல், அவரது வலது கைவிரல்களை உரிமையோடு பிடித்தார். புலவரோ ஒன்றும் புரியாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தார். வள்ளலின் கைவிரலை அணி செய்து கொண்டிருந்த அழகிய வைர மோதிரம் புலவர் கைவிரலுக்கு மாறியது. ஊருக்குப் புறப்படும் நேரத்தில் வணங்கிய தம் கையைக் கண்டு அருகில் வரவழைத்து மோதிரமிட்ட அவர் பெருங்குண நலத்தை எண்ணி, எண்ணி வியந்தது புலவரது ஏழையுள்ளம். அந்த வியப்புக்கு நடுவே ஒரு கற்பனை அருமையாகத் தோன்றியது. "என்னிடம் பரிசில் பெற்ற பிறகு, தமிழ்ச் சுவை அறியாத வேறு எந்தப் புல்லர்களிடமும் போய் இந்த வலது கைவிரல்களை நீட்டிக் கேட்கவேண்டாம். நானே என்றும் கொடுப்பேன்" என்று தன் கைக்கு ஒரு தடை காப்பாக அந்த மோதிரத்தை வள்ளல் இட்டதாகக் கற்பித்துப் பாடினார் புலவர்.

"கா ஒன்றும் கைத்தலத் தண்ணல்
செல்லூரன் கனிந்து நம்மை
வா என்று அழைத்து இட்ட
மோதிரமே வண்மையான தமிழ்ப்
பா ஒன்றும் சற்றும் அறியாத
புல்லர் தம் பக்கலிற் போய்
தா என்று கையெடுத்து ஏற்காமல்
இட்ட தடை இதுவே"

கா ஒன்றும் = கற்பகமரம் போன்ற. கைத்தலம் = கைகள். கனிந்து = பரிந்து. பா = பாட்டு.

வள்ளல் அணிவித்த மோதிரம் அழகான கற்பனை ஒன்றை அளித்துவிட்டது புலவருக்கு.

# 26. ஆற்றில் நழுவிய ஆடை

உடலுக்கும் நெஞ்சுக்கும் ஒருங்கே குளிர்ச்சியையும் மலர்ச்சியையும் கொடுக்கும் வைகறைப் போது. வைகை நதியின் கரையில் ஒரே கோலாகலக் காட்சிகள். ஆடிப்பெருக்கு நேரம், முதலில் நான்கு ஐந்து நாட்களில் கலங்கலாக ஓடிய தண்ணீர்கூட இப்போது நன்றாகத் தெளிவடைந்திருந்தது. குளிக்க வருவோரும் போவோருமாகப் படித்துறைகளில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. வைகையில் எல்லாச் சமயங்களிலும் அவ்வளவு வெள்ளம் வந்து காண முடியாது. எப்போது வைகையில் ஆழ நீர் ஓடுகிறதோ அப்போது, அந்த நாட்களில் மதுரைப் பெருமக்கள் அதனைப் பயன்கொள்ளாமல் விட்டுவிடுவதில்லை. இதனால் தான் அவ்வளவு கூட்டம்.

இப்படிப் புதுவெள்ளம் போய்க் கொண்டிருந்த நாட்களில் ஒன்றிலேதான் மதுரைக்குத் தற்செயலாக வந்திருந்தார் ஒப்பிலாமணிப் புலவர். ஆடிப்பெருக்கும் அதுவுமாக, வைகையில் நல்ல தண்ணீரும் ஓடும்போது வேறு எங்கேனும் குளித்துவிட அவருக்கு மனம் வரவில்லை. 'அரை வேஷ்டியை நன்றாகத் துவைத்து, அலசி, உடற்சூடு தீர வைகையில் மூழ்கிக் குளிக்க வேண்டும்' என்ற எண்ணத்தோடு பல பலவென்று விடிய இருக்கும் நேரத்தில் வைகைக் கரைக்கு விரைந்து வந்து சேர்ந்தார் புலவர்.

சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும் ஒரு படித்துறையிலாவது சாவகாசமாக நின்று குளிப்பதற்கு இடம் கிடையாது. எல்லாத் துறைகளிலுமே அதிக நெருக்கடியாக இருந்தது. ஆடவரும் பெண்டிருமாகத் தத்தம் அவசரத்தில் விரைவாக நீராடிச் செல்லும் கருத்துடன் துறைகளிலுள்ள இடங்களைப் பலாப் பழத்தை ஈ மொய்ப்பதுபோல் மக்கள் நெருங்கி மொய்த்துக் கொண்டிருந் தனர். நெடுநேரம் காத்திருந்த பிறகு, பக்கத்திலிருந்த ஒரு படித்துறையில் சற்றே கூட்டம் குறைந்து காணப்பட்டது. வசதியாகக் குளிக்கலாம் என்ற அளவிற்கு அங்கே கூட்டம்

குறைந்திருந்ததனைக் கண்டு ஒப்பிலாமணிப் புலவர், அந்தத் துறையில் போய் இறங்கினார்.

திருநீற்றுச் சம்புடத்தையும் ஏட்டுச்சுவடிக் கட்டையும் படிக்கு மேலே தண்ணீர் படாத ஓரிடத்தில், கண் பார்வைக்குத் தெரியும்படியாக வைத்துவிட்டு அரையில் துண்டு சகிதமாக வேஷ்டியைத் துவைப்பதற்காக நனைக்கத் தொடங்கினார் புலவர்.

முதல் நாளிரவு வெள்ளியம்பல மன்றத்தின் புழுதி படிந்த கல் தளத்தில் உறங்கியிருந்ததாலும், மீனாட்சி கோவில் திருமதிற் செம்மண் பட்டைகள் அவர் வேஷ்டியில் அங்கங்கே 'முத்திரை வைத்து' விட்டிருந்ததாலும், தண்ணீரில் நன்கு ஊறவைத்து அழுத்தித் தோய்த்து அலச வேண்டியிருந்தது. அந்த நோக்கத் துடனேதான் புலவரும் அரையில் மேல் துண்டைக் கட்டிக் கொண்டு வேஷ்டியைத் துவைத்து உலர்த்துவதற்கு எண்ணி அதை முதலில் துவைக்க ஆரம்பித்திருந்தார்.

புலவர் நான்காவது மடிப்பைத் திருப்பிப் பலமுறை அழுத்தித் துவைத்தபின் ஓய்ந்து தளர்ந்திருந்த கைகளால் அலசுவதற்காகத் தண்ணீரில் வீசிய வேஷ்டியை, நீரின் வேகம் அபகரித்து இழுத்துச் சென்றுவிட்டது. அதை எடுக்கவேண்டும் என்ற பரபரப்போடு அவர் கீழே இரண்டு படிகள் தள்ளி இறங்குவதற்குள் அது நீரில் அரை யோசனை தூரம் கடந்து போய்விட்டது. வைகையில் 'இழுத்துச் செல்லும்' வேகத்திற்குக் குறைவா என்ன? வேறு என்ன செய்வதென்று தெரியாமல் கொஞ்ச நேரம் மலைத்தார் புலவர். பின்பு ஒருவழியாக மனந்தேறிச் சுவடிகள் கட்டி வைத்திருந்த வேஷ்டியை அதிக கவனமாகத் தோய்த்து உலர்த்தி நீராடியபின் கட்டிக்கொண்டு, சொக்கலிங்கப் பெருமானைத் தரிசிக்கப் புறப்பட்டார். சுவடிகளை அவை சுற்றியிருந்த கயிற்றால் விபூதிச் சம்புடத்தோடு சேர்த்துக் கட்டிவைத்துக் கொண்டார். மீனாட்சி கோவிலில் சொக்கநாதருக்கு முன்பு அவர் பாடிய பாட்டு என்னவென்று நினைக்கிறீர்கள்?

"அப்பிலே தோய்த்திட்டு அடுத்தடுத்து நாமதனைத்
தப்பினால் நம்மையது தப்பாதோ—இப்புவியில்
இக்கலிங்கம் போனால் என் ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் தானிருக்கச் சொல்."

அப்பு = கண்ணீர், தப்புதல் = துவைத்தல் – நீங்குதல், கலிங்கம் = ஆடை.

*இதுதான் அவர் பாடிய பாட்டு, தாம் அடித்து அடித்துத் துவைப்பதற்காக ஆடை தம்மைப் பழி வாங்கி விட்டதாகக் கூறும் நயம் பாராட்டத்தக்கது.*

## 27. சென்னையில் சிவகதி!

**சோழ** *நாட்டில், அந்தக் காவிரிக் கரையில் வாழ்ந்த சுக வாழ்வைச் சென்னைப் பட்டினத்திலும் இராம கவிராயர் எதிர்பார்த்து ஏமாந்தால் அது சென்னையின் குற்றமா என்ன? தென்னை, மாந்தோப்புக்களின் அமைதியும், கால் காலாகப் பிரிந்து ஓடும் காவிரி நீரின் குளிர்ச்சியும், பச்சைப் பசேரென்ற பயிர் வெளியும், வெற்றிலைக் கொடிக்காலும், கரும்புத் தோட்டமும், வாழைக் கொல்லைகளுமாக விளங்கும் சோழ நாட்டுச் சிற்றூர் ஒன்றில் பிறந்து வளர்ந்து வாழ்பவர் அவர். 'நிழலருமை வெய்யிலிலே' என்றாற்போல ஊரிலிருந்தபோது தெரியாத அதன் அருமை சென்னைக்கு வந்து சில நாட்கள் கழிந்த அப்புறம்தான் கொஞ்சம் கொஞ்சமாகத் தெரியத் தொடங்கியது அவருக்கு. காரியார்த்தமாகச் சென்னை சென்று வரவேண்டிய அவசியத்தைத் தவிர்க்க முடியாமல் சென்னைக்கு வந்திருந்தார் அவர். வந்துவிட்டால், என்னதான் ஒத்துக் கொள்ளாத ஊராக இருந்தாலும் காரியத்தை முடித்துக் கொள்ளாமல் திரும்ப முடிகிறதா?*

*வந்த காரியமோ பட்டினத்து வீதிகளில் வெய்யிலையும் புழுதியையும் பாராமல் அவரை அலையவைத்து அலைக்*

கழித்ததே ஒழியச் சட்டென்று முடிவதாக இல்லை. சென்னைப் பட்டினத்துச் சோற்றுக் கடைகளில் வேளா வேளைக்கு நல்ல சோறுகூடக் கிடைப்பதில்லை. அதற்காக மூன்றாம் வருஷத்துத் தஞ்சாவூர்ச் சீரகச் சம்பா-பழைய அரிசியில் வடித்த சோறு வேண்டும் என்று அவர் சடைத்துக் கொள்ளவில்லை. ஏதோ, போடுகின்ற சோற்றை வாங்குகின்ற காசை நினைத்தாவது கல்லும் உமியுமில்லாமல் கஞ்சி நீங்கவாவது வடித்துப் போட வேண்டாமா? கொட்டை கொட்டையாகக் கஞ்சிப் பசை நீங்காமல் கடனுக்கு இடுவதுபோல் வடித்துப் போட்ட அந்தச் சாப்பாடு அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஜீரணமாகாமல் கஷ்டப்படுத்தியது.

இதெல்லாம் போதாதென்று வேறு சில துன்பங்களும் இங்கே சென்னையில் வேதனை கொள்ளும்படி அவரை வருத்தின. கை, கால்களில் சொரி, சிரங்கு தோன்றுவதற்கு அறிகுறியான கொப்புளங்கள் தோன்றி அரிப்பெடுத்துத் தின்றன. அந்தத் தண்ணீர் ஒத்துக்கொள்ளவில்லையோ? சாப்பாடு படுத்திய பாடோ? தெரியவில்லை...சொரி, சிரங்கு அவர் கை, கால்களைப் பலமாக முற்றுகையிட்டு ஆக்ரமித்துக் கொண்டிருந்தது.

வேறோர் சங்கதி! அதை வெளியே சொன்னால் வெட்கக்கேடு! வந்த காரியத்தை நாலு நாளில் முடித்துக் கொண்டு திரும்பிவிடலாம் என்ற நம்பிக்கையில், மடிசஞ்சியில் இரண்டே இரண்டு வேஷ்டி துண்டுகளை மட்டும் எடுத்து அடைத்துக் கொண்டு வந்திருந்தார். ஒன்று ஏற்கெனவே கிழிசல்!. இன்னொன்று இங்கே வந்தபிறகு கிழியத் தொடங்கியிருந்தது. காவிரியா ஓடுகிறது. தும்பைப் பூப்போலத் தோய்த்து அலுங்காமல் கொள்ளாமல் அலசி உலர்த்துவதற்கு? கிழிசலை ஒளித்து மறைத்து முழங்காலுக்கு மேலே மடக்கிக் கட்டிக்கொண்டாலோ அசிங்கமாக இருக்கிறது! விலைக்குப் புதிதாக வாங்கிவிடக் கையிற் பொருள் வசதி போதாது. உடம்பிலேயே சாம்பல் பூசியது போலப் படிந்துவிடும் சென்னை மாநகரத்துத் திவ்யமான தெருப்புழுதி வேஷ்டியை வெள்ளையாக வைத்துக்கொள்ளவாவது விடுகிறதா? அதுவும் இல்லை.

ஊரிலிருந்து புறப்படுவதற்கு முதல்நாள் எண்ணெய் தேய்த்து நீராடியதுதான். அதற்குப் பிறகு தலைப்பக்கம் எண்ணெயை மறந்தும் கொண்டுபோனதுகூட இல்லை. அது சிக்குப் பிடித்துச் சடை சடையாக உறைந்து போயிருந்தது.

இதையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது சென்னைக்கு வந்து சிவபெருமான் பெற்றிருக்கும் அத்தனை கதிகளையும் தாமும் பெற்றுவிட்டதாக ஒரு குறும்புக்கார எண்ணம் அவருக்குத் தோன்றியது. அந்த எண்ணத்தை இரண்டு பொருள் அமைந்த ஒரு அருமையான சிலேடைப் பாட்டாகப் பாடி வைத்தார்.

"சென்னபுரி மேவிச் சிவன் ஆனேன் நல்ல
அன்னம் அறியாதவன் ஆகி – மன்னு சிரங்
கைக்கொண்டு அரைச் சோமன் கட்டிச் சடை முறுக்கி
மெய்க் கொண்ட நீறணிந்து மே."

**அன்னம் = சோறு, நான்முகன். சிரம் கைக் கொண்டு = சிரங்கைக் கொண்டு, சோமன் ஆடை. பிறை, நீறு- புழுதி = சாம்பல்.**

"நல்ல அன்னமாக உருவெடுத்து நான்முகனும் காண முடியாதவனாகிக் காபாலி மண்டையோடு கைக்கொண்டு பிறைமதியைச் சடையிற் கட்டி மேனி முழுதும் வெண்ணீ றணிந்தான்"-என்று சிவபெருமான் கதிகட்கும், "நல்ல சோறு அறியாதவனாகிச் சொரி சிரங்கைக்கொண்டு, கிழிந்த ஆடையை அரையிலணிந்து, தலையில் எண்ணெய் படாது சடை பின்னிட உடம்பெல்லாம் புழுதி படியச் சென்னையிலே சிவகதி கிடைத்தது எனக்கு" என்று தமக்கும் பொருளமையச் சிலேடையாக இதைப் பாடினார் இராம கவிராயர். பாட்டு, மிகவும் பொருள் செறிந்தது.

## 28. பூபன் போட்ட கடுக்கன்

புலமை நெஞ்சத்தின் சமத்கார சாதுரியம் அருமையாக வெளிப்படக்கூடிய இடம் புலவரின் தற்குறிப்பு ஏற்றமே.

இயற்கையாக நடக்கும் ஒரு நிகழ்ச்சியின், அல்லது காரியத்தின் விளைவைத் தன் கற்பனைக் குறிப்பினால் வேறொன்றாக ஏற்றிப் பாடுவதுதான் தற்குறிப்பேற்றம். இதை நளினமாகவும் கவிதையின் மோகனம் கெட்டுப் போகாமலும் அமைத்துக் காட்டக்கூடிய தனிப்பாடல்கள் அநேகம். அவைகளை எத்துணை முறை படித்தாலும் இனிமையும் சுவையும் குன்றித் தோன்றுவதே இல்லை.

தனிப்பாடல் திரட்டிலே இராமச்சந்திர கவிராயர் பாடல்கள், ஏழைமையின் மனோபாவத்தையும், புலமை உள்ளத்தின் பொறுக்க முடியாத வேதனையையும், தமக்கு நிகரற்ற முறையில் சித்திரித்துக் காட்டுவதுபோலவே மேலே கூறிய விதமான கற்பனைகளையும் அழகாகச் சித்திரித்துக் காட்டு கின்றன. இந்த இருவகைத் தகுதிகளையும், கவிராயர் பால் நாம் கண்டு அனுபவிக்கும்போதுதான் அவரைப் பொறுத்து எழுந்த இம்முடிவு வலுப்பெறும்; அவர் புலமைத் திறமும் சுவைத் தேர்ச்சியும் நமக்குப் புலப்படும்.

மாதிரிக்குத் தஞ்சாவூர்க் குருவப்ப பூபன் என்ற கொடை வள்ளல்மீது அவர் பாடிய பாடல் ஒன்றைக் கண்டு அனுபவிப்போம்.

தஞ்சாவூர்க் குருவப்ப பூபன் அந்தப் பகுதியிலேயே தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருஞ் செல்வன். தமிழார்வம் பொருந்தியவன். கருணைக்குக் குறைவில்லாத அவன் நெஞ்சம் தமிழ்ப் புலவர்களுக்கும் வேண்டுகோளுடன் தேடிவரும் பிறருக்கும் இல்லையென்று சொல்ல நினைத்தும் அறியாது. அந்த வட்டாரத்துப் புலவர்க்கும் இரவலர்க்கும் மட்டுமல்ல, எங்கிருந்து வந்தாலும் சரி, எல்லோருக்கும் கண்கண்ட கற்பக மரமாக விளங்கி வந்தான் குருவப்ப பூபன். இத்தகைய வள்ளலைப் பலமுறை சந்தித்துப் பாடி மகிழ்ந்து பரிசிலும் பெற்ற பழக்கம் இராமச்சந்திர கவிராயருக்கு மிகுதியாக உண்டு. அடிக்கடி அவன் போற்றுதலில் மகிழ்ச்சி கண்டார் கவிராயர். குருவப்ப பூபனோ, அவர் வந்துவிட்டால் உலகையே மறந்துபோய் அவருக்கு முன்னால்

தமிழ் இரசிகனாக உட்கார்ந்துவிடுவான். கவிதையை இரசிப்பதில் அவனுக்கு அவ்வளவு ஆவல்.

இப்படி ஒருமுறை கவிராயர் குருவப்ப பூபனைக் காணச் சென்றிருந்தபோது, வழக்கத்தைவிடச் சற்றுப் பெரிய யோகம் அவருக்காக அங்கே காத்திருந்தது. கைதேர்ந்த வைரப் பரிசோதகர்களைக் கொண்டு பொறுக்கி எடுத்த புஷ்பராகக் கற்களைப் பதித்த ஒரு ஜதை கடுக்கன்களை அம்முறை அவருக்காகச் செய்து வைத்துக் காத்துக்கொண்டிருந்தான் குருவப்ப பூபன்.

அவன் கொடுத்துக் கொடுத்துத் தருமத் தழும்பேறிய தன் கைகளாலேயே அதைப் புலவர் காதுகளில் இட்டான். அப்படி இட்டபோதுதான் குருவப்ப பூபனுக்குத் தான் செய்திருந்த ஒரு சிறு தவறு தெரிய வந்தது. 'புலவருக்காகப் போடவேண்டும்' என்ற ஆசை தூண்டிட, அவசரத்தில் செய்துவிட்ட அந்தக் கடுக்கன்கள் அவர் காதுகளுக்குக் கொஞ்சம் பெரிதாக இருந்தன. அதன் பலன்?...புலவருடைய தாடைகளில் அடிக்கடி மோதி இடித்தன கடுக்கன்கள். தூர்ந்து போயிருந்த அவர் காதுத் துளைகளை ஒட்டி இறுக்கிப் பிடித்த அவைகள் அவருக்குச் சிறிது வலியையும் கொடுத்தன. இதைக் கண்ட பூபன் அவைகளை அழித்துவிட்டு, அளவோடுகூடிய வேறு கடுக்கன்களைச் செய்வதாகவும், பிழைக்குத் தன்னை மன்னிக்கும்படியாகவும் புலவரிடம் கேட்டுக் கொண்டான். புலவர் சிரித்துக்கொண்டே, "உன் அன்புபோலப் பெரியதாகவும், நட்புபோல இறுக்கமாகவும் இருக்கும் இவைகளையே நான் அணிந்துகொள்கிறேன்! வேறு செய்யவேண்டா" என்று மறுத்தார்.

அளவைவிடப் பெரிதாகத் தாடைகளில் மோதியும், காதுத் துளைகளை ஒட்டி இறக்கி வலியை உண்டாக்கியும் வருத்த வேண்டியதற்குப் பதிலாக அற்புதமான கற்பனை ஒன்றை அளித்தன அவை. "பாட்டும் தமிழும் அறியாத கஞ்சர் களிடம்போய்த் தமிழைப் பாடி வீண்துதி செய்யாதே என்று கன்னத்தில் மோதித் தாடைகளில் அடித்தன கடுக்கன்கள். 'குருவப்ப பூபன் போன்ற வள்ளல்களிடம் மட்டும் தமிழ்ச்

*சுவையைக் கூறு! பிற வகையான பேதைகளிடம் என்றும் தமிழைக் கூறாதே' என்று காதுகளில் இரகசியம் கூறவது போல ஒட்டி இறுக்கி வலிகொள்ளச் செய்தன." இந்த அழகான கற்பனை பாட்டாக வடிவம் பெற்றது. புலவர் குறும்புச் சிரிப்போடு பாட ஆரம்பித்தார்.*

"ஏதிலே வறியவர்க்கும் இனிய
கவிப்புலவருக்கும் இரங்கியந்தப்
போதிலே தனங்கொடுக்கும்
தஞ்சைநகர்க் குருவப்பபூபன் எற்குக்
கோதிலே கிடந்துழலும்
பலரிடத்திற் சென்று தமிழ் கூறாவண்ணம்
காதிலே ஒட்டிட்டுத் தாடையின்
மோதக் கடுக்கன் தானிட்டானே."

**ஏதிலே = எப்போதும், தனம் = செல்வம், எற்கு = எனக்கு, கோது = குற்ற, ஒட்டுஇட்டு = இரகசியம்கூறி.**

*தமிழ்ப் பயனை வீண் செய்யாதே என்று கடுக்கன்கள் கன்னத்திலடித்துத் தண்டித்ததாகவும் ஒட்டி இரகசியம் கூறியதாகவும் பாடும் சமத்காரம் அபூர்வமாக அமைந்து விட்டது.*

## 29. மோர் பெற்ற பேர்

*பங்கனி மாதத்துப் படை பதைக்கும் வெய்யில் ஜீவராசிகளை எரித்து நீறாக்கிவிட முனைந்துவிட்டது போல உக்கிரமாகக் காய்ந்து கொண்டிருந்தது. தெருவில் ஈ காக்கை இல்லை. சூனிய வெளியாக விளங்கியது. காலைப் பொரிக்கும் அந்த வெய்யிலில் வெளியே கிளம்ப யாருக்குத்தான் துணிவு வரும்?*

*ஆனால் தேசாந்திரியாகச் சுற்றிக் கொண்டிருக்கும் காளமேகத்துக்கு அதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கவா முடிகிறது? வெய்யிலும் மழையும் பார்த்து ஒடுங்குவதற்கு வீடு*

வாசலோடு கூடிய மனிதரில்லையே அவர்! மேலும் அவருடைய மன நிலையையும் வாழ்க்கையையும் பொறுத்தவரை காலுக்குச் செருப்பும், கைக்குக் குடையும் யாராவது வற்புறுத்தி அவரிடம் அளித்தால்கூட அவருக்கு அவை அநாவசியமே. 'சுமந்து திரிகின்ற உடலின் சுமை போதாதென்று தோற்செருப்பையும் துணிக் குடையையும் சுமந்து கொண்டு வேறு திரிய வேண்டுமா?' என்று எண்ணுகிற அளவிற்கு விநோதமானது அவருடைய மனோபாவம். அவர் விந்தை மனிதர். 'இப்படிப்பட்டவர்' என்று வரையறை செய்து கணங்களைச் சித்திரித்துவிடமுடியாதவர். வெளிப் பார்வைக்குப் பைத்தியக்காரர், பைத்தியக்காரத்தனம் என்று உலகம் அவரையும் அவர் குணங்களையும்பற்றி முடிவுசெய்து கொண்டால் அது அவருடைய குற்றமில்லை. சீறி வசைபாடுவார் சில சமயங்களில். பெட்டிப் பாம்பாக ஒடுங்கி விடுவார் வேறுசில சந்தர்ப்பங்களில். இந்த இரண்டு மாறுபட்ட நிலைகள் மட்டுமல்ல. இன்னும் நமது அறிவிற்கு அப்பாற்பட்ட, விளங்கிக்கொள்ள முடியாத எவ்வளவோ இயல்புகளை விசித்திர ரீதியாகவும் சரி, வேதாந்த ரீதியாகவும் சரி, அவரிடம் காணலாம். அதெல்லாம் அவருக்குச் சாதாரண வாழ்க்கை.

சோறும் நீரும் துணியும் காணாத துயரம் அதிலே இருப்பது போல, இருந்ததுபோல நாம் மயங்கி எண்ணிக்கொள்கிறோம். ஆனால் அந்த வேடிக்கை மனிதருடைய வாழ்க்கையை ஊன்றி ஆராய்ந்தபின் உணர்ந்துபார்த்தால், அப்படி எவற்றையுமே அவராக உணர்ந்து துன்பப்பட்டதாகத் தெரியக் காணோம். அந்த உணர்வுகூட அங்கே நிழலிடவில்லை.

தாகம் நாவை வறளச் செய்தது. காளமேகம் அந்தத் தளர்ச்சியோடு தளர்ச்சியாக நடந்து கொண்டிருந்தார். ஆனால் சகிக்க முடியாத வெய்யில் வேதனையில் எவ்வளவு நேரந்தான் தாகத்தைத் தாங்கிக் கொண்டு நடக்க முடியும்? கால்களும் தலையும் வெய்யிலில் வாடிவருந்தும்போது தாகம் வேறு பற்றிக் கொண்டால் கேட்கவா வேண்டும்?

இந்த நிலையில் அவரைப் போலவே அந்த வெய்யிலில் வந்து கொண்டிருந்த வேறோர் 'மானிட ஜீவன்' அவர் திருஷ்டியில்

பட்டது. ஆனால் கொஞ்சம் வித்தியாசம் இருந்தது. எதிரே வந்துகொண்டிருந்த அந்த மோர்க் காரியின் தலையில் வெய்யிலைத் தாங்க மோர்ப் பானையொன்று பெரிதாக இருந்தது. காலில் செருப்பணித்திருந்தாள். 'மோரோ மோர்' என்று கூவிக்கொண்டு வந்த அவளுக்கும் காளமேகத்திற்கும் வித்தியாசம் இவ்வளவு தான்.

அவளை நிறுத்தி, மேலாடை முடிச்சில் இருந்த காற்பணம் காசை நீட்டி ஒரு குவளை மோர் கொடுக்குமாறு கேட்டார் காளமேகம். அவளும் அதை வாங்கிக்கொண்டு பக்கத்திலிருந்த ஒரு திண்ணையில் பானையை இறக்கி, அவருக்குக் குவளை நிறைய மோர் கொடுத்தாள். குவளையைக் கையில் வாங்கி அதிலிருந்து இரண்டு வாய் மோர்தான் குடித்திருப்பார் காளமேகம்! 'இது மோர்தானா?' என்ற சந்தேகமாகப் போய்விட்டது அவருக்கு. ஒருவேளை தவறிப்போய்த் தண்ணீரைக் கொடுத்துவிட்டாளோ என்று கூடத்தோன்றியது. கூசாமல் தண்ணீரை விளாவி இருந்தாள் அந்த மோர்க்காரி. கடைவாயிலே வழிந்த மோரும் கையிற் குவளையும் தோன்ற அபிநயத்துடன் மண்டையை ஆட்டிக் கொண்டே பாட ஆரம்பித்துவிட்டார் காளமேகம்;

"காரென்று பேர்படைத்தாய் ககனத்து உறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில் வந்ததற்பின்
வாரொன்று மென்னகிலார் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றாயே!"

"வானத்திலிருக்கும்போது உனக்கு மேகமென்று பெயர். தரையில் மழையாகப் பெய்தபின் தண்ணீரென்று பெயர். இந்த பாழாய்ப்போன மோர்க்காரிகள் கைக்கு வந்து பானையில் புகுந்தபிறகு உனக்கே மோர் என்றும் பெயர்-ஆகா! உன் பெயர் எவ்வளவு விரிந்துவிட்டது மூன்று பேரிலல்லவா பரவுகிறது உன் புகழ்!" இக்கருத்தமையப் பாடி முடித்துவிட்டு, எஞ்சிய மோருடன் குவளையை அந்த மோர்க்காரியிடம் கொடுத்துவிட்டுச் சென்றார் காளமேகம். அந்த நிலையில், அப்போது அவள்கூட அவரைப் பித்தர் என்றுதான் எண்ணியிருக்க வேண்டும்.

## 30. கூண்டுக்கிளி

படிக்காசுத் தம்பிரானும் அவர் நண்பராகிய வேறொரு புலவரும் வள்ளல் ஒருவரைக் காண்பதற்காகப் பயணம் செய்துகொண்டிருந்தனர். கால்நடையாகச் செல்லும் பயண மானாலும் இருவரும் தேர்ந்த தமிழ்க் கவிஞர்களாகையால் மனத்திற்கு விருப்பம் சென்றவாறெல்லாம் உரையாடிக் கொண்டே சென்றனர். தனிமை, சிந்தனைக்கு ஏற்றதுதான். ஆனால் செயலுக்கு ஏற்றதில்லை. நடந்துபோதல் முதலிய வற்றிற்குத் தனிமை சற்றே துன்பம் கொடுக்கத்தான் செய்யும். சிந்திப்பதற்கோ தனிமையைவிடச் சிறந்த கருவி வேறெதுவும் இருக்க இயலாது. எனவே சேர்ந்து செல்லும் பயணத்தில் வழிநடைக் களைப்பை உணரும் வாய்ப்பே அவர்களுக்கு எற்படவில்லை.

வழியில் ஓர் அழகிய நகரை அவர்கள் கடக்க நேரிட்டது. வழியை ஒட்டி அமைந்திருந்த ஒரு பெரிய பழத்தோட்டமும், பக்கத்தில் படிக நிறத்து நீர் கலகலவென்று ஓடிக்கொண்டிருந்த சிற்றாறும் ஆக இருந்த இடத்திற்கு வந்ததும் படிக்காசருக்கு அங்கிருந்து மேலே அடியெடுத்து வைக்கக் கால் எழவில்லை. அந்த இடத்தின் இயற்கை வனப்பு அவரைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. கிளி, குயில் இவைகளை அந்தத் தோட்டத்தில் கிளைக்குக் கிளை காண முடிந்தது. வெய்யில் உள்ளே நுழைய முடியாத அளவு அடர்ந்து பசுமை நெருங்கிய தோட்டம் அது. விருப்பத்தை அடக்க முடியாமல் நண்பரோடு தோட்டத்திற்குள் நுழைந்தார் படிக்காசர். மாணிக்கச் சிவப்போடு கனிந்த நிலையில் சரம் சரமாகத் தொங்கும் மாம்பழங்கள், தங்க வண்ணம் பொங்கும் கொய்யாக் கனிகள், இன்னும் எண்ணற்ற கனிகள் மயமாகக் காட்சியளித்தது தோட்டம்.

இயற்கையை இரசிக்க வந்த படிக்காசரும் நண்பரும் கைக்கு எட்டியனவும், கீழே உதிர்ந்து கிடந்தனவும் ஆகிய கனிகளையும் இரசிக்கத் தொடங்கினார்கள். தின்னத் தெவிட்டாத தீங்கனிகள்!

தின்று கொண்டே இருந்தனர். முதலில் தாம் தண்ணீர் குடித்து விட்டு வந்துவிடுவதாகச் சொல்லி விட்டு அருகில் ஓடிக்கொண்டிருந்த நதிக்குச் சென்றார் நண்பர். காய்நிலையும் கனிநிலையும் கொண்டு, அரைகுறைப் பழமாக இருந்த 'அரிசிக் கொய்யா'வின் விதைகளைச் சுவைத்துக் கொண்டிருந்த படிக்காசர் முந்திரிப் பருப்புப்போன்ற இனிமை பொருந்தியுள்ள அதன் விதைகளை எண்ணி வியந்துகொண்டே கீழே கிடந்த அடுத்த கொய்யாக் கொத்தை எடுத்தபோது, இரும்பு வலிமை படைத்த கையின் முஷ்டி ஒன்று அவர் தோளின்மேல் விழுந்தது.

ஐயனார் கோவிற் குதிரைபோல ஆகாயத்துக்கும் பூமிக்குமாக வாட்டசாட்டமான தோற்றத்தோடும் தம்முன் அனல் கக்கும் கண்களோடும் நின்று கொண்டிருக்கும் காவற்காரனைக் கண்டதும் படிக்காசருக்கு வாயடைத்துப் போய் விட்டது. பரபரவென்று அவர் கையைப் பிடித்துக் கொண்டு அவரை அவன் இழுத்துச் செல்லத் தொடங்கினான். படிக்காசருக்கு என்ன செய்யலாம் என்றே தெரியவில்லை. அவனுக்கு முன்னால் வாயைத் திறந்து பேசுவதற்கே அவருக்கு அச்சமாக இருந்தது தண்ணீர் குடிக்கப் போயிருந்த நண்பரோ இன்னும் திரும்பி வரவில்லை. புலவருக்கு நண்பர் திரும்பி வராததும் ஒரு காரியத்திற்கு நல்லதாகவே பட்டது. 'அவர் வந்து தம்மை இந்தக் கோலத்தில் பார்த்துவிடவேண்டாம். அவரும் இந்த எமனிடம் அகப்பட்டுக் கொள்ள வேண்டாம். பேசாமல் இவனோடு கொஞ்சதூரம் சென்றதும் மறைவான இடம் ஒன்றிலே கெஞ்சிக் கதறி விடுவித்துக்கொண்டு வந்துவிட்டால் பின் நண்பரை இங்கே வந்து சந்தித்துக் கொள்ளலாம்' என்று எண்ணிக்கொண்டு அவர் அவனோடு நடந்தார். காவற்காரன் அவரை நகரத்திற்குள் அழைத்துக்கொண்டு போனான். பல தெருக்களைக் கடந்து ஊரின் நடு மையமாக அமைந்திருந்த அந்தப் பெரிய அரண்மனையின் உள்ளே இழுத்துக்கொண்டு போனான். புலவர் இடையிலே அவனிடமிருந்து தப்பித்துக் கொள்ளச் செய்த முயற்சி பலிக்கவில்லை. தன்னை விட்டு விடுமாறு கேட்டபோது அவன் பார்த்த அந்த நெருப்புப் பார்வை

அவருடைய சர்வ நாடிகளையும் ஒடுக்கிவிட்டது. பேசாமல் அவனைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிந்து கொண்டபின் அதையே செய்தார். அவன் அழைத்துச் சென்ற அந்தப் பெரிய மாளிகையைக் கண்டதும் அதற்குரியவன் அந்நகருக்கே அரசனைப் போன்ற தகுதியும் பெருமையும் உடையவனாக இருக்கவேண்டும் என்று ஊகித்துக் கொண்டார் புலவர். தோட்டக் காவற்காரன் மாளிகை வாசலில் நின்ற காவலனை ஏதோ குறிப்பாகக் கைகாட்டிக் கேட்டான்.

“இப்போது முடியாது. பார்க்க வேண்டுமானால் எப்படியும் இன்னும் ஒன்றரை நாழிகை காத்திருக்கவேண்டும்” என்று மாளிகை வாயிலில் காவற்காரன் தோட்டக் காரனுக்கு மறுமொழி கூறினான்.

இந்த மறுமொழியைக் கேள்வியுற்ற பின்னர் சிறிது நேரம் ஏதோ சிந்தித்துக் கொண்டிருப்பவன் போல நின்று கொண்டிருந் தான் தோட்டக்காரன். பின் ஏதோ முடிவுக்கு வந்தவன்போல் வாயிற் காவலனுடன் கால் நாழிகை காதோடு காதாக ஏதோ பேசினான். இறுதியில் வாயிற் காவலன் தலையசைத்தான். தோட்டக்காரன் முகம் மலர்ந்தது. இருவரும் புலவரை இழுத்துக் கொண்டு உள்ளே சென்றார்கள். வாயிற் காவலன் ஓர் அறையின் கதவைத் திறந்துவிட்டான்.

இதன்விளைவு?... படிக்காசர் இரண்டு நாழிகை நேரம் அந்த அறையில் சிறை செய்யப்பட்டார். தம்மை உள்ளே விட்டுத் தாழிட்டுக்கொண்டு சென்றபோது அவர்கள் பேசிச் சென்ற பேச்சிலிருந்து இதை அவர் அனுமானித்துக் கொண்டார்.

இங்கே இவர் இப்படி இருக்கும்போது, அங்கே ஆற்றில் தண்ணீர் குடித்துவிட்டுத் தோட்டத்திற்குள் நுழைந்த படிக்காசரின் நண்பர், மரத்தடியிற் படிக்காசரைக் காணாமல் திடுக்கிட்டார். சற்று நேரம் அந்தப் பக்கம் ‘படிக்காசர் எங்கே போயிருக்கலாம்?’ என்ற சிந்தனையோடு உலாவிக் கொண்டிருந் தார். அப்போது தற்செயலாக அங்கே வந்த வேளாளன்

ஒருவனிடம் அந்தத் தோட்டத்தைப்பற்றியும் விவரமாகக் கேட்டறிந்துகொண்டார். தோட்டத்திற்குள்ள கட்டுக்காவல் களைப்பற்றி அந்த வேளாளன் சொன்னபோது 'என்ன நடந்திருக்கும்?' என்பதை அவரால் அறிந்து கொள்ள முடிந்தது. உடனே அதே வேளாளனிடம் அத்தோட்டத்தின் உரிமை யாளராகிய திருமலைராய பூபதியின் இருப்பிடத்தை அறிந்துகொண்டு நகரத்தை நோக்கி வேகமாக நடந்தார்.

திருமலைராய பூபதியின் வீட்டை அடைந்த படிக்காசரின் நண்பர், "தமிழ்ப்புலவர் ஒருவர் வந்திருக்கிறார்" என்று உள்ளே சென்று கூறி அனுமதி பெற்று வருமாறு வாயிற் காவலனை அனுப்பினார். வாயிற் காவலன் உள்ளே சென்று வந்ததும், திருமலைராய பூபதி உள்ளே வரச்சொல்லி அன்போடு வேண்டிக் கொண்டதாக அவரிடம் கூற, அவர் மகிழ்ச்சியோடு உள்ளே சென்றார். உள்ளே ஓர் அறைப் பக்கமாக அவர் வந்து கொண்டிருந்தபோது சாளரத்தின் வழியே படிக்காசரின் தலைதெரிந்தது. வியப்புடனே தாம் நினைத்தது போலவே நடந்திருப்பதை எண்ணிக்கொண்டே சாளரத்தை நெருங்கினார். படிக்காசரைச் சைகை செய்து அழைத்து விவரங்களைச் சுருக்கமாக அறிந்துகொண்டு எப்படியும் விடுவிக்க முயல்வதாக உறுதி கூறிவிட்டு உள்ளே நுழைந்தார்.

புலவர் உள்ளே நுழைந்தபோது திருமலைராய பூபதி தாம் அருமையாக வளர்த்து வந்த பஞ்சவர்ணக் கிளியின் கூட்டை முன்வைத்து அதன் மழலையைக் கேட்டு அனுபவித்துக் கொண்டிருந்தார். பால், பழம், பருப்பு, முதலியவற்றை அதற்குக் கொடுத்து அது தன் செவ்வாயைத் திறக்கும் அழகை வியந்து கொண்டிருந்தார்.

தம் வரவு தெரியப் புலவர் கனைத்தார். பூபதி தலை நிமிர்ந்தார். பின் எழுந்து அன்போடு வரவேற்றுப் புலவரை அமரச் செய்தார். இப்போது வாயிற்புறத்து அறையிலிருந்து யாரோ பலமாகத் தொடர்ந்து விக்கும் ஒலிகேட்டது. பூபதி கிளிக்கூட்டை கையில் வைத்துக் கொண்டே "அது என்ன? யாரோ விக்குவது

போலக்கேட்கிறதே?" என்றார். விக்குவது யாரென்பதை அறிந்து கொண்ட புலவர் அந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல்,

"நாட்டிற் சிறந்த திருமலையா! துங்க நாகரிகா!
காட்டில் வனத்தில் திரிந்துழ லாமற் கலைத்தமிழ் தேர்
பாட்டிற் சிறந்த படிக்காசன் என்னுமோர் பைங்கிளியைக்
கூட்டி லடைத்து வைத்தாய் 'இரைதா' என்று கூப்பிடுதே"

**துங்க = உயர்ந்த, நாகரிகா = நாகரிகமுடையவனே, இரை = உணவு.**

என்று திருமலைராய பூபதியை நோக்கிப் பாடிவிட்டு நடந்த எல்லாவற்றையும் கூறினார். பூபதி உடனே காவலர்களைச் சினத்தோடு கண்டித்துவிட்டுப் படிக்காசரை விடுதலை செய்து மன்னிப்புப் பெற்றுக் கொண்டார். சமயத்தில் விக்கலை உண்டாக்கிய அரிசிக் கொய்யா விதைகளை மனதிற்குள் வாழ்த்தினார் படிக்காசர்.

## 31. உதவும் சாமி

திருமயிலை வள்ளல் வேங்கடசாமியை அறியாத தமிழ்ப் புலவர்கள் இருக்க முடியாது. தமிழ்ப் புலவர்கள் என்று வருவோர்க்கு அடையாத கதவு திருமயிலை வள்ளலின் கதவு. கொடுத்து மகிழ்வதையே ஒரு கடமையாகக் கொண்டிருந்தார் அந்த வள்ளல். தமிழ்க் கவிஞருலகம் முழுவதும் அவருடைய இந்த மழைபோலக் கொடுக்கும் இயற்கையான கொடையை அறிந்தும் அனுபவித்தும் இருந்தது; பாடியும் புகழ்ந்தும் அவரைப் பாராட்டி மகிழ்ந்தது; அறியாதவர்களுக்கு அவர் பெருமையை அறிவித்தது.

அப்படி அவர் புகழையும் கொடைத் திறத்தையும் அறிந்து, கேள்விப்பட்டு, அவர்பால் வந்த தமிழ்க் கவிஞர்களுள் இராமச்சந்திர கவிராயரும் ஒருவர். இராமச்சந்திர கவிராயர் திருமயிலையை அடைந்து வேங்கடசாமி வள்ளலின் வீட்டிற்குச்

சென்றபோது அவர் பூஜை அறையில் வழிபாடு நடத்திக் கொண்டிருந்தார். அவ்வாறு வழிபாடு செய்து கொண்டிருந்த போதும் 'வாசலில் புலவர் ஒருவர் வந்திருப்பது' தெரிந்த வள்ளலுக்குப் பாராமுகமாக இருக்க முடியவில்லை. பூஜையை நடுவில் நிறுத்திவிட்டு வெளியே வந்தார். வாயிலில் காத்திருந்த இராமச்சந்திர கவிராயரையும் உள்ளே வரவேற்று உபசரித்துப் பூஜையறைக்கு அழைத்துச் சென்றார். கவிராயர் ஒரு புறம் அமர்ந்து கவனிக்க, நடுவில் நிறுத்திய பூஜையைத் தொடர்ந்தார் வள்ளல். சாம்பிராணிப் புகையும் சந்தனமும் பூக்களின் மணமும் புலவரின் உள்ளத்தில் மகிழ்ச்சி நினைவுகளை உண்டாக்கிக் கவலை நீங்கி மலரச் செய்தன. பூஜையறையைச் சுற்றிச் சுழன்றன கவிராயர் கண்கள்.

கைதேர்ந்த ஓவியர்கள் மூலம் எழுதி வாங்கித் தொங்க விட்டிருந்த கடவுளர் படங்கள் அவரைப் பெரிதும் கவர்ந்தன. பூஜையறைக்கே தெய்வீக அழகைக் கொடுத்தவை அந்தப் படங்கள்தாம். மூங்கிற் புதருக்கு நடுவே நெல்லையம்பதியில் சிவபெருமான் இலிங்க ரூபத்தோடு மறைந்து வசித்ததாகச் சொல்லப்படும் புராண ஐதிகத்தை விளக்கியது அந்தச் சிவபெருமான் படம். மூங்கிற் புதரும் அதன் நடுவில் இலிங்கமும் படத்தில் நன்கு சித்தரிக்கப்பட்டிருந்தன. அடுத்துப் பாற்கடலில் ஆதிசேடன் குடைபிடிக்க அறிதுயில் புரியும் திருமாலின் தெய்வீகக் காட்சி படமாக விளங்கியது.மலர்ந்த செந்தாமரை மலருக்கு நடுவில் கையில் ஏட்டுடனும் படைப்புக் கருவியுடனும் உட்கார்ந்திருப்பதாக வரையப்பட்டிருந்த பிரம்மாவின் சித்திரமோ, முன்னதைவிட நன்றாக இருப்பதுபோல தோன்றிது. இவைகளுக்கும் மேலாகக் கையில் வேல் பிடித்து வெண்ணீறு அணிந்து மலைமேல் நிற்பதாகக் காட்சி கொடுத்த முருகன் ஓவியமும், அப்பம், பொரி, அவல், கனி முதலியன கூடை கூடையாக முன்னே படைக்கப்பட்டிருக்கும் நிலையிலே அமர்ந்திருக்கும் விநாயகர் ஓவியமும் விளங்கின.

அந்தத் தெய்வங்களின் படங்களையும் அவற்றிற்குத் தூபம் காட்டி வழிபாடு நடத்திக் கொண்டிருக்கும் வள்ளலான

*வேங்கடசாமியையும், மாறி மாறிப் பார்த்தவாறே ஏதோ ஒரு வேடிக்கையான கற்பனைக்கு ஒப்பிடத் தொடங்கிவிட்டார் கவிராயர்.*

*மூன்று கண்களையுடைய சாமியான சிவபெருமானோ மூங்கிற் புதருக்குள்ளே போய் ஒளிந்துகொண்டார். உயிர்களை எல்லாம் பாதுகாக்கும் தொழிலையுடைய திருமாலான சாமியோ பேசாமற் கொள்ளாமல் பாற்கடலில் போய்த் தூங்கத் தொடங்கி விட்டார். வேலையெனக் கொண்டு உயிர்களை எல்லாம் படைத்த பிரமனோ தாமரைப் பூவிலேறி உட்கார்ந்து கொண்டிருக்கிறார். சரி! இவர்கள்தான் போகிறார்கள் என்றால் இந்த முருகனுக்கு என்ன கேடு வந்தது? அவனும் வேலைப் பிடித்துக்கொண்டு மலைமேலேறி நிற்கிறான் பாவம்! அப்பாவிப் பிள்ளையாரோ அப்பம், பொரி, அவல், கனிகளைக் கொடுப்பவர்களிடம் வாங்கியுண்ண ஆசைப்பட்டதனால் வழியிலுள்ள ஓர் அரச மரத்தின் நிழல் பாழாகாமல் உட்கார்ந்து கொண்டார். "கடைசியில் நம்மைப்போலப் பாடித் திரியும் புலவர்களுக்கு மனம் நோகாமல் உதவி செய்கின்ற சாமி யார் என்று பார்த்தால் எஞ்சுவது இதோ அந்தச் சாமிகளுக்கெல்லாம் பூசை செய்து கொண்டிருக்கும் இந்த வள்ளல் வேங்கடசாமிதான். இவனைப் பெற்ற தகப்பனாராகிய பொன்னப்ப சாமியைத்தான் நம் போன்ற தமிழ்ப் புலவர்கள் வாயார வாழ்த்திப் புகழவேண்டும்!" தாம் பூஜையறையில் கண்ட படங்களோடு வேடிக்கையாக வேங்கட சாமியை ஒப்பிட்டுப் பார்த்த புலவரின் மேற்கண்ட சிந்தனைச் சிப்பியில் ஒரு தனிப் பாடல் முத்து விளைந்து ஒளி வீசிடலாயிற்று.*

"மூங்கிலிலே ஒளிந்திருந்தான் முக்கண் சாமி
முதியகடற் போய்ப்படுத்தான் முகுந்த சாமி
தாங்கமலப் பொகுட்டுறைத்தான் தலைநாற் சாமி
தடைவரையில் உழன்று நின்றான் தகப்பன் சாமி

வாங்கியுண்ண வழிகாத்தான் வயிற்றுச் சாமி
வாணருக்கு இங்கு தவுவாரார் மற்றோர் சாமி
ஓங்கியசீர் மயிலையிற்பொன்னப்ப சாமி
உதவிய வேங்கடசாமி யுசித வேளே!"

**முக்கண்சாமி = சிவபெருமான், முகுந்தசாமி = திருமால், கமலப்பொகுட்டு = தாமரை மலரின் நடு, தலைநாற்சாமி = பிரமன், தடவரை = பெரியமலை, தகப்பன் சாமி = முருகன், வயிற்றுச்சாமி = பிள்ளையார், வாணருக்கு = தமிழ் கற்றவர்களுக்கு.**

*சந்தர்ப்ப சாமர்த்தியமும் சிந்தனையும் ஒரு சேர விளைந்த இப்பாடல்தான் அந்த அழகிய கவிதை முத்து.*

## 32. பட்டால்தான் தெரியும்

*திருமணமான புதிதில் உடனடியாக மனைவியைக் கூட்டிக்கொண்டு போய்க் குடித்தனம் வைத்துக்கொள்ள முடியாத தொலை தூரத்து ஊருக்கு வேலை மாறுதல் கிடைத்து விடுகிறது சில இளைஞர்களுக்கு. வேறு வழியில்லாமல் கலியாண மாகியும் பிரம்மச்சாரி என்ற நிலையில் தனிக்கட்டையாகப் பல நூறு மைல்களைக் கடந்துபோய் வாய்க்கு விளங்காத சாப்பாட்டோடு ஏங்கி ஏங்கி வாழ வேண்டியிருக்கிறது அவர்களுக்கு. உத்தியோக யுகமாகிய இந்த நூற்றாண்டில் வடக்கே வெகு தூரத்திலுள்ள நகரங்களில் உத்தியோகம் பார்க்கும் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு இந்த அனுபவம் ஏற்படுவது இயற்கை. ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து குடியிருக்க வீடு கிடைக்கிறவரை தங்கள் மனைவிக்கு அவர்கள் எழுதும் கடிதங்களே அவர்களுடைய மனவேதனைக்குச் சான்று பகரும். வாழ்வதிலும் பணம் சேர்க்கும் இலட்சியத்திலும் வேகம் அதிகரித்துள்ள இந்த நூற்றாண்டுக்கு இது இயல்பாகவும் தவிர்க்க முடியாததாகவும் இருக்கலாம்.*

ஆனால் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வாழ்க்கை அமைப்பில் உறவிலும் பந்தங்களின் பிணைப்புக்களிலும் நெருக்கம் அதிகம். ஓர் ஊர், ஒரு மொழி, ஒரு நோக்கம் என்று வாழ்க்கைக்கு மீற முடியாத எல்லைகள் இருந்தன அப்போது. ஒரு மனிதனின் வாழ்க்கை அவன் வாழ்கின்ற இடத்தில் 'பதிவது' என்ற அர்த்தத்தில்தான் ஊர்களுக்குப் 'பதி' என்று தமிழில் பெயர் வைத்திருந்தார்கள். இப்போதுள்ள நிலையிலோ எந்த ஊரிலும் எதிலும் பதியாமல் ஓடுகிற இயல்பு உத்தியோக வாழ்க்கைக்கு வந்துவிட்டது. கணவன் மனைவியைப் பிரிந்து தொடர்ந்தாற் போல் சில ஆண்டுகள் வெளியே இருக்கிற நிலை இப்போது இயற்கை. ஒரு நூற்றாண்டுக்கு முந்தியோ அப்படி இருப்பது குற்றம். அப்படிப் பிரிந்து வாழும் வாழ்வைக் குடும்ப வாழ்வு என்று ஒப்புவதில்லை. மக்களின் ஒழுக்கமே பதிந்து வாழ்வதைப் பொறுத்தது. ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்த புலவர் ஒருவர் மனைவியைப் பிரிந்து வெளியூரில் இருந்தபோது அவருக்கு ஏற்பட்ட உணர்வைப் பற்றி இங்கே ஒரு சம்பவத்தைக் காணலாம். இல்வாழ்க்கையின் அடிப்படை நோக்கம் நூறு ஆண்டுகளுக்குள் தமிழ் நாட்டில் எப்படி மாறி எளிதாகியிருக்கிறதென்பதை இந்தச் சம்பவம் விளக்கிவிடும்.

## புதிய போராட்டம்

சுந்தரக் கவிராயர் என்று ஒரு புலவர் இருந்தார். நல்ல அழகர் அவர். அப்போது அவருக்குச் சரியான வாலிபப் பருவம். மெல்ல கண்திறந்து முல்லைச் சிரிப்பினொடு மெல்லியலார் பார்த்து மகிழும் வயது. அந்த வயதில் வறுமை இருப்பது மனிதனுக்கு ஒரு சாபக்கேடு. ஏழைமை, இளமையின் உற்சாகத்தையும் மகிழ்ச்சித் துள்ளலையும் மறக்கச் செய்து விடும். வறுமையோடு வறுமையாகப் பெற்றோர்கள் அவருக்கு ஓர் அழகான பெண்ணாகப் பார்த்துத் திருமணமும் செய்து வைத்து விட்டார்கள். வயிற்றோடு போராடிக் கொண்டிருந்தவனை மன்மதனோடும் போராட விட்டு விட்டார்கள்.

ஒரு வயிற்றுக்கே போராடிக் கொண்டிருந்த கவிராயர் இன்னொரு வயிற்றையும் காப்பாற்ற வேண்டியநிலை ஏற்பட்டு விட்டது. அழகிய இளம் மனைவியின் சிரிப்பையும், கண் பார்வையையும் பார்க்கும்போது தாம் சுந்தர்வ வாழ்க்கை வாழ்வதாக எண்ணி அவருக்கு ஒரு பிரமை உண்டாகும். வயிற்றின் பசியும், வீட்டின் ஏழைமையும் நினைவுக்கு வரும்போது கொடுமையான நரகத்தில் விழுந்து விட்டது போலிருக்கும். ஏழைக் கைகளோடும் அழகான மனைவியோடும் எத்தனை நாட்கள் பட்டினிக் குடும்பம் நடத்த முடியும்? தமக்குத் தெரிந்த கவிபாடும் கலையை வைத்துக் கொண்டு யாராவது சில செல்வர்களைச் சந்தித்துப் பொருளுதவி பெறலாமென்று அவருக்குத் தோன்றியது.

தையூரிலிருந்த முத்து முதலியார் என்ற செல்வரும் நெடுங்கலி நகர்க் கந்தசாமி முதலியார் என்ற செல்வரும் சுந்தரக் கவிராயருக்கு ஏற்கெனவே அறிமுகமானவர்கள். திருமணமான புதிதில் இளம் மனைவியைப் பிரிந்து பொருள் தேடப் புறப்பட்டார் அவர். எத்தனையோ இன்பக் கனவுகளைக் கண்டு கொண்டிருக்கும் இளம் மனைவியைப் பிரிந்து செல்வது அவர் உள்ளத்தை வேதனைப்படுத்தியது. மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு புறப்பட்டார் அவர். அந்த முயற்சியில் சில மாதங்கள் கழிந்தன. போனவுடன் வாரிக்கொண்டு வருவதற்குப் பொருள் எங்கும் குவிந்து கிடக்கவில்லையே! வேண்டியவர்களைச் சந்தித்து அவர்கள் மனம் கோணாமல் சில நாட்கள் உடனிருந்து உற்சாகமான வேளைகளைத் தெரிந்துகொண்டு கவிதை பாடிப் பொருளுதவி கேட்க வேண்டும். ஒவ்வொரு கணமும் ஊரில் தனியாக இருக்கும் மனைவி என்னென்ன எண்ணி வேதனைப்படுகிறாளோ என்று நினைத்து வருந்திக்கொண்டே கழித்தார் அவர். அவருடைய கண்களுக்கு முன்னால் கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து வாழும் செல்வக் குடும்பத்துத் தம்பதிகள் பலர் தென்பட்டனர்.

## பிரிவு வேதனை

*ஒரு நாள் இரவு வாடைக் காற்றில் தரையில் விரிக்க விரிப்பின்றி மேலாடையை விரித்து முழங்கையை மடித்துத் தலையணைபோல் வைத்துப் படுத்திருந்தார் கவிராயர். அது வெளியூர். படுத்திருந்த இடம் சத்திரத்துத் திண்ணை. வயிறோ பட்டினி. வயிற்றைவிட அதிகமான பசி மனத்தில் உண்டாகியது. அனாதைபோல் அப்படி வாடைக் காற்றில் பசியோடு படுத்திருப்பது அவருக்கு என்ன வேதனையைக் கொடுத்ததோ! நினைவுகள் சூடேறிக்கொதித்தன. 'அவள் அங்கே! நான் இங்கே! இப்படி வாழ்வதற்கு நான் என்ன பாவம் செய்தேன்? வாழ்வைப் படைத்த விதியும், விதியைப் படைத்த இறைவனும் என்னை மட்டும் ஏன் சோதிக்க வேண்டும்? முட்டாள்களுக்குப் பிச்சை கொடுக்கிற தகுதியையும், அறிவாளிகளுக்குப் பிச்சை எடுக்கிற நிலையையும் படைத்த படைப்புக் கடவுளை என்ன செய்தால்தான் என்ன? சில பேருக்கு அறிவைக் கொடுத்து வயிற்றைக் காயவிடுவது! பல பேருக்குப் பணத்தைக் கொடுத்து மனத்தைக் கொடுக்க மறந்துவிடுவது! இதுதான் படைப்பின் நியதியா? அந்தப் படைப்புக் கடவுளுக்கு நான் சாபம் கொடுக்கிறேன். நான் பட்ட இதே பிரிவு வேதனையை அவனும் பட்டால்தான் எனது துன்பம் அவனுக்குத் தெரியும். நான் என் இளம் மனைவியைப் பிரிந்து ஊரூராகச் சுற்றிக்கொண்டு பட்டினி கிடப்பதுபோல் படைப்புக் கடவுளும் தன் மனைவியாகிய கலைமகளைப் பிரிந்து ஊரூராகத் திரிய வேண்டும். வாடைக் காற்றில் மெலிய வேண்டும். விரிப்பின்றி வெறுந்தரையில் படுக்க வேண்டும். அப்படியெல்லாம் துன்பப்பட்டால்தான் என்னைப் படைத்தவனுக்கு என் துன்பம் தெரியும்!' என்று அந்த வேதனையை ஒரு பாட்டாக எழுதிவைத்தார் கவிராயர்.*

"நறையொழுகுங் குழலாளை அமுதொழுகு
　　மொழியாளை நயனவேலிற்
பிறையொழுகும் நுதலாளைப் பிரிந்திருக்க
　　இப்பிறப்பிற் பெரிதும் யான்செய்

குறையெதுவோ மதன்கணைக்கு மிகவருந்த
எனைவிதித்த கொடியோனான
மறையவனும் கலைமகளைப் பிரிந்திருந்தால்
தெரியுமந்த வருத்தந்தானே"

'என் துன்பத்தை உணர்வதற்காக என்னைப் படைத்தவனும் அதே துன்பத்தை அடைய வேண்டும்' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொல்லுகிற தெம்பு கவியுள்ளம் படைத்தவனுக்குத் தான் இருக்க முடியும்.

பணம் சம்பாதிப்பதற்காக இளம் மனைவியை ஊரில் விட்டு விட்டு இந்தக் காலத்திலும் எத்தனையோ தமிழ் இளைஞர்கள் தொலைவிலுள்ள நகரங்களுக்குப் போகிறார்களே அவர்களில் எவராவது ஒருவராயினும் மேற்கண்ட சுந்தரக் கவிராயர் பாடியது போல் ஒரு பாட்டுப் பாட முடியுமா? முடியாது! இயந்திர யுகத்தில் மோட்டார்ச் சக்கரங்கள் உருளுகிறமாதிரி உணர்ச்சிகளை வெறும் இயக்கமாக்கிக்கொண்டு விட்டோம். அவைகளில் துடிப்பு இல்லை. ஆகவே, கவிதையும் இல்லை. கவியும் இல்லை. கற்பனையும் இல்லை.

## 33. சொல் சுட்டது

கையிலும் காலிலுமாக மெய்யிலே சுட்ட தீப்புண்கள் விரைவில் ஆறிவிடும். அழியும் இயல்பினதாகிய உடலோடு தொடர்புடைய எல்லாப் புண்களுமே ஆறிப்போகின்றவைதாம். உடலுக்கு ஏற்படும் துன்பங்கள் மனத்தை வருத்துவதுபோலத் தோன்றினும், அந்தத் துன்பங்கள் மறைகின்ற கால எல்லையோடு அவற்றால் விளைந்த வருத்தமும் மறைந்துபோகும். உடலோடு உள்ளம் கொண்டிருக்கும் தொடர்பு பெரிது. இதனால்தான் மனத்தோடு தாக்குதல் நடத்தும், 'சொற்களால் புண்படுத்தும் நிலைகள்' என்றுமே யாருக்கும் ஆறுவதில்லை.

'ஒரு சொல் வெல்லும், ஒரு சொல் கொல்லும்' என்று பழமொழி வழியாகச் சொல்லின் சாதாரணத்திற்கு அப்பாற்பட்ட சக்தி பேசப்படுகிறது. அதுவும் படித்தவர்களிடம் சொல்லின் பயனை நுகரும்போதும் சரி, கொடுக்கும் போதும் சரி, அதற்குரிய சக்தியின் மாற்றுக் குறையாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தங்கத்தின் மாற்றுநிலைகளைப் பொற்பரிசோதகர்கள் கண்டறிவது போலவே சொல்லின் நன்மை தீமைகளைக் கண்டறிந்து சொல்ல வேண்டும்.

மதுரகவிராயர் ஆனந்தரங்கப் பிள்ளையிடம் ஏற்கெனவே நல்ல பழக்கம் உடையவர்தாம். அடிக்கடி ரங்கப் பிள்ளையிடம் உதவி பெற்றவருங்கூட அப்படியிருந்துங்கூட அன்று என்னவோ வருத்தமுறும்படியான அந்தச் சம்பவம் நடந்து விட்டது. படித்தவராக, நான்கும் தெரிந்த அறிவுடன் விளங்கும் பழக்கமான புலவர் ஒருவரை நோக்கி அப்படி மரியாதை குறைவான வார்த்தைகளை அவருந்தான் சொல்லியிருக்கக் கூடாது. ஏதோ போதாத காலம், ஆத்திரத்தில் வாய்தவறி வார்த்தைகள் வந்துவிட்டன. 'விஷக்கடி வேளை' என்றுதான் சொல்ல வேண்டும்.

அரசாங்க விஷயமாய் அப்போது சில நாட்களாக ஏதோ ஒரு பெரிய சிக்கலில் மாட்டிக் கொண்டிருந்தார் ஆனந்தரங்கர். சென்னையைச் சேர்ந்த பிரம்பூர் அவருடைய பூர்வீகமாக இருந்தாலும், அவருடைய தகப்பனார் காலத்தில் இருந்தே புதுச்சேரியில்தான் வாசம். தகப்பனார் காலத்திற்குப் பின்பு தம் சொந்த முயற்சியால் படிப்படியாக முன்னேறி துவிபாஷி பதவியை அடைந்து அதைப் பொறுப்புடனே நிர்வகித்து வந்தார் அவர்.

அந்தப் பெரும் பதவியில் அமர்ந்து அவர் புதுவை அரசாங்கத்தின் முக்கிய உத்தியோகஸ்தராகப் பணியாற்றி வந்தபோதுதான் மதுரகவிராயர் அவரை அடிக்கடி சந்தித்துத் தமக்கு அவ்வப்போது தேவையான உதவிகளைப் பெற்றுச் செல்வார். அவ்வாறு அவர் சந்திக்கும் போதெல்லாம் நகை

முகத்தோடு அவரை வரவேற்று அன்புடன் வேண்டிய உதவியைச் செய்வதற்கு ஆனந்தரங்கம் தவறியதில்லை.

ஆனால் அந்த முறை புலவர் வந்திருந்தபோது மேலே கூறியவாறு அரசாங்க சம்பந்தமான சில சிக்கல்களில் அகப்பட்டுக்கொண்டு தவித்த நிலையிலிருந்தார் பிள்ளை. எனவே கவிராயர் வந்து இரண்டு மூன்று நாட்கள் ஆகியும் அவரைக் கவனிக்காமல் இருந்துவிட்டார். மதுரகவிராயர் அவசரமான உதவியை நாடி வந்திருந்தாலும் ரங்கப் பிள்ளையின் ‘இந்தத் துன்ப நிலையை’ உணர்ந்து பொறுத்துக் கொண்டார்.

நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என்று வரிசையாக எழு நாட்கள் கழிந்துவிட்டன. மதுரகவிராயர் மேலும் பொறுத்திருந்தார். புலவர் வந்த இரண்டொரு நாட்களிலேயே அவர் வந்திருப்பதைக் கவனித்துக் கொண்டாலும் ஆனந்தரங்கர் தம் போக்கிலேயே இருந்துவிட்டார். அவருடைய அப்போதைய மனநிலை எதிலும் பற்றாத வெறுப்பு எண்ணங்களில் சிக்கிக் கிடந்ததனால் புலவரைக் கண்டபின்புங்கூட ‘இவர் வந்து காத்துக்கிடக்கிறாரே! என்னவென்று விசாரித்து அனுப்புவோம்’ என்ற நினைவே அவருக்கு எழவில்லை. எதைக் கண்டாலும் எரிந்து விழுதல், எதிலும் பற்றில்லாத சினவுணர்ச்சி, இப்படி இருந்த அவருடைய அப்போதைய மனோபாவத்திற்குக் காரணம் அந்தப் பழைய அரசாங்கத்தைப் பற்றிய சிக்கல்களே. அதைத் தீர்க்கும் முயற்சியில் பூரணமாக ஈடுபட்டிருந்தும் விரைவிலே வெற்றிபெற முடியாமல் இருந்ததனால்தான் அவர் இத்தகைய உள்ளப் பான்மையை அடைந்திருந்தார்.

இன்னும் ஒரு மாதம் அப்படிப் பொறுத்திருக்க வேண்டும் என்றாலும், மதுரகவிராயரால் பொறுக்க முடியும். ஆனால் அதற்கு முன்பெல்லாம் நகைமுகத்தோடு வரவேற்றுப் போற்றியவர் அப்போது ‘வா’ என்றுகூடச் சொல்லவில்லை. இந்த ஏழு நாட்களிலும் தாமாக அவர் கவனத்தில் தென்படும் சந்தர்ப்பங்களை மிகுதியாக ஏற்படுத்திக் கொண்டும், அவர் கவனித்திருந்தாலும் கவனியாததுபோல நடந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் சேர்ந்துதான் மதுரகவிராயரை அங்கே இனியும் தங்கலாமா வேண்டாமா என்று எண்ணும்படி செய்தன. இறுதியில் அவர் ஒரு முடிவிற்கு வந்தார். 'மறுநாள் காலை எப்படியும் வள்ளலை நேருக்கு நேர் சந்தித்துத் தாம் வந்த காரியத்தைக்கூறி உதவி கேட்பது. அவர் கொடுத்தால் பெற்றுக் கொள்வது, இல்லையென்றால் ஊர் திரும்பிவிடுவது' என்பதே அவர் முடிவு. மறுநாளோடு அவர் வந்து எட்டு நாட்கள் ஆகிவிடுவதனால் அதை நினைத்து, 'இனியும் தங்குவதில் பயனில்லை' என்ற கடைசித் தீர்மானத்துடனேயே அவர் இந்த முடிவிற்கு வந்திருந்தார்.

மறுநாள் பொழுது விடிந்தது. ஆனந்தரங்கப் பிள்ளை காலைக் கடன்களை எல்லாம் முடித்துக்கொண்டு சாவகாசமாக அமர்ந்து கொண்டிருந்தபோது மதுரகவிராயர் அவர் முன் தோன்றினார்.

"வந்து...நான் ஒரு அவசரக் காரியமாக உங்களிடம் உதவிபெற்றுப் போக வந்தேன். வந்து ஏழு எட்டு நாட்கள் ஆகிவிட்டன. இப்போது இங்கே சந்தர்ப்பம் சரியாக இல்லை என்று தெரிகிறது...நான் விடைபெற்றுக் கொள்கிறேன்..."

புலவர் நிறுத்தி நிறுத்தி வார்த்தைகளைத் தயக்கத்தோடு வெளியிட்டார். வள்ளல் தலை நிமிர்ந்து சினத்துடனே அவரைப் பார்த்தார். கண்களிலும் முகத்திலும் சினச்சாயை தென்பட்டது.

"ஏன் ஐயா பறந்து தொலைக்கிறீர்?" ஆத்திரத்தில் ஆனந்தரங்கர் இப்படிக் கூறிவிட்டார். ஆனால் அந்தச் சொற்கள் புலவர் செவியில் சொற்களாக விழவில்லை. நெருப்புக் கங்குகளாக விழுந்து உள்ளத்தைச் சுட்டன. சொல்லின் அந்தச் சூடு பொறுக்காமல் அவரது தளிர் உள்ளம் கருகியது. வள்ளலுக்கு அதை உணர்த்த விரும்பினார் கவி. சொல்லின் சூடு தெளிவாகத் தெரியும்படி அவரது குறையைத் தம் பாட்டால் சுட்டிக் காட்டினார் கவிராயர். அந்தப் பாட்டு ரங்கப் பிள்ளையை நாணச் செய்துவிட்டது.

"கொக்குப் பறக்கும் புறா பறக்கும்
குருவி பறக்கும் குயில் பறக்கும்
நக்குப் பொறுக்கிகளும் பறப்பர்
நான் ஏன் பறப்பேன் நராதிபனே
திக்கு விஜயம் செலுத்தி உயர்செங்
கோல் நடத்தும் அரங்காநின்
பக்கம் இருக்க ஒருநாளும் பற
வேன் பறவேன் பறவேனே!"

இடி முழக்கம் போன்ற குரலில் இந்தப் பாடலின் முதல் இரண்டு அடிகளைப் பாடிவிட்டுச் சிறிதுநேரம் நிறுத்திப் பின் இரண்டு அடிகளைச் சுபாவமான குரலில் பாடினார். சோற்றுக்கு வழியின்றி அலைபவர்களை 'நக்குப் பொறுக்கிகள்' என்று கூறி இகழ்வது நாட்டு வழக்கிலுள்ள மொழி. அதை இரண்டாம் அடியின் முதலில் எதுகையாக வைத்து 'நக்குப் பொறுக்கிகளும் பறப்பர்' என்று வல்லின ஓசையை அழுத்திப் பாடும்போது வள்ளல் கூறிய சொற்களால் புலவர் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கவேண்டும் என்று தெரிகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக இறுதியில் 'நின் பக்கம் இருக்க ஒருநாளும் பறவேன்' என்று கூறி வள்ளலைத் தழுவிக் கொண்டதைக் கேட்ட பின்பும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு பரிசிலளித்து அனுப்பாமல் வேறு என்ன செய்வார் பிள்ளை?

## 34. முதலும் முடிவும்

சோழ வேந்தனது அவைக்களம், சோழன் கம்பீரமாக அரியணையில் அமர்ந்திருந்தான். அவன் அருகில் வலது பக்கம் சோழ ரர்ஜ்யத்தின் ஆஸ்தான கவிஞர் ஒட்டக் கூத்தர் சிங்க ஏறுபோலச் செம்மாந்து வீற்றிருந்தார். இடது பக்கம் சற்றுத் தாழ்வான ஓர் அசனத்தில், முதல் நாள் பாண்டிய நாட்டிலிருந்து அரசனின் தூதுவராக வந்திருந்த புகழேந்திப் புலவர் உட்கார்ந்திருந்தார்.

கூத்தர் நெஞ்சு குரோதத்தால் கொதித்தது. புகழேந்தியோ எந்த விதமான எண்ணமுமின்றி நிஷ்களங்கமான நெஞ்சத்துடன் சோழன் அவையில் அமர்ந்து கொண்டிருந்தார். அவராக ஏதாவது பேச்சைத் தொடங்கி வாளைக் கொடுப்பார். அப்போது சரியானபடி அவைக்கு நடுவிலே வைத்து அவமானப்படுத்தி விடலாம் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒட்டக்கூத்தருக்கு எதிரியின் மௌனம் ஏமாற்றத்தைக் கொடுத்தது. சோழனுடைய அவைக்குப் புலவர் என்ற பெயரில் யார் வந்தாலும் சரி, அவர்களை ஒருவர் விடாமல் மட்டந்தட்டித் தலைகுனியச் செய்து அனுப்பும் பணியை வழக்கமாகக் கொண்டிருந்தார் அவர். சாதாரணப் புலவர்களையே அந்தக் கதிக்கு ஆளாக்கி அனுப்பும் அவர் பாண்டிய நாட்டு அவைப் புலவராகப் பாண்டியனிடமிருந்து வந்திருக்கும் தம்மை யொத்தவர் போல விளங்கும் புகழேந்தியை எப்படிச் சும்மா விட்டுவிட முடியும்? ஆகவேதான் அவர் மனம் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துத் துறுதுறுப்புடனே துடித்துக் கொண்டிருந்தது.

அன்றைய அவையில் வழக்கமாக நிகழவேண்டிய அம்சங்கள் யாவும் நிகழ்ந்து முடிந்தபின் சோழ அரசனே பேச்சுக்கு நடுவே தற்செயலாகக் கவிதைகளின் இயல்பைப்பற்றிப் பேச்சை ஆரம்பித்தான். சோழன் கவிதைகளைப் பற்றிப் பேசும் அந்தச் சந்தர்ப்பத்தையே புகழேந்தியை மடக்குவதற்கு ஏற்றதாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார் கூத்தர். "அரசே, இதோ அமர்ந்திருக்கின்றாரே, பாண்டிய நாட்டுப் புலவர் புகழேந்தியார்! அவரோடு நான் ஒரு சிறு போட்டி நடத்துவதற்கு இந்த அவையில் இடமளிக்க வேண்டும். இதில் தவறாக நினைப்பதற்கு எதுவும் இல்லை. வெறும் விளையாட்டாக இந்த அவையும் தாங்களும் கண்டு இரசிக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். விஷயம் வேறு ஒன்றுமில்லை, நான் ஒரு வெண்பாவின் முதல் இரண்டு அடிகளைப் பாடுவேன். புகழேந்தியார் அதன் பின்னிரண்டு அடிகளைப் பொருத்தமாகப் பாடி முடித்து விட்டால் போதும். இவ்வளவுதான்." இவ்வாறு கூறிக் கூத்தர் விண்ணப்பித்துக் கொண்டபோது சோழவேந்தன் அதை மறுக்கவில்லை.

*"அதற்கு என்ன? அப்படியே செய்துவிட்டால் போயிற்று" என்று கூறிவிட்டுக் கூத்தரையும் புகழேந்தியையும் அவன் பார்த்தான். கூத்தரைப் பற்றி நன்கு கேள்விப்பட்டு அறிந்து கொண்டிருந்த புகழேந்தி அவர் தம்மை வீணாக வம்புக்கு இழுக்கிறார் என்று எண்ணிக் கொண்டார். பின்னிரண்டு அடிகளைப் பாடிப் பொருத்தமாகப் பாடலை முடித்துக் காட்ட வேண்டுமே என்பதற்காகவோ, கூத்தரின் வேறு நிபந்தனை களுக்காகவோ அவர் சிறிதும் அஞ்சவில்லை. ஆனால் தேவையில்லாத நேரத்தில் அநாவசியமாக, இந்தப் போட்டியைத் தன் சொந்தப் பொறாமையைத் தீர்த்துக் கொள்வதற்காக இந்த மனிதர் ஏற்படுத்திச் சொற் போருக்குக் கூப்பிடுகின்றாரே என்றுதான் வருந்தினார்.*

*கூத்தர் கூறியபடியே செய்யவேண்டும் என்று சோழன் மிகவும் ஆவலோடு கேட்டுக் கொண்டபோது புகழேந்தியால் அதை மறுக்க முடியவில்லை. சூது வாது தெரியாத அரசன். கூத்தரின் அந்த விண்ணப்பம் விளையாட்டாக, பொழுது போகப் பாடுவதற்கே என அவர் கூறியபடியே இருக்கும் என்று நம்பினான். கூத்தனாரின் பொறாமை உள்ளம் அவனுக்குப் புலப்படவில்லை.*

*சோழன், 'பாட ஆரம்பிக்கலாமே!' என்னும் குறிப்புத் தோன்ற ஒட்டக்கூத்தரைப் பார்த்தான். கூத்தர் படுத்துக் கிடக்கும் மதயானை ஒன்று எழுந்திருப்பது போலத் தம் இருக்கையில் இருந்து எழுந்தார். தேவைக்கு அதிகமான கர்வமும் கம்பீரமும் அவரிடம் தோன்றின. அவ்வளவில் நிபந்தனைப்படி பாடலின் முதல் இரண்டு அடிகளைக் கூத்தர் பாடலானார். அவையில் பூரண அமைதி நிலவியது.*

"வென்றி வள்வன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக் கிடான்கவம் –"

**வென்றி = வெற்றி வளவன் = சோழன், விறல்வேந்தா = திறமைமிக்க அரசர், பிரான் = தலைவன்.**

*கூத்தர் பாடிவிட்டு நிறுத்தியதும் அந்த முதல் இரண்டு அடிகளின் பொருளை உணர்ந்துகொண்ட சோழனும் அவன் அவையினரும் அளவற்ற மகிழ்ச்சி கொண்டார்கள். புகழேந்தி யையும் அவருடைய பாண்டிய மன்னனையும் இழிவுபடுத்த முயல்வதுபோல அமைந்திருந்தது பாடலின் முதற் பகுதி. அது புகழேந்தியின் மனத்தைப் புண்படுத்தினாலும் தயக்கமில்லாமல் உடனே எழுந்தார் அவர். ஒட்டக்கூத்தரைவிட அதிகமான குறும்புச் சிரிப்பு ஒன்றை உதிர்த்துக் கொண்டே அவர் தொடர்ந்து பாடலானார். அவை மீண்டும் அமைதி அடைந்தது.*

"... ... ... ... ... ... துன்றும்
வெறியார் தொடை கமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கின் என்று."

**வெறிஆர்= வண்டுகள் மொய்க்கும், தொடை = மாலை மீனவர்கோன் பாண்டியன், புறங்கொடுப்பின் = சோழன் புறமுதுகு காட்டினால்.**

*என்று புகழேந்தி பாட்டை முடித்தார். சோழன் முகத்தில் ஈயாடவில்லை. ஒட்டக்கூத்தர் தலைகுனிந்தார். அவையில் கூத்தர் பாடி முடித்தவுடன் ஆரவாரம் செய்தவர்கள் இப்போது அடித்து வைத்த கற்சிலைகளைப்போல ஆடாமல் அசையாமல் உட்கார்ந் திருந்தனர். புகேழந்தி திரும்பவும் ஒருமுறை முதலையும் முடிவையும் சேர்த்து முழங்கினார்.*

"வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான்
என்றும் முதுகுக்கி டான்கவசம் – துன்றும்
வெறியார் தொடைகமழும் மீனவர்கோன் கைவேல்
எறியான் புறங்கொடுக்கின் என்று."

*முதல், முடிவை அவமானப்படுத்த முயன்றது. முடிவோ, முதலை ஆதாரமாக வைத்துக்கொண்டு முதலையே அவமானப் படுத்தி அகங்காரத்தை அழித்துவிட்டது. புற்றுக்குள்ளே மாணிக்கம் இருக்கும் என்று முதலில் எண்ணிக் கை நுழைத்தவன் முடிவில் உள்ளே இருக்கும் பாம்பினால் தீண்டப் பெற்றாற்*

போலாயிற்று பொறாமையே இயற்கையாகக் கொண்ட கூத்தர் நிலை. மட்டந் தட்டிப் புகழேந்தியை மடக்க முயன்றார் கூத்தர். புகழேந்தி மட்டந் தட்டிக் கூத்தரையே மடக்கிவிட்டார். பிறருக்குத் தீமை எண்ணுபவர்கள் அதைத்தாமே முடிவில் அனுபவிக்க வேண்டும் என்பதுதான் நியதியோ? என்னவோ?

## 35. புலவரின் புரட்சி

அன்று காளமேகம் திருமலைராயன் பட்டினத்திற்கு வருகின்ற நாள். அவரை உள்ளே விட்டால் தங்களுக்கு ஆபத்து என்று அவ்வூர்க் கவிஞர்கள் யாவரும் அதிமதுரக்கவிராயரின் தலைமையில் ஒன்று சேர்ந்து அவரைப் பயமுறுத்தி விரட்ட ஊர் எல்லையிலேயே கூடிவிட்டார்கள். 'கூட்டமாக வந்திருக்கும் தாங்கள் அத்தனை பேரும் திருமலைராயன் பட்டினத்துக் கவிஞர்கள் என்பதை அறிந்து கொண்டதுமே காளமேகம் அஞ்சிப்போவார்' என்று அவர்கள் மனக் கோட்டை கட்டினர். இந்தத் துணிச்சலில், காளமேகத்தைக் கண்டதும் தாவிப் பாய்ந்து அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

தம் சிந்தனையின் போக்கிலே ஆழ்ந்தவாறே சாலையில் வந்து கொண்டிருந்த காளமேகத்திற்கு ஒன்றுமே புரியவில்லை.

"நீங்கள் எல்லாம் யார்? எதற்காக வழியோடு போகிற என்னை இப்படி வளைத்துக் கொண்டு நிற்கிறீர்கள்? விஷயத்தைச் சொல்லுங்கள்!" கணீரென்று வெண்கலக் குரலில் இப்படிக் கேட்டார் காளமேகம்.

"நாங்களா? நாங்கள் எல்லாம் திருமலைராயன் பட்டினத்துக் கவிராயர்கள்." வளைத்துக் கொண்டிருந்தவர்கள் மறுமொழி கூறினார்.

காளமேகத்திற்கு அடக்க முடியாதபடி சிரிப்பு வந்துவிட்டது. வாய்விட்டு விஷமத்தனமாகச் சிரித்துக்

கொண்டே, "அடடா! நீங்கள் கவிராயர்களா? ('கவிஎன்ற சொல்லுக்குக் 'குரங்கு' என்றும் ஒரு பொருள் உண்டு) நான் வெறும் மனிதர்கள் என்று அல்லவா தவறாக எண்ணி விட்டேன்?" என்றார். மேலும், "நீங்கள் கவிராயர்கள் ஆனால் அதற்குரியபடி தோற்றம் இல்லையே?"

"வால்எங்கே? நீண்ட வயிறு எங்கே? முன்னிரண்டு
கால்எங்கே? உட்குழித்த கண்எங்கே? சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்காள்! நீவிர்
கவிராயர் என்றிருந்தக் கால்"

என்று பாடிப் பரிகசித்தார். சுற்றியிருந்த புலவர்கள் அத்தனை பேரும் முகத்தில் விளக்கெண்ணெய் வழிய நின்றார்கள். ஆனால், காளமேகம் அதோடு விட்டுவிடுபவராகத் தெரிய வில்லை. அவர்களை நோக்கியபடியே, "ஆமாம்! நீங்கள் கவிராயர்கள் என்று சொல்லிவிட்டீர்கள். 'நான் யார்?' என்று உங்களுக்குச் சொல்லவில்லையே! கேளுங்கள். நானும் ஒரு கவிஞன்தான். ஆனால் உங்களைப் போல அல்ல! எப்படிப் பட்ட கவிஞன் தெரியுமா? சொல்லுகிறேன், கேட்க வேண்டும்" என்று திரும்பவும் பாட ஆரம்பித்துவிட்டார்.

"இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம் பாட் டாகாதோ – சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனே ஆயின்
பெருங்காள மேகம் பிளாய்!"

காளமேகம் இப்படித் தற்புகழ்ச்சியாகக் கூறியபாடலைக் கேட்டதும் கூட்டத்தின் முன்னணியில் நின்ற அதிமதுரத்திற்கு அவமானமும் கோபமும் உண்டாகிவிட்டது. 'தங்கள் கூட்டத்தைக் கண்டே ஓடிப்போவான் என்று எண்ணியதற்கு மாறாகக் காளமேகம் துணிவாகத் தங்கள் முன் நின்று தங்களையே தாழ்த்திப் பேசுகிறானே?' என்று நினைந்து மனம் கொதித்தது அதிமதுரத்திற்கு.

"ஓய்! காளமேகம். நான் யார் தெரியுமா உமக்கு! நான்தான் 'அதிமதுரம்! எனக்கு இணையான புலவனே இந்தப் பக்கத்தில் கிடையாது! வீணாக யாரிடம் மோதிக் கொள்கின்றோம் என்று தெரியாமல் பின்பு திண்டாட வேண்டாம். எச்சரிக்கையாக நடந்து கொள்ளும்!"

அதிமதுரம் ஆத்திரம் பொங்கும் குரலில் இவ்வாறு கூறியதும் முன்னைக் காட்டிலும் உரத்த குரலில் கலகல வென்று சிரித்தார் காளமேகம்.

"ஓஹோ! நீர்தானா அந்த அதிமதுரம்? உம்மை தெரியாமல் இருக்குமா என்ன? நன்றாகத்தெரியுமே! எனக்கே தெரிய வில்லையானால் வேறு யாருக்குத்தான் உம்மைப்பற்றி தெரியப் போகிறது? உம்மைப்பற்றி நான் அறிந்ததைச் சொல்லுகிறேன், கேளும்:

அதிமதுரம் என்றே அகிலம் அறியத்
துதி மதுர மாயெடுத்துச் சொல்லும் – புதுமை என்
காட்டுச் சரக்குலகிற் காரமில் லாச்சரக்குக்
கூட்டுச் சரக்கெனவே கூறு."

**அதிமதுரம் = அரத்தை, வசம்பு இவைகளைப் போல ஒரு காட்டு மருந்துச்சரக்கிற்குப் பெயர்.**

காளமேகப் புலவர் அதிமதுரத்தைப் பற்றிய தம் பாடலைக் கூறி முடித்தார். அதிமதுரம் வெலவெலத்துப் போனார். மற்றவர்கள் நடுங்கி ஓடுவதற்குத் தயாராகிவிட்டனர். 'உண்மை யிலேயே இது பெரிய சண்டமாருதம்தான், இதனிடம் நம் முயற்சி பலிக்காது' என்று அப்போதுதான் திருமலைராயன் பட்டினத்துக் கவிராயர்களுக்குப் புரிந்தது.

காளமேகத்தைப் புரட்டு செய்து ஓட்டுவதற்கு வந்த அவர்கள் காளமேகத்தின் புரட்சியிலே சிக்கிக் கருத்தழிந்து தாங்களே திரும்பி ஓட வேண்டியதாயிற்று. அவர் பாடல்கள் அவர்களை அவ்வாறு அஞ்சி நெஞ்சு குலைந்து ஓடும்படியாகச் செய்துவிட்டன.

# 36. காஞ்சிபுரத்தில் காளமேகம்

**க**ண்ணும் செவியும் கால்களும் பெற்று கண்டும் கேட்டும் நடந்தும் வாழ்க்கையை அனுபவிக்கும்போது வசதிகளைப் பெற்றவர்கள் உலகெங்கும் இருந்தாலும் அவர்களில் சிலரினும் சிலருடைய அனுபவங்களே காவியமாகும் தகுதியினைப் பெறுகின்றன. பிரதிதினமும் பிரகிருதியின் சின்ன பின்னங்களில் மனித அனுபவத்திற்கும் சுவாதீனத்திற்கும் உட்பட்ட ஒவ்வோர் அணுவிலும் காவியத்தின் மூலப் பொருளாகிய இரஸக் கனிவு இருக்கத்தான் இருக்கின்றது. அதனை அனுபவித்து வெளியிடும் சக்திதான் காவியம். பல்லாயிரம் பாடல்களும் அது சொல்லும் பெரிய கதையும் சேர்ந்தே காவியம் என்று மட்டும் எண்ணுவது பொருந்தாது. காவியம் என்ற சொல் ‘கவியாற் செய்யப்படுவது’ என்னும் பொருளை உடையது. எனவே அனுபவங்களை நகைச்சுவை தோன்றும்படியாகச் சொல்லும் காளமேகத்தின் தனிப்பாடல்களிலிருந்து அனுபவங்களைத் தெய்வீக அழகு தோன்ற வெளியிடும் கம்பர் காவியம் வரை யாவும் காவியங்களே. வெளியிடுகின்ற அனுபவம் ‘தன்னைப் பொறுத்ததா? பிறரைப் பொறுத்ததா?’ என்ற ஆராய்ச்சி இங்கே அவசியமில்லாதது.

காளமேகத்தின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் ஒரு தனி நகைச்சுவைச் சித்திரம். உலகத்தை அவர் எந்தக் கோணத்தில் நின்று, எந்த மன நிலையோடு அனுபவித்திருக்கிறார் என்ற வினாவிற்கு அவருடைய பாடல்கள் விடை பகர்ந்துவிடும். அவருடைய பாடல்களிலிருந்து வேடிக்கையும் விநோதமும் பற்றில்லாத மன இயல்பும் சாதாரண உலகத்தை நகைத்து கிண்டிப் பார்க்கும் தன்மையையும் உடையவர் என்று நாம் அவரை அறிந்து கொள்ள முடிகின்றது. சுருங்கச் சொன்னால் அவர் காலத்துத் தமிழ் நாட்டிற்கு அவர் ஒரு பெர்னாட்ஷாவாக விளங்கி வந்திருக்கிறார். அவர் பாடல்களில் சொந்த அனுபவங்களை அவரே வெளியிடும் நிலையை ஊன்றி ஆராய்ந்தால் இந்த உண்மை புலப்படும். தமிழில் தனிப்பட்ட நகைச்சுவைப் பாடல்கள் என்று பிரித்தெடுத்தால் காளமேகத்தின்

பாடல்களே பெரியஅளவிற் கிடைக்கும். 'விட்டேற்றியாக மனம் போன போக்கில் சுற்றித் திரிந்தபோது பாடிய வெறும் பாடல்கள்தாமே?' என்று காளமேகத்தின் கவிதைகளை வெறுப்பவர், அவரையும் அவருடைய பாடல்களையும் சரியாக உணரத் தெரியாதவர்கள் என்றே சொல்லவேண்டும். காஞ்சிபுரம் சென்றிருந்தபோது காஞ்சி ஸ்ரீ வரதராஜப் பெருமாளின் கருட வாகனத்தைத் தரிசித்துக் காளமேகம் பாடிய நகைச்சுவைப் பாடல் ஒன்றுண்டு. கவிச் சுவையும் உயர்தர நகைச்சுவையும் பொருந்திய அந்தப் பாடலைப் படித்தால் அவரை 'விட்டேற்றி' என்று சொல்லுபவர்கள் தங்கள் அபிப்பிராயம் தவறு என்று உணர முடியும். முடிந்தால் அது இந்தப் பாட்டின் வெற்றிதான்.

காளமேகம் வந்திருந்த அன்றைக்கு காஞ்சிபுரத்தில் வரதராஜப் பெருமாளுக்குக் கருட வாகனத் திருநாள். ஜகஜ் ஜோதியாகப் பிரகாசிக்கும் தங்கக் கருட வாகனத்தில் பெருமாள் எழுந்தருளும்போது தற்செயலாகக் காளமேகத்திற்கும் அந்த தரிசனம் கிடைத்தது. பெருமாளைத் தரிசித்த காளமேகம் தரிசனப் பலனாகவோ என்னவோ தரிசனத்தோடு கூடிய கற்பனை ஒன்றையும் பெற்றார். ஆயிரக்கணக்கில் கூடியிருந்த அத்தனை மக்களும் அந்தத் தரிசன அனுபவத்தைப் பெற்றவர்கள்தாம். ஆனாலும் காளமேகம் ஒருவருக்கு மட்டும்தானே பெருமாளைப் பழிப்பதுபோலப் புகழும் அந்தப் பாடலைப் பாடுதற்குரிய கற்பனை ஏற்பட்டது? 'கோவிலுக்குள்ளே இருந்த பெருமாள், கோவிலுக்குள்ளேயே சும்மா இருந்திருந்தால் இந்த வம்பெல்லாம் வந்திருக்காது. வெளியில் வரப்போக, 'பருந்து' தூக்கிக்கொண்டு போய் விட்டதே! ஐயையோ! வேண்டும் இந்தப் பெருமாளுக்கு நன்றாக! இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும். இவர் ஏன் இருந்த இடத்தில் இருக்காமல் வெளியே வந்தார்?' இப்படி ஒரு குழந்தை வேடிக்கையாக நினைப்பதுபோல நினைத்தார் காளமேகம். நினைவை ஒரு வெண்பாவாகப் பாடினார். பாடல் வெளிப்படையாக இகழ்ச்சியோடு பாடிய வெறும் நகைச்சுவைப் பாடலாகத் தோன்றினாலும், புகழ்ச்சியும் ஒரு குழந்தை விளையாட்டாக எண்ணிப் பார்ப்பது போன்ற இயல்பும் அதில் நுணுக்கமாக அமைக்கப்பட்டுள்ளன.

"பெருமாளும் நல்ல பெருமாள் அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள் – பெருமாள்
இருந்திடத்திற் சும்மா இராமை யினால் ஐயோ!
பருந்தெடுத்துப் போகின்றதேப் பார்!"

பெருமாள் = வரதராஜர், இருந்திடம் = இருக்குமிடம் ஆகிய கோவில், பருந்து = கருடன்.

இதே மாதிரி எத்தனையோ சிறு அனுபவங்கள் காளமேகத்தின் வாழ்க்கையில் நிறைந்துள்ளன. அவைகள் ஒவ்வொன்றும் ஒரு சிறு அனுபவக் காவியம் என்ற முறையில் அவற்றை இரசிக்க முற்பட்டுவிட்டால் தவறாக எண்ணத் தோன்றாது. அந்த அளவு இரசிக்கும் இரசனையே நமக்குப் போதுமானது.

## 37. குடத்திலே கங்கை!

**பி**றரை வலியச் சொற்போருக்கு இழுத்து வாதமிட வேண்டும் என்ற ஆசை காளமேகத்திற்குக் கிடையாது. ஆனால் பிறராகத் தம்மை அவ்வாறு 'வம்புக்கு இழுக்கும் போது' மண்ணாந்தை மாதிரிச் சும்மா இருந்து விடுவதும் அவருக்குப் பிடிக்காது. மற்றவர்கள் திறமையைப் பரிசோதிக்கவேண்டும் என்ற ஆர்வமோ, அவர்கள் படிப்பின் ஏற்றத்தாழ்வை ஆராய்ந்தறிய வேண்டும் என்று துடிதுடிக்கும் புலமைக் காய்ச்சலோ அவருக்கு இருந்ததில்லை. ஆயினும் பொறாமையும் எதிரியைப் படிக்காதவன் என்று பலரறிய மட்டந்தட்டிக் காட்ட வேண்டுமென்ற அசூயையும் கொண்ட வேறு சில புலவர்கள் அவரையே அப்படிப் பரிசோதிக்க வந்தபோது அவர் விட்டுக் கொடுத்து ஒதுங்கி விடுவதும் இல்லை.

இந்த விஷயத்தில் அவரிடம் சிக்கிக் கொண்ட மற்றவர்கள் நிலை, நேர் எதிரே இருக்கும் கற் சுவரை நோக்கிப் பந்தை எறிபவன், எறிந்த வேகத்தில் அதே பந்து மீண்டும் வந்து

தன்னையே அடிக்கக் கண்டு வருந்தும் நிலையை ஒத்திருந்தது. அறியாமல் கொள்ளாமல், 'அவரை ஒன்றுந் தெரியாதவர் என்று நிரூபித்துவிட வேண்டும்' என நினைத்து அவரிடம் வாயைக் கொடுத்தவர்கள் 'இவரிடம் வந்து மாட்டிக் கொண்டோமே' என்று எண்ணும்படியாகச் செய்துவிடுவார். வேடிக்கைக்கு வேடிக்கை பேசும் அவர் வாய், வினைக்கு வினை பேசும்!

'தம்மைப் பற்றி மற்ற புலவர்கள் என்ன எண்ணிக் கொள்கிறார்களோ?' என்ற கவலையை அவர் கொள்ளுவது இல்லை. இருந்தாலும் கொல்லர் தெருவில் ஊசி விற்பதைப் போலத் தம்மிடமே வாதுக்கு வருபவர்கள்மேல் அவருக்கு அசாத்தியமான சீற்றம் வந்துவிடும். தம்மை 'வெள்ளைக் கவி' என்று பலவீனப்படுத்தி நிரூபணம் செய்ய வரும் பொறாமைக் காரர்களுக்கே அந்தப் பட்டத்தைக் கட்டிப் பலவீனத்தோடு அவர்கள் தலைகுனிந்து போகச் செய்வதற்கு அவர் ஒருபோதும் தயங்கினதே இல்லை. அத்தகைய சந்தர்ப்பங்கள் அவருடைய கவிதை வாழ்க்கையில் எத்தனையோ முறைகள் வாய்த்திருக் கின்றன. அவற்றில் வியப்புக்குரிய ஒன்று என்னவென்றால் ஒரு முறையாவது தோல்வியின் அறிகுறி கூடக் காளமேகத்தின் பக்கம் வாய்த்ததில்லை.

அவற்றுள் சான்றாக ஒரு நிகழ்ச்சியை இங்கே காண்போம். காளமேகத்தின் திறமையிலும் புகழிலும் பெருமையிலும் பொறாமை கொண்ட சிலர் அவரை எப்படியாவது 'மட்டந் தட்டிக்' காட்டிவிட வேண்டுமென்று கூடிச் சிந்தித்தனர். கடைசியில் ஒரு தீர்மானத்திற்கும் வந்தனர். "காளமேகத்தினிடம், வெண்பாவிற்குரிய - பூரணப்பொருள் சாராத - முறிப்படியாகிய இறுதி அடி ஒன்றைக் கொடுத்து அதை வைத்துக்கொண்டு பாட்டைப் பூர்த்தி செய்யுமாறு சொல்லவேண்டும். நாம் கொடுக்கின்ற இறுதி அடி விபரீதமாக அரைகுறை நிலையில் இருக்கும். ஆகையால் அவர் அதைப் பூர்த்திசெய்ய இயலாமல் தோற்றுப் போவார்" என்பதே அவர்கள் தீர்மானம். இப்படித் தீர்மானித்தபின் அவர்களே மீண்டும் கூடி 'குடத்திலே கங்கையடங்கும்' என்ற இறுதியடியைக் காளமேகத்தினிடம்

கூறிப் பொருள் சரியாக அமையுமாறு அதை வெண்பாவாகப் பாடச் சொல்ல வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டார்கள். 'குடத்திலாவது, கங்கையாவது, அடங்கு கிறதாவது?' என்றெண்ணிக் காளமேகம் மருண்டு திகைத்துத் தோற்றுப் போவார். எப்படியாவது வாய்க்கு வந்தபடி பாடிப் பூர்த்தி செய்தாலோ பொருள் கெட்டுப்போகும். பொருளும் விபரீதமாக இருக்கக் கூடாது! இறுதியடியும் 'குடத்திலே கங்கை யடங்கும்' என்றிருக்கவேண்டும் என்ற நினைவுகளுடன் அவர்கள் காளமேகத்தின் பாற்சென்று தம் நிபந்தனைகளைச் சொல்லி வேண்டிக் கொண்டார்கள். உண்மையில் அந்த ஈற்றடியைத் தயார் செய்த அவர்களுக்கே அதைத் பூர்த்தி செய்யத் தெரியாது. ஆனால், காளமேகமா விடுகின்றவர்? அவர்கள் கேட்டு வாய் மூடியிருக்கமாட்டார்கள். அதற்குள்ளேயே,

"விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும் – பெண்ணை
இடத்திலே வைத்த இறைவன் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்"

விண்–வானம், வெற்பு = மலை, மண் = உலகம், பெண் = பார்வதி இறைவன் = சிவன், சடாமகுடம் = சடைமுடி.

என்று அவர் பாடினபோது அவர்கள் மூக்கில் விரலை வைத்தார்கள்.

## 38. பல்லக்கு சுமந்த வள்ளல்

சொக்கநாதர் மாவூருக்கு வந்து சில நாட்களே கழிந்திருந்தன. மாவூர்க் கருப்பண்ண வள்ளலின் அழைப்புக்கு இணங்கியே அவர் அங்கு வந்து அவரிடம் தங்கியிருந்தார். கருப்பண்ண வள்ளல் மாவூரில் மிகப் பெரிய செல்வர். அவருக்கு மூன்று தம்பியர்கள் இருந்தனர். செல்வம் அளவற்றுத் தங்கியிருந்தது போலவே கல்வியும் நற்பண்புகளும் அவர்களிடம் நிறைந்திருந்தன.

சகோதரர்கள் ஒரே குடும்பமாக வசித்து வந்தனர். போட்டி, பொறாமை சிறிதும் இன்றி, என்றும் குன்றாத சகோதர பாசத்துடன் அவர்கள் வாழ்ந்து வந்தது மற்றவர்களுக்கு வியப்பு அளிக்கத் தக்க முறையில் இருந்தது.

புலவர்களை வரவழைத்துப் பாராட்டி மகிழ்வதிலும்கூடச் சகோதரர்கள் அசாத்தியமான ஒற்றுமையும் அன்பும் காட்டினார்கள். மூன்று தம்பிமார்களும் அண்ணனிடம் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும்கூட அவ்வளவு உயர்ந்ததாகவே இருந்தது. முன்பு பலரிடம் இவைகளை எல்லாம் கேள்விப்பட்டிருந்த சொக்கநாதர் இப்பொழுது நேரிலேயே அங்கு நிதரிசனமாகக் கண்டு மகிழ்ந்தார்.

ஒரு நாள் உலாவச் சென்றுவிட்டு வெளியில் வீடு திரும்பிய போது வழியில் வந்து விழுந்து கிடந்த பெரிய கருவேல முள் ஒன்று 'சுருக்'கென்று புலவரின் உள்ளங்காலில் தைத்து விட்டது. புலவருக்கு வலி துடிதுடித்தது. பொறுத்துக் கொண்டு காலைத் தூக்கி உள்ளங்காலிலிருந்த முள்ளின் நுனியைப் பிடித்து இழுத்தார். முள்ளின் முக்கால் பகுதி காலில் ஆழத் தைத்திருந்த தினால் நுனி மட்டும் முறிந்து அவர் கையில் வந்தது. இருளில் வேறொன்றும் செய்ய முடியாமல் அப்படியே காலை மெதுவாகத் தடம் பெயர்த்து ஊன்றி நடந்து மேலே சென்றார்.

இரவில் வீட்டிற்கு வந்த பின்பும்கூட வள்ளலிடமோ, மற்றவர்களிடமோ தமக்கு முள் தைத்தைப் பற்றி அவர் கூறிக்கொள்ளவில்லை. தாமாகவே அதை எடுக்க முயலவும் இல்லை. அப்புறம் ஏதேதோ இலக்கியச் சர்ச்சைகளில் ஈடுபட்டு விட்டு இரவு வெகு நேரத்திற்குப்பின் உறங்கப் போன போதுகூட அவர் அதை எடுப்பதற்கு எண்ணவில்லை. முள் தைத்ததை மறந்தே போனார் என்று கூடச் சொல்லலாம்.

நாட்கள் இரண்டு கழிந்தன. முள் தைத்ததை அவர் மறந்து போனால் முள்ளும் அவரை மறந்து வலிக்காமல் இருந்து விடுமா என்ன? கால் வீங்கி விட்டது. ஆழத்தில் தைத்த முள் பழுத்து உள்ளே சீழ் கொண்டிருந்தது. இருந்த இடத்தில் இருந்து அப்புறம்

இப்புறம் நகர்வதுகூட இயலாததாகிவிட்டது. அப்போதும் புலவர் தாமாக எதுவும் சொல்லவில்லை. கருப்பண்ண வள்ளல் அவர் நிலையைக் கண்டு நடுநடுங்கி மனம் பதைத்து விசாரித்த போதுதான் முள் தைத்ததைப் பற்றி வள்ளலிடம் கூறினார் அவர்.

"தைத்தவுடனே கூறியிருந்தால் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்காதே? வீண் சிரமத்திற்கு இடம் கொடுத்துக் கொண்டு விட்டீர்களே?" என்று அன்புடன் அவரைக்கடிந்து சினந்து கொண்டே வைத்தியருக்கு ஆள் அனுப்பினார் கருப்பண்ண வள்ளல். அவருடைய தம்பியர்களும் புலவருக்கு வந்த துன்பத்திற்கு மனமிரங்கிக் கவலை தோய்ந்த முகத்துடனே அருகில் நின்று கொண்டிருந்தனர்.

வைத்தியரை அழைத்து வரச் சென்ற ஆள் அவரை அழைத்து வருவதற்கு முன்பே, புலவரைத் தேடி அவர் சொந்த ஊரிலிருந்து ஓர் அள் வந்து சேர்ந்தான். பரபரப்பாக வந்த அந்த ஆள் ஊரில் புலவர் மனைவி நோயுற்றிருப்பதாகவும் சென்ற இரண்டு நாட்களாக நோய் முற்றி உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாகி இருப்பதாகவும் அவரை உடனே காண விரும்பி அழைத்து வரச் சொல்லியதாகவும் கூறினான். புலவர் வேதனை யடைந்து ஊர் செல்லுவதற்குத் துடித்தார். காலில் முள் தைத்திருப்பதினால் ஏற்பட்ட தம் அவஸ்தைகூட அவருக்கு அப்போது நினைவில்லை. அவருடைய சொந்த ஊர் அங்கிருந்து மிகுந்த தொலைவில் இல்லை நான்கு நாழிகைப் பயணம்தான்.

'வீணாக இப்போது வைத்தியரை அழைத்து வரவேண்டாம்! எப்படியாவது - ஒரு பல்லக்கில் வைத்தாவது என்னை ஊரில் கொண்டு போய்விடச் செய்யுங்கள்! அதுதான் நீங்கள் இப்போது எனக்குச் செய்யவேண்டிய பேருதவி, இந்த நிலையில் நான் அவளைக் காணாமல் இருக்கமுடியாது. என் காலை நான் ஊருக்குச் சென்று அங்கே வைத்தியரிடம் காண்பித்துக் கொள்கிறேன். அவளே இப்படிக் கிடக்கும்போது என் காலுக்கு வைத்தியம் செய்ய இப்போது என்ன அவசரம் வேண்டிக் கிடக்கிறது?' என்று மனம் நொந்து இரக்கமும் உருக்கமும் தேங்கிய குரலில் கூறினார் புலவர்.

அவர் வேண்டிக் கொண்ட விதம், கருப்பண்ண வள்ளலையும் அவர் தம்பியரையும் உருக்கம் கொள்ளச் செய்தது. அந்த நிலையில் காலில் முள்ளை எடுத்துச் சொஸ்தமாக்காமல் அவரை அனுப்புவது சரியில்லை என்றாலும் அவரது வேண்டுகோளை அவர்களால் புறக்கணிக்க முடியவில்லை. நோயாளியாக இருக்கும் மனைவியைப் பார்க்கும் பரபரப்பும் ஆவலும் புலவருக்கு இருக்கும்போது அவர் விருப்பப்படி அவரை ஒரு பல்லக்கில் ஏற்றி அனுப்பி விடுவதே நல்லது என்று அவர்களுக்கும் தோன்றியது. கருப்பண்ண வள்ளல் வீட்டில், ஒருவர் தாராளமாக அமர்ந்து கொண்டு போகும்படியான மூடு பல்லக்கு ஒன்று இருந்தது. அதில் புலவருக்கு அளிக்க வேண்டிய பரிசிற் பொருள்களை எல்லாம் வைத்து அவரையும் ஏறிக்கொள்ளச் செய்து அனுப்பி விடலாம் என்று சகோதரர்கள் தீர்மானித்தார்கள். ஆனால் அந்தப் பல்லக்கைச் சுமந்து செல்வதற்கு இரண்டு ஆட்களும் இடையிடையே தோள் மாற்றிக்கொள்ள இரண்டு ஆட்களும் வேண்டும். சமீப காலமாக அது உபயோகத்தில் இல்லாமல் இருந்ததனால் அத்தப் பல்லக்கைத் தூக்குவதற்கென்று நியமிக்கப் பெற்றிருந் தவர்களையும் விலக்கி அனுப்பிவிட்டிருந்தார்கள். புலவருடைய பதைபதைப்பையும் அவசரத்தையும் பார்த்தால், 'அங்கே இங்கே ஓடிப் பல்லக்குத் தூக்குவதற்கு ஆள் திரட்டிவிடலாம்' என்பதற்குக்கூட அவகாசம் இருப்பதாகத் தெரியவில்லை. வைத்தியரை அழைத்து வரச் சென்ற ஆளும் இன்னும் திரும்ப வில்லை. ஊரிலிருந்து புலவருக்குச் செய்தி கொண்டு வந்த ஆள் நடுவே விடைபெற்றுக் கொண்டு தன் காரியமாகச் சென்றுவிட்டான். புலவரின் ஊர் செல்ல வேண்டும் என்ற தவிப்போ, கணத்துக்குக் கணம் அதிகமாகிக் கொண்டிருந்தது. வள்ளலும் சகோதரர்களும் 'என்ன செய்வது?' என்று தெரியாமல் திகைத்து மயங்கினார்கள்

திடீரென்று கருப்பண்ண வள்ளலுக்கு ஒரு யோசனை தோன்றியது. அவர் தம் தம்பியர்களைச் சற்றுத் தள்ளி ஒதுக்குப்புறமாக அழைத்துச் சென்று அவர்களிடம் தனியாக

ஏதோ கூறினார். அவர்களும் முகமலர்ச்சியோடு அவர் கூறியதை வரவேற்று ஒப்புக்கொண்டனர்.

பல்லக்கு, புலவருக்கு அருகில் கொண்டு வந்து வைக்கப் பட்டது. கருப்பண்ண வள்ளல் ஒரு பெரிய வட்டத் தாம்பாளத்தில் பரிசில்களைப் புலவரிடம் வணக்கத்தோடு அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டு அளித்தார். புலவர் அதைப் பெற்றுக்கொண்டு பல்லக்கில் ஏறி அமர்ந்தார். பல்லக்கில் அவரது முள் தைத்து வீங்கிய கால் உறுத்தாமல் இருப்பதற்காக மெத்தை விரிக்கப் பட்டிருந்தது.

"என்ன? பல்லக்குத் தூக்குபவர்களை இன்னும் காணவில்லையே? விரைவில் வருமாறு சொல்லி அனுப்பினீர் களோ இல்லையோ?" பல்லக்கில் அமர்ந்து கொண்டதும் புறப்பட்டுச் செல்லும் வேகம் மனவேகத்தை உந்தித்தள்ள ஆவலோடு புலவர் இப்படிக் கேட்டார்.

"அவர்கள் வந்துவிட்டார்கள்! இங்கேதான் அந்தப் பக்கமாகப் போயிருக்கிறார்கள்! இதோ நான் போய் அழைத்து வருகிறேன்"-என்று புலவருக்கு விடை சொல்லிக் கொண்டே மூடுபல்லக்கின் திரைச் சிலையை இழுத்து மூடிக்கட்டி மாட்டினார் கருப்பண்ண வள்ளல். புலவர் நன்றாகக் காலை நீட்டி வசதியாக உள்ளே அமர்ந்துகொண்டார். இரட்டையாக மடித்துத் தொங்கவிடப்பட்டிருந்த மெல்லிய பட்டுத் திரைச் சிலையின் வழியே பல்லக்கிற்குள் மிக மங்கலான ஒளியே பரவியிருந்தது. பல்லக்குக்கு உள்ளிருப்பவர்க்கும் வெளியே இருப்பவர்க்கும் இடையே மறைவை உண்டுபண்ணியது அந்தத் திரை.

பல்லக்கு புறப்பட்டு வீட்டு வாசலுக்கு வந்தது, அதன் முன்பக்கத்துக் கொம்பு கருப்பண்ண வள்ளலின் வலது தோள் மேலே இருந்தது. பின்பக்கம் அவருடைய இளைய தம்பி தாங்கிக் கொண்டிருந்தார். மற்ற இரண்டு தம்பிகளும் தோள் மாற்றிக் கொள்வதற்காகத் தயாராகப் பின் தொடர்ந்து உடன்வந்து கொண்டிருந்தனர்.

தாங்கள் தெய்வாம்சமாகக் கருதி வணங்கிவரும் பெரிய சீமானும் குணவானுமாகிய கருப்பண்ண வள்ளல் தெரு வழியே இடுப்புத் துணியோடு முண்டமாகப் பல்லக்குச் சுமந்து செல்வதை மாவூரார் அன்று, அப்போது கண்டனர். அவர்கள் சிலர் கண்ணீர் சிந்தினர், சிலர் நெஞ்சுருக வைத்த கண் வாங்காமல் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே நின்றனர். கருப்பண்ண வள்ளலும் அவர் தம்பியருமோ புன்முறுவல் பூத்து மலர்ந்த முகத்துடனே தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் பக்தர்களைப் போலப் பல்லக்கைச் சுமந்தவாறே மேற்சென்று கொண்டிருந்தனர்.

வீதிகளைக் கடந்து பல்லக்கு ஊர் எல்லையை அடைந்தது. அங்கே அருகில் வயல்களிலே வேலை செய்து கொண்டிருந்த வேளாளர்கள் இந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டு ஓடோடியும் வந்து பல்லக்கைச் சூழ்ந்து கொண்டார்கள். "என்ன காரியம் செய்துவிட்டீர்கள் பிரபு? ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி இருந்தால் நாங்கள் வந்திருக்க மாட்டோமா, இதைச் செய்ய?" என்று கெஞ்சினார்கள்.

வெளியே ஆரவாரம் கேட்டுப் பல்லக்கினுள்ளே இருந்த புலவர் திரையை விலக்கி எட்டிப் பார்த்தார். திடுக்கிட்டார். வள்ளலும் அவர் தம்பியும் பல்லக்கைச் சுமந்து நின்றதைக் கண்டு அவர் பல்லக்கிலிருந்து கீழே குதித்து விட்டார். அப்படிக் குதித்த போது வீங்கிச் சீழ் கொண்டிருந்த அவர் கால்கூட வலிக்கவில்லை. அதைவிட மனம்தான் வலித்தது. 'ஒரு பெரிய சீமான் தம் தம்பி களோடு தனக்காக எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்திருக் கிறார்!' என்று எண்ணி உருகியது உள்ளம். புலமை உள்ளம் வலித் தால் என்ன? மகிழ்ந்தால் என்ன? வாடினால்தான் என்ன? அந்த உள்ளத்தின் எல்லா அனுபவங்களும் பாட்டாகத்தானே வடிவம் பெறும்?

**"எல்லப்பன் அம்மையப்பன் தரு**
**திருவேங்கடராமன் எழிற் சீராம**
**வல்லக் கொண்டமனுடனே**
**மாதை வேங்கடேசனைப் போல்வரிசை தந்தான்**

செல்லத் தம்பியருடனே மாவையில்வாழ் கருப்
பண்ணன் தெருவீதிக்கே
பல்லக்குத்தான் சுமந்தான் அது
நமக்கு ஓராயிரம் பொன் பரிசுதானே?"

எல்லப்ப = வள்ளல், அம்மையப்ப வள்ளலின் புதல்வராகிய திருவேங்கடராமன் சீராம வள்ளல் (ஸ்ரீராமவல்லக்கொண்டம நாயகர்), மாதைப்பதி வேங்கடேசன் = சொக்கநாதரைப் பாராட்டி உதவிய சில வள்ளல்கள்)

*என்ற பாட்டு, சொக்கநாதர் வாயிலே அப்போது பிறந்தது. பல்லக்கு வேளாளர் தோள்களில் மாறியது. அவர் வள்ளலிடமும் சகோதரர்களிடமும் விடைபெற்று அதிலேறிக் கொண்டார். பல்லக்கு புறப்பட்டது. சகோதரர்கள் திரும்பினர். தியாகத்தை ஓராயிரம் பொன் பரிசுக்கு மதிப்பிட முயல்கிறார் புலவர் பாடலில்.*

## 39. உலகம் பரந்தது!

*தான் கூறிய அந்தக் கருத்தினால் கம்பரை மாத்திரம் சோழன் பழித்திருந்தால் அவரும் தம் தீவின்னையை நொந்துகொண்டு பேசாமல் போயிருப்பார். புலவர் சமூகத்தையே பழிக்கும்படியான சொற்களால் அவன் அந்தக் கருத்தைக் கூறியதுதான் கம்பருடைய உள்ளத்தைச் சுட்டது. 'பாவலர்கள் கூற்றினும் கொடியவர்கள்' என்று சோழன் சொல்லி முடித்தபோது அதை அவரால் பொறுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவருடைய தன்மான உணர்ச்சி உள்ளத்தின் அடித்தளத்தில் உரக்கக் கூவிக் குமுறி எழுந்து விட்டது.*

*நடந்த நிகழ்ச்சி இதுதான். கம்பர் ஒருவருக்கு எழுதிக் கொடுத்த பாட்டு ஒன்றின் பொருளைப்பற்றிச் சோழன் அவைக்களத்தில் பேச்சு எழுந்தது. அப்போது கம்பரும் அதே அவையில் அமர்ந்திருந்தார். தம்முடைய அந்தப் பாடலுக்குச் சோழன் அவையிலிருந்த மற்ற புலவர்கள் கற்பித்துக் கூறிய*

பொருளைக் கேட்டு, கம்பர் திடுக்கிட்டார். ஏனென்றால் கம்பர் எண்ணி எழுதிய பொருளுக்கு நேர் விபரீதமாக இருந்தது அவர்கள் தாமாகக் கற்பித்துக் கூறிய பொருள். சோழனும் 'அந்த மற்ற புலவர்கள் கூறிய பொருளே ஏற்றதாக இருக்கிறது' என்ற கருத்தோடு பேசினான். அதோடு மட்டுமின்றி அவர்கள் பலவந்தப் படுத்திக் கற்பித்த அந்தப் பொருளால் பாட்டை எழுதிய கம்பருக்கே அறியாமைப் பட்டத்தைக் கட்டிவிடப் பார்த்தார்கள். சோழனும் அதை ஆதரித்ததுதான் கம்பரை வருந்தச் செய்தது.

அவர் தமக்கு அதனால் தோன்றிய சினத்தையும் வருத்தத் தையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் நிதானமாக அவையில் எழுந்திருந்து தாம் பாடிய பாட்டின் உண்மையான பொருளை விளக்கிப் பேசி, 'அவர்கள் கருதியது அசம்பாவிதமானது, பொருந்தாதது' என்று தக்க சான்றுகளால் எடுத்துக் காட்டினார். ஆனால் அப்படி அவர் விளக்கிப் பேசியபின்னும் சோழனும் அவர்களும் தாங்கள் கூறிய பொருளே அதற்குப் பொருளாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வாதிட்டனர். அவர்கள் பிடிவாதத்தால் கம்பர் மனச் சான்றையே வஞ்சித்து வதைசெய்ய ஆரம்பித்தார்கள். ஒரு கவிக்கு அவன் சொந்த உயிரைக் காட்டிலும் உயர்ந்த பொருள் அவனுடைய சிருஷ்டி. தனக்குத் துன்பம் ஏற்படுவதை அவனால் பொறுத்துக்கொள்ள முடியும். ஆனால் தன் சிருஷ்டியின் அழகைக் குலைத்து விபரீதம் செய்பவர்களை அவனால் பொறுத்துக் கொள்ளவோ, மன்னித்து விட்டு விடவோ முடியாது. கம்பரும் அப்போது இதே நிலையில்தான் இருந்தார். தன்னை அன்போடு வரவேற்று, 'என்னிடம் சில நாள் விருந்தினராகத் தங்கி மகிழ்விக்க வேண்டும்' என்று கேட்டு உபசரித்த சோழவேந்தனே அப்படிப் பொருளைப் பேதம் செய்து காட்டியதுதான் கம்பரைப் பெரிதும் புண்படுத்தியது.

விஷயம் அதோடு முடிந்திருந்தால்கூட கம்பர் சினங் கொண்டு சீறி எழுந்திருக்க விரும்பியிருக்க மாட்டார். அவர்களை மறுத்து, கம்பர் உண்மையை எடுத்துச்சொல்லி முடித்தவுடன் சோழன் வெம்மையான சொற்களால் வெறுப்போடு கூறிய அந்த மறுமொழிதான் அமைதியைக் குலைத்துவிட்டது.

“போற்றினாலும் போற்றுவார்கள்! கேட்ட பொருளைக் கொடுக்காவிட்டால் அதே போற்றுதலை நீக்கி வேறுவிதமாகத் தூற்றுவார்கள். முதலிற் கூறிய சொற்களை மாற்றிப் பொருளைத் திரித்துக் கூறவும் தயங்கமாட்டார்கள். பார்க்கப் போனால் எமனைவிடக் கொடியவர்கள் இந்தக் கவிஞர்கள்தாம்! இவர்களுடைய சாகஸம் எமனது சாகஸத்தை விட மிகவும் பெரியதாக அல்லவா இருக்கிறது...” என்று ஆத்திரத்தில் தான் என்ன பேசுகிறோம் என்பதே தெரியாமல் கம்பரைப் பார்த்துப் பேசிவிட்டான் சோழமன்னன். அவன் பேசிய அந்தப் பேச்சு அங்கிருந்த பாவலர்களின் சமூகத்தையே தாழ்த்தும் கருத்துடையதுதான். ஆனால் சோழன் அதைக் கம்பருக்காகவே சொல்லுகிறான் என்றெண்ணி அவர்கள் யாவரும் பேசாமல் இருந்து விட்டார்கள். அரசனுடைய ஆதரவினால் கம்பர் பாட்டிற்கு அதை இயற்றிய அவரே எண்ணியும் பார்த்திராத விபரீதப் பொருளைக் கற்பித்து ‘அவர் வாயை அடக்கிவிட்டோம்’ என்ற மமதையில் அழுந்திப்போயிருந்த அவர்கள் சோழனின் அந்தக் கருத்து, தங்கள் வர்க்கத்தையே ஆழத் தாழ்த்துகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் கம்பர் புரிந்து கொண்டார். அவருடைய உணர்ச்சி பொங்கியது. உள்ளம் சீறியது. அவர் கண்கள் சிவக்க, மீசை துடிக்கச் சினத்தோடு ஆசனத்திலிருந்து எழுந்து அவைக்கு நடுவே நின்றார். சோழனை நோக்கிப் பேசலானர்.

“சோழர் பேரரசே! அளவற்றுப் பரந்து கிடக்கும் இந்த அகண்ட உலகத்திலே அரசன் என்ற பதவிக்குரியவன் நீ ஒருவன் மட்டும் தானா?...அப்படி இல்லையே? பொன்னி நதி பாயும் வளத்திற்குரிய நாடுபோல உலகில் வேறெங்கும் இல்லையா, என்ன? எண்ணற்ற பல நாடுகள் இதைப்போல உலகில் உள்ளன. அந்தத் தமிழ்ப் பாடல் உனக்காகவும் உன் விபரீதப் பொருளுக் காவும்தானா பாடினேன்? தமிழையறிந்து பாராட்டுபவர்களின் உலகம் உன் ஒருவனோடு அடங்கிவிடவில்லை! அது பரந்து விரிந்து பரவிக்கிடக்கிறது! என் பாடலையும் என்னையும் ஆதரித்துப் பாராட்ட உலகெங்கும் வேந்தார்கள் உள்ளனர். நீ

*ஒருவன்தான் என்பது இல்லை. குரங்கு தாவும்போது ஏற்றுக்கொள்ளாத கிளையும் உண்டோ? சோழநாட்டிற்குரிய இருபத்து நான்கு காதம் பூமிக்கு வேண்டுமானால் நீ அரசனாக இருக்கலாம். அது தவிர உலகின் மற்ற பகுதிகளை எல்லாம் கடல் விழுங்கிவிட இல்லை. கவிஞர்கள் அங்கே போய் வாழ முடியும்! உன் கருத்தைத் திருத்திக்கொள்! வருகிறேன் நான்."*

"மன்னவனும் நீயோ? வளநாடும் நின்னதுவோ?
உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு?
காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொளித்ததோ – மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா!நீ முனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்?"

**ஓதினேன் = சொன்னேன், விரைந்து = சீக்கிரமாக, வேந்து = அரசன், கொம்பு = கிளை, காதம் = ஓர் அளவு, மேதினி= உலகம், ஓதக்கடல் = அலைபாயும் கடல், கொற்றவா = அரசே, முனிந்தால் = வெறுத்தால்.**

*இவ்வாறு கூறிவிட்டுச் சோழனின் விடையையோ, மறுமொழியையோகூட எதிர்பார்க்காமல் விடுவிடென்று மேலாடையை உதறிக்கொண்டு அவையிலிருந்து நடந்து வெளியேறினார் கம்பர். 'உலகம் பரந்தது!' என்று அவர் கூறிவிட்டுச் சென்ற அந்த வார்த்தை கணீரென்று வெகுநேரம் வரை அங்கே எதிரொலித்துக் கொண்டிருந்தது.*

## 40. அன்னமும் ஆபரணமும்

*பாட்டைப் பாடுவதிலும் புதிய புதிய கற்பனைகளைப் பின்னி வெளியிடுவதிலும் கவிஞர்களுக்கு எந்தவிதமான மன*

நிறைவும் இன்பமும் எய்துகின்றனவோ அதே மனநிறைவும் இன்பமும் அவர்களுடைய உண்மையான இரசிகர்களுக்கு அவர்களைப் போற்றி உபசரிப்பதன் மூலமாக எய்துகின்றன. அதை நன்கு அறிந்து உணர்ந்திருந்தார் அரிய இரசிகராகிய திருமுதுகுன்றம் (இதற்கு இப்போது விருத்தாசலம் என்று பெயர்) சடைய வள்ளல். ஒரு உண்மை இரசிகனுடைய திருப்தி, கவிதையையும் கற்பனையையும் வானளாவப் போற்றிப் புகழ்ந்து வாய்ச்சொல் விரிப்பதால் மட்டும் கிடைக்காது. கவிதையும் கற்பனையும் பிறந்த உள்ளம் குளிரப் பேணிப் போற்றுவதனால்தான் முழுமையாகக் கிட்டும் என்பது இவருக்குத் தெரியும். சிறந்த பாவலர்கள் பலர் இவரைப் புகழ்ந்து வியந்து பாடுவதற்குக் காரணமாக இருந்த பண்பே இதுதான்.

ஒரு முறை தமிர்வாணர் என்ற புலவர் அவருடைய கொடைநலம் அறிந்து விருந்தினராக வந்து தங்கியிருந்தார். பெரும்பாலும் புலவர்களை உண்ணச் செய்வதிலிருந்து எல்லா உபசாரங்களையும் மனம் குளிரத் தம் கைகளாலேயே செய்வது சடைய வள்ளல் வழக்கம். தமிர்வாணர் விருந்தினராக இருந்த நாட்களில் வள்ளல் அவருக்கு உபசாரம் செய்தபோது ஒரு நாள் வேடிக்கையான சம்பவம் ஒன்று நடந்தது. அந்தச் சம்பவத்தையொட்டித் தமிழ்வாணர் பாடிய பாடல் இன்றும் தனிப்பாடல் திரட்டில் இருந்தவண்ணம் நமக்கு அதை நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

அன்று புலவர் தமிழ்வாணர்க்குத் தாமே உணவு பரிமாறக் கருதினார். சடைய வள்ளல் நீண்ட தலை வாழை இலையை விரித்துப் புலவரை உண்பதற்கு அமரச் செய்தார். வள்ளல் தன் வலது கை விரல்களில் இரண்டு மூன்று மோதிரங்கள் அணிந்திருந்தார். அவற்றுள் திருமகள் வடிவத்தோடு கூடிய பெரிய தங்க மோதிரமொன்று நடுவிரலை அழகு செய்தது. அந்த மோதிரத்தில் சுற்றி வைரக் கற்கள் பதிக்கப்பட்டு நடுவில் தாமரை மேல் நிற்கும் பாவனையாக இலக்குமி உருவம் ஒன்றும் செதுக்கியிருந்தது.

*புலவரை இலைக்கு முன்பு அமர்த்தி இலையில் நீர் தெளித்துத் தூய்மை செய்வதற்காகக் கையில் நீருடன் வள்ளல் இலைக்கு முன் குனிந்தபோது அவசரத்தில் விரல் மாறி இட்டிருந்த அந்தப் பெரிய மோதிரம் நழுவிப் புலவர் இலையில் விழுந்து உருண்டது. செல்வத்திற்கும் இலக்குமி கடாட்சத்திற்கும் அறிகுறியாக இலக்குமி உருவத்தோடு கூடிய அந்த மோதிரத்தைக் கையிலிருந்து கழற்றாமல் அணிந்திருந்தார் புகழ் செல்வராகிய சடைய வள்ளல். எண்ணெய் நீராடும் நாளில் மட்டும் அதைக் கழற்றும் வழக்கமுடைய அவர் அன்று காலை எண்ணெய் நீராடியபின் அவசர அவசரமாக மோதிரங்களை அணிந்து கொண்டபோது நடு விரலுக்கு அடுத்த விரலில் மாற்றி அணிந்து கொண்டு விட்டார் அந்த இலக்குமி மோதிரத்தை. அப்போது அவசரத்தில் அதைக் கவனிக்க நேரமில்லை. இப்போது பரிமாறும் தருணத்தில் இலையில் தண்ணீர் தெளிக்குங்கால் அது நழுவி விழுந்த உடன்தான் அந்தத் தவறு வள்ளலுக்குப் புரிந்தது. மோதிரம் நழுவி விழுந்ததுகூட அவருக்கு அதிக வருத்தத்தைக் கொடுக்கவில்லை. 'புலவர் அதை ஏதாவது அபசாரமாக எண்ணிக் கொள்வாரோ?' என்ற பயமும், துயரமுமே அவரை அப்போது வாட்டின.*

*'மன்னித்துக் கொள்ள வேண்டும்' எனக் கெஞ்சுவது போன்ற பார்வையோடு தலை நிமிர்ந்து புலவரைப் பார்த்தார் வள்ளல். புலவர் அந்தப் பார்வைக்குப் பாடல் ஒன்றால் விடை அளித்தார்.*

"பாட்டாற் சிறந்த புலவரெல்லாம் பாடும் சடையா
கொடையாளா கேட்டேன் உன்தன் புகழ் கேட்டேன்
கிளர்ந்த மனத்துடன் இங்குற்றேன் போட்டாய்
இலையிற் பொன்னுடனே பொன் ஆபரணமும்
புமையிது கேட்டேன் பசியால் அன்னத்தை
வைத்தாய் பொன்னை வழக்காமோ?"

**பான் = இலக்குமி வடிவம், ஆபரணம் = அணிகலன், வேட்டேன் = விரும்பினேன், அன்னம் = சோறு, வழக்காமோ= ஏற்றதுதானோ.**

என்பதே அந்தப் பாடல். 'நான் பசியோடு அன்னத்தை எதிர்பார்த்து இலையில் அமர்ந்தேன். ஆனால் நீயோ 'பொன்னோடு' (இலக்குமி வடிவத்தோடு) கூடிய பொன் ஆபரணமாகிய மோதிரத்தை இலையிலே போட்டு விட்டாய்! அன்னம் கேட்ட வாய்க்குப் பொன்னாபரணத்தையே அமுதமாக அளித்த பெருமையை என்னென்பது?' என்ற கருத்துக்கள் யாவும் தமிழ்வாணர் பாடலில் தொனிக்கின்றன. இதற்கு மேலும் 'புலவர் தம்மை அபசாரமாக எண்ணவில்லை' என்பதை அறிந்து கொள்ள வள்ளலுக்கு வேறுசான்று எதுவும் தேவையில்லையே!

## 41. என் பெருமை

தம்முடைய சொந்த வாழ்க்கையின் துன்பங்களைப் பிறருக்கு எடுத்துரைத்து உதவி கேட்பது எளிமையான செயல் அன்று. கொடுத்து உதவுகின்ற குண இயல்பைப் பொறுத்தோ வள்ளன்மையைப் பொறுத்தோ ஏற்படுவதில்லை இந்தச் செயலருமை.

கேட்கின்றவனின் உள்ளத்தைப் பொறுத்து அது பண்பட்டிருக்கும் அளவைப்பொறுத்துத்தான் ஏற்படுகிறது. கற்றுத் தேர்ந்த கவிபாட வல்ல கவிஞர்கள் உள்ளத்தை இந்த நிலையிலே வைத்து நினைக்கவும் முடிவதில்லை. பிறருக்குப் பணிய விரும்பாதது கவியுள்ளம். தன் சொந்த உணர்ச்சிகளையும், இன்ப துன்பங்களையும் கூடத் தன்னோடு அமைத்துக்கொள்வது. அது பொறுத்துக் கொள்ள முடியாத நிலைமையில் மட்டும் வெளியிடத் தகுதி வாய்ந்தவர்களிடம் குறிப்பாக வெளியிடுமே அன்றித் தன் துயரத்தை விவரிக்க அது துணிவதில்லை. பிறர் கைபடாத மலரைப் போன்றது கவி நெஞ்சம். அது தானாக மலரும். அதை மலர்த்த முடியாது. மலர்ந்த பிறகும் 'எடுப்பார் கைப்பிள்ளை' ஆக அது வருவதில்லை.

குடும்ப வாழ்க்கையின் கொடுந் தொல்லைகள் அனுபவத்திற்கு வருவதன்முன் கவி சொக்கநாதருடைய உள்ளமும்

இப்படி ஒரு தனி மலராகத்தான் இருந்தது. மனைவி, மக்கள் என்று இவ்வாறு குடும்பம் பெருகியபோது வறுமையும் அழையா விருந்தாகத் தானே வலுவில் வந்து பெருகியது. வறுமை வெயிலின் காய்கதிர்களின் வெம்மையால் அந்த மலர் உள்ளம் அப்போது தான் முதன்முதலாக வாட்டங்காணத் தொடங்கியது.

கவிதைகளைப் பரிசில் பெறும் கருவிகளாக மாற்றிக் கொள்ளவேண்டிய அவசியம் இப்போது அவருக்கும் நேர்ந்தது. பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பறவைகளைப் போல அவரும் வள்ளல்களைத் தேடிக் கால் தேய நடக்கலானார். ஏடும் எழுத்தாணியும் சுமந்து அலைந்ததற்குத் தகுந்த பயன்தான் கிடைக்கவில்லை. சாளுவ வம்சம் விஜய நகரத்து அரசர் மரபில் வந்தது. அந்த மரபில் வந்த சிற்றரசர்கள் சிலர் சொக்கநாதப் புலவர் காலத்தில் சிறந்து விளங்கி வந்தனர். அவர்களில் கோப்பைய ராயன் மகனாகிய திப்பைய ராயன் என்பவன் புலவர்களைப் போற்றும் வள்ளலாக இருந்தான். கவிச்சுவையும் கலையார்வமும் இளகிய நெஞ்சமும் படைத்தவன் திப்பைய ராயன். கலைஞர்கள் துன்பங்களையோ, வறுமையையோ தனக்குற்றவை போல எண்ணி உடனே உதவும் நல்ல இயல்பினன்.

இத்தகைய நற்பண்புகள் அமையப் பெற்ற திப்பைய ராயனிடம் போனால் தம் துயரங்களைக் குறிப்பாகக் கூறி உதவி பெறலாம் என்று கருதினார் சொக்கநாதர். திப்பைய ராயன் புலவர்கள் என்றால் வண்டுக்கு விரியும் மலர்போன்று நடந்து கொள்வான் என்று அவர் கேள்விப்பட்டிருந்ததனால் 'அவனிடம் பழகுவது கடினமோ?' என்ற அச்சம் அவருக்கு ஏற்படவில்லை. மற்றவர்களிடம் செய்ய வேண்டி யிருந்ததுபோலத் தன் மதிப்பு இன்றி வெளிப்படையாகத் தமது வீட்டுத் துன்பங்களை எல்லாம் விவரிக்க வேண்டிய நிலை திப்பைய ராயனிடம் இல்லை என்ற நம்பிக்கை வேறு அவருக்கு ஊக்கமளித்தது. புலவர் புறப்பட்டார்.

சொக்கநாதரைப் பற்றிப் பொதுவான செய்திகளை அவரே கூற அறிந்து கொண்ட திப்பைய ராயன் அவரை மகிழ்ச்சியுடனே வரவேற்றுக் கனிந்த சொற்களால் உரையாடினான். உயர்ந்த

*முறையில் போற்றிப் பேணினான். சில நாட்கள் தன்னோடு தங்கியிருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். புலவரும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார். அவனோடு உரையாடிப் பழகிய அந்தச் சற்று நேரத்திலேயே அவனைத் தாம் கேள்விப்பட்டு அறிந்திருந்ததைவிட உயர்ந்த நிலையிற் கண்டார் அவர். திப்பைய ராயன் தம்மைக் கொண்டாடிப் பேசும் போதெல்லாம் அவனுடைய ஒவ்வொரு சொல்லும் குபேர சம்பத்தாகத் தோன்றும் அவருக்கு. தெய்வத் தன்மை வாய்ந்த தமிழ்க்காவியம் ஒன்றைத் திரும்பத் திரும்பப் படித்து நயங்காண்பது போல இருந்தது அவனோடு பழகுவது. பணிந்த உள்ளம். இனிய சொற்கள். கவிதையையும் அது பிறக்கும் நெஞ்சத்தையும் எப்படி நடத்தி மதிப்புக் கொடுக்க வேண்டு மென்று அறிந்து நடந்துகொள்கின்ற பண்பாடு. இவ்வளவும் திப்பைய ராயனிடம் இருக்கக் கண்டார் அவர்.*

*நாள் ஆகஆக அவனுக்கும் அவருக்கும் ஏற்பட்ட நட்புப் போல வேறோர் உணர்ச்சிக்கும் அவர் மனம் இடங்கொடுக்க வேண்டிய நிலை அவருக்குப் புரிந்தது. அதுதான் ஊரில் மனைவி மக்களைப் பற்றிய கவலை. "இங்கே திப்பைய ராயன் குபேரசம்பத்துப் போன்ற சொற்களால் தம்மைப் பாராட்டிப் போற்றுவதனால் அங்கே அவர்களுடைய வறுமை தீர்ந்து விடப் போகிறதா என்ன? இல்லையே!" இப்படி எண்ணிப் பார்த்தபின், தாம் வந்த காரணத்தையும் தம் குடும்ப நிலையையும் எப்படியாவது குறிப்பாகத் திப்பைய ராயனுக்குச் சொல்லிவிட வேண்டும் என்று அவர் நினைத்தார். மறைத்துப் பேசத் தமிழில் வார்த்தைகளா இல்லை? ஒருநாள் வாய்ப்பு நேர்ந்தபோது தம் நிலையைக் குறிப்பாக அமைத்து ஒரு பாட்டாகவே திப்பைய ராயனிடம் அவர் பாடிக் காட்டிவிட்டார்..*

**"இந்திரன் கலையா யென்மருங் கிருந்தான் அக்கினி**
**உதரம் விட்டகலான் இயமன் எனைக்கருதான்**
**நரனெனக் கருதி நிருதிவந்தென்னை என் செய்வான்**
**அந்தமாம் வருண னிருகண் விட்டகலான் அகத்தினில்**

மக்களும் யானும் அநிலமதாகும் அமுதினைக்
கொள்வோம் யார்எதிர் எமக்குளார் உலகில்
சந்ததம் இந்த வரிசையைப் பெற்றுத் தரித்திர ராசனை
வணங்கித் தலை செய்யும் எம்மை நிலை செய்
சற்கீர்த்திச் சாளுவக் கோப்பைய னுதவும்
மந்தர புயத்தான் திப்பைய ராயன் மகிழ்வொடு விலையிலா
அன்னோன் வாக்கினாற் குபேரன் ஆக்கினான்
அவனே மாசில் ஈசான் பூதியே''

கலை = ஆடை, உதரம் = வயிறு, நிருதி = திசையசுரன், அநிலம் = காற்று, சந்ததம் = எப்போது, அந்தம் = அழகு இந்திரன் கலையாயிருப்பது = ஆடையில் ஆயிரம் கிழிசல்கள் இந்திரனின் ஆயிரம் கண்கள்போல் இருப்பது.

*திப்பைய ராயனைப் பற்றி வேறொருவரிடம் சொல்லுவது போல அவனிடமே கூறுகிறார் இந்தப் பாட்டை!*

*"இந்திரன் உடலில் ஆயிரங்கண்கள் போலக் கிழிந்த ஆடை அணிந்தேன். பசியோ வயிற்றை நெருப்புப் போல வாட்டுவது. வறுமைப்பட்ட மனிதன்தானே என்றெண்ணி எமன் கூட என்னை ஒரு பொருட்டாக மதித்து என் பக்கம் வரக்கருதவில்லை. நிருதியும் என்னை அவ்வாறே அவமதித்து ஒதுங்கியிருக்க வேண்டும். துன்பங்களை எண்ணிக் கலங்கிய என் கண்களில் வருணன் கண்ணீராக இடைவிடாமல் வடிந்து கொண்டிருந்தான். யானும் என் மக்களும் உண்ணுவதோ காற்றாகிய அமுதம்தான். அதுதான் எங்களுக்கு உணவாகக் கிடைத்தது. நாங்கள் கையெடுத்துக் கும்பிடக் கொடுத்து வைத்தவன் தரித்திரராாசன் ஒருவன்தான். இப்படி அமைந்த 'என் பெருமையை' எண்ணினால் எனக்கு 'நிகர்' உலகம் முழுவதும் இல்லை. இவ்வாறு அஷ்டதிக்குப் பாலர்களில் (இந்திரன் முதல் குபேரன் ஈறாக எண்மரும் அஷ்டதிக்குப் பாலகர்களாவர்) இருவர் குறைய மற்ற ஆறுபேரும் நிறைந்த என் வறுமை வாழ்வைத் தீர்த்துக் கொள்ள நினைந்து திப்பைய ராயனிடம் சென்றேன். அவனோ, தன் வாக்கினால் என்னைக்*

குபேரனாக்கினான். தானே ஈசானன் போல் விளங்கினான். இப்பொழுது திசைப் பாலகர் எண் மரும் நிறைந்ததாகிவிட்டது என் பெருமை. அஷ்டத்திக்குப் பாலகர்களும் ஒவ்வொரு வகையில் எனக்கு உதவ வேண்டுமென்றால் உலகிலேயே பிறருக்கு இல்லாத நிகரற்ற பெருமை அல்லவா அது எனக்கு?" என்ற கருத்துக்களைப் பொருள் பொதிய வெளிப்படையாக அந்தப் பாட்டிலமைத்துத் திப்பைய ராயனிடம் பாடினார் சொக்கநாதப் புலவர்.

மலருக்கு அடியில் முள் இருப்பது போல இந்த வெளிப்படையான கவிதை மலருக்குள் பொதிந்திருக்கும் புலவரின் வறுமை முட்கள் (அவர் 'என் பெருமை' என்று வேடிக்கையாகச் சொன்ன அந்த வறுமை முட்கள்) திப்பைய ராயனுக்கு நன்றாகத் தெரிந்தன. வறுமையை எடுத்துக் கூறுவதில் கூடக் கவிதையும் அழகும் சாமர்த்தியமும் குறும்புத் தனமும் நிறைந்திருப்பது கண்டு வியந்தான் அவன். "என் ஆடை கிழிந்தது. பசிக்கு அடிக்கடி இலக்காகின்றவன், சாகமாட்டாமல் கண்ணீர் விட்டுக்கொண்டே வாழ்வைக் கழிக்கிறேன். காற்றை அமுதாக உண்டு காலத்தைக் கடத்தும்படி தாழ்ந்துள்ளது வறுமை நிறைந்த என் குடும்பம். வந்த இடத்திலோ திப்பைய ராயன் என்னுடன் பேசிப் பேசி நாளைக் கழிக்கின்றானே ஒழிய, என் மனைவி மக்களின் வறுமை நிலையை எண்ணி நான் படும் வேதனையை அறிந்து நிரம்பிய பொருளோடு விரைவில் என்னை ஊருக்கு அனுப்புகின்றான் இல்லை" என்று தன்னிடம் நேரில் சொல்ல வேண்டிய துயரங்களை மேற்கண்ட பாட்டாக அவர் பாடியதை உணர்ந்து கொண்ட திப்பைய ராயன் அவர் பாடியபடி வாக்கினால் மட்டுமின்றிச் செல்வத்தினாலேயே அவரைக் குபேரனாக்கி மரியாதையுடன் அனுப்பி வைத்தான்.

பல வகையாலும் தாமும் தம் மனைவி மக்களும் துன்புறுவதை வேதனைக் கதையாகக் கண்ணீருக்கிடையே கூற வேண்டிய புலவர், அதை நயமாக, "எனக்கு இவற்றில் எவருமே நிகரில்லை" என்று உரைப்பது விசித்திரமான ஒரு மனோபாவம்.

## 42. நாகதேவன் சோற்றுக்கடை

அந்த ஊரில் நாகதேவன் சோற்றுக் கடையை விட்டால் சாப்பிடுவதற்கு வேறு சோற்றுக்கடை கிடையாது. பல காலமாக அவன் ஒருவன்தான் அங்கே சோற்றுக்கடை வைத்து நடத்தி வந்தான். அந்தத் தொழிலில் அவனுக்கு அனுபவமும் பழக்கமும் நிறைய உண்டு என்பதை அங்கே ஒருமுறை சாப்பிட்டவர்களைத் தவிர மற்ற எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். நாகதேவன் மட்டும் சாப்பிட வருபவர்களையும் அவர்கள் சௌகரியங்களையுமே கவனித்து வந்திருந்தானானால் இதுவரை அவன் இவ்வளவு பணம் சேர்த்திருக்க முடியாது! பணம் சேர்க்கும் ஆசை இல்லை என்றால் அவன் எதற்கு அந்தச் சோற்றுக் கடையைக் கட்டிக்கொண்டு அழப் போகிறான்? "அங்கே சாப்பிட்டால் அஜீரணம் கண்டிப்பாக வரும். கல்லும் நெல்லும் உமியும் கலவாத சோறு எப்படியிருக்கும் என்றே நாகதேவனுக்குத் தெரியாது! ஏறக்குறைய மூன்று மாதத்திற்கு ஒருமுறைதான் காய்கறி வாங்குவது என்று அவன் சந்தைப் பக்கம் போவான். வாங்கிவந்த கறிகாய்களை அதற்குப் பிறகு ஆறு மாதம்வரை வைத்துக் கொண்டு கடையை நடத்திவிடுவான். ஆறு மாதமசக வாடிவதங்கும் கத்தரிக்காயை வைத்துக் கொண்டே சமாளிக்கும் வித்தை அவனுக்குத் தெரியும். அவன் காய்ச்சி ஊற்றுகின்ற புளிக்குழம்பைப் பற்றியோ கேட்கவே வேண்டாம் உப்பில்லாத கஞ்சி போலிருக்கும். காம்பு ஒடிந்து போன அந்த ஆதிகாலத்து அகப்பையைக் கையில் பிடித்துக் கொண்டு அவன் குழம்பை ஊற்றும்போது அது நழுவி இலையில் விழுந்துவிடுமோ என்று சாப்பிடுபவர் பயப்படும்படியாக இருக்கும்.

அவன் சமையல் செய்யும் பாத்திரங்களின் இலட்சணத்தைப் பற்றிக் கேள்விப்பட நேர்ந்தாலே போதும்! நீங்கள் மூர்ச்சை போட்டு மயங்கித் தலைச்சுற்றி விழுந்துவிடுவீர்கள். அவ்வளவு அழுக்கும் கரியும் கறையும் தழும்பேறிப் பல காலம் சேவை செய்துவரும் சின்னங்களோடு காட்சி தரும் அவை. இலையில்

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போதே மூலையில் எங்கேயாவது ஒரு கழுநீர்ப் பானை நிறையக் கழுநீர் பாய்ந்து வர உருண்டுவிடும். உருண்டுவிட்ட கழுநீர்ப் பானையிலிருந்து வெள்ளம்போலப் பாய்ந்துவரும் நாற்றத்தோடு கூடிய பல நாள் புளித்து நுரை படர்ந்து தோன்றும் அழுக்குநீர் நேரே சாப்பிடுபவர்கள் இலையை நோக்கிப் படை எடுக்கும். அது வரும் வேகத்தைப் பார்த்த எவரும் 'அதற்கு மேலும் பொறுமையாக இலையில் உட்கார்ந்து கொண்டிருப்பது நியாயமில்லை' என்று எண்ணிக் கை யலம்பாமலே ஆற்றங்கரைப் பக்கம் ஓடிவிட வேண்டியதுதான். அப்படிச் செய்வதுதான் நியாயம். இல்லையென்றால் அங்கிருந்து தப்பிப் பிழைப்பது துர்லபம்.

அங்குள்ள சட்டி பானைகளிலும் பதார்த்தங்களிலும் ஏன் நம்முடைய இலையிலும் உடம்பிலும்கூட ஈக்கள்-வரிசை வரிசையாக அணிவகுத்து அமர்ந்து மொய்க்கும் காட்சி நேர்த்தியானது! தனிப்பட்ட 'அழகு' வாய்ந்தது! 'மொலுமொலு' என்ற ஈக்களின் அந்தச் சப்தத்தைத்தான் சொல்லுங்களேன்? என்ன குறை சொல்லமுடியும் அதன் இனிமையை? குடிக்கவோ கைகால் களைக் கழுவவோ தூய தண்ணீரை எதிர்பார்த்தால், அது நிச்சயமாக அப்படி எதிர்பார்ப்பவர்களுடைய தப்புதான். நாகதேவன் சோற்றுக் கடையில் அதெல்லாம் நடக்காது. வேணுமானால் 'அந்தக் கழுநீரை'ப் போல அவ்வளவு மோசமாக இராது, கொஞ்சம் 'சுமாரான தண்ணீர்' கிடைக்கும். அங்கே யாருக்கும் தனிப்பட்ட சலுகைகள் என்று கிடையாது. எல்லோருக்கும் இதே நிலைதான். அந்த விஷயங்களில் எல்லாம் நாகதேவன் நிரம்பக் கண்டிப்பாக இருப்பான்." இதுதான் நாகதேவன் சோற்றுக் கடை.. இதன் தூய்மையைப் பற்றி இதற்குமேல் இன்னும் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் தனிப்பாடல் திரட்டில், அவன் கடைக்கும் விஜயம் செய்து 'அனுபவித்த' புலவர் ஒருவர் இவ்வளவு செய்திகளைத்தான் அதிகார பூர்வமாகக் கூறியிருக்கிறார். அதற்கு மேல் நான் கூறினால் நாகதேவனை அது பாதிக்குமல்லவா?

"வாயிலொன்று கல்லுமொன்று நெல்லுமான அன்னமும்
வாடலாக ஆறுமாதம் வைத்திருந்த கத்திரிக்
காயிலிட்ட கறியும் உப்பிலாத கஞ்சி யன்னமும்
காம்பு ஒடிந்த ஓரகப்பை கைப்பிடித்த வண்ணமும்
தூயதாகத் துலக்கலின்றி யழுக்கடைந்த பாத்திரம்
தூக்கியுள் அசுத்தநீர் துரத்தி வந்த நேர்த்தியும்
ஓயலின்றி ஈக்கள் வீழ்ந்து மொலுமொலென்ற சட்டியும்
உடன் கொணர்ந்த நாகதேவன் ஊண் மறப்பதில்லையே."

அன்னம் = சோறு, வன்னம் = குழம்பு, வண்ணம் = காட்சி, துரத்தி = விரட்டி, ஊண் = உணவு.

*இப்படி நாகதேவன் சோற்றுக் சடைச் சாப்பாடு தமக்கு மறக்க முடியாத அனுபவமாக அமைந்ததை அந்தப் புலவர் பாடும்போது அவர்மேல் நமக்கு அனுதாபந்தான் ஏற்படுகிறது.*

## 43. சாமர்த்திய வார்த்தை

*சொல்லிலே சாமர்த்தியம் என்பது சாதாரண செயல் அல்ல. சாதுரியமும் நுணுக்கமும் சந்தர்ப்பத்திற்கேற்ற சொற் பிரயோகமும் வேண்டும். வெளிப்படைக்குச் சிறிதும் இடமில்லாமலோ, சிறிது இடங்கொடுத்தோ சாமர்த்தியத்தை வார்த்தையிலே காட்ட முடியும். ஆனால் முதன்மை என்னவோ நுணுக்கமான மறைபொருளுக்குத்தான். சாமர்த்திய வார்த்தை முற்றிலும் வெளிப்படையாக இருந்துவிடக்கூடாது.. இருக்கவும் முடியாது. சாமர்த்திய வசனங்களில் சாமர்த்தியந்தான் முடிமணிபோல நின்று தன்பொருளைத் தருதல் வேண்டும்.*

*சாமர்த்தியத்தை நிலைநாட்டிக் காட்டுவதற்கு என்றே பாடப் பெற்ற தனிப்பாடல்களும் பல உள்ளன. அவை வினா உத்தரம், சீட்டுக்கவி, சிலேடை, விடுகதை முதலிய வகைகளாக விரியும். புலவர்கள் சொற்களைப் பொருள் நுணுக்கத்தோடு பாட்டில்*

தொடுத்திருக்கும் சாதுரியத்தை இவைகளிலே காண முடியும். தெய்வீகமான முறையில் கவிதை உணர்ச்சியை உண்டாக்கும் ஆற்றல் இவைகளுக்கு இல்லையே என்று பலர் குறைபட்டுக் கொள்வர். ஆயினும் மொழியிலுள்ள வார்த்தைகளின் பலவேறு பொருள்களையும் நுண்மையான அமைப்பையும் அறிந்து கொள்ளத் துணை செய்வதில் இவைகளுக்கு ஈடு இணை கிடையாது. அப்படிப் பயன்படும் முறையில் இவைகளுக்கும் நம் கவனத்தில் இடமளித்து அனுபவிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது

'வினா உத்தரம்' என்பதற்குக் 'கேள்வி பதில்' என்று பொருள். இத்துறையில் பாடப்படும் பாடல்கள் கேள்வியையும் அதற்கு விடையையும் உட்கொண்டவைகளாக இருக்கும். கேள்விகளுக்கு வார்த்தைகளை விடையாக வகுத்திருக்கும் விதம் அழகு மிகுந்து விளங்கும். மாதிரிக்குத் திருவேங்கடநாத முதலியார் என்பவர்மேல் இராமச்சந்திர கவிராயர் பாடிய பாட்டு ஒன்றை இங்கே சந்தர்ப்பத்தோடு காண்போம்.

திருவேங்கடநாத முதலியார் பெருஞ்செல்வர். தமிழுக்கு இளகும் மலர் உள்ளம் கொண்டவர். தமிழ் படித்தவருக்கு உதவத் தயங்காத கற்பகக் கைகளைப் பெற்றவர். எனவே, தமிழ்ப் புலவர்கள் அவரை நாடித் தேடிச் சென்றது வியப்புக்கு உரிய செய்தி இல்லை. வருபவர்களை அன்போடு அளவளாவிக் குறைகளையும் வேண்டியவற்றையும் விசாரித்து உதுவுவார் அந்த வள்ளல்.

அவரை நாடி இராமச்சந்திர கவிராயரும் ஒருமுறை சென்றிருந்தார். வள்ளல்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற ஆசை இருப்பதைப் போலப் புலவர்களுக்குத் தம் சொந்த சாமர்த்தியத்தைக் காட்டவேண்டுமென்ற ஆசை இருக்கத்தானே இருக்கும்? துன்பத்தை மற்றவர்களிடம் கூறிக் கேட்கும்போது கூட, அதைத் தம் திறமையைக் காட்டும் வார்த்தைகளால் அவர் கேட்கவே விரும்புகின்றார்கள்.

தம்மை அன்போடு வரவேற்று உபசரித்த திருவேங்கடநாதப் பிரபுவிடம் இராமச்சந்திர கவிராயரும் இதே சாமர்த்திய வார்த்தையைத்தான் கூறுவதற்கு விரும்பினார். அதையும் அந்த வள்ளலின் பெயரிலேயே அமைத்துக் கூறுவதற்கு விரும்பினார். நன்றாக யோசித்து சாமர்த்தியப் பேச்சிற்கு வேண்டியவற்றைத் தமக்குள் சிந்தனை செய்து வைத்துக்கொண்டார். வழக்கப்படி செய்யவேண்டிய உபசாரங்களை எல்லாம் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் செய்து முடித்தபின், புலவர் வந்த குறிப்பை அறிவதற்கு முற்பட்டார் திருவேங்கடநாதர்.

'எது இல்லாத குறையை நீக்கிக் கொள்ளும் பொருட்டுப் புலவர் தம்மிடத்திலே வந்திருக்க வேண்டும்? அவருடைய இதயம் இப்போது எந்த நிலையில், எவ்வெண்ணத்தோடு இருக்கக்கூடும்? பாவம்! வேறு வருவாய் வசதிகள் குறைந்த இந்த ஏழைத் தமிழ்ப் புலவர் இப்போது எப்படிக் காலத்தைக் கடத்திக்கொண்டு வருகிறாரோ? பார்த்தால் இரசமற்ற வாழ்க்கையில் துன்புறுபவர் போலத் தோன்றுகின்றதே! இவருக்கு எதில், எதனால் சுவையற்றுப் போயிருக்க வேண்டும்? இவர் இப்போது நம்மிடம் என்ன சொல்லக் கருதியிருக்கிறார்?' இம்மாதிரி எண்ணங்கள் தூண்டிட குறிப்பாகப் புலவர் மனம் புண்பட்டு விடாதபடி, நளினமான வார்த்தைகளால் அவரை விசாரித்தார் திருவேங்கட நாதர். திரும்பத் திரும்ப விசாரித்ததற்குப் புலவர் கூறிய பதில் வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் அமைந்திருந்தது. மேலே கண்ட வினாக்களைச் சூசகமாக முதலியார் ஒவ்வொரு தடவையும் கேட்டு முடிக்கவும் புலவர் வேறொன்றும் பதில் கூறாமல் 'திருவேங்கடநாதா' என்று மட்டும் துயரம் நிறைந்த குரலில் சொல்லிவிட்டு வாயை மூடிக்கொண்டார். மீண்டும் மீண்டும் முதலியார் கேட்டபோதும் புலவர், 'திருவேங்கடநாதர்' என்ற அந்த ஒரே வார்த்தையைத் தவிர வேறெதுவுமே சொல்லவில்லை. 'புலவர் தம்மிடம் விளையாடுகின்றாரா? அல்லது அவருக்கு ஏதாவது சித்தப் பிரமையா?' என்று முதலியார் சந்தேகப்பட்டார்.

புலவருடைய குறை, இதயநிலை, வாழ்க்கை எவ்வாறு நடக்கிறது, சுவையற்றது என்ன, சொல்ல விரும்புவது என்ன, இந்த ஐந்து வினாக்களுக்கு அவரிடம் குறிப்பாக விடை எதிர்பார்த்த முதலியார் வெகுநேரமாகியும் 'திருவேங்கட நாதா' என்ற தம் பெயரை அழைக்கும் ஒரே வார்த்தையைத் தவிர வேறு எதையும் பெற முடியவில்லை. அவர் சோர்வும் ஏமாற்றமும் கொண்டார். முடிவில் அவருக்கிருந்த பொறுமை முழுதும் அவரிடமிருந்து நழுவியது. புலவருக்கு ஏதோ சித்தப்பிரமை என்று அவர் முடிவு கட்டிவிட்டார். இப்போது புலவர்மேல் கொஞ்சம் வெறுப்புக்கூட அவருக்கு ஏற்பட்டு விட்டது. அயர்ந்துபோய் உட்காருவதைத் தவிர அவரால் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆனால் அவர் அயர்ந்துபோய் உட்கார்ந்த பின்னும் புலவர் அவரைச் சும்மாவிடவில்லை. திரும்பவும் தாமாகவே அதே பழைய 'திருவேங்கடநாதா' என்ற ஒரே வார்த்தைப் பல்லவியைப் பாட ஆரம்பித்துவிட்டார். முதலியார் கேள்வி கேட்பதை நிறுத்திய பின்னும் முன் கூறியதைவிடப் பலத்த குரலில் 'திருவேங்கட நாதா' என்று புலவர் விடாமல் அரற்றிக் கொண்டிருந்ததைக் கண்டு அவருக்கு ஒரேயடியாகக் கோபம் வந்துவிட்டது.

சினத்தில் திரும்பவும் அதே கேள்விகளைச் சீறி விழுந்து கொண்டே புலவருக்கு முன் வீசினார். இப்போது முதலியார் வாயிலிருந்து வந்த கேள்வியின் வார்த்தைகள் ஆத்திரமும் படபடப்பும் கலந்து விளங்கின. எவ்வளவோ சாந்த குணம் உடையவராகிய திருவேங்கடநாத முதலியாரே கோபம் கொள்ளவேண்டும் என்றால் இராமச்சந்திர கவிராயர் தம் 'திருவேங்கட நாதா' பல்லவியால் அவரை எவ்வளவு தூரம் ஆத்திரம் கொள்ளச் செய்திருக்க வேண்டும் என்று பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால் கவிராயர் இப்போது புன்னகையுடனேயே ஒவ்வொரு முறையும் அந்த வார்த்தையைக் கூறினார். அவர் அவ்வாறு சிரிப்பதைக் கண்டு முதலியாருக்கு மேலும் பெருகியது ஆத்திரம். அதை வார்த்தைகளிற்

கொட்டினார் முதலியார். அதன் பிறகு புலவருக்கும் முதலியாருக்கும் நிகழ்ந்த உரையாடல் கீழ்வருமாறு;

திருவேங்கட முதலியார்: உமக்கு இல்லாதது என்ன ஐயா? சொல்லித் தொலையும்! ஏன் விடாமல் 'திருவேங்கட நாதா' என்று பிதற்றி என் உயிரை வாங்குகிறீர்? இல்லாததைச் சொல்லுமே ஐயா!

புலவர்: (ஒரே வார்த்தையில்) 'திரு' (= செல்வம்)

திருவேங்கட முதலியார் : அதனால் என்ன வந்தது உம் மனத்திற்கு?

புலவர்: வேம் (வேகும் = மனங்கொதித்து வருந்தும்)

திருவேங்கட முதலியார் : எப்படி ஐயா உண்டு காலந்தள்ளுகிறீர்?

புலவர் : கடம் (கடன் வாங்கி என்று பொருள்)

திருவேங்கட முதலியார் : எதனால், எங்கு உம்முடைய வாழ்க்கையில் ரஸமற்ற (சுவையற்ற) நிலை ஏற்பட்டது?

புலவர் : நா ( நாவுக்கு ருசியாக உணவு உண்ண வசதி இல்லை என்று பொருள்)

திருவேங்கட முதலியார் : என்ன கேட்க இங்கு வந்தீர்? அதைச் சொல்லும்?... உம்ம்ம்... நீர் சொல்ல வந்தது என்ன?

புலவர் : தா (கொடு என்று பரிசில் கேட்க வந்தேன்) அதைத் தான் இவ்வளவு நேரம் உங்களிடம் திரும்பத் திரும்பத் திரு+வேம்+கடம்+நா+தா (திருவேங்கடநாதா) என்று கூறினேன்.

புலவர் சிரித்துக் கொண்டே கூறி முடித்தார்.

**"இரவலனே! உனக்கு இல்லாத என்ன? இதயம் என்ன?**
**பரவு உணவேது? சுவையற்ற தென்ன? சொற்பான்மை என்ன?**
**தர உரை செய்திட என்றான் அதற்கு ஒன்றும் சாற்றிலன்யான்**
**வர திருவேங்கட நாதா என்றேன் பொன்வழங்கினானே"**

என்ற பாட்டு, கவிராயரிடமிருந்து பிறந்தது. சமர்த்திய வார்த்தையைப் புரிந்து கொண்டபின், புலவர் திறத்தை வியந்த வள்ளல் முதலியார் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு புலவருக்கு அவர் விருப்பப்படி வேண்டிய பொன்னை வாரி வழங்கினார்.

## 44. பெற்ற பாசம்

அம்பிகாபதியின் கதையைப் பற்றி நம்மிற் பலர் பொய்யென்றும் புனைசுருட்டென்றும் சற்று அசட்டையாகவே கருதி வருகின்றோம். கருத்தைப்பற்றிக் கூடத் தவறில்லை. அம்பிகாபதியின் காதலைப்பற்றி வழங்கும் கதையை ஒதுக்குவது இரசனைக்கு அழகு ஆகாது.

வடமொழியிலுள்ள 'பில்ஹணீயத்தை' ஒத்தது அம்பிகா பதியைப் பற்றி நாம் கேட்டுவரும் கர்ண பரம்பரையான காதல்கதை. காதலைப் பற்றிய தெய்வீக எண்ணம் அது கைகூடும்போது எழுவதைக் காட்டிலும் ஏற்றத் தாழ்வுகளால் அது கைகூடாமற் போகும்போதுதான் மிகுதியாக ஏற்படுகிறது.

காதலின் ஏமாற்றத்தை அழகாகச் சித்திரிக்கும் காவியங்கள் உலகெங்கும் உண்டு. லைலா மஜ்னூரவையும் பில்ஹணீயத்தையும் அனுபவித்து முடிந்தவுடன் காதலைப் பற்றி எந்தவிதமான தெய்வீக நினைவுகள், அபிப்ராயங்களாக மலர்கின்றனவோ, அதே நினைவு 'அம்பிகாபதி அமரவாதி' காதல் கதையின் இரசனையிலும் எழுகிறது.

"அம்பிகாபதி கவிஞர் மகன். அமராவதி சோழ வேந்தனுக்கு மகள். இந்த ஏற்றத்தாழ்வுதான் அவர்கள் காதலுக்கு நடுவில் இருந்தது. இங்கே அம்பிகாபதியின் தந்தையாகிய கம்பரோ, அங்கே அமராவதியின் தந்தையாகிய சோழ மன்னனோ இந்தக் காதல், தோன்றி வளர்ந்ததை முதலில் அறிந்தார்களில்லை. ஆனால் தானே ஒருநாள் வெளிப்பட்டது இவர்கள் காதல். கம்பர்

அம்பிகாபதியைக் கடிந்து கொண்டார். 'என்ன நிகழுமோ' என்று அஞ்சினார். சோழ வேந்தன் கடுஞ்சினங் கொண்டிருந்தான்.

'அரச குலத்தைச் சேர்ந்த தன் மகள் ஆஸ்தான கவியின் மகனைக் காதலிப்பதா? திறமையிருந்தாலும் ஏற்றத் தாழ்வு ஏற்றத் தாழ்வுதானே?' என்று சீறியது அரசன் மனம், முடிவில் சோழ வேந்தன் தன்னுடைய பேரவையில் "பரம்பொருளுணர்ச்சி தோன்ற நூறு கவிதைகளைப் பாடினால் அம்பிகாபதியைத் தண்டிக்காமல் விடுதலை செய்துவிடுகிறேன்" என்று சொன்னான். இந் நிபந்தனையை எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். நிபந்தனையில் வழுவினால் அம்பிகாபதி உயிரிழக்க நேரிடும்.

நிபந்தனை நடக்க வேண்டிய நாளில் அவையில் பெருங்கூட்டம் கூடியிருந்தது. அம்பிகாபதியின் கண்ணுக்கு மட்டும் தெரியும்படியாக அவன் அமர்ந்திருந்த மேடைக்கு நேரே எதிர்ப் புறத்தில் மேல் மாடத்தின் உப்பரிகையில் அமராவதி வீற்றிருந்தாள். அவன் ஒரு பாட்டுப்பாடி முடிக்கவும் அவள் ஒரு மலரை எடுத்துக் கீழே தன் பக்கத்தில் எண்ணிக்கைக்கு அறிகுறியாக வைத்துக் கொண்டாள். இந்த அடையாளத்தைக் கொண்டே அம்பிகாபதியும் பாடல்களை எண்ணிக் கணக்கிட்டு மேலே பாடி வந்தான். எப்போதுமே முதலாவதாகப் பாடும் காப்புச் செய்யுளை எண்ணிக்கையோடு சேர்த்துக்கொள்ளும் வழக்கமில்லை. இதை அமராவதி அறியாள். எனவே அம்பிகாபதி தொண்ணூற்றொன்பதாவது பாடல் முடிந்ததும் காப்புச் செய்யுளையும் சேர்த்து எண்ணிக் கொண்டு நூறாவது மலரைக் காட்டி முடிந்து விட்டது என்பதற்குரிய சைகையை அவள் அவனுக்குத் தெரிவித்துவிட்டாள். அம்பிகாபதி அவளுடைய அழகுத் தோற்றத்தில் ஈடுபட்டிருந்ததனாலும் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் அவளையே நம்பி இருந்ததாலும் முடிந்து விட்டது என்று எண்ணிப் பாடுவதை நிறுத்திவிட்டான். மகிழ்ச்சிக் களிப்பினால் அமராவதியின் கண்களும் அவன் கண்களும் உறவாடின.

அவையில் அமைச்சர்களும் பிற புலவர்களும் பாடலைக் கணக்கிட்டு வந்தனர். இறுதியில் அம்பிகாபதி நிபந்தனை யிலிருந்து விலகிய தவறு வெளிப்பட்டது. 'நிபந்தனையின் வெற்றி காதலுக்கே வெற்றி' என்று கனவு கண்டு கொண்டிருந்த காதலர்கள் திகைத்தனர். அம்பிகாபதி உயிரிழப்பது உறுதி என்று தெரிந்து அமராவதி உயிர்விட்டாள். கம்பர் எவ்வளவோ மன்றாடியும் கேட்காமல் சோழன் அம்பிகாபதியைக் கொலை செய்யச் சொல்லி ஆணையிட்டு விட்டான். இரண்டு காதலர்களின் உயிரும் இந்த உலகிலிருந்து ஒன்றாய்ப் பிரிந்து வானுலகு சென்றன." இதுதான் அம்பிகாபதியின் அமரகாவியம்.

இதை விளக்கும் பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் மிகுதியாக உள்ளன. அவைகளிலிருந்து இந்த வரலாற்றின் சுருக்கம் கிடைக்கிறது. அதிலும் தன் மகன் இறந்தபோது பெற்ற பாசம் உந்தக் கம்பர் பாடியதாகக் காணப்படும் செய்யுள் உருக்கந்தோய்ந்த சொற்கோவையாக அமைந்திருக்கிறது.

கம்பர் தாமே பாடிய இராமாவதாரக் கதை நிகழ்ச்சியோடு தம் மன நிகழ்ச்சியையும் ஒப்பிட்ட நிலையுடன் சோகமயமான அந்தச் செய்யுளைப் பாடுகிறார்.

"இராமன் காடு செல்வான் என்ற உணர்வு தோன்றிய மாத்திரத்தில் தசரதன் தன்னுயிரையே இழந்துவிட்டான். பெற்ற பாசத்தின் வேகம் அவனை அவ்வளவு உணர்ச்சித் தாக்குதலுக்கு ஆளாக்கிவிட்டது. ஆனால் நானோ என் மகன் அம்பிகாபதி இறந்த பின்னும் உயிர் விட மாட்டாமல் நெஞ்சு வேதனையும் தீராமல் திண்டாடுகின்றேன். என் நெஞ்சுக்குத்தான் எவ்வளவு உரம்? என்ன கல் நெஞ்சம் இது? இதற்கு உவமை காவியங்களில் கூடக் கிடைக்காதே!?" என்ற கருத்தோடு அப்பாடல் எழுந்துள்ளது.

"பரப்போத ஞாலம் ஒரு தம்பி ஆளப் பனிமதியம்
துரப்போன் ஒரு தம்பி பின்வரத் தானும் துணைவியுடன்
வரப்போன மைந்தர்க்குத் தாதை பொறாதுயிர் மாய்ந்தனன் நெஞ்
சுரப்போ யனக்கு இங்கு இனியார் உவமை உரைப்பதற்கே"

பரப்போத = கடல் சூழ்ந்த, ஞாலம் = உலகம், மைந்தன் = ராமன், தாதை = தசரதன், உரப்பு = அழுத்தம்.

என்பதே அந்தப் பாடல். 'இவை உண்மையா? இடைக் காலத்துச் செருகலா?' என்று ஆராயும் வழி நமக்கு வேண்டியதில்லை. காவியமாக எழத் தகுதி வாய்ந்த ஒரு காதல் கதைக்குப் பின்னணிச் சான்றாக அமையும் சுவை இதில் இருக்கிறது. அது போதும்.

உருக்கமும் நயமும் நிறைந்த உணர்ச்சிச் சித்திரமாக விளங்குகிறது இந்த தனிப்பாடல். இதை அனுபவிப்பது ரசிகனின் உரிமை.

## 45. தேவர்கள் கண்ணிமையாதது

**வே**ளூர் வேல் முருகன் கோவில், பிரபலமடைந்திருந்த முருகன் திருத்தலங்களுள் ஒன்றாக விளங்கியது அந்தக் காலத்தில். அங்குமிங்கும் சுற்றியலைந்து களைத்து வந்த காளமேகம், அதன் கோபுர வாசலிற் சற்று இளைப்பாரக் கருதி உட்கார்ந்தார். அவருக்கு இருந்த தளர்ச்சியில் கோவிலுக்குள்ளே போக வேண்டுமென்றுகூடத் தோன்றவில்லை. பால் காவடியும், அன்னக் காவடியும் தூக்கியவாறே நெருக்கியடித்துக் கொண்டே கோவிலுக்குள் நுழையும் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தார். அன்று கார்த்திகை நாளாகையினால் கோவிலுக்கு விசேஷப் பிரார்த்தனைக்காரர்கள் வந்துபோய்க் கொண்டிருந்தனர்.

கோயிலில் சங்கொலியும் மணிமுரசு, மேள, தாள முழக்கமும் பசியினால் அடைத்துப் போயிருந்த அவர் காதுகளையே செவிடாக்கிவிடும் போலக் கேட்டது. தூணில் சாய்ந்து உட்கார்ந்த வண்ணம் பசி மயக்கத்திலிருந்த அவரை, 'ஐயா, ஒரு செய்தி! தயவு செய்து எனக்கு அதைக் கூறுவீர்களா?' என்ற இளங்குரல் நிமிர்ந்து பார்க்கச் செய்தது. புலவர் நிமிர்ந்து பார்த்தார். எதிரே

பதின்மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் பவ்வியமாக நின்று கொண்டிருந்தான். வாரி முடிந்த குடுமியும், கைக் காப்புமாக விளங்கிய அந்தப் பையனின் அசாதாரணமான தேஜஸும் வனப்பும் காளமேகத்தை வியப்படைய வைத்தது. பையன் கையிலிருந்த பழம், பஞ்சாமிர்தம், தேங்காய் மூடிகள் இவைகளடங்கிய தட்டு, அவன் கோவிலுக்குள்ளிருந்து வருகிறான் என்பதைப் புலவருக்குக் கூறின. அவற்றைக் காணவும் அவர் உள் நாக்கில் நீர் சுரந்தது. பசி முன்னிலும் பெருகிவிட்டது போலத் தோன்றியது. இருந்தாலும் தம்மை அடக்கிக் கொண்டு பையனை முன்னே உட்காருமாறு சைகை செய்தபின், 'என்ன தம்பீ? என்ன கேட்கவேண்டும்' என்று வினாவினார். பையன் தட்டைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு உட்கார்ந்தான். புலவர் கண்கள் மீண்டும் தட்டை ஊடுருவி விட்டுத் திரும்பின.

"ஏன் ஐயா? இந்தத் தேவர்கள் எல்லாம் கண்ணிமைக்க மாட்டார்களாமே? அது ஏன் என்று எனக்குக் கொஞ்சம் விளக்க முடியுமா?" இப்படிக் கேட்டுக் கொண்டே வந்த பையன் திடீரென்று அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்து அதில் என்ன தெரிந்து கொண்டானோ? தெரியவில்லை!

"ஆமாம்! நீங்கள் சாப்பிட்டு வெகுநாள் ஆகியிருக்கும் போலிருக்கிறதே? பசிச் சோர்வு உங்கள் முகத்தில் நன்கு தெரிகிறதே! முதலில் இவற்றைச் சாப்பிடுங்கள்!" என்று தட்டை அவருக்கு முன் நகர்த்தினான்-அப்போது அந்த இளம் முகத்தின் வரி வரியான திருநீற்றுக் கோடுகளுக்கு நடுவே ஒளிர்ந்த அனுதாபம் புலவருக்கு நன்றாகத் தெரிந்தது. அதில் தெய்வீக வனப்பு இருந்ததை அவர் கண்டார்.

தட்டுத் தீர்ந்தது. அவருடைய வயிற்றுத் தட்டும் தீர்ந்தது. தட்டை நகர்த்திவிட்டுப் புலவர் வாய் நிறைய ஏப்பத்தோடு நிமிர்ந்தபோது தேக்கிலைத் தொன்னை நிறையத் தண்ணீருடன் நின்று கொண்டிருந்தான் பையன். தொன்னையை நன்றியறி வோடு கையில் வாங்கிக் கொண்ட அவர், அவன் குறு இதழ்களில் ஓடி மறைந்த தெய்வீகச் சிரிப்பொன்றைக் கண்டார். வயிறு

குளிர்ந்த கவிவாணர் பாட்டாகவே பையனுக்கு விடையைச் சொல்லிவிட்டார். அது பாதி குறும்பு கலந்த விடையாக இருந்தது.

"மருகிருக்கும் வேளூரின் வயித்தி மகன்
குறமகளை மணந்தான் என்றே
உருகி அரன் நஞ்சு உண்டான் உமையவளும்
தவம்புரிந்தான் உயர்மால்மேனி
கருகிமிக மண்தின்றான் கமலன் முகம்
நான்கானான் கடவுளோர்கள்
இருவிழியும் இமையாமல் இரவுபகல்
உறங்காமல் இருக்கின்றாரே!"

மருகு = மருக்கொழுந்துச் செடிகள் மிக வளர்ந்த, வயித்திமகன் = முருகன், குறமகள் = வள்ளி, உயர்மால் = கண்ணன், அரன் = சிவபெருமான், கருகி = மனம்வாடி, கடவுளர் = தேவர்கள்.

முருகக் கடவுள் மேல் வஞ்சப் புகழ்ச்சியாக இப்படி அவர் பாடிய பாடலில் அந்தப் பையன் விடையைக் கண்டானோ, என்னவோ? அதே பழைய புன்னகையுடன் கோவிலை நோக்கி அவன் நடந்தபோது தொலைவில் 'முருகா' என்று அலறிக் கொண்டிருந்தார் யாரோ ஒரு பக்தர்.

## 46. புலவர் போற்றிய புண்ணியன்

தொண்டைவள நாட்டைச் சேர்ந்த காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருமாகறல் இயற்கையழகு மிகுந்த ஊர். திருமாகறலையும் அதைச் சுற்றியிருந்த வேறு சில சிற்றூர்களையும் இராஜமானியமாகப் பெற்று ஆண்டு வந்தார் புண்ணிகோட்டி முதலியார் என்பவர். இளமையில் மிகவும் ஏழையாக இருந்த அவர், தாம் செய்த அரிய பெரிய செயல் ஒன்றிற்காகச் சிற்றரசன் ஒருவனிடமிருந்து இந்த மானியத்தைப் பெற்றிருந்தார். 'தம் வாழ்க்கையில் அவ்வளவு பெரிய

செல்வப்பேறும் பதவியும் தமக்கு வரமுடியும்' என்ற எண்ணம் கல்லும் நெல்லும் தூக்கிச் சுமந்து வாழ்ந்த அந்த இளமைக் காலத்தில் கனவிலேகூட அவருக்குத் தோன்றியதில்லை.

இளமையில் ஏழ்மையின் தொல்லைகளைத் தாமே நன்கு அனுபவித்து அறிந்திருந்தவர் ஆகையால், 'அப்போது எந்தப் பொருளின்றி நாம் ஏங்கினோமோ, அது இன்று நம்மிடம் வந்து சேர்ந்திருக்கின்றது! நம்மைப்போல் இன்றும் ஏங்கிக் கிடக்கும் ஏழையர்க்கும் இரவர்க்கும் அவர்களுக்கும் மேலாகக் கலைஞர் களுக்கும் கவிஞர்களுக்கும் வாரி வாரி வழங்குவோம். அதுதான் அன்று நம்மை வருத்திய செல்வத்தை இன்று நன்றாகப் பழிவாங்குவதற்கு ஏற்ற வழி என்று எண்ணினார் அவர். அப்படியே செயலாற்றியும் வந்தார். 'செல்வம்' 'செல்வம்' என்று சொல்லும் பொருளைச் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்ற மொழிக் கேற்பச் செல்லவிட்டுப் புகழடைந்து கொண்டே அவர் வாழ்க்கையைக் கழித்துவிடவேண்டும் என்று கருதினார்.

பிறருக்குக் கொடுத்து மகிழும் விருப்பத்தையே ஒரு பொழுதுபோக்காகக் கொண்டிருந்த இவரிடம் நாள் தவறினாலும் கலைஞரும் கவிஞரும் வந்து பரிசில் பெற்றுப் பழகிப்போவது தவறாது. வருகின்றவர்களின் மனப் பண்பை அறிந்து அதற்கு ஏற்றதுபோல உதவுகிற பண்பும் புண்ணிய கோட்டி முதலியாரிடம் சிறப்பாக அமைந்திருந்தது.

அன்று நடுப்பகலில் ஒரு புலவர் அவரைத் தேடிவந்தார். அப்போது வேனிற்காலம் தொடங்கும் பருவமாக இருந்ததனால், புண்ணியகோட்டி முதலியார் தம்முடைய மாளிகைக்கு முன் கோடை நாட்களுக்காக ஒரு பெரிய பந்தல் போட்டிருந்தார். பந்தலின் கீழே குளிர்ச்சிக்காக ஆற்றுமணலை வண்டிகளில் கொண்டுவந்து பரப்பிக் கொண்டிருந்தார்கள். முதலியார் அவற்றை மேற்பார்த்துக் கொண்டிருக்கிற தருணத்திலேதான் அந்தப் புலவரும் வந்து சேர்ந்தார். மாளிகை முன்குறட்டில் அமர்ந்துகொண்டிருந்த முதலியார், தாமே வலுவில் அங்கிருந்து எழுந்து வெள்ளை வெளேரென்ற புதிதாகப் பரப்பியிருந்த

ஈரமணலைத் தாண்டிப் புலவரை எதிர்கொண்டு அழைத்து வந்தார். முன்பின் அறிமுகம் உள்ளவர்களானாலும் சரி, அறிமுகம் இல்லாதவர்களானாலும் சரி, அன்போடு வரவேற்று உபசரித்து ஆதரவு கொடுப்பதுதான் அவருக்கு வழக்கமாயிற்றே!

அந்தப் பெரிய பந்தலைப்போட்டு வெம்மை தணிய ஈர வெண்மணலைப் பரப்புவதைக் கண்ணும் கருத்துமாக அவரே மேற்பார்த்துச் செய்வதற்குக்கூட அவரது கொடையுள்ளமே காரணம். வெயிலில் கால்வாட நடப்போர், உடலும் மனமும் குளிரத் தங்கிச் செல்வதற்காகவும் நீர் வேட்கையோடு வருபவர்கள் தண்ணீரும் நீர்மோரும் பருகி இளைப்பாறிச் செல்வதற்காகவுமே அவர் அந்தப் பந்தலை அவ்வளவு அக்கறையோடு கவனத்துடனே மேற்பார்த்து வேலைவாங்கினார். புதிதாக வந்த புலவர் இந்த அழகான ஏற்பாடுகளை எல்லாம் பார்த்துக்கொண்டே முதலியாருடன் திண்ணை முன்குறட்டிலே சென்று அமர்ந்தார். தரையில் பரப்பியிருந்த புது மணலில் நடந்து சென்றபோது, 'சித்திரம் வரைந்தாலும் தெளிவாகத் தெரியும் போல' இருந்த அந்தத் தூய வெண்மணல் புலவர் கவனத்தை வெகுவாகக் கவர்ந்துவிட்டது.

புலவரும் முதலியாரும் பந்தல் வேலைக்காரர்கள் மணலைப் பரப்பித் தங்கள் வேலைகளையெல்லாம் முடித்துச் சென்ற பின்னரும் மிகுந்த நேரமாக வாசல் குறட்டிலேயே அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். பின், முதலியார் புலவரை அன்போடு உணவுக்கு அழைத்துச் சென்றார். சிறிது நேரப் பழக்கத்திலேயே புலவர் முதலியாரைத் தம்மிடம் ஈடுபாடு கொள்ளச் செய்துவிட்டார்.

தம்முடைய விருந்தினராகிய புலவ்ரை உண்பித்த பின், குளிர்ச்சியாக இருக்கும் என்றெண்ணி வாயிலிற் புதிதாகப் போட்டிருந்த பந்தலின்கீழ் மணற் பரப்பில் ஒரு பட்டுக் கம்பளத்தை விரிக்கச் செய்து தாம்பூல சகிதம் புலவரோடு அமர்ந்தார் முதலியார். கீழே குளிர்ந்த மணலின் இதமும் சூழ மாளிகைக்கு முன்புறம் இருந்த தோட்டமும் கீற்றுப் பந்தலும்,

கோடையை மறக்கச் செய்துவிட்டன. தாம்பூலம் தரிக்குமாறு புலவரை வேண்டிக்கொண்டே தாமும் தரிக்கலானார் முதலியார். அதன் பின்பு அங்கேயே பந்தலில் அமர்ந்து இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். நேரம் ஆக ஆகப் புலவர் பேசும்போதே தம் கவனத்தை எங்கேயோ இலயிக்கவிட்டு விட்டுத் துயரப் பெருமூச்சு விடுவதை முதலியார் கண்டுகொண்டார். 'இவர் என்ன அவசர உதவியை வேண்டி வந்தாரோ? நாம் பேசிக்கொண்டே இருக்கிறோமே' என்று ஒருவாறு புலவருடைய மனக்குறிப்பை முதலியாரால் யூகிக்க முடிந்தது.

இதைக் கண்ட உடனே முதலியார் விநயபாவத்துடனே புலவருக்கு எந்த உதவி வேண்டுமோ அதைத் தாம் உடனே செய்யக் காத்துக்கொண்டிருப்பதாகத் தெரிவித்துக் கொண்டார். அவர் அப்படிக் கூறிய பின்னரும் புலவர் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் நாணமுற்றுத் தலைகுனிந்தவாறு இருந்தாரே ஒழிய வாய்விட்டுத் தாம் வந்த காரியத்தையோ, தமக்கு வேண்டிய அவசர உதவியையோ கேட்கிறபடியாகக் காணோம். ஆனால் அவருடைய வலது கைக் கட்டைவிரல் மட்டும் விரித்திருந்த பட்டுக் கம்பளத்தையும் கடந்து புதுமணலில் ஏதேதோ கீறிக்கொண்டிருந்தது, வாய்விட்டுச் சொல்ல அவர் வெட்கப்படுவது முதலியாருக்கும் புலப்பட்டது.

'இவருடைய முகச் சாயையில் தெரியும் துயர ரேகையைப் பார்த்தால் ஏதோ உடனடியான உதவி வேண்டி வந்தவராகத் தெரிகிறது! அதைச் சொல்லவும் நாணப்பட்டால் நாமென்ன செய்ய முடியும்?' இப்படி எண்ணிக் கொண்டிருந்த முதலியாரின் பார்வை தற்செயலாகப் புலவரின் வலது கைப் பக்கத்திலிருந்து கவரப்பட்டது. அங்கே ஏதோ எழுத்துக்கள் கீறப்பட்டிருப்பது அந்தத் தும்பைப் பூப்போன்ற வெண்மணலின்மேல் முதலியாருக்கு நன்றாகத் தெரிந்தது. கண்களில் வியப்பின் ஒளி நிழலிட முதலியார் மணலிற் கீறப்பட்டிருந்த எழுத்துக்களைக் கூட்டி வாசிக்கத் தொடங்கினார். ஆம்! புலவர் தமக்கு வேண்டிய உதவியை வாய் திறந்து கேட்கமாட்டாமல் சுருக்கமாக மணலில் எழுதியிருந்தார். மணலில் தாம் கூறியிருந்தவற்றை முதலியார்

*கவனிக்கிறார் என்பதைப் பார்த்தவுடன் புலவர் முகத்தில் மலர்ச்சி தென்பட்டது. அதே சமயத்தில் மணலில் எழுதியிருந்ததைப் படித்துவிட்டுத் தலைநிமிர்ந்த முதலியார் சிரித்த முகத்தோடு புலவரை நோக்கினார். புலவரின் கண்களிற் புதிய ஒளியும் முகத்தில் மலர்ச்சியும் இதழ்க்கடையிற் குறுநகையும் கண்டார் முதலியார். புண்ணியகோட்டி முதலியாரின் அந்தப் பார்வை மணலில் தாம் எழுதியிருந்த பொருளைத் தமக்குக் கிடைக்கும்படி செய்யும் என்ற நம்பிக்கையைப் புலவருக்கு ஊட்டியது. அந்த நம்பிக்கை தூண்ட முதலியாரின் பார்வையிலிருந்த வியப்புக்கு விடைபோல ஒரு பாடலைப் பாடினார் புலவர்.*

"நள்நிலத்(து) உறும் ஏழை மாந்தர்காள்! நீவிர்
வேண்டுவன இன்புறீஇ
நேரிற் கேள்மின் அவை
தருவன் யான் அலதும்
நாணில்எத் தினமும் நல்லமனையின் முன்வாயிலல்லி
நன்மணல் மிகுதிகொட்டியே
நாம் பரப்பியும் இங்கிருக்கின்றோம் நனிநாடி
வந்தே அதனை எழுதுமின்
காணில் அங்கு உடனருள்வம் என்ன அவன்
கட்டளைப் படியும் திட்டமாகவே
கையினால் எழுத உவகையோடு பொருள்
கண்டளித்த பிரபு யார் எனில்
பூணிலங்கும் ஒளிர் வரநதி குலத்தில்வரு
புண்யனான திகண்யனும்
புலவர் போற்று மாகறலின் மேவுமெழில்
புண்ணிய கோட்டியாம் நல்பூபனே!"

இன்புறீஇ = இன்புறுவித்து. கேள்மின் = கேட்பீர்களாக. தருவன் = கொடுப்பேன், அலதும் = அன்றியும், நாணில் = நாணமுற்றால், அருள்வம் = ஆளிப்போம், உவகை = மகிழ்ச்சி, பூண் = அணிகலன்கள், இலங்கு = விளங்கும், மாகறல் = ஊர்.

*வேனிலுக்காக முதலியார் பந்தலின் கீழ்ப் பரப்பியிருந்த புதுமணல் தமக்கும் தம்மைப்போலக் கேட்க நாணுபவர்களுக்கும் எழுதுவதற்கு என்றே பரப்பப்பட்டதாகப் புலவர் பாடிய தற்குறிப்பேற்றத் திறமை நுணுக்கமானது. தம்மை அப்படி நுணுக்கமாகப் புலவர் போற்றிய உட்பொருளை முதலியாரும் புரிந்துகொண்டு வியந்தார். அவர் மணலில் எழுதிக் கேட்ட உதவியை உடனே அளித்தும் உவந்தார்.*

*"அது என்ன உதவி?" என்பதைப் புலவரே வாய்திறந்து சொல்ல நாணமுற்று மணலில் எழுதியபோது நாம் அறிந்து கொள்வது அத்தனை அவசியமா என்ன?*

## 47. திரை விலகியது

*அந்தகக் கவி வீரராகவ முதலியார் ஊனக் கண்கள் உதவாமற்போன குருடர். ஆனால் அவருடைய ஞானக் கண்கள் எப்போதும் மலர்ந்த நிலையிலேயே இருந்தன. ஊனக் கண்கள் இல்லாத குறையால் உலகில் அவருக்கு ஏற்படவேண்டிய துன்பங்கள் ஏற்படாமல் அவர்தம் ஞானக் கண்கள் அவரைப் பாதுகாத்து வந்தன. கண்ணில்லாமல் அவர் வருத்தங்கொண்டு நெஞ்சழிந்து போகாத வண்ணம் அவருடைய மாணவர்கள் எந்நேரமும் பக்கத்திலேயே இருந்து அவருக்கு வேண்டியவற்றை வெறுப்பின்றிச் செய்து வந்தனர். அவர் கற்றிருந்த தமிழும், பெற்றிருந்த அன்பர்களும், மாணாக்கர்களும் அவருடைய சொந்தக் கண்களாக விளங்கினர். ஒரு முழு மனிதராக வாழ்வதாக எண்ணிக் கொள்ளத்தக்க மனநிறைவை அவர் இதனால் பெற்றிருந்தார்.*

*ஒருகால் அவர் பெருமையைக் கேள்விப்பட்ட ஈழநாட்டு அரசன் அவரைக் கண்டு பழகவேண்டும் என்ற கலை ஆர்வத்தோடு ஈழத்துக்கு வந்துபோக வேண்டும் என்று அவருக்கு அன்போடும் மரியாதையோடும் திருமுகம் அனுப்பி இருந்தான். வீரராகவ முதலியார் போகவேண்டும் என்று விரும்பினாலும்*

'கடல் கடக்க வேண்டிய பயணமாயிற்றே' என்று தயங்கினார். அன்பர்களிடமும் மாணவர்களிடமும் திருமுகத்தைக் காட்டச் செய்தபோது அவர்கள் யாவரும் அவரை ஈழத்திற்குப் போய் வருமாறு வற்புறுத்தி ஊக்கமளித்தனர். பற்றும் மதிப்பும் மிகுந்த மாணவர் இரண்டொருவர் அவருக்குத் தேவையான பணிவிடைகளையும் தொண்டுகளையும் செய்ய உடன் வருவதாக உறுதி கூறினர். கவிஞர் ஈழநாட்டுப் பயணத்திற்கு ஒப்புக்கொண்டார். வர ஒப்புக்கொண்டுவிட்டதாகத் தூதர் மூலம் திருமுகம் பெற்ற பரராசசிங்கன் (ஈழ வேந்தன்) வசதியான மரக்கலம் ஒன்றைத் தகுந்த மீகாமன் ஒருவனோடு அனுப்பி வைத்தான். புலவருக்குக் கடற்பயணம் புதிது. உடன்வரும் மாணவர்கள் துணையை நம்பி ஒப்புக்கொண்டிருந்த அவருக்கு மரக்கலத்துடன் வந்த மீகாமனும் வேண்டிய துணிவூட்டிப் பேசினான். மரக்கலத்தைக் கடலில் செலுத்திக் கரை சேர்க்கும் அவனுடைய உறுதிமொழிகளும் கிடைக்கவே வீரராகவ முதலியார் துணிவோடு புறப்பட்டார்.

இரண்டரை நாள் கடற்பயணம் இன்பமாகக் கழித்தபின் ஈழநாட்டை அடைந்தனர் புலவரும் அவருடைய மாணவரும் கடற்பயணத்தில் ஒரு சிறு துன்பமும் அவருக்கு ஏற்படவில்லை. குளிர்ந்த கடற்காற்றும் மரக்கலத்தில் செல்லும் இன்பமும் அவருக்கு மிகவும் திருப்திகரமாகவே அமைந்திருந்தன. புலவருக்கெனப் பரராசசிங்கன் தேர்ந்தெடுத்து அனுப்பியிருந்த அந்த மரக்கலத்தின் தலைவனாகிய மீகாமனோ அவரிடம் மிக அன்பாகவும் பணிவாகவும் நடந்து கொண்டான். மரக்கலமும் வசதிகள் நிறைந்ததாக இருந்தது.

புலவரும் அவருடைய மாணவரும் மரக்கலத்திலிருந்து இறங்கி, அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்அரண்மனையில் பரராசசிங்கனுக்கும் அவனுடைய அமைச்சர்களுக்கும் நிகழ்ந்த வாக்குவாதம் ஒன்றை நாம் இங்கே முன்னதாக அறிந்துகொள்ள வேண்டும்.

ஈழநாட்டு அமைச்சர்கள் தம் அரசனுக்குத் தாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருந்த உண்மைகளைத்தான்

சொன்னார்கள். "ஆட்சியை மேற்கொண்டிருக்கும் முடியணிந்த அரசன் ஒருவனுக்கு ஆகாது என்று விலக்கப்பட்ட அமங்கலச் செயல்கள் பல உண்டு. அவைகளை அவன் செய்தால் தன் திருவையும் ஆற்றலையும் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க நேரிடும். அரச பரம்பரையினர் தொன்று தொட்டு இக்கொள்கையை அனுசரித்து வருகின்றனர். நாங்கள் எல்லாமறிந்த தங்களிடம் இதை எடுத்துக் கூறுவதற்காக எங்கள்மேல் சினங்கொள்ளக் கூடாது. இது எங்கள் கடமை, அந்தகக் கவி வீரராகவ முதலியார் சிறந்த புலவர்தாம். அவரைப் பாராட்டுவதிலும் போற்றுவதிலும் எங்களுக்கும் மகிழ்ச்சி உண்டு; அதை நாங்கள் மறுக்கவில்லை. அன்போடு ஏற்றுக்கொள்வோம். ஆனால் அவர் ஒரு குருடர். அவரைத் தாங்களே நேரடியாகச் சந்தித்து வரவேற்பதோ, பேசுவதோ அமங்கலம்... அது தங்கள் மங்கலத்திற்கு இழுக்கு..." இப்படி அமைச்சர்கள் கூறியபோது பரராச சிங்கனுக்கு மிகுந்த சினம் வந்துவிட்டது.

"மங்கலமாவது, அமங்கலமாவது! நீங்கள் சொல்கிறபடி செய்தால் ஒரு பெரிய புலவரை வற்புறுத்தி அழைத்து வந்து அவமதிப்புச் செய்து திரும்பி அனுப்புதலாக அல்லவா முடியும்? இதனை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்." ஆத்திரமும் படபடப்பும் கொண்ட பரராசசிங்கன் இவ்வாறு அமைச்சர்களுக்கு மறுமொழி கூறினான். இவ்வாறு அரசருக்கும் அமைச்சர்களுக்கும் வாக்குவாதம் வளர்ந்து கொண்டிருந்த போதிலும் புலவ்ரை வரவேற்கக் குறித்திருந்த நேரமும் நெருங்கிவிட்டது.

ஒரேயடியாக அமைச்சர்களிடமும் முகத்தை முறித்துக் கொள்ளவும் பரராசன் துணியவில்லை. இறுதியில் அவர்கள் கூறிய இருதரப்பார்க்கும் துன்பம் அதிகமில்லாத ஒரு முடிவை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகப் போயிற்று. அரசன் புலவருடைய அண்மையிலிருந்தே அவரை வரவேற்றுப் பேசுவது போலவே பேசிப்பாராட்ட வேண்டியது, ஆனால் அப்போது அரசனுக்கும் புலவருக்கும் இடையே ஒரு மெல்லிய பட்டுத் திரை தொங்கவிடப்பட்டிருக்க வேண்டும். புலவர் குருடராகையால்

'அரசன் தம் முகத்தைப் பார்ப்பது அமங்கலமென்றெண்ணித் திரையிட்டுக்கொண்டு திரைக்குப் பின்னாலிருந்து பேசித் தம்மை அவமதிக்கிறான்' என்று அவரால் அறிந்துகொள்ள முடியாது. அரசனும் அவரை வரவேற்றுப் போற்றிவிட்டோம் என்று மன நிறைவு அடைந்துவிடலாம். அதே சமயத்தில் மங்கலக் குறைவும் ஏற்படாது. இந்த முடிவு பரராசசிங்கனுக்கு விருப்பமில்லைதான். ஆனாலும் அமைச்சர் சொல்லைத் தட்ட முடியாமல் எற்றுக் கொண்டான். அமைச்சர்கள் ஏற்பாட்டின்படியே வரவேற்பு நடந்தது. மெல்லிய பட்டுத்திரை இடையே தொங்கியதால் கண்விழித்துப் பார்த்தாலொழியப் பக்கத்தில் அமர்ந்து பேசிப் பாராட்டுவது போலவே குரல் கேட்கும். புலவருடன் வந்த மாணவர்களுக்கு 'இந்தப் பட்டுத்திரை தொங்குவதும் அத்திரைக்குப் பின் இருந்து அரசன் புலவரைப் பார்க்காமல் வரவேற்பதும்' என்ன என்றே புரியவில்லை. ஆனால் தங்கள் ஆசிரியரை அவமதிக்கும் ஏதோ ஓர் அம்சம் இதில் கலந்திருப்பதாகப் பொதுவாக அவர்கள் அறிந்தனர். கலைகள், தமிழ்க் கவிதைகள் இவைபற்றி அரசனும் வீரராகவரும் பேசிக்கொண்டே இருந்தனர். திரை தொங்குவதை எப்படியாவது குறிப்பாக ஆசிரியருக்குப் புலப்படுத்தி விடவேண்டும் என்று கருதினர் மாணவர். உடன் வந்திருந்த மாணவருள் ஒருவருக்குப் பழைய நிகழ்ச்சி ஒன்று நினைவிற்கு வந்தது. ஆசிரியருடன் சிதம்பரம் போயிருந்தபோது சிதம்பரத்துக் கோவிலில் 'சிதம்பர ரகசியம்' என்ற பகுதிக்குத் திரையிட்டு மறைத்திருந்ததையும், ஆசிரியரிடம் அதைக் கேட்டபோது 'இதுதான் தில்லைத் திருச்சிற்றம்பலம்' என்று வேடிக்கையாகப் பதில் கூறியதும், அதன்பின் 'மறைவு' என்று கூறவேண்டிய போதெல்லாம் விளையாட்டாக அவர் அவ்வாறு கூறிவருவதும் அந்த மாணவரின் நினைவில் அப்போது தோன்றின. உடனே ஆசிரியருக்குப் பக்கமாகச் சென்று தற்செயலாகக் கூறிக்கொள்வது போல அவர் காதில் விழும்படியாக 'தில்லைத் திருச்சிற்றம் பலம்' என்று அழுத்தி இரண்டு தரம் சொன்னார் அந்த மாணவர். மாணவர் ஓதிய மந்திரம் விரைவில் வேலை

செய்தது. கல்விமானான புலவர் விரைவிலேயே எல்லாம் புரிந்து கொண்டார். விரும்பியழைத்த பரராசன் தம்மைப் பார்த்தால் அமங்கலமென்று திரையிட்டுப் பேசும் அவமானம் அவர் நெஞ்சில் முள்போல குத்தியது. அந்த வேதனை உடனே ஒரு பாட்டாய் வெளி வந்தது.

"நரைக்கோட்டி ளங்கன்று
நல்வளநாடு நயந்தளிப்பன்
விரையூட்டு தார்புயன் வெற்பீழ
மன்னனென்றே விரும்பிக்
கரையோட்ட மீதில் மரக்கலம்
போட்டுன்னைக் காணவந்தால்
திரைபோட்டு நீயிருந்தாய்
சிங்கபூப சிரோமணியே."

**நயந்து = விரும்பி, விரை = மணம், தார் = மாலை, வெற்பீழம் = மலைகளை யுடைய ஈழம், சிங்கபூபன் = பரராசசிங்கன்.**

வீரராகவர் பாட்டை முடித்துக் கால்நொடிகூடக் கழிந்திருக்காது. பரராசன் தன் கையாலேயே அந்தத் திரையை விலக்கி எறிந்து விட்டு அவரிடம் ஓடோடி வந்து மன்னிப்புப் பெற்றுக் கொண்டான்.

## 48. சொல்லில் ஒரு சித்திரம்

சொற்களைத் தொடுத்து வெளியிடும் பக்குவங்களில் மிக உயர்ந்த பக்குவம் கவிதை. சொல்லிச் சொல்லிப் பல முறை அநுபவிக்க ஏற்ற ஒலி, பொருள் நயம், மந்திரம் போன்ற சொற்கள், உணர்வை ஊடுருவிச் செல்லும் உட்கருத்து, இவை ஒன்றுபடுமிடத்தில் கவிதை எழில் வடிவாய்ப் பிறந்து வருகிறது. தான் சென்று கலக்குமிடத்திலும் எழில் பெருக்குகிறது.

'சொற்களில் சித்திரம் வரைய முடியுமா? அந்தச் சித்திரத்தில் உணர்வின் சாயல்களைக் காட்ட முடியுமா? அந்தச் சாயல்களில் மென்மையும் நுணுக்கங்களும் அமைய முடியுமா?' என்றெல்லாம் சந்தேகப் படுகிறவர்கள் சிலர் இருக்கலாம். ஆனால் ஆழ்ந்து ஈடுபடுகிறவர்களுக்குக் கவிதை அனுபவம் இன்ப மயமானது.

பலவகை வண்ணங்களைக் குழைத்து வரையும் சித்திரம் போல் சொற்களில் வரையும் சித்திரம் ஒன்று உண்டு. சொற்களிலும் வண்ணம் இருக்கிறது. சொல்லுக்கு மாற்றுக் குறையாத ஆற்றல் உண்டாகும் விளைவுதான் மந்திரம். கவிதையிலும் மந்திரச் சொல்லாற்றல் அமைவதுண்டு.

பொதுவாகக் கவிகள் சொல்லில் இன்பமிருக்கிறது என்கிறார்கள். வேதாந்திகள் சொல்லில் மெய்யுணர்வு விளைகிறது என்கிறார்கள். சொற்பொருளில் மட்டும் ஆழமிருக்கிறது என்கிறார்கள், தர்க்கமும் தத்துவமும் வல்லவர்கள்.

ஆனால் சிறப்பாகத் தேர்ந்த கவிஞன் சொல்லிலும், பொருளிலும் சுவையிலும் எல்லாவற்றிலும் இன்பமிருக் கிறதென்று நிரூபிக்கிறான். சித்திரக்காரர்களுக்குத் தமிழில் 'கண்ணுள் வினைஞர்' என்று ஒரு பெயர் இருக்கிறது. தாம் செய்யும் தொழிலைக் காண்பார் கண்ணுள் நிறையும்படி ஆற்றுவதால் சித்திரக்காரர்களுக்கு இந்தப் பெயர் இட்டிருந் தார்கள். கவிகளோ தமது தொழிலை அநுபவிப்பவர்களின் கண்களிலும் மனத்திலும் சிந்தனையிலும் நிறையச் செய்து விடுகிறார்கள். அப்படி நிறையச் செய்யும்போது சொற்களிலும் சித்திரம் பிறப்பதைக் காண்கிறோம்.

இதோ அத்தகையதொரு சொற்சித்திரம்:

பழைய நாளில் மாவலிவாணன் என்று ஒரு மன்னன் இருந்தான். அவனுடைய நகரம் தென்மதுரை. ஒருமுறை அவன் போருக்குப் போயிருந்தபோது போர் முடிந்து நகருக்குத் திரும்பி வரக் காலதாமதமாயிற்று. அப்போது கார்காலம். மழை பெய்து எங்கும் குளிரும் ஈரமும் குலாவுகிற பருவம். வானில் மின்னல்கள் வாள் சுழல்வது போல் ஒளிக் கோலமிடுவதும் இடி இடிப்பதும்

*மழை பெய்வதுமாக இருந்த அந்தச் சூழ்நிலையில் எவருக்கும் வெளியேறிச் செல்லத் தோன்றவில்லை. வீட்டிலேயே அடைந்து கிடப்பதில் சுகம் காணும் பருவம்.*

*மாவலிவாணனைப் பிரிந்து வாடிய அவன் காதலி கூறியதாகக் கற்பனை செய்து ஒரு கவிஞர் கவிதை பாடியிருக்கிறார். பிரிவின் தாபத்தைச் சொற் சித்திரமாக வரையும் அழகிய கவிதை இது. சொல்லிச் சொல்லி இன்பமடையும் வார்த்தைகளால் ஆக்கப்பட்ட கவிதைகளை எத்துணைமுறை படித்தாலும் சலிப்பதில்லை. சில வைரக் கற்களின் அழகு, அவை நகைகளில் பதிக்கப்பெற்றபின் பெருகும். அதுபோல் தனித்தனியே இருந்த சொற்கள் மாவலிவாணனைப் பிரிந்து அவன் காதலி உருகுவதாகப் பாடப்பெற்ற இப்பாடலில் அழகு பெருகும் சித்திரமாக இணைந்திருக்கின்றன.*

"கன்னல் எனும் சிறுகுருவி சுகனமழைக் காற்றாமல்
மின்னல் எனும் புழுவெடுத்து விளக்கேற்றும் கார்காலம்
மன்னவனாம் தென்மதுரை மாவலி வாணனைப் பிரிந்திங்(கு)
என்ன பிழைப் பென்னநகைப் பென்னவிருப் பின்னமுமே."

*முதல் இரண்டு அடிகளில் கார்காலம் சித்திரமாக்கப் பட்டிருக்கிறது. 'மின்னல் எனும் புழு எடுத்து விளக்கேற்றும்' என்று இழுத்துப் படிக்கும்போது நம் கண் முன்னால் மேகமும் மின்னலும் சித்திரமாய் வந்து நிற்கவில்லையா? 'என்ன பிழைப்பு? என்ன நகைப்பு? என்ன விருப்பு?' என்று ஒவ்வொன்றாக அடுக்கும்போது சோகம் தொனிக்கும் அழகைத்தான் எப்படி விவரிக்க முடியும்? என்ன விருப்பு என்று வைத்துக் கொண்டாலும் சரி, என்ன இருப்பு என்று பிரித்தாலும் சரி, எப்படிப் பார்த்தாலும் அழகுதான். கடைசி அடியை அனுபவித்துப் படிக்கும்போது கன்னத்தில் கையூன்றியபடி சோகமே உருவாக அமர்ந்து 'என்ன பிழைப்பு என்ன நகைப்பு? என்ன இருப்பு?' என்று ஆற்றாமை யோடு கேட்கும் ஒரு பெண்ணின் தோற்றம் நம் கண்முன் சித்திரம் போல் தோன்றுகிறதே, இது அல்லவா மந்திரம்போற் சொல்லின்பம்.*

கனியக் கனியச் சுவை மிகுந்து இனிக்கும் பழம்போல் சொல்லிச் சொல்லி ஆழ்ந்து அனுபவிக்க வேண்டிய சொற் சித்தரம் இது. கன்னல், மின்னல் என்று மென்மையான சொற்களைச் சொல்லும்போதே வித்தில்லாத திராட்சைக் கனியை உண்பது போலிருக்கிறது.

ஓவியம் காட்சிக்கு மட்டுமே இன்பம். சொற் சித்திரமோ, கருத்துக்கும் காட்சிக்கும் அழகிய அநுபவத்துக்கும் சேர்த்து இன்பம் தருகிறது. நிறங்களை ஒன்றுபடுத்தி அழகு சமைக்கும் ஓவியர்களைக் 'கண்ணுள் வினைஞர்' என்று அழைக்கும்போது சுவைகளும் உணர்வுகளும் ஒன்றுபட்டு உருவாகும் சொற் சித்திரங்களை எழுதும் இம்மாதிரிக் கவிஞர்களைக் 'கருத்துள் வினைஞர்' என்று அழைத்தால் எவ்வளவு பொருத்தமாயிருக்கும்? அவர்கள் கண்ணுக்கு மட்டும் பார்க்க முடிந்த சித்திர மெழுதுகிறார்கள். இவர்கள் கருத்துக்கும் சேர்த்துக் கருத்தினாலும் பார்க்க முடிந்த சித்திரங்களை எழுதுகிறார்களே!

## 49. பாழடைந்த வீடு

தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டைக்கு அருகில் சாளுவ நாயக்கன் பட்டணம் என்று ஓர் ஊர் இருக்கிறது. இந்த ஊருக்குப் பெயர் ஏற்படக் காரணமான சாளுவ நாயக்கர் வாழ்ந்த காலத்தில் நடந்த ஒரு சுவையான சம்பவத்தை இந்தக் கதையில் காண்போம்.

விசய நகரப் பேரரசின் ஆட்சி தமிழ் நாட்டிலும் பரவியிருந்த காலத்தில் அவ்வரசனின் தென்னாட்டுப் பிரதிநிதிகளாகப் பலர் அங்கிருந்து அனுப்பப்பட்டிருந்தனர். ஆட்சிப் பொறுப்பையும், பிற செயல்களையும் அங்கங்கே தங்கி நிர்வாகம் செய்ய இந்தப் பிரதிநிதிகள் பயன்பட்டனர். சாளுவ நாயக்கர் இப்படிப்பட்ட வகையில் பயன்படத்தென்னாட்டில் வந்து தங்கியிருந்த காலத்தில் தத்துவப் பிரகாசர் என்றொரு புலவர் இருந்தார். அவருக்குச் சைவ

சமயத்திலே அளவற்ற பற்று உண்டு. திருஞான சம்பந்தர் என்றால் தம் உயிரினும் இனிதாகக் கருதுபவர். தன்மானப் பண்பு மிகுதியாக உள்ள புலவர் அவர்.

அருள் வலிமையால் கவி பாடும் ஆற்றலும் சமயப் பற்றும் மிகுந்த தத்துவப் பிரகாசருக்கு இலக்கணமும், மொழி மரபும் தெரியாதென்று சொல்லிப் புரளி பண்ணி அவரை வம்புக்கு இழுத்தார்கள் சிலர். அப்போதெல்லாம் சுடச்சுடப் பாட்டிலேயே பதில் சொல்லி அந்த வம்பர்களை மடக்கினார் அவர்.

தத்துவப் பிரகாசருக்குத் துணிச்சலும் துடுக்குத் தனமும் அதிகம். எப்பேர்ப்பட்ட மன்னாதி மன்னனுக்கு முன்னால் கொண்டுபோய் விட்டாலும் உண்மையைக் கூசாமல் குழையாமல் கன்னத்தில் அறைவதுபோல் சொல்லி விடுவார். இதனால் புலமைத் துறையில் அவருக்கு ஏற்பட்ட பகைகளும் எண்ணற்றவைதாம். சாளுவ நாயக்கரைச் சந்திக்க வேண்டுமென்று தத்துவப் பிரகாசருக்கு வெகுநாட்களாக ஓர் ஆசை இருந்தது. ஒருநாள் மாலை நேரத்தில் புறப்பட்டுப் போய்ச் சாளுவ நாயக்கருடைய மாளிகையை அடைந்தார் அவர். அரசப் பிரதிநிதி வசிக்கும் மாளிகை என்றால் சாதாரணமாகவா இருக்கும்? அங்கே ஆடம்பர ஆரவாரங்களுக்கு ஒன்றும் குறைவே இல்லை.

பழுத்த மரம் மேட்டிலிருந்தால் என்ன? பள்ளத்தில் இருந்தால் என்ன? அதை நாடிச் சென்றால்தானே பறவைக்குப் பசி தீரும். புலமை வாழ்க்கையும் அத்தகையதுதானே? ஆடம்பர ஆரவாரங்களைப் பார்த்துக் கூச்சப்பட்டுக் கொண்டு சும்மா இருந்துவிட்டால் வயிறு நிறையுமா?

தத்துவப் பிரகாசருக்குத்தான் கூச்சம் இருந்ததே இல்லையே. துணிவாகப் போனார். சாளுவ நாயக்கரைச் சந்தித்தார். சிரிக்கச் சிரிக்கப் பேசினார். அளவளாவினார். இலக்கியக் கருத்துக்களைக் கடல் மடை திறந்தாற்போல் அள்ளிவிட்டார்.

ஆனால் தத்துவப்பிரகாசர் சிரித்துக் கலகலப்பாகப் பழகிய அளவுக்குச் சாளுவ நாயக்கர் பழகவில்லை. அளவாகச் சிரித்து

அளவாகப் பேசித் தமது பதவியின் பெருமையையும் பணத்தின் பெருமையையும் நினைவு வைத்துக் கொண்டே பழகினார். தத்துவப் பிரகாசருக்கு அது வேதனை தந்தது.

சமயம் வரட்டும்! சரியானபடி சொல்லிக் காட்டி விடுகிறேன் என்று மனத்துக்குள் கறுவிக்கொண்டே வெளியில் வேறுபாடு தெரியாமல் பழகினார் தத்துவப்பிரகாசர்.

அன்றிரவு சாளுவநாயக்கர் மாளிகையிலேயே அவர் உணவு உண்டார். புலவர் தம் அருகே அமர்ந்து உண்ணத் தகுதியற்றவர் என்று காட்டிக் கொள்வதுபோல் நடந்து கொண்டார் நாயக்கர். தத்துவப் பிரகாசருக்குத் தன்மானக் கொதிப்பு முள்ளாகக் குத்தியது. பொறுமையைக் கடைப்பிடித்தார். புலவர் உண்டு முடிந்ததும், "உங்களுக்குப் படுத்துக் கொள்வதற்காகத் தனி வீடு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் அங்கேயே போய்ப் படுத்துக்கொள்ளலாம். நாம் மறுபடியும் நாளை காலையில் சந்திக்கலாம்" என்றார் சாளுவ நாயக்கர். புலவருடைய மனவேதனை முன்னிலும் அதிகமாயிற்று.

சாளுவ நாயக்கர் ஒரு காவற்காரனைக் கூப்பிட்டு, "அடே! புலவரை அழைத்துக் கொண்டுபோய் அவருக்காக ஏற்பாடு செய்திருக்கும் வீட்டில் படுக்கச் செய். வேண்டிய வசதிகள் செய்து கொடு" என்று உத்தரவிட்டு விட்டார். காவற்காரன் தத்துவப் பிரகாசரை அழைத்துக் கொண்டு போனான்.

தாம் படுத்துக் கொள்ளும் விடுதியாக ஏற்பாடு செய்திருந்த வீட்டைப் பார்த்தாரோ இல்லையோ, தத்துவப்பிரகாசருடைய கொதிப்பு முன்னிலும் நான்கு மடங்காகியது.

வீட்டைச் சுற்றிப் பார்த்தார். வீடா அது? ஏதோ ஒரு பாழடைந்த கட்டிடம். காலைத் தரைமேல் வைக்க வேண்டுமே என்று அசிங்கப்படுகிற அளவு புழுதி. கும்பல் கும்பலாக மூட்டைப்பூச்சி அடைந்திருந்தது. அந்த வீட்டிலிருக்கும் அவ்வளவு மூட்டைப் பூச்சியையும் ஒன்று சேர்த்தால் ஒரு கலத்துக்கு மேல் தேறும் போலிருந்தது. வீட்டின் முக்கால் பகுதி

நிறைந்திருந்த பொருள் புழுதி. எஞ்சிய கால் பகுதியில் மூட்டைப்பூச்சி. இடிந்த சுவர்கள். காரைபரியும் மேல் விட்டம். புலவருக்குப் படுப்பதற்காகப் போட்டிருந்த பாய்களோ கிழிந்து அழுக்கேறியவை. தலையணைகள் வைக்கோல் திணித்துச் செய்யப்பட்ட பீற்றல் தலையணைகள்; தையல் கிழிந்திருந்ததால் குச்சி குச்சியாக வைக்கோல் துருத்திக் கொண்டிருந்தது தலையணைகளில்.

புலவர் தத்துவப்பிரகாசர் தன் உடன் வந்த காவற்காரனைப் பார்த்துக் கேட்டார்- "ஏனப்பா! நாயக்கர் எனக்காக அரும்பாடுபட்டு இந்த அருமையான வீட்டைத் தயார்செய்தார் போலிருக்கிறது. இதோ ஒரு பாட்டு எழுதிக் கொடுக்கிறேன். அதைக் கொண்டுபோய்ச் சாளுவ நாயக்கரிடம் கொடுத்துவிடு. அதோடு வீட்டையும் பூட்டிச் சாவியையும் கொண்டு போய்க் கொடுத்துவிடலாம். நான் இங்கே படுக்கப்போவதில்லை. ஊருக்குப் போய்விட்டு வருகிறேன் என்று அவரிடம் சொல்."

தத்துவப் பிரகாசருடைய பேச்சிலிருந்த கோபக் குமுறலைக் கண்டு காவற்காரன் பயந்து விட்டான்.

"மூட்டை கலம்; புழுதி முக்காலும் சுத்தப்பாழ்
வீட்டை விடுதியாய் விட்டாயே – போட்ட
தடுக்கெல்லாம் பீறல் தலையணையோ வைக்கோல்
படுக்கலாமோ சொல்லப் பா."

(பெருந்தொகை 1640)

உள்ளத்தில் பொங்கிய கொதிப்பின் வேதனை ஓலையில் வடிந்து உருப்பெற்றது.

"கொண்டு போய் உன் எஜமானன் முகத்தில் விட்டெறி" என்று பாட்டெழுதிய ஓலையையும், வீட்டின் சாவியையும் சேர்த்துக் காவற்காரன் முன்னால் வீசி எறிந்துவிட்டு அன்றிரவே துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு ஊர் திரும்பினார் தத்துவப் பிரகாசர்.

தன் பெருமை தாழும்போது எதையும் தூக்கியெறிந்து பேசிவிட்டு நிமிர்ந்து நடக்கும் இத்தகைய நிலை ஒவ்வொரு அறிவாளியின் வாழ்விலும் ஒரு கணமாவது வந்துபோகும் நிகழ்ச்சிதான்.

## 50. திருமண விருந்து

புங்கனூர் முழுவதும் அந்தத் திருமணத்தின் சிறப்பைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். ஊரிலேயே பெரிய செல்வர் வீட்டுத் திருமணம் அது. 'புங்கனூர்க் கிழவன்' என்றால் அந்தச் சுற்றுப்புறத்து ஊர்களில் ஈடில்லாத செல்வாக்கு இருந்தது. செல்வமும் செல்வாக்கும் ஒருங்கே பெற்ற ஒருவர் வீட்டில் நடைபெறும் திருமணம் எவ்வளவு பிரமாதமாக நடக்குமோ, அவ்வளவு பிரமாதம் புங்கனூர்க் கிழவன் வீட்டுத் திருமணத்திலும் இருந்தது.

வீட்டு வாயிலில் தெருவையெல்லாம் அடைத்தாற்போல் பெரிய பந்தல். வாழை மரங்கள், மாவிலைத் தோரணங்கள், உட்காரத் தூய்மையாகப் புதுமணல் தூவிய தரை, புதுப் பாய்கள் விரித்த திண்ணை. எல்லா ஏற்பாடுகளும், நண்பர்களும் பழகினவர்களுமாகத் திருமண வீட்டில் ஒரே அமர்க்கள மாயிருந்தன. இரட்டை மேளம், இரட்டை நாகசுரம் இன்னொலி பரப்பிக் கொண்டிருந்தன. உறவினர் கூட்டம் திருவிழா போலக் கூடியிருந்தது. வந்தோர்க்கெல்லாம் வரையாமல் வழங்கும் வள்ளலாகையால் திருமண விருந்தை உண்பதற்குப் பந்தலிலும் திண்ணையிலுமாகப் பெருங்கூட்டம் காத்திருந்தது.

திண்ணையில் விரித்திருந்த பாயில் உட்கார்ந்திருந்தவர்களில் ஓர் ஏழைப் புலவரும் இருந்தார். அவர் திருமணத்துக்கு வந்திருந்தாலும் யாரும் கவனிப்பாரின்றிப் பசியோடு இருந்தார். எல்லோரும்தான் பசியோடு இருந்தார்கள். ஆனால் புலவருக்கு எல்லோரைக் காட்டிலும் அதிகமான பசி. காலையில் எதுவும் உண்ணாமல் வந்திருந்தார். பார்த்த அளவிலேயே புலவர் என்று

சொல்லிவிடத் தக்க தோற்றம் அவருக்கு. கையில் ஏடும் எழுத்தாணியும் சேர்த்துக்கட்டி வைத்துக் கொண்டிருக்கும் சுவடிக் கட்டைப் பார்த்தாலே, இவர் புலவராகத்தான் இருக்க வேண்டுமென்று கூறிவிட முடியும்.

பசியோடும் சிந்தனையோடும் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்த புலவரை ஏனென்று கேட்க ஆளில்லை. ஆரவாரம், கோலாகலம், சிரிப்பு, கேலிப் பேச்சுக்கள், கும்மாளம் எல்லாம் சுற்றியிருந்தன. சந்தனமும் அகிற்புகையும் மணந்தன. புலவருடைய மனம் மணக்கவில்லை. வயிறு மணக்கவில்லை. திருமணத்துக்கு வந்திருந்த எல்லோரும் வீட்டிலிருந்தவர்களால் வரவேற்கப் பட்டார்கள். "சாப்பிட்டீர்களா? சாப்பிடுகிறீர்களா? தாம்பூலம் வாங்கிக் கொண்டீர்களா?" என்றெல்லாம் தணிவான குரல்களால் வந்தவர்கள் அன்போடு விசாரிக்கப்பட்டார்கள்.

திண்ணையில் பாயில் உட்கார்ந்திருந்த அந்தப் புலவரை மட்டும் யாரும் விசாரிக்கவில்லை. அழையா விருந்துபோல் அநாதைபோல் உட்கார்ந்து கொண்டிருந்தார் அவர்.

காதை அடைக்கிற பசி, கண்கள் பஞ்சடைகிறார் போன்ற நிலை. 'கொஞ்சம் தண்ணீரையாவது கேட்டு வாங்கிக் குடிப்போம்' என்ற எண்ணத்துடன் சந்தனமும் தாம்பூலமும் கொடுத்துக் கொண்டிருந்த ஓர் இளைஞனைக் கூப்பிட்டு, "தம்பீ! குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் கொடு. தாகம் நாவை வறட்டுகிறது" எனக் கேட்டார் புலவர். அந்த இளைஞனுக்கு அவர் அவ்வளவு கூட்டத்துக்கு நடுவில் 'தம்பீ' என்று கூப்பிட்டது பிடிக்கவில்லை. அவன் புலவரைப் பார்த்து அலட்சியமாக முகத்தைச் சுளித்தான். ஏழையைக் கண்டால்தான் மோழையும் பாயுமே! புலமை உள்ளம் கொதித்தது. தன் அறிவு வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுவதாகத் தெரிந்தால் எந்த அறிவாளியும் உலகத்தின் முகத்தில் கரி பூசத் தயங்க மாட்டான். வயிற்றுக்கு இல்லையே என்பதுகூடப் பெரிய கவலை இல்லை புலவருக்கு. வள்ளல், குபேரன், கருணைக்கடல் என்று புகழ் பெற்ற புங்கனூர்க் கிழவன் வீட்டில் ஒரு தமிழ்ப் புலவனை 'வா' வென்று வரவேற்க ஆளில்லை. அவன் வாய் விட்டு, மனம் விட்டுக் கேட்ட

பின்னும் இலட்சியம் செய்து ஒரு குவளைப் பச்சைத் தண்ணீர் கொடுக்க அங்கு ஆளில்லை.

ஆத்திரத்தோடு புலவன் நினைத்தான்:

என்னுடைய வெறும் வார்த்தையை இங்கே கேட்பாரில்லை; கவனிப்பாரில்லை. இந்தத் திருமண வீட்டில் கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான விருந்தினர்களும், வீட்டுக்குரியவனும் என்னையே நினைத்துப் பதறும்படி செய்ய என் வார்த்தைகளுக்கு ஆற்றல் உண்டா, இல்லையா என்று பார்க்கிறேன். என்னை ஒரு மனிதனாகவே நினைத்துப் பொருட்படுத்தாமல் இருக்கும் இவர்களை நான் போகுமிடத்துக்குத் தேடிக்கொண்டு ஓடிவரச் செய்கிறேன்.

அவன் மனத்தில் வைரம் எழுந்தது. 'அழகான புங்கனூர் வெண்ணெயைத் திருடியுண்ட குற்றத்துக்காக யசோதையிடம் அடி வாங்கிக்கொண்டு, கையிலிருக்கும் திருட்டு வெண்ணெயையும், தாயின் சினம் மிக்க கண்களையும், தன் உடம்பில் அடிபட்ட புண்களையும் மாறி மாறி மருண்டு நோக்கும் கண்ணன் (திருமால்) கோவில் கொண்டிருக்கும் ஊர். அதற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லை. அப்படிப்பட்ட இந்த ஊரில் புங்கனூர்க் கிழவனின் வயல்களில் சேல்மீனும் கயல் மீனும் துள்ளிக் குதிக்கும் அத்தனை நீர்வளம் இருக்கிறது. ஆமாம்! நீர்வளம் வயலிலும், குளத்திலும்தான். இங்கே ஒரு குவளை நீர் கொடுக்க மனிதர் இல்லை. திண்ணை இருக்கிறது; விரித்த பாய் இருக்கிறது. பிறரைக் கவனிக்காத அலட்சிய மனம் நிறைந்த மனிதர்கள் இருக்கிறார்கள். கல்யாணத்துக்கென்று வந்த என் போன்ற ஏழைப் புலவனுக்குப் பசி வயிற்றைப் புரட்டுகிறது. உடம்பு குரங்கு வாதம் பிடித்தது போல் வசம் இழக்கிறது. பிரமாதமான இந்தத் திருமணத்தின் சிறப்பான அம்சம் ஒரு புலவனின் வயிற்றுப் பசி.

சிந்தித்த பின் முகத்தில் உறுதி ஒளிர, உடலில் தெம்பு பாயக் கையிலிருந்த சுவடியைப் பிரித்து ஏடும் எழுத்தாணியும் எடுத்தான் புலவன். சிரித்துக் கொண்டே எழுத்தாணியால் ஏட்டில் எதையோ எழுதினான். திண்ணையில் இருந்த மாடப்பிறையில் எல்லோர்

கண்களிலும் படும்படியாக அந்த ஏட்டை வைத்தான். யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் தெருவில் இறங்கி நடந்து விட்டான்.

அவன் போன கால்நாழிகைக்கெல்லாம் கலியாண வீடு அமளி துமளிபட்டது. மூலைக்கு மூலை கூட்டம் கூடிப்பேசிக் கொண்டு நின்றார்கள்.

"எவனோ புலவனாம். கோபத்தில் ஏதோ வசைபாடல் எழுதி வைத்துவிட்டுப் போய்விட்டானாம். புலவன் வாக்குப் பலிக்காமற் போகாதாம். அமங்கலமாக ஏதாவது நடந்து விடக்கூடாதே" என்று எல்லோரும் பயந்தார்கள். சிறிது நேரத்துக்குமுன் எந்த மனிதனுடைய வார்த்தை ஒரு குவளைத் தண்ணீருக்காக அலட்சியப்படுத்தப்பட்டதோ அந்த மனிதனுடைய பாட்டில் இருந்த வார்த்தைகள் கலியாண வீட்டிலேயே கலவரத்தை உண்டாக்கி விட்டிருந்தன. வீட்டுக்குத் தலைவனான புங்கனூர்க் கிழவனே அந்த ஓலையை வைத்துக்கொண்டு பயந்துபோய் நின்றான்.

"ஐயோ! யாராவது ஒருவர் அந்தப் புலவரைக் கவனித்து உபசாரம் செய்திருக்கக் கூடாதா? இப்படி அமங்கலச் சொல் அமையப் பாடி வைத்து விட்டாரே. இதன் விளைவு என்ன ஆகுமோ? அறிவாளியின் கண்ணீர் உலகத்தை அழிக்கும் பிரளய வெள்ளமாயிற்றே! என் வீட்டிலா இப்படி நடக்க வேண்டும்? 'புங்கனூர்க் கிழவன் திருமணத்தில் தமிழ்ப் புலவரை அவமதித்தான்' என்று தலைமுறை தலைமுறையாக இலக்கியத்தில் நிலைத்து நின்றுவிடுமே, இந்தப் பழி?" என்று கிழவன் மனம் நொந்து பரிதாபமாகக் கதறினான்.

கதறி என்ன செய்ய? அந்த வள்ளல் கதறிக் கொண்டிருந்த அதே சமயத்தில் அப் புலவன் ஆற்றங்கரையில் தண்ணீர் குடித்துவிட்டு உடலின் தாகத்தைத் தணித்துக் கொண்டும் அவமானப்பட்டு வெந்த நெஞ்சின் தாகம் தணியாமல் நடந்து கொண்டிருந்தான். வயிற்றில் பசியிருந்தாலும், கண்களில் ஒளி பஞ்சடைந்திருந்தாலும், கால்கள் நடக்க முடியாமல் தள்ளாடினாலும் அவன் உள்ளத்தில் ஒரு பெருமிதம் ஏற்பட்டது!

"*நான் புலவன்! என் துன்பங்களை இலக்கியமாக்க என்னால் முடியும். நான் வயிற்றுக்காக வாய் திறந்து கேட்டால் அவமானம். ஆனால் பாடுவதற்காக வாய் திறந்தால் உலகத்தையே கட்டி வைத்து உதைக்கிற தெம்பு உண்டு எனக்கு.*"

*அந்தத் தெம்பில் புங்கனூர் வள்ளல் வீட்டில், ஓலையில் எழுதி வைத்த பாட்டை மறுபடியும் வாய்விட்டுப் பாடிக் கொண்டே நடந்தான் அவன்.*

'வெண்ணெயும் பார்த்து அன்னை கண்ணையும்
தன் மெய்யிற்பட்ட
புண்ணையும் பார்த்திடு நெடுமால் புங்கனூர்க் கிழவன்
பண்ணையும் சேலுகளுந் தடநீள் கயல்பாயு நெடுந்
திண்ணையும் கெண்டைபுரட்டுங் கல்யாணத்திற்
சென்றவர்க்கே."

(பெருந்தொகை 1620)

**கெண்டை புரட்டுதலாவது = பசி மயக்கத்தில் வயிற்றில் ஏற்படும் குரக்கு வலிப்பு போன்றதோர் வேதனை.**

## 51. காட்டில் ஒலித்த தமிழ்க் கவி

*சோழ வள நாட்டில் திருவாரூரில் இலக்கண விளக்கப் பரம்பரை என்றால் பழைய தலைமுறையில் தமிழறிந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும். வழிமுறை வழிமுறையாகத் தமிழ் வளர்த்த பெரிய குடும்பம் அது.*

*அந்த மரபில் வைத்தியநாத தேசிகர் என்ற ஒருவர் 'இலக்கண விளக்கம்' என்ற பெயரில் ஐந்திலக்கணத்தையும் விளக்கும் நூல் ஒன்றை எழுதினார். அதனால்தான் அவருக்குப் பின் அந்த வம்சத்துக்கே இலக்கண விளக்கப் பரம்பரை என்ற பெயர் ஏற்பட்டது.*

வைத்தியநாத தேசிகருடைய மாணவர்களாயிருந்த பலர் பிற்காலத்தில் சிறந்த புலவர்களாக முடிந்தது. அவர்களில் படிக்காசுப் புலவர் என்பவரும் ஒருவர். வைத்திய நாத தேசிகருடைய புதல்வராகிய சதாசிவ நாவலரும் தம் தந்தையிடமே தமிழ்க் கல்வி கற்றார். அதனால் படிக்காசுப் புலவருக்கும் சதாசிவ நாவலருக்கும் பழக்கமும் நட்பும் இருந்தன.

கல்விப் பயிற்சி முடிந்ததும் படிக்காசுப் புலவரும் சதாசிவ நாவலரும் பிரிந்துவிட்டார்கள்.

தம் தந்தை வைத்தியநாத தேசிகர் காலமானபின் சதாசிவ நாவலர் பலருக்குத் தமிழ் கற்பிக்கத் தொடங்கினார். அவருடைய புலமையும் பெயரும் நாளுக்கு நாள் ஓங்கின.

சதாசிவ நாவலருடைய சொற்பொழிவு தேன் மழை பொழிவதுபோல் கருத்துச் செறிவோடு இனிதாக இருக்கும்.

அந்தக் காலத்தில் முறையாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படிப்பதற்குப் பல வருடங்கள் செலவிடு வார்கள். சங்கீதம் கற்றுக் கொள்பவர்கள் எப்படிக் குருவுடனேயே வாசம் செய்துகொண்டு அந்தக் கலையைப் படிப்படியாகக் கற்றுக் கொள்வார்களோ, அதேபோல் ஒரு பெரும் புலவரை அடுத்துத் தங்கிக் குருகுலவாசம் செய்கிற மாதிரி இருந்து தமிழை முறையாகப் படிப்பார்கள்.

தமிழ் கற்பிக்கும் புலவர்களும், பாடத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் மூலச் செய்யுட்களை மனப்பாடம் செய்யச் சொல்லி, மாணவர்களைக் கண்டிப்பது உண்டு. நன்னூல், காரிகை, நிகண்டு முதலியவைகளை இப்படி முன் கூட்டியே மனப்பாடம் செய்துவிடுவது மாணவர்கள் வழக்கம்.

இம்மாதிரி ஆசிரியருடனேயே உடன் தங்கிக் கற்பதில் தமிழ்க் கல்வி மட்டுமின்றி ஒழுக்கம், உலகியல், பண்பு, எல்லாம் தானாகவே ஆசிரியரிடமிருந்து மாணவனுக்குப் பழகிவிடும். தொண்டு செய்யும் பணிவும் வந்துவிடும்.

விறகு வெட்டிக் கொண்டும், வேட்டி துவைத்துக் கொண்டும், சாதகம் செய்து சங்கீதம் பழகுகிற மாதிரி நேரத்தை வீணாக்காமல் தமிழ் படித்தார்கள்.

திருவாரூர் இலக்கண விளக்கப் பரம்பரை சதாசிவ நாவலர் வீட்டில் தங்கி, நாலைந்து மாணவர்கள் தமிழ் படித்து வந்தார்கள். நாவலர் அவர்களுக்கு யாப்பருங்கலக் காரிகை என்னும் தமிழ் நூலை அப்போது கற்பித்துக் கொண்டிருந்தார். நாளைக்கு எந்தப் பகுதியைச் சொல்லிக் கொடுக்கப் போகிறாரோ, அந்தப் பகுதியை முதல்நாளே மனப்பாடம் பண்ணிவிட வேண்டுமென்று மாணவர்களுக்கு நிபந்தனை போட்டிருந்தார் சதாசிவநாவலர். மனப்பாடம் செய்யாவிட்டால் பாடம் மேலே நகராது. காரிகைச் செய்யுட்கள், கட்டளைக்கலித் துறை என்னும் பாடல் வகையைச் சேர்ந்தவை. இனிய சந்தத்தோடு படித்தால் விரைவில் மனப்பாடம் ஆகிவிடும். ஆனாலும் மாணவர்களுக்குச் சில தர்மசங்கடமான நிலைகள் ஏற்பட்டுவிடுவது உண்டு. சதாசிவ நாவலர், “நாளைக்குள் பத்துக் காரிகைச் செய்யுள் ஒப்பிக்க வேண்டும்” என்று கண்டிப்பாகக் கட்டளை இட்டிருப்பார். அதே சமயத்தில் வீட்டு வேலைகள் எதையாவது செய்யச் சொல்லிச் சதாசிவ நாவலருடைய மனைவியும் மாணவர்களுக்குக் கட்டளை இட்டு விடுவாள். அந்த அம்மாளுடைய கட்டளைகளையும் தட்டமுடியாது. மாணவர்கள் அவர்களிருவருக்குமே நல்ல பிள்ளைகளாக வேண்டும்.

இப்படிப்பட்ட சமயங்களில் இரண்டு வேலைகளையுமே சாமர்த்தியமாகச் செய்து விடுவார்கள், சதாசிவ நாவலருடைய மாணவர்கள். அதாவது நாவலரின் மனைவி எந்த வேலையைச் செய்யச் சொல்லுகிறாளோ, அந்த வேலையைச் செய்து கொண்டே ஒரே சமயத்தில் பாட்டையும் இரைந்து சொல்லி உருப்போட்டுவிடுவார்கள்.

நாவலருக்குத் தூதுவளைக் கீரைமேல் உயிர். தூதுவளை வற்றல், தூதுவளைக் காய்க் கூட்டு என்று அதைப் பல்வேறு வகையில் பக்குவப்படுத்தி உண்பார் அவர். அவருக்குப் பிடித்தமான கறிவகை அதுதான்.

நாவலருக்கு என்றைக்காவது தூதுவளைக் கீரையில் ஆசை விழுந்து விட்டதென்றால் மாணவர்கள் காட்டிலும், புதரிலும் அலைந்து தூதுவளை செடியைக் கண்டுபிடித்துக் கீரையும், காய்களும் கொண்டு வந்தாக வேண்டும். நாவலர் மனைவி, மாணவர்களைக் கூப்பிட்டுத் திடீரென்று உத்தரவு போட்டு விடுவாள்.

அன்றொரு நாள் அப்படி நடந்தது. நாவலர் நிறையக் காரிகைச் செய்யுள்களை மனப்பாடம் செய்யச் சொல்லி உத்தரவு போட்டிருந்தார். அதே சமயத்தில் தூதுவளைக் கீரை கொண்டுவரச் சொல்லி நாவலரின் மனைவியும் உத்தரவு போட்டுவிட்டாள்.

காரிகையும் ஒப்பித்தாக வேண்டும். தூதுவளைங் கீரையும் கண்டுபிடித்துக் கொண்டு வந்தாக வேண்டும். மாணவர்கள் புறப்பட்டார்கள்.

செம்மற்பட்டி என்ற இடத்துக்கருகில் காட்டில் தூதுவளைகீரை கண்டுபிடிப்பதற்காக அலைந்தார்கள். மனப்பாடம் செய்ய ஒரு சுருக்கமான வழியும் தயாராயிருந்தது அவர்களிடம். ஒருவன் கையில் காரிகை ஏட்டைக் கொடுத்து விட்டால் அவன் அதைப்பார்த்து இரைந்து படிப்பான். அவன் படித்ததைக் கூர்ந்து கேட்டுத் திரும்பத் திரும்பச் சொல்லி மற்றவர்களும் இரைந்து மனனம் செய்வார்கள்.

அலைந்து திரிந்து ஒரு மட்டில் தூதுவளை செடிகள் இருந்த இடத்தைக் கண்டுபிடித்தாகிவிட்டது. கையில் முள்பட்டுவிடாமல் தூதுவளை செடியில் காயும் கீரையும் பறிப்பதற்குப் போதுமான பழக்கம் வேண்டும். நான்கு மாணவர்கள் கீரை, காய் பறிப்பதற்காகச் செடிக்கு அருகே குனிந்து உட்கார்ந்தனர்.

மற்றொரு மாணவன் மனப்பாடம் செய்வதற்காகச் சொல்லவேண்டிய காரிகைச் சுவடியை விரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். அடுத்த விநாடியிலிருந்து அந்த அத்துவானக் காட்டின் புதர்களுக்கு நடுவிலிருந்து காரிகைத் தமிழ்க் கவி ஒலித்தது.

*புதருக்கு அப்பால் வழிப்போக்கர்கள் நடந்து செல்லும் சாலை ஒன்றிருந்தது. அந்தச் சமயத்தில் முன்பு சதாசிவ நாவலரோடு அவர் தந்தையிடம், ஒருசாலை மாணாக்கராயிருந்து கற்ற படிக்காசுப் புலவர் அவ்வழியே அவசரமாக எங்கோ போய்க் கொண்டிருந்தார். காட்டுப் புதருக்குள்ளிருந்து காரிகைப் பாடலின் ஒலியைக் கேட்டு வியந்துபோய், மேலே நடக்கத் தோன்றாமல் சாலையில் நின்று விட்டார் அவர். "இதென்ன விந்தை! மக்கள் நடமாட்டமற்ற காட்டிலிருந்து காரிகைப் பாடல் ஒலி கேட்கிறது! இங்கே வந்து யார் இதைப் பாடுகிறார்கள்?" என்று கூறிச் சாலையிலிருந்து புதருக்குள் வந்து பார்த்தார், படிக்காசுப் புலவர். யாரோ சில பிள்ளைகள் தூதுவளை காயையும் பறித்துக்கொண்டே பாடலையும் சொல்லி உருப் போடுவதைப் பார்த்தார் அவர். ஆச்சரியம் தாங்கவில்லை அவருக்கு. பக்கத்தில் ஓடிவந்து, "பிள்ளைகளே! நீங்களெல்லாம் யார்? காரியத்தையும் செய்துகொண்ட காரிகையையும் மனப்பாடம் பண்ணு கிறீர்களே?" என்று அவர்களைக் கேட்டார்.*

*"ஐயா! நாங்கள் சதாசிவ நாவலரின் மாணவர்கள்" என்று பதில் கூறினர் பிள்ளைகள். அதைக் கேட்ட படிக்காசுப் புலவருக்கு மெய்சிலிர்த்தது. தம் நண்பர் சதாசிவ நாவலரின் முகம் நினைவுக்கு வந்தது அவருக்கு. அந்தப் பிள்ளைகளைப் பார்த்து, "சதாசிவ நாவலரின் தந்தை எங்களுக்கெல்லாம் தமிழ் கற்பித்தார். சதாசிவ நாவலர் இப்போது உங்களுக்கெல்லாம் தமிழ் கற்பிக்கிறார். நீங்களோ காட்டுக்கும் செடிக்கும் தமிழ் கற்பிக்கிறீர்கள்" என்று கூறி வியந்து உடனே ஒரு கவிதையைப் பாடினார் படிக்காசுப் புலவர்.*

**"கூடும் சபையில் கவிவா ரணங்களைக் கோளரிபோல்
சாடும் சதாசிவ சற்குரு வேமுன்உன் தந்தைதம்மாற்
பாடும் புலவர்களானோம் இன்றிச் செம்மற் பட்டிஎங்கும்
காடும் செடியும் என்னோ தமிழ்க் காரிகை கற்பதுவே"**

**கவிவாரணம் = கவிகளாகிய யானைகள், கோளரி = சிங்கம், சாடும் = வெல்லும்.**

ஆம்! காடும் செடியும் தமிழ் மணக்கச் செய்து விட்டார்கள் அந்தப் பிள்ளைகள். படிக்காசரை இப்படி ஒரு பாட்டே பாடத் தூண்டி விட்டது அந்தத் தமிழ்மணம்.

## 52. சம்பந்தனுக்கு ஒரு சவுக்கடி

அந்தக் காலத்தில் திருவண்ணாமலையில் சம்பந்தன் என்று ஒரு செல்வச் சீமான் வாழ்ந்து வந்தார். அவரிடம் எவ்வளவு செல்வம் இருந்ததோ அதைவிட அதிகமாகச் செருக்கும் திமிரும் இருந்தன. பிறரையோ பிறருடைய அறிவையோ அவர் மதிப்பது கிடையாது. எதற்கெடுத்தாலும் யாரிடமும் எடுத்தெறிந்து பேசிவிடுகிற குணமுள்ளவர். தெருவில் கீழே குனிந்து பார்க்காமல் நடக்கப் பழகி விட்டவர்கள் என்றாவது ஒரு நாள் தடுக்கி விழ நேரிடுவதுபோல இந்த மாதிரிக் குணமுள்ளவர்கள் தலை குனிந்து தோற்கின்ற நிலை எப்போது வருமென்று சொல்ல முடியாது. பிறருக்கு வளைந்து கொடுக்காமல், பணியாமல் வாழ வேண்டுமென்று நினைக்கின்றவர்கள் எல்லோரும் பிறர் மட்டும் தங்களுக்கு வளைந்து கொடுத்தும் பணிந்தும் வாழ வேண்டு மென்று எண்ணுகிறார்கள். திருவண்ணாமலைச் சம்பந்தன் இந்த வகையைச் சேர்ந்த மனிதராக இருந்தார். முள் மரம்போலப் பிறரை நெருங்க விடாமல், நெருங்கினால் குத்திப் பிறருக்குப் பயன் படாமல் வாழ்வதில் அவருக்கு என்னதான் இன்பம் கிடைத்ததோ?

அவருடைய காலத்தில்தான் இரட்டைப் புலவர்கள் தமிழ் நாட்டில் ஊரூராகப் பயணம் செய்து பாடிப் பயன்பெற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் பெயர் இளஞ்சூரியர். மற்றொருவர் பெயர் முதுசூரியர். ஒருவர் குருடர், இன்னொருவர் நொண்டி. குருடர், நொண்டியைச் சுமந்து கொள்ளவேண்டும் என்றும், நொண்டி குருடருக்கு வழியிலுள்ள மேடு பள்ளங்களைச் சொல்லி வழிகாட்டவேண்டுமென்றும், இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒரு ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தார்கள். அந்த

ஏற்பாடு இரண்டு பேரும் சேர்ந்து வாழ்வதற்கு வசதியாக இருந்தது. இருவருமே கவி உள்ளம் படைத்தவர்கள். ஆகையால் கவலையை மறந்து வேடிக்கையாகச் சிரித்துப் பேசிக் கொண்டே அளவளாவி வாழ்வதற்குப் பழகியிருந்தார்கள். கண்களும் கால்களும் இல்லாத குருடரும் நொண்டியுமாக இருந்தாலும் மனத்தின் உற்சாகத்தில் நொண்டித்தனமோ, குருட்டுத்தனமோ பட்டு மூடி விடாமல் காத்துக் கொள்ளத் தெரிந்திருந்தது அவர்களுக்கு. கால்களும் கண்களும் இருந்தும் உள்ளத்தை நொண்டியாகவும், குருடாகவும் வைத்துக்கொண்டு உலகத்தில் உற்சாகமாக வாழ்வது எப்படி என்று தெரியாமல் வேதனைப் பட்டுக் கொண்டிருப்பவர்களைக் காட்டிலும் நன்றாக வாழ்ந் தார்கள் இரட்டையர்கள். இரட்டையர்களுடைய வாழ்க்கை அனுபவங்கள் மிகவும் வேடிக்கையானவை. விநோதம் நிறைந்தவை. உள்ளத்தில் பழுத்துக் கனிந்த கலை உணர்ச்சி இருந்தாலொழிய யாராலும் இப்படிக் கவலையின்றி வாழ முடியாது.

இரட்டையர்களுடைய பாடல்கள் பெரும்பாலும் இரண்டு பேரும் சேர்ந்து ஆளுக்கு இரண்டு வரிகளாகப் பாடி இணைத்தவை. முதல் இரண்டு வரிகளை இளஞ்சூரியர் பாடி நிறுத்தினால் அப்புறம், பின்னிரண்டு வரிகளை முதுசூரியர் பாடி முடிப்பார். அந்தப் பாடல்களில் குத்தல், கேலி, நகைச்சுவை, உட்பொருள் எல்லாம் நிறைந்திருக்கும். தாமரை இலைத் தண்ணீரைப்போல் உலகத்தில் வாழ்ந்துகொண்டே, அங்கு நிறைந்துள்ள ஆசாபாசங்களில் ஒட்டாமல், அவைகளை அலட்சியமாக நோக்கிச் சிரித்துக் கொண்டே போகும் போக்கை இரட்டையர்கள் இயற்றிய சில பாடல்களில் காணலாம்.

இந்த இரட்டையர்கள் ஒரு சமயம் திருவண்ணமலைக்குப் போயிருந்தார்கள். சம்பந்தனைச் சந்திப்பதற்குச் சென்றார்கள். அவர்கள் போன சமயம் அதிகாலை நேரம். சம்பந்தன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து பரிகாரியிடம் தலைச் சவரம் செய்து கொண்டிருந்தார். வாயிற்படியேறி வீட்டுக்குள் நுழைந்து விட்டார்கள் இரட்டையர்கள். அவர் சவரம் பண்ணிக்

கொண்டிருப்பதைப் பார்த்ததும் தாங்கள் வந்த சமயம் சரியில்லை என்று அவர்களுக்கே பட்டது. திரும்பிப் போய் விட்டுச் சிறிதுநேரம் கழித்து வரலாமென்று அவர்கள் திரும்ப எத்தனித்தபோது சம்பந்தனே அவர்களை நிமிர்ந்து பார்த்து விட்டார். சவரம் பண்ணிக்கொண்டிருந்த அவர் அப்படி நிமிர்ந்து தங்களைப் பார்த்துவிட்ட பிறகு தாங்கள் இன்னாரென்று அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் திரும்புவது நன்றாயிருக்காது என்று தோன்றியது, அவர்களுள் கண்ணால் பார்க்க முடிந்தவரான முடவருக்கு. எனவே அவர் சம்பந்தனைப் பார்த்து, "ஐயா! நாங்கள் இருவரும் புலவர்கள். உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தோம்" என்று கூறினார். சம்பந்தனுடைய முகத்தில் அவர்களைப் புலவர்கள் என்று அறிந்து கொண்டதற்கு அறிகுறியாக ஒரு சிறிதேனும் மலர்ச்சியோ புன்னகையோ ஏற்படவில்லை. மாறாகச் செருக்குடனே முறைத்துப் பார்த்தார்.

சம்பந்தனுடைய முகத்திலும் பார்வையிலும் இருந்த வறட்டுத் திமிரை முடவர் மட்டும்தான் காண முடிந்தது. "ஆள் மிகவும் கர்வம் பிடித்தவன் போலிருக்கிறது" என்று குருடருடைய காதருகில் நெருங்கி மெல்லச் சொல்லி வைத்தார் முடவர். குருடரும் நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டு விட்டார்.

"ஓகோ! நீங்கள் புலவர்களா? நான் ஒரு நிபந்தனை போடுகிறேன். அந்த நிபந்தனைப்படி உங்களால் ஒரு பாட்டைத் தொடங்கி முடிக்க முடியுமா?" என்று எடுத்த எடுப்பில் யாரோ கூலிக்காரனுக்குக் கட்டளையிடுகிற மாதிரி அநாகரிகமாகவும் முரட்டுத்தனமாகவும் அவர்களைப் பார்த்துக் கேட்டார் சம்பந்தன்.

வரவேற்பு, விசாரணை, அளவளாவுதல் ஒன்றுமின்றித் தங்களைப் பார்த்ததும் பார்க்காததுமாக அவர் அவ்வாறு கேட்டது அவர்கள் மனத்தைப் புண்படுத்தியது. மனம் புண்பட்டாலும் அதை இரட்டைப் புலவர்கள் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"ஐயா! உங்கள் நிபந்தனையைச் சொல்லுங்கள். பாடி முடிக்கிறோம்" என்று சிரித்தபடி சம்பந்தனைக் கேட்டனர். அவர் சொன்னார்:

'மன்' என்று தொடங்கி 'மலுக்கு' என்று முடிகிறாற் போல் ஒரு வெண்பா பாட வேண்டும். உடனே பாட உங்களால் முடியுமா?"

அவருடைய பொருளற்ற நிபந்தனையைக் கேட்டவுடன் இரட்டையர்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. முட்டாள்கள், படித்தவர்களுக்கு நிபந்தனை விதித்து, 'இப்படிச் செய்ய முடியுமா? அப்படிச் செய்ய முடியுமா?' என்று கேட்கும்போது எந்தப் படித்த மனிதனுக்கும் ஆத்திரம் வரத்தானே செய்யும்? 'இந்தப் பயலுடைய திமிரை அடக்கிச் சரியானபடி மட்டம் தட்டிவிடவேண்டும்' என்று ஒருவருக்கொருவர் இரகசியமாகக் கூறிக்கொண்டு சம்பந்தனை நோக்கி, "ஐயா! உங்கள் நிபந்தனைப் படியே 'மன்' என்று தொடங்கி 'மலுக்கு' என்று முடியுமாறு இப்போதே பாடுகிறோம்" என்று ஒப்புக் கொண்டனர்.

"எங்கே பார்க்கலாம் உங்கள் திறமையை?" என்று சவரம் பண்ணிக் கொண்டிருந்த பரிகாரி யிடமிருந்து அரை குறையாகத் தலையை விடுவித்துக் கொண்டு, இரட்டையர்களைப் பாடச் சொல்லி ஏவிவிட்டுப் பார்த்தார் வள்ளல். 'தாம் சொன்னபடியே இரட்டையர்களால் பாட முடியப்போவதில்லை' என்ற அலட்சிய நோக்குதான் அவருடைய அந்தப் பார்வையில் இருந்தது.

இளஞ்சூரியர் கீழ்க்கண்டவாறு முதல் இரண்டு அடிகளைப் பாடினார்:

"மன்னுதிரு வண்ணா மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன்?"

முதல்வருடைய குரல் முடிந்ததும் உடனே இரண்டாம வராகிய முதுசூரியர் அடுத்த இரண்டு அடிகளைக் கீழ்க்கண்டவாறு கணீரென்று சொன்னார்:

"-மின்னின்

இளைத்த இடைமடவா ரெல்லாரும் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு."

பின்னிரண்டு அடியையும் பாடி முடித்ததும், "வருகிறோம் ஐயா! வணக்கம்" என்று குத்தலாகச் சொல்லி விட்டு இரட்டையர்கள் வேகமாக அந்த இடத்திலிருந்து நழுவினர். அதற்கு மேலும் அங்கே தங்கியிருக்க அவர்களுக்குப் பைத்தியமா என்ன? சம்பந்தனுக்குத் தம்முடைய முதுகில் யாரோ சவுக்கினால் ஓங்கி அடித்துவிட்ட மாதிரி இருந்தது. வெட்கம் பிடுங்கித் தின்றது. பரிகாரிக்கு முன்னால் குருடும் நொண்டியுமாக வந்த அந்த இரண்டு பஞ்சைப் புலவர்களும் அப்படித் தம்மை அவமானப்படுத்தி விட்டார்களே என்று தவித்தார் அவர். அப்போது அவருக்கு வந்த கோபத்தில் அரை குறையாக சவரம் பண்ணிக் கொண்ட தோற்றத்தோடு மட்டும் இருக்காவிடில் தெருவில் ஓடிப்போய் அந்தப் புலவர்களைத் துரத்தியாவது, உதைத்திருப்பார் அவர்! அப்படி அந்தப் பாட்டின் அர்த்தம்தான் என்ன?

"திருவண்ணாமலையில் சம்பந்தன் ஏன் சவரம் பண்ணிக் கொள்கிறான் தெரியுமா? சிறுசிறு பெண்களெல்லாம் விளையாட்டாக அவன் குடுமியை வளைத்து இழுத்துப் பிடித்துக் கொண்டு தலையில் குட்டிவிட்டுப் போகிறார்கள். அந்தக் குட்டு வலி பொறுக்க முடியாமல்தான் சம்பந்தன் குடுமியையே சவரம் பண்ணிக் கொள்கிறான்" என்பதுதான் பாட்டின் கருத்து. எவ்வளவு குறும்புத்தனமான கற்பனை பாருங்களேன்! அந்தக் குறும்புத்தனத்திலேயே சம்பந்தன் சொன்ன நிபந்தனையும் நிறைவேறியிருந்தது!

## 53. பத்து ரூபாய் பணம்

சீர்காழி அருணாசலக் கவிராயரை இராமாயணக் கதை தெரிந்த எல்லோரும் நன்றாகத் தெரிந்து கொண்டிருப்பார்கள். அவர் இயற்றிய இராம நாடகக் கீர்த்தனைகள் தமிழ் நாட்டு

மக்களின் உள்ளங்களிலெல்லாம் சுவை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. பஞ்ச லட்சணம், தியாகேசர் வண்ணம் போன்ற வேறு சில நூல்களிலும் திறமையைக் காட்டியிருக்கிறார் அருணாசலக் கவிராயர். ஆனாலும் தமிழ்நாடு முழுவதும் அவருடைய பெயரை என்றும் மறந்துவிடாமலிருக்கும்படி அவர் செய்துவிட்டுப் போன சுவைக் காவியம் அவருடைய இராம நாடகக் கீர்த்தனைகள்தான்.

அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய கலை வாழ்வைக் குறைவின்றிக் கவனித்துத் தேவையான உதவிகளைச் செய்தவர்கள் மணலி முத்துக்கிருஷ்ண வள்ளல், பெருவணிக ராகிய தேப்பெருமாள், பாப்பைய வேள் என்போர் ஆவர். அருணாசலக் கவிராயர் 'தியாகேசர் வண்ணத்தை' உரைசெய்தபோது தேப்பெருமாள் அவருக்கு வெகுமதியளித்துப் போற்றினார். அவருடைய இராம நாடகக் கீர்த்தனை அரங்கேறுவதற்கோ மூன்று செல்வந்தர்களுமே சேர்ந்து உதவி செய்திருக்கிறார்கள்.

இராம நாடகக் கீர்த்தனைகளை எழுதிக்கொண்டு அவர் ஒவ்வொருவராகப் பார்த்து அதன் பெருமைகளைச் சொல்லிக் காட்டினார். இன்னும் சிலருக்குத் தாம் இராம நாடகத்தை இயற்றி எடுத்துக் கொண்டு வரப் போவதை முன்கூட்டியே சீட்டுக் கவிகள் மூலம் தெரிவித்திருந்தார். அந்தக் காலத்துப் புலமை வாழ்வே அப்படித்தான். ஏதாவதொரு பிரபந்தத்தை இயற்றிக்கொண்டு ஊரூராக அலைந்து பணமும், மனத்தில் கலை உணர்ச்சியும் உள்ள வள்ளல்களைச் சந்தித்து அதை அரங்கேற்றுவதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்.

இராம நாடகக் கீர்த்தனைகளை எழுதிக்கொண்டு சீர்காழி அருணாசலக் கவிராயரும் அப்படியெல்லாம் அலைந்தார். இல்லாவிட்டால் தமிழர்களுக்கு இன்று அந்த அருமையான காவியமே கிடைத்திருக்காது. அட்சர லட்சம் பெறுமான காவியத்தைக் கீர்த்தனமாகப் பாடித் தமிழுக்கு அளித்து விட்டுச் சென்றிருக்கும் அந்த மகாகவிக்கு ஒரு சமயம் பத்து ரூபாய்களுக்கு அல்லாட வேண்டியநிலை ஏற்பட்டது. கேவலம் பத்து ரூபாய்க்காக ஊரூராய் அலைந்து திரிந்தார். பத்து ரூபாய்களை

*அளித்தாலும் நிகராகாத அழகுக் கீர்த்தனங்களை எழுதிய கவி, அலைந்து திரிந்து எங்கும் பத்து ரூபாய் கிடைக்காத ஏக்கத்தோடு 'பாப்பைய வேள்' என்ற சீமானிடம் போய்க் கடைசி முயற்சியாகக் கேட்டுப் பார்க்கக் கிளம்பினார்.*

*போனார்; பாப்பைய வேளைச் சந்திக்கவும் சந்தித்தார்; "எனக்குக் கொஞ்சம் கையில் முடை, அவசரமாக ஒரு பத்து ரூபாய்ப் பணம் வேண்டும். இந்தச் சமயத்தில் நீங்கள்தான் உதவி செய்து காப்பாற்ற வேண்டும்" என்று வாய்விட்டுக் கேட்டார்.*

*பாப்பைய வேள் சிறிது சிந்தித்தார். இவ்வளவு பெரிய கவி எண்ணிப் பத்தே பத்து ரூபாய் கேட்கிறாரே என்று யோசித்தாரோ, என்னவோ? ஆனால் அருணாசலக் கவியோ பாப்பைய வேளின் தயக்கத்தைக் கண்டு அவரும் 'இல்லையென்று கையை விரித்து விடுவாரோ' என்று எண்ணி அஞ்சினார். அந்த அச்சம் அவருடைய கவி உள்ளத்தை ஒரு அழகான கவிதையைப் படைக்கச் செய்துவிட்டது. அந்தப் பாட்டில்தான் எவ்வளவு குழைவு! என்ன நைச்சியம்! எத்தனை விநயம்!*

"பத்துரூ பாயனைநேர் பாப்பையவே ளேயுனக்குப்
பத்துரூ பாயென்ன பஞ்சமோ—முத்தநகை
வீழிவாய்ப் பாலுண்ட வேந்தன் பிறந்தசீ
காழியரு ணாசலன்யான் காண்"

(பெருந்தொகை 1766)

**பத்து ரூப ஆயன் = தசாவதாரம் எடுத்த திருமால், வீழிவாய் = கொவ்வைக் கனிபோன்ற வாய், முத்தநகை = உமை, வேந்தன் = ஞானசம்பந்தன்.**

*பத்துருபாய் எத்தனையோ பேருக்குத் தேவைப்படுகிறது! ஆனால் அதை இப்படி உள்ளமும் சொல்லும் தொனியும் குழையக் குழைய ஒரு பாட்டாக்கிக் கேட்க அருணாசலக் கவியால் மட்டும் தானே முடிகிறது?*

# 54. கற்பனைக்கு ஒரு கவிதை

நாள்தோறும் கதிரவன் உதிக்கிறான். நாள்தோறும் தாமரை மலருகிறது. நாள்தோறும் குமுத மலர் கூம்புகிறது. நாள் தவறாமல் நாமும் இந்த நடைமுறைகளைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் இந்த நடைமுறைகளிலிருந்து மேலே சிந்தனையைப் படரவிட்டு நுண்ணிய கற்பனைகளைச் செய்யும் திறம் நமக்கில்லை.

இதே கதிரவனையும் தாமரைப் பொய்கையையும் பொருளாக வைத்துக்கொண்டு கவிகள்தாம் எத்தனை எத்தனை கற்பனை களைச் செய்துவிடுகிறார்கள்!

'சேற்று மண்ணில் பிறந்தும் சேறுபடாமல் நீர்மேல் தூய்மையாக மிதக்கும் தாமரைப் பூவைப்போல நீ மண்ணிற் பிறந்தாலும் மனத்தில் மண்படாமல் உயர்ந்த எண்ணங்களில் அதை நிலைநிறுத்து' என்று கற்பனையை உவமையாகப் படரவிட்டுச் சிந்திக்கிறார் ஒரு கவி.

'தண்ணீரில் கிடக்கிறவரை தாமரை இலை எத்தனை நாளானாலும் வாடுவதில்லை. சூரியனும் அதை வாட்டி உலரச் செய்வதில்லை. ஆனால் அதே தாமரை இலையைத் தண்ணீரிலிருந்து பிடுங்கிக் கரையில் எறிந்து விட்டால் முன்பு வாட்டாமல் இருந்த அதே சூரியன் கடுமையாக வாட்டிச் சருகாக்கிவிடுகின்றான். 'இடம் பெயர்ந்து தன்நிலை தடுமாறிச் செய்யத் தகாததைச் செய்தால் அறமே பகையாகி வாட்டும் என்பதை அல்லவோ இவ்வுண்மை காட்டுகிறது' என்று இன்னொரு கோணத்தில் கற்பனை செய்கிறார் ஒருவர்.

தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாமல் இருப்பதை உலக மாயையில் படியாமல் உலகத்தில் வசிப்பதற்கு வேதாந்திகள் உவமை சொல்லியிருக்கிறார்கள்.

மனத்தையும் கண்களையும் மூடிக்கொள்ளாமல் சிந்தனை யோடும், உற்சாகத்துடனும் உலகத்தைப் பார்க்கிறவர்களுக்கு

அங்கே எவ்வளவு கற்பனைகள் மலிந்து கிடக்கின்றன என்பதைப் பார்த்தீர்களா?

'இன்னின்னவற்றைப் பார்க்கத்தான் நமக்கு நேரமுண்டு; இன்னின்னவற்றைச் சிந்திக்கத்தான் நமக்கு நேரமுண்டு' என்று பணம் சேர்த்துச் சிக்கனப்படுத்துவதுபோல் மனத்தையும், சிந்தனையையும்கூடச் சிக்கனப் படுத்துவதற்குப் பழகிக்கொண்டு விட்ட நாம் அழகாக நினைத்துப் பார்ப்பதற்குக்கூட ஆற்றலில்லாதவர்களாய் இருக்கிறோம். நடைமுறைகளைச் சாதாரணமாகப் பார்த்துச் சாதாரணமாக நினைத்து மறந்து விடுகிறோம். இதனால் நமக்குக் கற்பனைகள் தோன்றுவதில்லை. தப்பித் தவறிக் கற்பனைகள் தோன்றினாலும் அவை பங்களா கட்டுவதையும், புதுக் கார் வாங்குவதையும், பணம் சேர்ப்பதையும் பற்றிய பகற்கனவுகளாகவே இருக்கின்றன. உலகத்துக் காட்சி களிலும் பொருள்களிலும், கற்பனையும் உவமைகளையும் தத்துவங்களையும் கண்டு பிடிக்கவேண்டும். அத்தகைய நோக்கத்தோடு அவற்றைப் பார்க்கவேண்டும். அத்தகைய நோக்கத்தோடு அவற்றைச் சிந்திக்கவேண்டும்.

சிந்தித்து அடைகிற அறிவநுபவம்தான் வாழ்க்கையில் பெரிய செல்வம். அதை இழந்துவிட்டு ஆசைகளில் ஊறிக் கொண்டு கிடப்பதில் என்ன இருக்கிறது?

உலகத்துக் காட்சிகளிலிருந்து தத்துவச் செறிவுள்ள உவமைகளைக் கண்டுபிடிப்பதை 'நிதரிசன அணி' என்று அணியிலக்கணக்காரர்கள் கூறுவர்.

அழகான கற்பனைக்கு இங்கே ஓர் உதாரணம் பார்க்கலாம். கதிரவன் தோன்றுகிறபோது தாமரை மலர்கிறது. தாமரையை விடச் சிறிய பூவான குமுதம் கூம்பி விடுகிறது.

சூரியனுடைய ஒளியைக் கண்டு தாமரை மலர்வானேன்? குமுத மலர் கூம்புவானேன்? காரணம் கூற முடியாத இயற்கை நியதி இது. 'தாமரைப்பூவின் இயல்பு அப்படி! குமுதப் பூவின் இயல்பு இப்படி!' என்று பொதுவாக வேண்டுமானால் காரணம்

கூறலாம். ஒரு புலவன் இந்த நடைமுறையிலிருந்து அழகான உவமையைக் கண்டுபிடித்துச் சொல்கிறான். அவனுடைய சிந்தனையின் ஒப்புநோக்கும் திறமை நம்மை வியப்பிலாழ்த்துகிறது.

பிறருடைய செல்வம் வளர்ச்சியடைதலைக் கண்டு பெரியோர்கள் முகமலர்ந்து வரவேற்பார்கள். சிறியோர்கள், 'இந்தப் பயலுக்கு இவ்வளவு செல்வம் வருவதா?' என்று முகத்தைச் சுளிப்பார்கள்.

தாமரைப் பிறர் செல்வங்கண்டு மகிழ்ந்து முகமலரும் பெரியோர்போல் சூரியனைக் கண்டு மலர்கிறது. குமுதம், பிறர் செல்வங்கண்டு முகம் சுளிக்கும் சிறியோர்போல் சூரியனைக் கண்டு மூடிக்கொள்கிறது.

இந்தக் கற்பனையழகு செறிந்த உவமை எவ்வளவு அரிதாக இருக்கிறது பார்த்தீர்களா! சிந்தனைதான் பெரிய செல்வம். அதை வளர்க்க வேண்டும். இதோ அந்தக் கவிதை.

"பிறர்செல்வம் கண்டாற் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும்—அறிவுறீ இச்
செங்கமலம் மெய்ம்மலர்ந்த தேங்குமுதம் மெய்யயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது."

அழகாகக் கற்பனை செய்து பழகுவது மனத்துக்கு நல்லது. ஆசைகளைக் கற்பனை செய்து மனத்தில் அழுக்கைச் சேர்க்காதீர்கள். அழகுகளைக் கற்பனை செய்து மனத்தில் தூய்மை சேருங்கள்!

## 55. நலிவும் நாணமும்

புதுக்கோட்டைச் சீமையில் விராலிமலை என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. அவ்வூரில் எழில் வாய்ந்ததொரு குன்றின்மேல் தமிழ் முருகன் கோவில் கொண்டிருக்கிறான். குன்றின்மேல் கண்

பார்வை செல்லுமிடமெல்லாம் மயில்கள் தோகை விரித்து ஆடும் காட்சியை விராலிமலையில் காணலாம். விராலிமலை முருகனைப் பற்றி ஏழைத் தமிழ்ப் புலவர் ஒருவர் அக்காலத்தில் பாடியிருக்கும் பாடலில் சிறியதோர் அநுபவக்கதை அடங்கியிருக்கிறது. உணர்ச்சித் துடிப்பும் உயிரோட்டமும் உள்ள நிலையை அந்தக் கவிதையில் காண்கிறோம்.

உலகத்தில் இரண்டு வகை வாழ்க்கையைப் பார்க்கிறோம். மனத்தை மட்டும் நிறைத்துக் கொண்டு வயிற்றை நிறைத்துக் கொள்ள வழி தெரியாதவர்கள் ஒரு பக்கம். வயிற்றை நிறைத்துக் கொள்ள வேண்டிய வசதி இருந்தும் மனத்தை நிறைத்துக் கொள்ள வழி தெரியாதவர்கள் ஒரு பக்கம். ஒரு மனிதன் ஏழையாக மட்டும் இருக்கலாம், அல்லது அறிவாளியாக மட்டும் இருக்கலாம். ஆனால் அறிவாளியாகவும் ஏழையாகவும் சேர்த்து இருப்பதைப் போல் வேதனை வேறு இல்லை. ‘வயிற்றுக்காக நாலுபேரிடம் ஏதாவது கேட்டு வசதிகளைப் பெறு’ என்று ஏழ்மை தூண்டும். ‘கேட்பதும் கைநீட்டிப் பெறுவதும்கேவலம்’ என்று அறிவும் நாணமும் தடுக்கும். ‘யாரிடமாவது எதையாவது உதவி பெற்று வருவதற்குப் போ’ என்று தூண்டும் தரித்திரமும் ‘போகாதே’ என்று பின்னுக்குப் பிடித்திழுக்கும் நாணமுமாக ஊசலாடுகிற வாழ்க்கையில் நிம்மதி எப்படி இருக்க முடியும்? அறிவினால் பெருமிதம் பிறக்கிறது. ஏழ்மையால் இழிவும் தாழ்வு மனப்பான்மையும் பிறக்கின்றன. அறிவினால் சேர்த்துச் செழிக்க வைத்த பெருமிதம் பசியினாலும், இல்லாமையாலும் போய் விடக்கூடாதே என்று கவலைப்படும் நினைவினால் நாணம் பிறக்கிறது.

அந்தக் காலத்தில் விராலிமலையிலிருந்த ஏழைத் தமிழ்ப் புலவரொருவருக்கு இப்படியோர் அநுபவம் ஏற்பட்டது. மனத்தில் புலமை, வீட்டில் ஏழ்மை. அக்கம்பக்கத்து ஊர்களில் வள்ளல்கள் பலர் இருந்தார்கள். வெட்கப்படாமல் அவர்களிடம் போய்க் கேட்டால் ஏதாவது உதவி செய்வார்கள். சும்மா போய்க் கேட்க முடியுமா? ‘கற்பகத் தருவே! சிந்தாமணியே!’ என்றெல்லாம் அந்த வள்ளல்களை வாயாரப் புகழ்ந்து சொல்லி அப்புகழ்ச்சியில்

அவர்கள் மயங்கி நெகிழ்ந்து போயிருக்கும் நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, "வீட்டில் மிகவும் வறுமையான நிலை. ஏதாவது கொடுத்து உதவுங்கள்" என்று குழைந்து பல்லெல்லாம் தெரியக் காட்டிக் கேட்க வேண்டும். எப்படித் துணிந்து கேட்பது? 'எப்படியாவது கேட்கத்தான் வேண்டும்' என்று தரித்திரம் அவரை முன்னால் தள்ளியது.

'வெட்கத்தைவிட்டு இப்படிக் கேட்கலாமா?" என்று அறிவும் அறிவுக்குரிய நாணமும் அவரைப் பின்னுக்கு இழுத்தன.

இப்படித் தரித்திரம் முன்னுக்கு இழுக்க, நாணம் பின்னுக்கு இழுக்க, என்ன செய்வதென்று தெரியாமல் தெருவிலும் இறங்காமல் வீட்டுக்குள்ளும் திரும்பாமல் வாயிற்படியிலேயே தயங்கி நின்றார் புலவர்.

அவருக்கு எதிரே விராலிமலை-மீது குன்றுதோறாடும் குமரனின் கோவில் தெரிந்தது.

"முருகா! நீ என்னை ஏழையாக மட்டும் படைத்திருக்கலாம். அல்லது அறிவாளியாக மட்டும் படைத்திருக்கலாம். அறிவாளியாகவும் ஏழையாகவும் சேர்த்துப் படைத்து இப்படி ஏன் வதைக்கிறாய்?" என்று முருகனுடைய குன்றத்தை நோக்கி முணுமுணுத்தார் புலவர்.

நெடுநேரம் வாயில்படியில் தயங்கி நின்றபின் புலவர் வீட்டுக்குள் திரும்பவும் இல்லை. வள்ளல் வீட்டுக்குப் பொருளுதவி கேட்கச் செல்லவும் இல்லை. இரண்டையுமே செய்யாமல் நடுவாக மலைக்குப் போகும் வழியில் நடந்தார். வேகமாக மலையேறி முருகன் சந்நிதிக்கு முன்னால் வந்தார். தரித்திரம் பிடித்துத் தள்ளவும், நாணம் போகவிடாமல் தடுக்கவும், ஊசலாடும் தமது மனம் பட்ட வேதனையை முருகனிடமே கூறினார். முருகனிடமே உருகினார். குழந்தைக்குத் துயரமானால் தாயிடம் உருகும். தாய்க்குத் துயரமானால் தெய்வத்தைத் தவிர வேறு யாரிடம் போய் உருகுவது? அறிவையும் இல்லாமையையும் சேர்த்துக் கொடுத்து அந்த முரண்பாடுகளிடையே தன்னை வாட்டிய தெய்வத்தையே இப்படிக் கேட்டார் அவர்:

"கர் என்றும் சித்தாமணி என்றும் சொல்லி என் கையில் அள்ளித்
தா என்று கேட்கத் தரித்திரம் பின் நின்று தள்ளி எனைப்
போ என்று உரைக்கவும் நாணம் அங்கே என்ன போவதிங்கு
வா என்று இழுக்கவும் வந்தேன் விராலி மலைக் கந்தனே!"

*'இரண்டில் எதைச் செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. உன்னிடம் வந்துவிட்டேன். எனக்கு ஒரு வழிசொல்!' என்று பாட்டிலிருந்து ஒரு தொனி கேட்கவில்லையா உங்களுக்கு? ஊசலாடுகிற மனப் போராட்டத்தை வெளியிடும் தமிழ்க் கவிதைகளில் மிக அழகான கவிதை இது.*

## 56. என்ன கல்நெஞ்சம் இது?

*'கம்பர் அம்பிகாபதி பற்றி வழங்கும் தனிப்பாடல்கள் மெய்யோ? பொய்யோ?' என்னும் ஆராய்ச்சி இங்கு வேண்டுவதன்று. ஆராய்ச்சிக்கும் கவிச் சுவைக்கும் வெகுதூரம். அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்துக் கொண்டு ஆராயத் தொடங்கிவிட்டால் யந்திர உணர்ச்சிதான் வளரும். கவியுணர்ச்சி, அனுபவிக்கும் முனைப்பு இரண்டும் செத்துப் போய்விடும். விஞ்ஞானியின் மனநிலையோடு கவிதையைப் படிப்பதும், கவியின் மனநிலையோடு விஞ்ஞானத்தில் ஈடுபடுவதும் முடியாத காரியங்கள்.*

*சிந்தனைக்கு விருந்தளிக்கும் அழகிய பாடல் ஒன்று கம்பர் அம்பிகாபதி கதைகளிடையே சிக்கிக் கிடக்கிறது. சிந்திக்கச் சிந்திக்க அழகும் நயமும் தருகிற கவிதை அது. கம்பர் தமக்குத் தாமே பாடிக் கொண்டு கண்கலங்கிய முறையில் அப்பாடல் அமைந்திருக்கிறது. அந்தப் பாடலில் ஓர் இதயத்தின் குமுறல் உள்ளமுருக்கும் விதத்திலே தொனிக்கிறது. கவிநாயகராகிய கம்பர்பெருமான் தமக்குள் அழுது தவிக்கின்ற சோகத்தை அந்தப் பாடலிலிருந்து நாம் அறிய முடிகிறது.*

இராமாயணக் காவியத்தில் தசரதனுக்கு நேர்ந்த தாங்க முடியாததொரு துன்பத்தைக் கம்பர் தம் கவிதைகளால் உணர்ச்சி துடிக்க எழுதியிருந்தார். மகனைப் பிரியும்போது ஒரு தந்தைக்கு உண்டாகும் துன்ப உணர்ச்சியை வேறு எந்தக் கவியும் எழுத முடியாது என்பது போலக் கம்பர் எழுதிப் பெயர் பெற்றுவிட்டார் என்பது உலகறிந்த உண்மை.

கைகேயியின் கொடுமையாலே இராமன் பதினான்கு ஆண்டுகள் காடு செல்ல நேர்ந்ததும், அது பொறாமல் தசரதன் உயிர் நீத்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் இராமாயணக் காவியத்தில் முக்கியமான கட்டங்கள் அல்லவா?

அதே மாதிரி ஒரு சம்பவம் கம்பருடைய சொந்த வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்டது. தசரதனுக்கு ஏற்பட்டதை விடக் கொடுமையான முறையில் கம்பருக்கு அந்தத் துன்பம் ஏற்பட்டது. ஆனால் தசரதன் செய்ததுபோல் கம்பரால் அந்தத் துக்கத்தில் தோய்ந்து மனம் தவிக்க முடியவில்லை. 'அப்படி முடியவில்லையே' என்பதற்காகக் கம்பரே வருந்துகிறார். அந்த வருத்தத்தை எதிரொலிப்பதுபோல் கம்பர் பாடிய ஒரு பாடலைத்தான் இங்கே காணப்போகிறோம்.

சோழ மன்னன் மகளைக் காதலித்த குற்றத்துக்காகக் கம்பருடைய மகன் அம்பிகாபதி தண்டனை அடைந்து இறந்து போகிறான். ஒரே மகனை இழந்த பாசத்தில் நெஞ்சு துடித்து வேகின்றார் கம்பர்.

'கண்ணுக்குக் கண்ணான மகனை இழந்த பின்னும் நான் துடிதுடித்துச் சாகாமல் உயிரோடு நின்று கொண்டிருக்கிறேனே! எனக்கு எத்தனை கல்லான நெஞ்சம்? நாட்டிலிருந்த மகன் காட்டுக்குப் போனதற்கே பொறுக்காமல் தசரதன் இறந்தான் என்று என்னுடைய இராமாயணத்தில் எழுதினேனே! அப்படி எழுதிய நானா என் மகனை இறப்புக்குக் கொடுத்த பின்னும் இப்படி உயிர் தரித்து நின்று கொண்டிருக்கிறேன்? எனக்கு என்ன நெஞ்சுரப்பு?' என்று மனம் அவரைக் கசக்கிப் பிழிந்தது. 'தசரதனுக்கு இருந்த மகப் பாசம் தமக்கு இல்லாமற் போய்

*விட்டதே' என்பதை எண்ணும்போதுதான் கம்பர் தாம் மாபெரும் கவிஞர் என்ற நிலையிலிருந்து கீழிறங்கிச் சாதாரண மனிதனுக்குரிய தாபங்களை அடைவது தெரிகிறது.*

*மகன் இறந்த போதும் கலங்கித் தவிக்காத தமது நெஞ்சுரத்தைக் கம்பர் பாராட்டிக் கொள்ளவில்லை. 'மகன் இறந்த அந்தக் கணத்திலேயே தம் உயிர் போகாமல் இன்னும் உடலில் தங்கி இருந்து தொலைக்கிறதே!' என்றுதான் அவர் வருந்துகிறார். தாம் சாமான்ய மனிதனாக இல்லாத தன் குறை அவரை வாட்டுகிறது. கவியாக இருந்ததற்காக அவர் அப்போது வருத்தப்பட்டார். ஆனால் அந்த வருத்தமும் ஒரு கவிதையாகவே வெளிவருகிறது.*

"பரப்போத ஞாலம் ஒருதம்பி யாளப் பனிமதியம்
துரப்போன் ஒருதம்பி பின்வரத் தானும் துணைவியுடன்
வரப்போன மைந்தற்குத் தாதை பொறாது
உயிர்மாய்ந்தனன் நெஞ்சு
உரப்போ எனக்கு இங்கு இனியார் உவமை உரைப்பதற்கே!"

(தனிப்பாடல்)

*ஒரு மகாகவி சாதாரண மனிதனைப்போல் தன் சொந்த மனத்தவிப்பை வெளியிடுகிற அழகு பாடலில் எவ்வளவு அற்புதமாகப் பதிந்திருக்கிறது, பார்த்தீர்களா?*

## 57. பண்பாடு தெரிந்தவர்

*புறக்கருவிகளின் வசதிகளும் வாழ்க்கையில் வேகமும் வளர வளர மற்றவர்களுக்குப் பயன்படவேண்டும் என்ற எண்ணம் சமூக வாழ்வில் குறைந்து கொண்டே வருகிறது. பிறரைக் கவனிக்காமல் பிறருடைய இன்ப துன்ப உணர்ச்சிகளைப் பொருட்படுத்த வாழ்வதே ஒருவகை நாகரிகம் என்று நம்முடைய நகரங்கள் கற்றுக் கொடுத்துவிட்டன.*

ஒரு சில தலைமுறைகளுக்கு முன் இருந்த தமிழ் நாட்டு வாழ்வு வேறு; இப்போதுள்ள வாழ்வு வேறு. பழைய தலைமுறையில் ஏழைகளாக இருந்தும் வள்ளலாக வாழ முயன்ற மனிதர்கள் இருந்தார்கள். இப்போதோ வள்ளலாக இருக்கத் தகுதியுள்ளவர்களும் ஏழைகளைப் போல் வாழ விரும்புகிறார்கள். தம் பெருமையையும் நிலையையும் பிறருக்கு உதவுவதற்காகத் தாழ்த்திக் கொள்ளக் கூடாதே என்று எண்ணுகிற காலம் இது.

ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்னால் மற்றவர்களுக்கு உதவி செய்வதுதான் பண்பாடு என்று கருதிய ஒரு மனிதரைப்பற்றி இங்கே பார்க்கலாம். அப்படிப்பட்ட மனிதர்கள் நமது இன்றைய சமூகத்தில் இல்லாவிட்டாலும் பழைய பாடல்களிலும் இலக்கியங்களிலும் இருக்கிறார்கள்.

தொண்டை நாட்டு மறவனூரில் அரங்கேச வள்ளல் என்ற பிரபு ஒருவர் இருந்தார். அந்த ஊரிலேயே பெருஞ்செல்வராதலால் ஊர்மக்கள் அவரிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். அந்த மதிப்புக்கும் மரியாதைக்கும் ஏற்பப் பண்பும் ஒழுக்கமும் நிறைந்தவராக அவர் வாழ்ந்து வந்தார். பிறருக்கு இயன்றவரை உதவி செய்து வாழ்வதுதான் பண்பாடு என்று எண்ணுபவர் அவர். பிறரோடு பழகுவதிலும் பேசுவதிலும் எளிமையாக நடந்து கொள்வார்.

அவருடைய உள்ளம் எவ்வளவுக்குக் கருணைமயமானது என்பதை விளக்குவதுபோல் ஒரு சம்பவம் நடந்தது. புலவர் குடியிற் பிறந்த பாணன் ஒருவன் மறவனூருக்கு வந்தான். அவனுடைய சொந்த ஊர் எங்கோ வெகு தொலைவில் இருந்தது. ஊற்றார் உறவினர்களைப் பிரிந்து நாடோடியாகத் திரிந்து சுற்றிக் கொண்டிருந்தான் அவன். மெலிந்த உடல் அவனுக்கு. அதில் நோய்கள் வேறு அடிக்கடி வந்து பற்றிக் கொண்டு விடும்.

மறவனூரில் சில நாட்கள் தங்கியிருந்த அந்தப் பாணன், ஒரு நாள் யாரும் எதிர்பாராத விதமாக இறந்து போனான், இன்னிசை பொழிந்த அவன் உடல் பிணமாகிக் கிடந்தது. உற்றார், உறவினரில்லாத நாடோடிப் பாணனின் பிணத்தை யார்

எடுப்பார்கள்? ஊரில் எல்லோரும் அந்த அனாதைப் பிணத்தை வேடிக்கை பார்த்துவிட்டுப் போனார்கள். ஒருவருக்காவது அந்தப் பிணத்தை அப்புறப்படுத்தி அதற்கு முறையாகச் செய்ய வேண்டிய ஈமச் சடங்குகளைச் செய்ய வேண்டுமென்று தோன்றவே இல்லை. காலம் கடந்துகொண்டே இருந்தது. அந்த நிலையில் அரங்கேச வள்ளலுக்கு இந்தச் செய்தி எட்டியது. எல்லோரும் 'அனாதைப் பிணம்தானே' என்று கேவலமாக நினைத்ததுபோல் அவரால் அலட்சியமாக இருக்க முடியவில்லை. அவர் பண்பாடு தெரிந்தவர். அதற்கேற்ப நடந்து காட்டினார். நாலைந்து மூங்கிற் கழிகளையும் அரிவாளையும் எடுத்துக்கொண்டு சவம் கிடந்த இடத்துக்கு அவர் தனியாகச் சென்றபோது ஊரே ஆச்சரியப்பட்டது. கழிகளை வெட்டி இணைத்துப் பாடையை அவரே கட்டினார். அவரே அப்படிச் செய்ததைப் பார்த்தும் 'நான், நான்' என்று போட்டி போட்டுக் கொண்டு ஊரார் அவருக்கு உதவி செய்ய முன்வந்தார்கள். அவர் யாரையும் அருகில் நெருங்க விடவில்லை.

"ஒரு தமிழ்ப் புலவரின் சவத்தைத் தனியாகச் சுமந்து சென்று ஈமச் சடங்கு செய்யும் பெருமையை எனக்கு மட்டுமே கொடுங்கள்" என்று தனியாகவே அந்தச் சடலத்தைச் சுமந்துகொண்டு போய்த் தம் உறவினருக்கு உரிமையோடு செய்கிற மாதிரி ஈமக் கடன்களெல்லாம் தாமே செய்தார் அரங்கேச வள்ளல். அப்படிச் செய்ததில் அவருக்கு இணையற்ற பெருமிதம் ஏற்பட்டது. எல்லோரும் கேவலமானது என்று கைவிட்டு விட்ட காரியத்தை அவர் செய்தபோது உயர்வானதாக்கிப் பெருமை தேடிக்கொண்டார். தொண்டு செய்கிற மனிதனுக்குத் தான் செய்கிற காரியத்தைச் 'சாமானிய மனிதர்கள் கேவலமாக நினைப்பார்களே' என்ற கூச்சம் இருக்கக்கூடாது. தன்னுடைய எண்ணத்தின் உயர்வால் தியாகத்தின் சிறப்பால் தான் செய்கிற காரியத்தையும் பெருமைப்படுத்தி விடவேண்டும், அதுதான் பண்பாடு.

"உறவைப் பிரிந்து வந்தே இறந்தான்
அங்கொரு புலவன்

மறவைப் பதிநதி வங்கிசத்தோன்
அரங்கேச வள்ளல்
அறவைப் பிணஞ்சுடல் தான்செய்
எண்ணாண்கின் அறத்ததென்றோ
பிறர்கைக் கொடாமல் எடுத்தான்
அப்பாணன் பிணத்தி னையே.''

(பெருந்தொகை 1230)

மறவை = மறவனூர், நதிவம்சம் = கங்கை, மரபு = எண்ணாண்கின் முப்பத்திரண்டு அறம்.

*அரங்கேச வள்ளல் மாய்ந்த பின்னும் அந்தப் பண்பாட்டின் பெருமை மாயாமல் பாட்டில் வாழ்கிறது மேற்கண்டவாறு! உண்மைப் புகழ் என்றுமே அழிவதில்லையே!*

## 58. சொல்லிக் காட்டினார்!

*அக்காலத்துச் சேது நாட்டின் தலைநகரான இராமநாத புரத்தில் ஆதி சரவணப் பெருமாள் கவிராயர் என்று ஒரு கவிஞர் இருந்தார். அவர் படிப்பைப் போலவே தன்மானமும் மிகுந்தவர்; அட்டாவதானி என்ற சிறப்பும் பெற்றிருந்தவர். எந்த இடத்திலாவது தம் தகுதி, குறைவாக மதிப்பிடப் பெற்றுத் தாம் கீழான முறையில் நடத்தப் பெறுவதை உணர்ந்தால் அங்கே அவருடைய உள்ளம் குமுறும். தாம் குறைவாக நடத்தப்பட்டதைத் தம்மைக் குறைவாக நடத்தியவர்களுக்குச் சொல்லிக் காட்டிவிட நா துடிக்கும். அஞ்சாமல் முகத்தில் அறைந்தாற்போல் சொல்லிக் காட்டிவிட்டுத்தான் திரும்புவார்.*

*ஒரு சமயம் மலையாள தேசத்தின் கோநகரமாகிய திருவனந்தபுரத்துக்குப் போயிருந்தார் ஆதி சரவணப்பெருமாள் கவிராயர். அக்காலத்துத் திருவனந்தபுரம் பகுதியில் யாவருக்கும் தமிழ்மொழி நன்கு தெரிந்திருந்தது. தமிழ்க் கவிகளைப் புரிந்து*

கொள்கிற அளவு தமிழுணர்ச்சி இருந்தது. அப்போது அரசராக இருந்த வீரகேரள மன்னரை ஆதிசரவணப் பெருமாள் கவிராயருக்கு நன்கு தெரியும். அந்த மன்னர் சிறிது காலத்துக்கு முன் இராமேசுவரத்துக்குச் சேது தரிசன யாத்திரை வந்திருந்தார். அந்தக் காலத்தில் எப்பேர்ப்பட்ட பெரு மன்னனாயினும் சேது தரிசன யாத்திரை முடிந்து திரும்பும்போது சேதுபதியரசரைச் சந்தித்து வணங்கி அளவளாவிவிட்டுப் போக வேண்டும் என்பது ஐதீகமாக இருந்தது. சேதுகாவலர் என்ற புனிதப் பெயர் சேதுபதிகளுக்கிருந்தது.

எனவே சேது யாத்திரை வந்திருந்த வீரகேரள மன்னர், தமது யாத்திரையை முடித்துக்கொண்டு சேதுபதியைச் சந்திப்பதற்காக இராமநாதபுரத்து அரண்மனைக்கு வந்தார். அப்போது சேதுபதி இராசராசேசுவரி பூசைக்காக ஏழு நாள் வெளியேறாமல் மௌன விரதமும், பிற நோன்புகளும் பூண்டு உள்ளேயே இருந்ததன் காரணமாக மலை நாட்டு வீரகேரள மன்னர் ஏழு நாட்கள் இராமநாதபுரத்தில் காத்துக் கிடக்க வேண்டியதாயிருந்தது. மலையாள தேசத்துக்கே அரசனான அந்த மாமன்னன் சேதுபதி அரண்மனை வாயிலில் ஏழுநாள் தரிசனத்துக்குக் காத்திருந்த செய்தி ஆதிசரவணப் பெருமான் கவிராயருக்குத் தெரியும். ஒவ்வொரு தினமும் தாம் புலவர் என்னும் உரிமையுடனே அரண்மனைக்குள் நுழையும்போது வாயிலில் காத்து நிற்கும் வீரகேரள மன்னனைப் பரிதாபத்தோடு பார்த்துக்கொண்டே நுழைந்திருக்கிறார் கவிராயர். கடைசியில் எட்டாவது நாள் வீரகேரள மன்னன் சேதுபதியைச் சந்தித்து அளவளாவி விட்டுத் தன் நாடு திரும்பினான்.

அதே வீரகேரள மன்னனுடைய திருவனந்தபுரத்துக்குத் தற்போது நம் கவிராயர் வந்திருக்கிறார். ஊரெல்லாம் சுற்றிப் பார்த்தார். அநந்த பத்மநாப சுவாமி கோவிலுக்குப் போய்த் தரிசனம் செய்தார். கடைசியாக அரண்மனைக்குப்போய் வீரகேரள மன்னனையும் பார்த்து வரலாம் என்று கிளம்பினார். புலவர்கள் வந்து பார்க்கும்போது அந்தப் புலமையை மதித்து ஏதாவது மரியாதை செய்வது அரசர்கள் வழக்கம். அதனால்

புலவர்கள் தயக்கமோ, கூச்சமோ இல்லாமல் எத்தனை பெரிய நிலையில் உள்ளவர்களையும் சந்திக்கக் கிளம்பி விடுவது இயல்பாக இருந்தது. ஆனால் அன்று ஆதிசரவணப் பெருமாள் கவிராயர் வீரகேரள மன்னனைச் சந்திக்கப்போன வேளை சரியாக இல்லை. அரசன் ஏதோ கோபமாக இருந்தான். என்னதான் கோபமாக இருந்தாலும் வந்தவர்களை முகம் மலர வரவேற்பதுதான் பண்புக்கு அழகு. ஆனால் பண்பைப் பற்றி அவன் அதிகமாகக் கவலைப்படவில்லை.

“யாரையா நீர்? உமக்கு எந்த ஊர்? இங்கு எதற்காக வந்தீர்? என்ன வேணுமென்று சொல்லித் தொலையும்” என்று துரத்தியடிக்கிற வேகத்தோடு விசாரித்தான் வீரகேரள மன்னன். புலவருக்கு முகம் சுருங்கிச் சிறுத்தது. மனத்தில் ஆத்திரம் எழுந்தது. ‘இரு! இரு! உன்னைச் சரியானபடி மடக்கித் தலைகுனியப் பண்ணுகிறேன்’ என்று மனத்துக்குள் கறுவிக்கொண்டு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தார்.

“பதில் செல்லுமேன் ஐயா! வாயில் கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது? உமக்கு எந்த ஊர்?”

“என் ஊரையா கேட்கிறீர்கள்? சொன்னால் வருத்தப் படக்கூடாது. உள்ளபடியே சொல்கிறேன். முன்பொருநாள் நீங்கள் சேதுபதியின் தரிசனத்துக்காக ஏழு நாட்கள் அநாதைபோல் வாயிலில் வந்து காத்துக் கிடந்தீர்களே, அந்த இராமநாதபுரத்து வித்துவான் யான்” என்று கோபத்தோடு சொல்லிக் காட்டுவதுபோல் கடுமையான கருத்துபடத் தொடங்கிய புலவர் பாடலின் பிற்பகுதியில் சிறிது புகழ்ச்சியையும் சேர்த்துக்கொண்டு விட்டார். முன்னோர் புகழை அவன்மேற் கூறித் தப்புகிறார்.

“இலைநாட்டு வேல்கரத்துச் சேதுபதி
தரிசனத்துக்கு ஏழுநாள் ஓர்
மலைநாட்டு ராசன் வந்து காத்திருந்த
வாசல் வித்துவான் யான்கண்டாய்

கலைநாட்டிற் பெண்ணெனவே செய்தசர
ணாசனகன் கன்னிக் காகச்
நிலைநாட்டி வளைத்தபுய வீரகேரளமார
செயசிங்கேறே!"

*திட்டுவதைக்கூட எத்தனை அழகாகத் திட்டியிருக்கிறார்கள் இந்தத் தமிழ்ப் புலவர்கள்? புலமை என்கிற பலம் எவ்வளவு நயமாக இடித்துச் சொல்லிக் காட்டும் உரிமையைத் தந்திருக்கிறது, பார்த்தீர்களா?*

## 59. மனத்தைத் திருப்பி அனுப்புங்கள்

*மாயூரம் வேதநாயகம் பிள்ளை என்று சொன்னால் தமிழர்களுக்கு உடனே 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவல் நினைவுக்கு வரும்; அவருடைய நீதிநூற் பாடல்கள் நினைவுக்கு வரும். கருத்துச் செறிவுள்ள கீர்த்தனைகள் நினைவுக்கு வரும். முன்சீப்பாக வேலை பார்த்தவர் அவர். தம்முடைய காலத்தில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை போன்றவர்களிடமெல்லாம் நெருங்கிப் பழகியவர். அழகிய உரைநடையும் பாடல்களும் எழுதுகிற திறமை உள்ளவர்.*

*பொதுவாகவே பெரிய உத்தியோகங்களிலும் பதவிகளிலும் இருப்பவர்களுக்கு இலக்கியச் சுவை, கவி ஆர்வம் இவைகளெல் லாம் அதிகமாக இருப்பதற்கு வாய்ப்பில்லாமற் போய்விடும். வேதநாயகம் பிள்ளை இதற்கு விதிவிலக்காக வாழ்ந்தார். அவர் தமக்கு வேண்டியவர்களுக்குக் கடிதம் எழுதினால்கூட அந்தக் கடிதத்தைக் கவிதைகளாலேயே எழுதுவார். அவருடைய காலத்தில் மாயூரத்துக்கு அருகில் திருவாவடுதுறை மடத்தில் சுப்பிரமணிய தேசிகர் என்னும் தவச்செல்வர் குரு மகா சந்நிதானமாக இருந்தார். அந்த நாட்களில் தமிழ் நாட்டில் சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் வளர்க்கப் பாடுபட்ட மடங்களில் அதுவும் ஒன்று.*

வேதநாயகம் பிள்ளை கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவருக்குத் திருவாவடுதுறை மடத்திலே நெருங்கிய பழக்கம் இருந்தது. உரிமைகளும் வசதிகளும் படிப்பறிவும் பெருகியுள்ள இந்த நாளில்தான், சாதி சமயப் பாகுபாடுகளும் குழப்பங்களும் பெருகியுள்ளன. அந்தக் காலத்தில் ஒற்றுமை இருந்ததென்பதற்குக் கிறிஸ்தவரான வேதநாயகம் பிள்ளையும், சைவ மடாதிபதியான சுப்பிரமணிய தேசிகரும் பழகிக் கொண்ட முறையே சான்று. ஒரு சமயம் மாயூரம் பகுதிகளில் பேதி நோய் ஏற்பட்டுப் பல பேர்கள் இறந்து போனார்கள். அந்தச் சமயத்தில் சுப்பிரமணிய தேசிகருடைய உதவியைக் கொண்டு வேதநாயகம் பிள்ளை பேதி நோய் பரவியிருந்த ஊர்களுக்கெல்லாம் தாம் ஒருவராக அலைந்து திரிந்து நோய் கண்ட மக்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்தார். வேதநாயகம் பிள்ளையிடம் ஓர் அருமையான இரட்டை மாட்டு வில் வண்டி இருந்தது. திருவாவடுதுறைக்கோ, மற்ற இடங்களுக்கோ போக வேண்டு மென்றால் வண்டியைப் பூட்டிக்கொண்டு கிளம்பி விடுவார் வேதநாயகம் பிள்ளை. சுப்பிரமணிய தேசிகரைச் சந்தித்து அளவளாவி விட்டு வருவதற்காக ஒரு தடவை வேதநாயகம் பிள்ளை திருவாவடுதுறைக்குப் போயிருந்தார். சுப்பிரமணிய தேசிகர் தமிழ் இலக்கிய வல்லுநர். அவரோடு பேசிக் கொண்டிருக்கும்போது எப்படிப்பட்ட கடுமை உள்ளமுடைய வர்களானாலும் நெகிழ்ந்து போய் அவர் பேச்சில் மனத்தைப் பறிகொடுத்து விடுவார்கள். அவ்வளவு சாமர்த்தியமாகவும் நயமாகவும் பேசுகிறவர் அவர்.

காலையில் ஊரிலிருந்து புறப்பட்டுத் திருவாவடு துறையை அடைந்த வேதநாயகம் பிள்ளை வெகுநேரம் சுப்பிரமணிய தேசிகரிடம் உரையாடிக் கொண்டிருந்து விட்டு இராத்திரியே திரும்பி விட்டார். அவர்தான் திரும்பினாரே ஒழிய, அவருடைய மனம் சுப்பிரமணிய தேசிகரிடமே தங்கிவிட்டது. நினைவு களெல்லாம் அவரைப் பார்த்துப் பேசிய இனிய நாழிகை களிலேயே இருந்தன. ஊருக்குத் திரும்பிய பின்னும் சுப்பிரமணிய தேசிகரைச் சந்தித்துப் பேசியதை எண்ணியே சதா ஏங்கிக்

கொண்டிருந்த வேதநாயகம் பிள்ளை அந்த ஏக்கம் பொறுக்க முடியாமல் தவித்தார். தவிப்பைத் தாங்கிக் கொள்ள இயலாமல் சுப்பிரமணிய தேசிகருக்கே ஒரு கடிதம் எழுதிவிட்டார் அவர். கடிதத்தில் ஒரே ஒரு பாட்டுத்தான் எழுதியிருந்தார். வேறு ஒன்றும் எழுதவில்லை. அந்த ஒரு பாட்டுத்தான் கடிதம், கடிதம்தான் அந்த ஒரு பாட்டு. ஆனால் தம்முடைய மனத்தைக் கவர்ந்த நல்ல மனிதருக்கு எப்படி நாம் ஒரு கடிதம் எழுத வேண்டுமென்பதற்குச் சரியான முன்மாதிரியாகத் திகழ்கிறது அந்தப் பாட்டு. வேத நாயகம் பிள்ளையின் உள்ளத்து உருக்கமெல்லாம் ஒன்று சேர்ந்து சங்கமமாகி அந்தப் பாட்டில் காட்சியளிப்பதைக் காணலாம்.

"சூர்வந்து வணங்கும் மேன்மைச் சுப்பிர மணிய தேவே
நேர்வந்து நின்னைக்கண்டு நேற்றுராத் திரியே மீண்டேன்
ஊர்வந்து சேர்ந்தேன் என்றன் உளம்வந்து சேரக்காணேன்
ஆர்வந்து சொலினுங் கேளேன் அதனைஇங்கனுப்பு வாயே."

'ஊருக்கு வந்து சேர்ந்துவிட்டேன். ஆனால் என்னுடைய உள்ளம் மட்டும் வராமல் அங்கேயே உங்களிடம் தங்கிவிட்டது. அதை எனக்குத் திருப்பி அனுப்பி வையுங்கள்' என்று வேதநாயகம்பிள்ளை எழுதியிருப்பதில்தான் எவ்வளவு குழைவு! வேதநாயகம் பிள்ளையில் மனோபாவம் பாட்டில் அழகாகப் பதிந்துள்ளது. இந்தப் பாட்டைப் படிப்பவர்கள் பறிகொடுத்த மனம் திரும்பக் கேட்டால் கிடைக்காது.

## 60. பேர்தான் அப்படி!

பழங் காலத்தில் தமிழ்நாடு தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம் முதலிய மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இம்மண்டலங்களில் வாழ்ந்து மறைந்த அரசர்கள், புலவர் பெருமக்கள் ஆகியோர் பற்றி அறிந்து கொள்ள வசதியான நூல்களைச் 'சதகங்கள்' என்ற பெயரில் பாக்களாகவே எழுதி வைத்திருக்கிறார்கள்.

தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த பெரியோர்களின் ஊர், பேர், சிறப்புக்களைத் தொண்டை மண்டல சதகம் கூறும். அதே போல் ஏனைய சதகங்களும் தத்தம் மண்டலங்களுக்கு ஒரு சுருக்கமான வரலாறாக அமையும். இந்தச் சதக நூல்களைச் செய்யத் தூண்டியும் தொகுப்பித்தும் உதவியவர்கள் தமிழ் வரலாற்றுக்குப் பெருந்தொண்டு புரிந்திருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

தொண்டை மண்டல சதகத்தைச் செய்வித்தவர் மாவை நகரைச் சேர்ந்த கறுப்பன் என்னும் வள்ளலாவார். இந்த வள்ளலின் தந்தை கத்தூரி என்பவர் சிற்றரசர் போன்று பெரு வாழ்வு வாழ்ந்தவர். தொண்டை நாடு முழுவதும் பசிப்பிணி ஏற்படாமல் கொடை புரிந்த பெருமையுடையவர். இத்தகைய நல்லோர்க்குப் புதல்வராகப் பிறந்த கறுப்பனும் பேரறச் செல்வராய்க் கொடுத்துக் கொடுத்துப் புகழ் சேர்த்துக் கொண்டிருந்தார்.

அந்தக் காலத்தில் படிக்காசுப் புலவர் என்றொரு கவிஞர் இருந்தார். தாம் பாடுகிற கவிதைகளுக்குப் படிக் காசு பெறுகிற வழக்கமுடையவர். ஆதலால் அவருக்கு அப்பெயர் ஏற்பட்டிருந்தது. நீண்ட நாட்களாகக் கறுப்பனை நேரில் காணும் வாய்ப்பில்லாமலே அவன் புகழையும் கொடுக்கும் தன்மையையும் மட்டுமே கேள்விப்பட்டுக் கொண்டிருந்தார் படிக் காசுப் புலவர். மெய்யாகவே கறுப்பு நிறத்தைக் கொண்டிருப்பதால்தான் கறுப்பன் என்று அந்த வள்ளலுக்குப் பெயர் வந்திருக்கலாமோ என்பது அவருடைய அனுமானம்.

தமிழ் மொழியில் கறுப்பு என்ற வார்த்தைக்குச் சில பொருள்கள் உண்டு. கறுப்பு நிறத்தையும் பஞ்சத்தையும் கோபத்தையும் உணர்த்துகிற வார்த்தை அது. தொண்டை நாட்டு எல்லைக்குள் பசி, பஞ்சம் என்கிற தொல்லை இருந்ததே இல்லை. எனவே அதன் காரணமாகக் கறுப்பன் என்று பெயர் ஏற்பட்டிருக்க முடியாது.

நகை முகமும் இரக்கமுள்ள மனமுமாக எவரிடத்தும் அன்போடு பழகும் கறுப்பனுக்கு ஆத்திரம் வந்து பார்த்ததாக யாரும் படிக்காசுப் புலவரிடம் கூறினதில்லை. எனவே கோபம் வருவதால் கறுப்பன் என்று பேர் ஏற்பட்டதாகக் கூறுவதும் பொருந்தாது.

அப்படியானால் இவ்வளவு நல்ல மனிதனுக்கு ஏன்தான் கறுப்பனென்று பேர் வந்தது? இந்த உலகத்தில் பொருத்த மில்லாப் பேர் வைப்பதென்பதே ஒரு வழக்கமாகி விட்டதா? கைகளே இல்லாதவனுக்குச் சக்கரபாணி என்றும், குரூபிக்குச் சுந்தரராசன் என்றும், குருடனுக்குக் கண்ணாயிரம் என்றும் பெயர் வைப்பது போல் ஒரு கறுப்புமில்லாத நம் வள்ளலுக்குக் கறுப்பன் என்று பெயர் வாய்த்தது ஏனோ என்று மயங்கினார் புலவர்.

மாவைப்பதி சென்று கறுப்ப வள்ளலையே நேரில் பார்த்து விடுவது என்று புறப்பட்டார் படிக்காசுப் புலவர். போனார். பார்த்தார். அவருக்கு இருந்த ஒரே சந்தேகமும் தீர்ந்து போயிற்று. 'கறுப்பன் நிறத்தினால் கறுப்பனாக இருக்கலாமோ' என்ற ஐயமும் பொய்யாகிவிட்டது. நிறம் சிவந்த அழகிய தோற்றத்தையே கொண்டிருந்தான் கறுப்ப வள்ளல்.

என்ன வரவேற்பு! எத்தகைய அன்பு! எவ்வளவு பேணுதல்! படிக்காசுப் புலவர் திணறினார். கறுப்பனின் அன்பையும் பேணுதலையும் எப்படிப் போற்றுவதென்றே புரியவில்லை. பரிபூரணமான அன்பை வார்த்தைகளால் கூறமுடியாதே! ஒரு நாள் பகலுணவுக்குப் பின் கறுப்ப வள்ளலோடு அமர்ந்து தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார் படிக்காசுப் புலவர். சிரித்தவாறே சிறிதுநேரம் கண்ணிமைக்காமல் கறுப்ப வள்ளலையே பார்த்துக் கொண்டிருந்தார் புலவர்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னிடம் என்ன அதிசயம் உண்டாகி விட்டது?" என்று சிரித்தபடி கேட்டான் வள்ளல்.

"ஒன்றுமில்லை. ஒரு கறுப்பும் (பஞ்சமும்) இல்லாத தொண்டை நாட்டில் கஸ்தூரி வள்ளலின் புதல்வராகப் பிறந்த

உங்களை எல்லோரும் கறுப்பன், கறுப்பன் என்று அழைக்கிறார்கள்; நீங்களோ நிறம் சிவக்கக் காட்சியளிக்கிறீர்கள்; கொடுத்துக் கொடுத்துக் கை சிவக்கிறீர்கள்; தாம்பூலம் அணிந்து இதழ் சிவக்க வீற்றிருக்கிறீர்கள். உங்களை எப்படிக் கறுப்பன் என்பது!" என்ற கருத்துப்பட ஓர் அழகிய பாடலைப் பாடினார்.

'ஓர் கறுப்பும் இல்லாத தொண்டையள
நன்னாட்டில் உசிதவேளைச்
சீர் கறுப்பொன்றில்லாத கத்தூரி
மன்னனருள் சேயைப் பார் மேல்
ஆர் கறுப்பன் என்று சொல்லி அழைத்
தாலும் நாமவனை அன்பினாலே
பேர் கறுப்பன் நிறச்சிவப்பன் கீர்த்தி
யினால் வெளுப்பனெனப் பேசலாமே!"

கறுப்பு, சிவப்பு, வெளுப்பு என்னும் வண்ணப் பெயர்களை வைத்துக் கொண்டு இந்தக் கவிஞர் எத்தனை அற்புதமாய்ச் 'செப்பிடு வித்தை' செய்கிறார், பார்த்தீர்களா? பழகின தோட்டக்காரனுக்கு எல்லாப் பூக்களின் பேரும் மணமும் தெரிகிற மாதிரி சொல்வளம் தெரிந்த கவிஞனிடம் வார்த்தைகள்தாம் எவ்வளவு நளினமாய் வளைந்து கொடுக்கின்றன!

## 61. மறக்க முடியாத சாப்பாடு

சீரங்கத்துக்கும் காளமேகப் புலவருடைய வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அவருடைய இளமைப் பருவத்து வாழ்வின் பெரும்பகுதி சீரங்கத்திலும் திருவானைக் காவிலும் கழிந்தது. இடைக் காலத்தில் மற்ற புலவர்கள் பாடிய தனிப்பாடல்களுக்கும் காளமேகப் புலவர் பாடிய பாடல்களுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது.

காளமேகப் புலவர் ஆசுகவி. அதாவது கவி எழுதுவதற்குரிய இலக்கணக் கட்டுப்பாடுகளை முறையாகப் படிக்காமலே

பாடல்களைப் பாடித் தற்செயலாக அந்தக் கட்டுப்பாடுகளும் அமைந்து விடும்படி செய்கிறவர். இத்தகைய அசாதாரணத் திறமை வாய்ந்த கவிகளைத்தான் தமிழில் 'ஆசுகவி' என்பது வழக்கம். காளமேகப் புலவர் பாடியவற்றில் மற்றவர்களைத் தூற்றிப் பாடிய வசைப் பாடல்களே அதிகம். வஞ்சப் புகழ்ச்சி யாகவும் பழிப்பாகவுமே அவர் மிகுதியாகப் பாடியுள்ளார். பெரும்பாலும் அவருடைய பாடல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமயத்தில் பாடியவை.

சீரங்கத்தில் ஆச்சாள் என்று ஓர் ஏழைப் பெண் ஒரு சாப்பாட்டுக் கடை மாதிரி வைத்துக் கொண்டு நாலைந்து பேருக்குச் சமையல் பண்ணிப் போட்டுப் பிழைத்து வந்தாள். ஆச்சாளுக்கு நடுத்தர வயது. அவ்வளவாகப் புத்தி கூர்மை கிடையாது. விவரம் தெரிந்தவளும் இல்லை. கொஞ்சம் அசட்டுத்தனமாக நடந்து கொள்கிற சுபாவமுள்ளவள். அவளிடத்தில் காசு கொடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந் தவர்கள் வேறு வழி இல்லாததால்தான் அப்படிச் செய்தார்களே ஒழிய, அவள் சாப்பாட்டின்பேரிலுள்ள விருப்பத்தால் சாப்பிடவில்லை. சாப்பிடுகிறவர்களின் வசதி, பசி, ருசியறிந்து அவர்களுக்கேற்ப வகையாகச் சமைத்து நிதானமாகப் பரிமாறி உபசரிக்க ஆச்சாளுக்குத் தெரியாது. ஏதோ ஓடியாடிச் சாப்பாடு போட்டோமென்று பேர் பண்ணி விடுவாள். அவள் சமையலைவிட மோசமாக இருக்கும், இலையில் சமைத்ததைப் பரிமாறுகிற முறை. ஏதோ கடனுக்குச் செய்கிற காரியம் மாதிரிப் பரிமாறுவாள்.

இப்படிப்பட்டவளிடம் குறும்புத்தனமும் முன்கோபமும் நிறைந்த காளமேகப் புலவர் ஒருநாள் சாப்பிட வந்தார். வந்திருப்பவர் காளமேகப் புலவரென்று ஆச்சாளுக்குத் தெரியாது. தெரிந்தாலும் அதற்காகப் புது மரியாதைகள் எதையும் அவள் செய்யத் தயாராயில்லை. காளமேகப் புலவர் அவள் செயல்களையும் அவற்றிலிருந்த அலட்சியமான போக்கையும் அங்குச் சாப்பிடுவதற்காக உட்கார்ந்த விநாடியிலிருந்து கூர்ந்து கவனித்துக்கொண்டே இருந்தார்.

எல்லோரையும் போல் அவரையும் வரிசையில் உட்காரச் செய்து இலையைப் போட்டுப் பரிமாறினாள் ஆச்சாள். காளமேகப் புலவருடைய முகத்தையோ, கைகளையோ பார்த்து, அளவறிந்து, தேவையறிந்து பரிமாறவில்லை அவள். சோற்றைப் போட்டாள், சோற்றோடு சரிக்குச் சரி கல்லும் கலந்திருந்தது. கீரைக் கூட்டுப் பரிமாறும்போது காளமேகப் புலவர் போதும் போதுமென்று கையை நீட்டி மறித்தும் கவனிக்காமல் காவேரியாற்றின் வெள்ளத்தையே இலையிற் கொண்டு வந்து கவிழ்ப்பதுபோல் கொட்டி விட்டாள் ஆச்சாள். இலை தாங்க முடியாமல் நாற்புறமும் பெருகி ஓட்டமெடுத்தது கீரைக் கூட்டு. காளமேகப் புலவருக்கு அடக்க முடியாத ஆத்திரம் வந்தது. பொறுத்துக் கொண்டார். அடுத்தபடியாக ஆச்சாள் புளிக் குழம்பை எடுத்துக் கொண்டுவந்து பரிமாறினாள். புளிக்குழம்பு நன்றாகக் காயவில்லை.

காளமேகப் புலவர் கையை உதறிவிட்டுத் துள்ளியெழுந்தார். எழுந்து நின்று ஆச்சாளை எரித்து விடுவதுபோல் பார்த்தார். சுற்றிலும் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த மற்றவர் களையும் பார்த்தார். அவர் ஒரு பாட்டைப் பாடினார்.

"நீச்சாற் பெருத்திடு காவேரி யாற்றை நிலைநிறுத்திச்
சாய்ச்சாள் இலைக்கறிச் சாற்றையெலாம்அது தானு மன்றிக்
காய்ச்சாப் புளியும்நற் கல்லுடன் சோறும் கலந்து வைத்த
ஆய்ச்சாளை யான்மற வேன்மறந் தால்மனம் ஆற்றிடுமோ!"

**இலைக்கறிச்சாறு = கீரைக்கூட்டு**

ஆச்சாள் இலையில் கொட்டிய கீரைக் கூட்டுக்குக் காவேரியாற்றை உவமை கூறியது பெரிய குறும்பு. நற்சோறுடன் கல்லும் சமைத்து என்று சொல்லாமல் 'நற்கல்லுடன் சோறும்' என்று கல்லுக்குப் பெருமை கொடுத்தது சோற்றை விடக் கல் நன்றாயிருந்தது என்று குத்திக் காட்டுவதற்காகவே! ஆச்சாளுடைய அவலட்சணச் சாப்பாட்டை எத்தனையோ பேர் எவ்வளவு காலமாகப் பொறுமையாகச் சாப்பிட்டுக் காலம் கடத்தி

வந்தார்கள். கேலி செய்து குத்திக் காட்டி அதை ஒரு பாட்டாகப் பாடிவிட்டுப் போகக் காளமேகப் புலவர் ஒருவரால் மட்டும்தானே முடிந்தது!

## 62. புலவர் குறும்பு

திருநெல்வேலிச் சீமையில், தச்சநல்லூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. சென்ற நூற்றாண்டில் அந்த ஊரில் அழகிய சொக்கநாதப் புலவர் என்று ஒரு கவிஞர் இருந்தார். இருபொருள் படும்படியான சிலேடைப் பாட்டுக்களைப் பாடுவதில் திறமை மிக்கவர் அவர். நகைச்சுவை உணர்வும் வேடிக்கையாகப் பேசும் பண்பும் உள்ளவர் அவர். நிறையப் படித்து அறிவு முதிர்ந் தவர்களுக்கு நகைச்சுவை யுணர்ச்சி குறைவு என்பார்கள். ஆனால் படித்தவர்களின் நகைச்சுவையில் உயர்தரமான அம்சம் இருக்கும்.

அந்த நாளில் அழகிய சொக்கநாதப் புலவருக்கு உதவிகள் செய்து பேணி ஆதரித்து வந்தவர் முத்துசாமிப்பிள்ளை என்னும் வள்ளல் ஆவார். ஒரு முறை அழகிய சொக்கநாதப் புலவர் முத்துசாமிப் பிள்ளையைச் சந்திக்கப் போயிருந்தபோது, ஒரு சுவையான அனுபவம் அவருக்கு ஏற்பட்டது.

புலவர் முத்துசாமிப் பிள்ளையைச் சந்திக்கச் சென்ற அதே சமயத்தில் அரைகுறையாக மிருதங்கம் பழகிய ஒரு மிருதங்க வித்துவானும் பிள்ளையவர்களைச் சந்திக்க வந்திருந்தார். பிள்ளைக்கோ எதையும் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் நுனிப்புல் மேயும் கலைஞர்களைக் கண்டால் பிடிக்காது. "ஐயா! மிருதங்க வித்துவானே! உங்களுடைய வாசிப்பைக் கேட்பதற்கு இப்போழுது எனக்கு நேரமில்லை. போய்விட்டு இன்னொரு சமயம் வாருங்கள், பார்க்கலாம்" என்று தட்டிக் கழிக்க முயன்றார் பிள்ளை.

"உங்களைப் போன்ற வள்ளல் இப்படிப் புறக்கணித்தால் என்போன்ற ஏழைக் கலைஞன் என்ன செய்ய முடியும்? தயவு

செய்து நீங்களும் புலவரும் என் வாசிப்பைக் கேட்கத்தான் வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே விடாப் பிடியாகக் கீழே உட்கார்ந்து மிருதங்கத்தின் உறையைக் கழற்றத் தொடங்கினார் வந்தவர்.

முத்துசாமிப் பிள்ளையின் முகத்தில் வெறுப்பின் நிழல் படிந்தது; புலவரோ குறும்புத் தனமாகச் சிரித்தார்.

“உமக்கென்ன? நீர் சிரிக்கிறீர்? விறகுக் கட்டையால் பாறையில் அடிப்பதுபோல் இன்னும் சிறிது நேரத்தில் மிருதங்கத்தின் முதுகைப் பிளக்கப் போகிறான், இந்தக் குற்றுக்குட்டி! அதைக் கேட்டுக்கொண்டு பொறுமையாக இருப்பதைவிடச் ‘சங்கீதத்தையே கழுவேற்றிவிட்டால் என்ன’ என்று தோன்றும்'' என்று அழகிய சொக்கநாதரின் காதருகே மெல்லச் சொன்னார் முத்துசாமிப் பிள்ளை.

அழகிய சொக்கநாதர் பதில் சொல்லாமல் மீண்டும் குறும்பு மிளிரச் சிரித்தார்.

“என்ன? நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன். நீங்கள் பதில் பேசாமல் சிரிக்கிறீர்களே?'' சற்றுக் கோபத்தோடு புலவரை நோக்கி இப்படிக் கேட்டார் பிள்ளை.

“பேசாமல் கடைசிவரை பார்த்துக்கொண்டிருங்கள். இந்தப் பயல் சங்கீதத்தின் மானத்தை வாங்கி முடித்தவுடன் நான் இவன் மானத்தை வாங்கி விடுகிறேன்'' என்று புலவர் மெதுவான குரலில் பிள்ளையிடம் கூறினார். கற்றுக் குட்டி வித்துவான் மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்தார்.

வாசிப்பா அது? தனக்கு வேண்டாத பகைவனின் முதுகில் யாரோ ஒரு முரட்டு மனிதன் ஓங்கி ஓங்கி அறைவதுபோல் மிருதங்கத்தின் இரு புறத்திலும் தன் இரு கைகளாலும் வெளுத்து வாங்கியது அந்தக் ‘கற்றுக் குட்டி’. மிருதங்கம் என்னும் அந்த வாத்தியத்துக்குக் கையும் காலும் முளைத்து, உயிரும், வந்து அது எழுந்திருந்து தன்னைச் சித்திரவதை செய்கிற ஆளை

உதைத்துவிடுமோ என்று அஞ்சத் தக்க அளவு கொடுமையாக இருந்தது வாசிப்பு.

விதிக்கடங்கிய சுவரம், வளிதம், குழைவு, நளினம் ஒன்றுமே அந்த வாசிப்பில் இல்லை.

அப்போது நெல் அளந்துகொண்டு போவதற்கான கூடைகளை எடுத்துக்கொண்டு சில வேலைக்காரப் பெண்கள் அங்கே வந்தார்கள். முத்துசாமிப் பிள்ளையின் நிலங்களில் ஏதோ நடவு, களையெடுப்பு, இம்மாதிரி வேலைகளைச் செய்ததற்காகக் கூலி நெல் பெற்றுக் கொண்டு போக வந்தவர்கள் அந்தப் பெண்கள்.

"இவர்களுக்கு நெல் அளந்துபோட்டு அனுப்பி விடுங்கள். அப்புறம் நான் மீண்டும் வாசிக்கிறேன்" என்றார் கற்றுக்குட்டி வித்துவான். பிள்ளைக்கு அதைக் கேட்டு உள்ளம் கொதித்தது. 'இதுவரையில் மிருதங்கத்தைக் கொன்றது போதாதென்று இன்னும் வேறு கொல்லப் போகிறாயா?' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டார்.

அப்போது புலவர் சிரித்துக் கொண்டே வித்துவானை நோக்கிக் கூறினார்: "ஐயா, வித்துவானே! இந்தப் பெண்கள் நெல்லளந்து கொண்டு போக வரவில்லையாம். இதுவரை இங்கே யாரோ சாணி தட்டிக் கொண்டிருக்கிறாற் போல் ஓசை கேட்டதே என்று எரு அள்ளிக்கொண்டு போகக் கூடைகளோடு வந்திருக்கிறார்கள்."

கற்றுக்குட்டி வித்துவானுடைய முகத்தில் அசடு வழிந்தது. புலவருடைய கேலியைக் கேட்டு முத்துசாமிப்பிள்ளை அடக்கமுடியாமல் சிரித்துவிட்டார். வேலைக்காரப் பெண்களும் சிரித்துவிட்டார்கள். அந்தக் கேலிப் பேச்சை ஒரு பாட்டாகவே பாடிக் கற்றுக் குட்டியின் மானத்தை வாங்கி விட்டார் புலவர்.

"எங்கள்முத்து சாமிமன்னா இங்கே யொருவன்மிரு
தங்கமதை ஓயாமல் தட்டினான்—அங்கங்கே

கூடிநின்ற பெண்களெருக் கொள்வதற்குக் கூடையெடுத்
தோடிவந்தார் நீபார்த்தா யோ!''

—தனிப்பாடல்

*மிருதங்கத்தின் முதுகில் தான் அடித்ததைவிடத் தன் முதுகில் யாராவது பலமாக ஓங்கி அடித்திருந்தால்கூட இவ்வளவு அவமானம் ஏற்பட்டிராது 'கற்றுக் குட்டிக்கு!' புலவர் தம் வார்த்தைகளாலேயே மிருதங்கக்காரனின் மானத்தை வாங்கிவிட்டாரே.*

## 63. மருந்து மரம்

*பிறருக்குக் கொடுத்து மகிழ்வதே வாழ்க்கையின் மிகப் பெரிய பேறாகக் கருதின காலம் ஒன்று இருந்தது. 'செல்வத்துப் பயனே ஈதல்' என்று கொடைக்குச் சட்டம் வடித்திருந்த பொற்காலம் இப்போது பழங்கதையாகி விட்டது. இப்போது கொடுக் கிறவர்கள் மிகக் குறைவு; வாங்குகிறவர்கள்தாம் அதிகம். ஆசை களும் தேவைகளும் பெருகி ஒவ்வொருவரும் தன்னைத்தானே திருப்தி செய்து கொள்ள முடியாத காலத்தில் இன்று நாம் வாழ்கிறோம். கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மையைவிடச் சேர்க்கவேண்டும் என்ற மனப்பான்மையே இன்று அதிகமாகியிருக்கிறது.*

*பிறருக்குக் கொடுத்து மகிழ முடியாத நிலையைத் தன் வாழ்வின் பயனற்ற காலமாகக் கருதிக் காட்டுக்கு ஓடின மனிதன் ஒருவனைப் பற்றி இங்கே தெரிந்து கொள்ளப்போகிறோம். பழைய நாளில் அறம் என்று கூறப்பட்ட ஒழுக்கம் கடமையாகக் கருதப்பட்டது. இன்றோ, அது மனம் நெகிழ்கிறபோது தற்செயலாக உண்டாகிற பலவீனமாகக் கருதப்படுகிறது. ஒரு காலத்தில் அறம்தான் பொதுவாழ்க்கைக்கு வலுத் தரும் பலமாக இருந்தது. அதே அறம் இன்று பலவீனமாகி விட்டதா?*

தமிழ்நாட்டில் கொங்கு மண்டலத்தில் கோபி செட்டி பாளையத்தின் அருகில் பாரியூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரில் செட்டிப் பிள்ளையப்பன் என்று ஒரு செல்வர் இருந்தார். அவர் கணவாள குலத்தைச் சேர்ந்தவர். தெய்வ பக்தி மிக்கவர். தம்மூருக்கு அருகில் தேவி பாகத்தனாகக் கோயில் கொண்டிருக்கும் அமரவிடங்கப் பெருமானுக்குத் திருப்பணிகள் பல புரிந்தவர்.

அவர் அறம் செய்வதை ஒரு விரதமாக வைத்துக் கொண்டிருந்தார். கவிபாடி வருகிறவர்களையும் ஏழ்மையினால் வாடி வருகிறவர்களையும் வரவேற்று இல்லையென்று சொல் லாமல் முடிந்ததையெல்லாம் கொடுத்துக் கொண்டிருந்தார்.

கேட்கிறவர்களிடம் 'இல்லை' என்று கூறுகிற நிலை நேர்ந்தால் உலகில் உயிரோடு வாழவே கூடாது என்பது போலக் கொடை வெறிபிடித்திருந்தது அவருக்கு. எத்தனை நாளைக்கு முடியும் அப்படி? கடைசியில் வளமாக இருந்த அவருடைய செல்வநிலையும் சற்று வறண்டது. நோயுடன் வருகிறவர் களுக்கெல்லாம் பச்சிலையும் வேரும் பட்டையும் கொடுத்துத் தான் தழைக்கமுடியாமல் பட்டுப் போகும் மருந்துமரம்போல் குன்றிப் போனார் செட்டிப் பிள்ளையப்பன். வீட்டுப் பாட்டுக்கே போதாத அளவு அந்தக் குடும்பத்தில் ஏழைமை வந்து கவிந்துகொண்டது. அப்படிப்பட்ட வறுமை நிலையில் ஒரு நாள் காலை அவருடைய வீட்டைத் தேடிக்கொண்டு சில புலவர்கள் வந்தார்கள். அவர்கள் எல்லாரும் முன்பு அவர் வசதியாக இருந்த காலத்தில் அடிக்கடி உதவிகள் பெற்றுக்கொண்டு போனவர்கள். இப்போதும் அப்படி ஏதோ ஓர் உதவி பெறவே வந்திருந்தனர். அவரே இப்போது ஏழைமையில் வாடுகிறார் என்பது அவர்களுக்குத் தெரியாது. பாவம்!

செட்டிப் பிள்ளையப்பன் பார்த்தார். புலவர்களுக்கு 'இல்லை' என்று சொல்ல அவருக்குத் துணிவில்லை; கொடுப் பதற்கும் ஒன்றும் இல்லை. அன்றுவரை 'இல்லை' என்ற சொல்லைச் சொல்லாமல் பழகிக் கொண்டிருந்த அந்த நா அன்றும் அதைச் சொல்ல எழவில்லை.

'இனி நான் எதற்காக உயிர் வாழ வேண்டும்?' என்ற கேள்வி அவர் மனத்தில் உண்டாயிற்று. மானம் என்பது தன் நிலையிலிருந்து தாழாமை. தாழ்ந்தால் உயிர் வாழாமை அல்லவா? புலவர்கள் முன்போய் 'இப்போது நான் பரம ஏழையாகி விட்டேன். கொடுப்பதற்கு ஒன்றுமில்லை' என்று சொல்ல அவர் தயங்கினார். புலவர்களிடம் போனார்.

"கொஞ்சம் இருங்கள் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கொல்லை வழியாக வெளியேறினவர் திரும்பி வரவேயில்லை.

ஊரருகே பயங்கரமான வேங்கைப் புலிகள் திரியும் பெரிய காடு. அந்தக் காட்டுக்குள் புகுந்துவிட்டார். 'இல்லை' என்று கூறுவதற்கு மனமில்லாது காட்டுக்கு ஓடிய இந்தச் செயல் இன்று நமக்கு அசட்டுத்தனமாகப்படுகிறது. ஆனால் 'அறம்' என்பதே ஓர் அசட்டுத்தனமாகப்படுகிற இன்றைய வாழ்வில் நமக்கு வேறு எப்படித் தோன்ற முடியும்? செட்டிப் பிள்ளையப்பன் போல் 'இல்லை' என்று சொல்வதற்குக் கூசி வருந்தி விதியை நொந்து கொண்டு ஓடுகிறவர்கள் இன்று இல்லை. 'உண்டு' என்று கூற மறுத்து ஓடுகிறவர்களே இன்று மிகுதியாக இருக்கிறார்கள்.

"இட்டமான கவிசொல்லும் பாவலர்க்கு
இல்லையென்று சொலற்கஞ்சிக் காட்டில்வாழ்
துட்டவன் புலித் தூற்றிற் புகுந்தவன்
தூயவன் கணவாள குலத்தினன்
செட்டிப் பிள்ளையப்பன் தினந்தொண்டு செய்
தேவிமா மலைமாது ஒரு பங்குள
கட்டுசெஞ்சடை அமர விடங்கனார்
கதித்துவாழ் பாரியூர் எங்களூரே"

மருந்து மரம்போல் நின்று சமுதாயத்தின் ஏழைமை நோய் தீர்க்க இப்படி எத்தனையோ வள்ளல்கள் தேவை! பாட்டைப் பாடிய புலவரும் பாரியூர்க்காரர் போல் இருக்கிறது! அவரைத் தம்மூர்க்காரர் என்று கூறுவதிலேயே பெருமைப்படுகிறார் புலவர்.

## 64. தாவும் மான்குட்டி

காளமேகப் புலவர் ஒரு முறை சிதம்பரம் நடராசப் பெருமானைக் கண்டு வழிபடுவதற்குச் சென்றிருந்தார். சிதம்பர தரிசனத்தின் மகிமையைப் பற்றிப் பலரிடத்துப் பல காலம் கேட்டுக் கேட்டு ஆசையையும் பக்தியையும் வளர்த்துக்கொண்டு அங்கே போவதற்குக் காத்திருந்தவர் அவர்.

சிதம்பரம் கோவிலுக்கும் தலத்துக்கும் தனியுரிமை படைத்தவர்கள் தில்லை மூவாயிரவர். இறுமாப்பும் தங்கள் படிப்பிலும் பதவிகளிலும் அகந்தையும் கொண்டவர்கள் தில்லை மூவாயிரவர். எல்லோரும் தங்களை மதித்து மரியாதை செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள். ஆனால் அந்த அளவுக்கு அவர்கள் பிறரை மதிக்க மாட்டார்கள். கம்பர் உட்பட அநேகம் புலவர்களோடு தகராறு செய்து பழக்கப்பட்டவர்கள். அவ்வாறிருந்ததனால் தில்லை மூவாயிரவர் என்றால் எல்லோருக்குமே ஒரு விதத்தில் பயம் ஏற்பட்டிருந்தது. காளமேகப் புலவர் சிதம்பர தரிசனத்துக்கு வரப்போகிற செய்தி தில்லை மூவாயிரவருக்கு எட்டியது. அவர்களிடம் இருந்த குறும்புப்படி அவரிடமும் ஏதாவது வம்பு செய்ய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

காளமேகப் புலவர் வந்தார். தரிசனம் செய்தார். மான், மழு ஏந்திய கரத்தினனாய்க் கூத்தப் பெருமான் பொன்னம்பலத்தே ஆடும் கோலாகலக் காட்சி அவர் உள்ளத்தை ஈர்த்தது.

கூத்தப் பெருமானின் கையில் தாவிப் பாய்கிறார்போல் விளங்கித் தோன்றிய மான்குட்டி, மேல் நோக்கி ஓடிப் பறக்கிறாற்போன்று அழகாகக் காட்சி தந்தது. நடராசப் பெருமானுடைய திருமுகத்துக்கு நேரே தன்னுடைய முகத்தையும், முன்னங் கால்களையும் தூக்கிக்கொண்டு தோன்றிற்று மான்குட்டி அக்காட்சியில் உணர்வெல்லாம் பறிகொடுத்து அவர் நின்றபோது தில்லை மூவாயிரவர்கள் வந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் வந்து சூழ்ந்துகொண்ட விதத்தி

லிருந்து ஏதோ வம்புக்குத்தான் வந்திருக்கிறார்கள் என்பது காளமேகப் புலவருக்கும் புரிந்துவிட்டது. அவரால் எந்த வம்பையும் சமாளிக்க முடியும். எனவே அவர் அஞ்சாமல் தில்லை மூவாயிரவர்களை நிமிர்ந்து பார்த்தார். அவர்கள் சொன்னார்கள்:

"காளமேகப் புலவரே! உங்களை நாங்கள் ஒரு கேள்வி கேட்க வேண்டும்."

"கேளுங்கள். நான் எந்தக் கேள்விக்கும் எப்போதும் தயார்."

"இப்போது நீங்கள் வழிபட்டுக் கொண்டிருக்கும் நடராசப் பெருமானின் கரத்தில் உள்ள மான், பெருமானின் திருமுகத்துக்கு நேரே பாய்வதுபோல் கால்களைப் பாய்ச்சிக் கொண்டு நிற்பதற்குக் காரணம் என்ன?"

மகா ஞானிகளாகிய தில்லை மூவாயிரவர் தங்களுக்குக் காரணம் தெரியாததனால் இதைக் கேட்கவில்லை. தன்னிடம் ஏதாவது குறும்பு செய்ய வேண்டுமென்பதற்காகவே கேட்கிறார்கள் என்பது காளமேகத்துக்குத் தெரிந்துவிட்டது. குறும்பைக் குறும்பாலேதான் வெல்லவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு பதில் கூறலானார்.

"கூத்தப் பெருமானுடைய சடையில் மானுக்கு மிகவும் பிரியமான அறுகம்புல் ஆரத்தைப் பக்தர்கள் சாத்தியிருக்கிறார்கள். குடிப்பதற்கு இனிய கங்கையின் தெள்ளிய நீர் பாய்கிறது. அதனால்தான் மான் அங்கே பாய்வதுபோல் தோற்றுகிறது."

காளமேகப் புலவர் ஒரு வெண்பாவாகவே விடையைக் கூறினார்.

"பொன்னஞ் சடைஅறுகம் புல்லுக்கும் பூம்புனற்கும்
தன்நெஞ்(சு) உவகையுறத் தாவுமே – அன்னங்கள்
செய்க்கமலத் துற்றுலவும் தில்லை நடராசன்
கைக்கமலத் துற்றமான் கன்று"

இப்படிக் குறும்பாக உடன் பதில் வரும் என்று தில்லை மூவாயிரவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. அவர்கள் அத்தனை பேரும் அப்போது அந்த ஒரு புலவருக்கு முன்னால் தலைகுனியும்படி நேர்ந்துவிட்டது.

சந்தர்ப்ப ஞானம் அதிகம் உள்ளவர்களால் எப்போதும் எதையும் சமாளித்து மறுமொழி கூறுவதற்கு முடியும். காளமேகப் புலவர் சந்தர்ப்ப ஞானம் அதிகமாக உள்ளவர். மிக விரைவாகக் கவி பாட வல்லவர். யாருக்கும் எதற்கும் எங்கும் அஞ்சாத இயல்புள்ளவர். அத்தகையவர் தில்லை மூவாயிரவர்களைத் திகைக்க வைத்ததில் வியப்பில்லை. மான்குட்டி அறுகம்புல்லுக் காகத் தாவுகிறது என்று கற்பனை செய்ததுதான் அற்புதம்.

## 65. தமிழுக்குப் பரிசளித்த தெய்வம்

உலகத்திலுள்ள எல்லா மொழிகளுக்கும், பாரத நாட்டு மொழிகளுக்கும் ஒரு முக்கியமான வேறுபாடுண்டு. பாரத நாட்டின் ஒவ்வொரு மொழியும் தெய்வீகத்தோடும் ஒழுக்கம், அறம் முதலிய சமயக் கோட்பாடுகளோடும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. அதுவும் தமிழ் மொழிக்கும் தெய்வீகத் தன்மைக்கும் மிக நெருக்கமான உறவுண்டு. அரசியலில் ஈடுபட்டிருக்கிறவர்களின் குழப்பங்கள் இந்தத் தலைமுறையில் தமிழிலிருந்து தெய்வீகத்தைப் பிரித்துவிட முயல்கின்றன. தெய்வத் தன்மையிலிருந்து பிரிந்தால் தமிழ் மணமற்ற பூவாகிவிடும்! தமிழ் மொழியில் நமக்கு எவ்வளவு அக்கறை உண்டோ, அவ்வளவு அக்கறை சமய ஒழுக்கங்களிலும் அறங்களிலும் இருக்க வேண்டும்.

தமிழ் மொழியால், ஊமையான குமரகுருபரர் வாய் பெற்றார், சம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கினார் என்றெல்லாம் அற்புதங்கள் பழைய காலத்தில் நடந்ததாகக் கேள்விப்படுகிறோம். இப்போது அற்புதங்களை ஏன் பார்க்க முடிவதில்லையென்றால் அதற்குக் காரணம் உண்டு.

பழைய தலைமுறையில் மொழியைத் தெய்வமாக வணங்கினோம்! அதில் தெய்வத் தன்மை அமைந்து அற்புதங்களை விளைத்தது. இப்போது வாழ்வதற்கான சாதாரண கருவியாகத் தமிழ் மொழியை எண்ணிவிட்டோம். அதனால் மொழியும் சாதாரணமாகிவிட்டது. வயிற்றுக்குச் சோறு, உடலுக்கு உடை, ஆசைக்குச் செல்வம் என்பதுபோல் மொழியும் ஒரு தேவையாகிவிட்டது. ஆனால் அந்த நாளில், அது தெய்வத்தின் ஒலி வடிவமாக மதிக்கப்பட்ட தலைமுறையில் நடந்த அற்புதத்தை இங்கே காணலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில் சோழ நாட்டில் திருக்கடவூர் என்ற சிவத்தலத்தில் அபிராமிபட்டர் என்ற அடியார் ஒருவர் இருந்தார். அவர் உள்ளம் அன்பு மயமானது. அருள் பழுத்த கவிதைகளை இயற்றும் இயல்பு அவருக்கு உண்டு. தாம் எதைச் செய்கிறாரோ, அதைப் பிடிவாதமாகச் சாதித்து வெற்றி பெறும் தர்க்க சாத்திரத்தில் அவருக்கு இணையற்ற திறமை உண்டு. அவருடைய காலத்தில் தஞ்சாவூரை ஆண்டுவந்த சரபோஜி மன்னரிடத்தில் அமாவாசை நாளைப் பௌர்ணமி என்று கூறிவிட்டுத் தம் திறமையால் இறுதிவரை தவற்றை ஒப்புக் கொள்ளாமல் வாதிட்டு வெற்றிக் கொடி நாட்டினார் அவர்.

திருக்கடவூரில் வாழ்ந்த ஆதி சைவர்களுள் ஒருவராகிய அபிராமிபட்டர், அவ்வூர் அபிராமி அம்மன்மீது இணையற்ற பக்தி செலுத்தி வந்தார். இறைவியை நினைந்து நினைந்து உருகி அன்பு முதிர்ந்த அவர் உள்ளத்தில் தியானங்கள் பழுத்தன. 'அபிராமியந்தாதி' என்று ஒரு பிரபந்தத்தை இயற்றினார் அவர். ஒவ்வொரு பாடலும் ஒரு அருட்கனியாகக் கனிந்திருந்தது. புலன்களைத் தேனீக்களாக்கி ஆன்மக் கூட்டில் திரட்டிய தேனாகிய அன்பையே கவிதைகளாகப் பாடியிருந்தார் அவர்.

கோவிலில் அம்பாளின் திருமுன்பு நின்றுகொண்டே அவர் அந்தப் பாடல்களை ஒவ்வொன்றாகப் பாராட்டி அரங்கேற்றினார். பாடும்போது அபிராமிபட்டரின் உடலும் உள்ளமும் தன் வசத்திலேயே இல்லை. உள்ளம் நெக்குருகி மெய்சிலிர்த்துப் பக்திப்

பரவசமாகி உடம்பையே மறந்து உடம்பே ஒளிமயமாக மாறிப் பாடிக் கொண்டேயிருந்தார். அவர் அப்போது இந்த உலகத்திலேயே இல்லை. கைலாச சிகரத்தில் முக்கண் ணிறைவனுக்கு அருகில் வீற்றிருக்கும் உமாதேவியின் காலடியில் உட்கார்ந்து சிறு குழந்தையாய் மாறி மழலைக் குரலில் கதறிக் கொண்டிருப்பதுபோல் அவர் மனத்தில் ஒரு பிரமை ஏற்பட்டது. கண்களை மூடியவாறே நின்று கொண்டு தியான பரவச நிலையில் ஒவ்வொரு பாடலாகப் பாடிக் கொண்டிருந்த அவருக்கு மானசீகமாக ஒரு தோற்றம் ஏற்பட்டது. உமாதேவி தம்முடைய பாடலுக்கு வியந்து தன் இரு செவிகளிலும் அணிந்திருக்கும் வைரத்தோடுகளைக் கழற்றிப் பரிசாக எறிவதுபோல் தோன்றியது அவருக்கு. உமாதேவி கழற்றி எறிந்த அந்த வைரத்தோடுகள் அவர்மேல் வந்து விழுகின்றன. 'தாயே! இந்த ஏழையின் பிதற்றலுக்கு நீ அளிக்கும் பரிசா இவை?' என்று கேட்கத் துடிக்கிறது அவர் நாக்கு. எல்லாம் மானசீக மாகத்தான்; உண்மையாக இல்லை. அவர்தான் தியானத்தால் மூடிய கண்களைத் திறக்காமல் பாடிக் கொண்டேயிருந்தாரே! பாடிக் கொண்டிருக்கும்போதே இது கனவுபோல் மனத்தில் தோன்றியது. அப்படி ஒரு தோற்றம்தான் வைரத்தோடுகள் உமாதேவியின் கைகளிலிருந்து வீசி எறியப்பட்டு வந்து விழுவது போல் ஒவ்வொரு கணமும் ஒரு மானசீக உணர்வு அவருக்கு ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது. அந்த உணர்வைச் சுமந்து கொண்டே அந்தாதியை ஒவ்வொன்றாகப் பாடியவாறு நின்றார் அவர்.

"விழிக்கே அருளுண்டு அபிராம
  வல்லிக்கு வேதஞ் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்
  டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்களே
  செய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்தும் கயவர்தம்மோ
  டென்ன கூட்டினியே."

(அபிராமி அந்தாதி)

என்ற பாட்டை அவர் பாடிக் கொண்டிருந்தபோது உண்மையாகவே அவர் உடம்பின் மேல் ஏதோ வந்து விழுந்ததை உணர்ந்து ஆச்சரியத்தோடு கண்களைத் திறந்தார்! என்ன ஆச்சரியம்! அம்பாளுடைய செவித்தோடுகள் இரண்டும் அபிராமி பட்டர் மேல் வீசி எறியப்பட்டு அவர் அருகில் கிடந்தன. உடல் சிலிர்த்தது அபிராமிபட்டருக்கு. அம்பாளை ஏறிட்டுப் பார்த்தார். அவள் செவிகள் இப்போது மூளியாக இருந்தன.

"தாயே! என்னைச் சோதிக்கிறாயா?" என்று அலறினார் அபிராமிபட்டர். "இல்லை! உன் தமிழுக்கு என் பரிசு இவை. ஏற்றுக் கொள்" என்று அவர் காதில் மட்டும் கேட்கும் ஓர் இனிய குரல் ஒலித்து ஓய்ந்தது. அந்தத் தெய்வீகத் திருக்குரலைக் கேட்ட மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தபடியே நின்றார் அபிராமிபட்டர்.

## 66. தேசத் தொண்டர் சீற்றம்

சில ஆண்டுகளுக்கு முன்னால் மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையத்துக்கு அருகிலுள்ள அனுமந்தன்பட்டி என்னும் சிற்றூரில் சிறந்த தேசத் தொண்டர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அந்த நாளில் தேசப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்ற தியாகிகளில் அவரும் ஒருவர்.

'அனுமந்தன்பட்டி கிருஷ்ணசாமி ஐயங்கார்' என்று அவருடைய பெயரைச் சொல்லிய அளவில் மதுரை மாவட்டத்தின் மேற்குச் சீமையில் நன்றாகத் தெரிந்து கொள்ளுவார்கள். அவர் தேசத் தொண்டர் மட்டுமல்லர். சிறந்த கவிஞர். பரம்பரைப் பாவலர்கள் பலர் பிறந்த மரபில் வந்தவர். நினைத்த அளவில் தாம் நினைத்த கருத்தைப் பாட்டாகச் சொல்லும் திறமை அவருக்குண்டு. இராமாயண வெண்பா, செம்பை நாற்பது போன்ற கவிதை நூல்களையெல்லாம் அவர் இயற்றியிருக்கிறார்.

தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட குற்றத்துக்காக அப்போது ஆண்டு வந்த அந்நிய அரசாங்கம் அவரைக் கைது செய்து கடலூர் சிறையில் கொண்டுபோய் வைத்தது. அதே சிறையில் நாட்டு விடுதலைப் போரில் குதித்த வேறு சில தேசத் தொண்டர்களும் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 'கல்கி' சதாசிவம் அவர்களும் ஒருவர்.

தமிழ்ப் பாவலரான அனுமந்தன்பட்டி ஐயங்காரவர்கள் சிறையில் இருந்தது எல்லாத் தேசபக்தர்களுக்கும் ஒரு வகையில் நல்ல பயனை அளித்தது. தமிழ் இலக்கியத்தைப் பற்றி அவர் சுவையான செய்திகள் பலவற்றைக் கூறி, எல்லோருடைய நேரத்தையும் பயனுள்ளதாக்குவார். அவரால் சிறையில் தமிழ் மணம் கமழ்ந்தது. இதனால் சிறையில் இருப்பதையே மறந்து ஒரு குடும்பமாக வாழ்வதுபோல் கடலூர் சிறையில் நாட்களைக் கழித்தார்கள் தேசபக்தர்கள்.

அந்தக் காலத்தில் கடலூர் சிறையில் இப்போதிருப்பது போன்ற வசதிகள் இல்லை. அதுவும் கைதிகள் தேசபக்தர்கள் என்று தெரிந்தால் கொடுமை அதிகம்.

ஒருநாள் காலையில் தேசபக்தர்களுக்கு உணவு கிடைக்க வேண்டிய வேளையில் கிடைக்கவில்லை. எல்லோரும் பட்டினி. 'செவிக்கு உணவு இல்லாத சமயத்தில் வயிற்றுக்கும் ஈயப்படும்' என்ற கருத்தின்படி ஐயங்கார் கம்பராமாயணம், திருக்குறள் என்று எதை எதையோ சுவையாகக் கூறி நண்பர்களின் பசியை மறக்கச் செய்வதற்கு முயன்றார். சிறிது நேரம்தான் அவருடைய முயற்சி வெற்றி பெற்றது. நேரம் ஆக ஆகப் பசி வயிற்றைக் கிள்ளியது. இலக்கியச் சுவை செவிகளில் ஏறவில்லை. பிறருக்கு இலக்கியச் சுவையூட்டிய ஐயங்காருக்கே பசி பொறுக்க முடியவில்லை. சிறைச்சாலை அதிகாரிகள் கவனிக்கிற பாடாயில்லை. தேசத் தொண்டர்களுக்குப் பசியும் கோபமும் அதிகரித்தன. சிறைக் காவலாளிகளை நோக்கிக் கூச்சலிட்டனர். போடுவதோ அறைகுறைச் சாப்பாடு. அதையும் நேரத்தோடு போடாமல் பசியை வளரவிட்டால் எப்படிப் பொறுக்க முடியும்? சிறையில்

கூப்பாடு வலுத்தது. சிறை வார்டன்வரை தகவல் போயிற்று. எல்லோருக்கும் ஒரே மனக் கொதிப்பு. பசியோடு கூடிய ஆவேசம் அந்தக் கொதிப்பை மேலும் வளர்த்தது. 'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்ற நிலையாகிவிட்டது. சிறை வார்டன் எமகிங்கரனைப் போல ஓடிவந்து நின்றான். அதட்டினான். "இப்படி அமளி செய்தால் இன்று முழுதும் உங்களைப் பட்டினி போட்டு விடுவேன்."

இந்த அதட்டலைக் கேட்டதும் எல்லோரும் 'கப்சிப்' என்று அடங்கிவிட்டனர். அதுவரை அடங்கிப் பசி மயக்கத்தோடு உட்கார்ந்திருந்த ஐயங்கார் பொங்கியெழுந்தார். சீற்றத்தோடு வார்டனைப் பார்த்தார். அவர் உதடுகள் துடித்தன. முகத்தில் ஆவேசம் படர்ந்தது. அடுத்த கணம் அவர் குரல் இடி முழக்கம்போல் ஒலித்தது. வார்டன் அந்த ஆவேசத் தமிழ்க் குரலுக்கு முன் கட்டுண்டு வெலவெலத்துப் போய் நின்றான். அவன் முகத்தில் ஈயாடவில்லை!

"பன்றியெனத் தின்று பணம்பறிக்கும் வெள்ளயர்கள்
இன்றெமக்குச் சிற்றுணவும் ஈயாது – துன்றுசிறை
இட்டுவருத்து கின்றீர் ஏதுக்கிந்த இழுவோலை
கிட்டும் நாளொன்று கெடீர்."

ஐயங்காருடைய பசியில் பிறந்த ஆவேசக் கவிதையைக் கேட்டு அயர்ந்துபோய் நின்ற வார்டனின் கன்னத்தில் அறைவதுபோல் மற்றொரு பாட்டும் முழங்கியது. வார்டன் பயந்து நின்றான்.

"ஏடா எமதன்னைக் கின்ன லிழைத்தகுடி
கேடா நெறியழித்த கீழ்மகனே–வாடாத
பேரறவாள் கொண்டு குதித்தார் பீடா ரிளந்தமிழர்
போடா இனிவிரைந்து போ!"

பாட்டிலுள்ள ஒவ்வொரு 'டா'வும் கன்னத்தில் அறைவது போலவே இருந்தது. அடுத்த சில விநாடிகளில் உணவு வந்தது. வார்டனைப் பார்த்து அந்தத் தேசத்தொண்டர் பாடிய பாடலில்

தேசீய எழுச்சி மட்டும் இல்லை! தமிழின் எழுச்சியும் இருக்கிறது. இப்படி எத்தனையோ தேசத் தொண்டர்கள் பட்ட துன்பங்களின் பயனான உரிமை வாழ்வைத்தான் நாம் சுதந்திரமாக அனுபவிக்கிறோம்.

## 67. எரிந்த படைப்பு

வைக்கோற் படைப்புப் பார்த்திருக்கிறீர்களா? நெல் அறுவடையாகிக் களத்தில் அடியுண்டபின் மீதமுள்ள பயிர்த் தாள்களை வெயிலில் காயச் செய்து சிறிய குன்றுபோல் படைப்பாக வேய்ந்துவிடுவார்கள். நாட்டுப்புறங்களிலும், தமிழகத்துச் சிற்றூர்களிலும் இத்தகைய படைப்புக்களைக் காணலாம். வீட்டுக் கொல்லைப்புறங்களிலும், பொதுக் களங்களிலும், சிற்றூர்களுக்கே அழகு தருவனபோல் இத்தகைய வைக்கோற் குன்றுகள் தோன்றும். மஞ்சள் பொன் நிறத்துக்குச் சிறிது மங்கலாக இந்த வைக்கோலுக்கென்றே ஒரு நிறம் உண்டு.

இவற்றை 'வைக்கோற் புரி' என்றும் சில பகுதிகளில் வழங்குகிறார்கள். வைக்கோற் புரிகள் தீப்பற்றி எரிந்தாலும் சாம்பல் ஆனபின்பு சரிந்து தூளாகிச் சாய்வது இல்லை? எரிவதற்கு முன் தாம் எந்த வடிவத்தில் இருந்தனவோ அதே வடிவில் நிறம் மட்டுமே எரிந்து கருகித் தோன்றும். அவ்வாறு தோன்றும்போது உள்ளே அனல் இருப்பது வெளியில் தெரியாது. ஆனால் எதைக் கொண்டாவது தாக்கினால் பஞ்சு அமுங்குவதுபோல் அமுங்கித் தூளாகித் தரை மட்டத்தில் புழுதியாகக் குவிந்துவிடும்.

மரிந்த வைக்கோற் படைப்பின் இந்த நிலையைத் தன் வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட துன்பங்களுக்கு உவமையாகச் சொல்லிக் கொள்கிறான் ஒரு தமிழ்ப் புலவன். துன்பங்கள் என்னும் தீக்கொழுந்துகள் பற்றி எரித்த பின்னும் தான் சரிந்து சாய்ந்துவிடாமல் நிற்பதை எரிந்துபோன வைக்கோற் படைப்புக்கு ஒப்பிடுகிறான் புலவன். எரிந்து முடிந்த வைக்கோற் புரியை எங்கேயாவது எப்போதாவது அந்தப் புலவன்

பார்த்திருக்க வேண்டும். அது நெருப்புக்கு இரையாகிக் கரிந்து வலுவிழந்த பின்னும் சரியாமல் உருவிழக்காது நிற்கும் காட்சி அவன் சிந்தனையைத் தூண்டியிருக்க வேண்டும். நினைவுகளும் தன்னம்பிக்கையும் அழிந்து, எரிந்து, மனமும் உடம்பும் வெறுங் கூடாகி என்ன பலத்தினால் நிற்கிறோமென்று தெரியாத ஏதோ ஒரு பலத்தினால் நிற்கும் அப்பாவி மனிதனுக்கு இந்த வைக்கோற் புரியின் எரிந்த நிலையை உவமை சொல்ல வேண்டும் என்று அப்போது அந்தத் தமிழ்ப் புலவன் நினைத்திருப்பான். ஆனால் தன் வாழ்விலேயே அப்படி ஒரு நிலை வருமென்று அவன் அன்று எதிர்பார்த்திருக்க முடியாது.

உலகத்து வாழ்க்கையில் நினைத்தவர்க்கு நினைத்தபடியா எல்லாம் வருகிறது? சுகத்துக்கு ஆசைப்பட்டால் துக்கம் வருகிறது. 'வேண்டாம்' என்கிறவனுக்கு எல்லாம் கிடைக்கிறது. வேண்டுமென்று தவிப்பவனுக்கு ஒன்றுமே கிடைப்பதில்லை. கொஞ்சம் சிந்திக்க ஆரம்பித்தால் உலகத்துக்கு உள்ளே இருக்கிற வேடிக்கைகளையெல்லாம்விட உலகமே ஒரு பெரிய வேடிக்கைதான்.

'எரிந்த வைக்கோற்புரி' உவமையை எதற்காவது கூறலாமென்று நினைத்து வைத்திருந்த புலவன் அதைத் தன் வாழ்வுக்கே கூறிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த ஆண்டின் கோடையில் அந்தப் புலவனுடைய ஊரில் கொடுமையாகத் தோன்றிப் பரவிய அம்மை நோயாலும், அதைப்போன்ற வேறு சில கொள்ளை நோய்களாலும் அந்தப் புலவனுடைய தாய், தந்தை இருவரும் அடுத்தடுத்து இறந்து போனார்கள். ஊரில் உள்ள அவனுடைய உறவினர்களிலும் பலர் இறந்து போனார்கள். மனிதர்களை மரணம் கொள்ளை அடித்தது. மனிதர்களைக் கொள்ளையடிப்பதுபோல் வாரிக்கொண்டு போவதனால்தான் அம்மைக்குக் கொள்ளை நோய் என்று பெயர் ஏற்பட்டது போலும்! கொள்ளை நோயில் அவ்வூரும் சீரழிந்தது.

ஊரில், கோவிலிலுள்ள சிலைகளைத் தவிர மனிதர்கள் யாரையும் விட்டு வைக்கவில்லை அந்த நோய். நல்வினைவசமாகப்

*புலவன் நோயிலிருந்து பிழைத்துவிட்டான். ஆனால் பிழைத்து என்ன பயன்? தந்தை, தாய், சுற்றத்தார் எல்லோரும் மாண்டபின் ஊர் ஊராகவா இருக்கும்? சுடுகாடாகத் தோன்றியது. பொலி விழந்துபோன ஊரில் தெருவுக்கு நேரே பொலிவிழக்காமல் இருந்த சிவன் கோவிலைப் பார்த்தான் புலவன். சுடலைக்குப் போய் ஆடி மகிழும் கடவுள், அங்கே போவதற்குச் சோம்பல் கொண்டு தான் இருக்குமிடத்தையே சுடலையாக்கிக் கொள்ள முயன்றது போலிருந்தது ஊர். எங்கும் அழிவு, எங்கும் அவலம். கோவிலிலிருக்கும் சிவபெருமானின் கண்பட்டுப் பட்டுத்தான் ஊர் அப்படியாகிவிட்டதோ என்று கடவுள் மேலேயே வெறுப்பு வந்தது புலவனுக்கு. அந்த ஊர்ச் சிவபெருமானுக்கு ஆபத்சகாயன் என்று பெயர். ஆனால் அவன் திருவருள் என்னவோ ஆபத்துக்குச் சகாயம் செய்யவில்லை. 'முன்பு கடல் நஞ்சைக் குடித்த சிவபெருமான் அவற்றை இப்போது நாட்டில் உமிழத் தொடங்கி விட்டானோ' என்று சினம் கொண்ட புலவன் வஞ்சப் புகழ்ச்சியாக ஒரு பாட்டுப் பாடினான்.*

“தந்தைபோய்த் தாய்போய்த் தமர்போய்என் சுற்றமும்போய்
வெந்த புரியாகி விட்டேன் – முந்தவே
ஆழாழி நஞ்சுண்ட ஆபத் சகாயனெனும்
பாழாவான் கண்ணேறு பட்டு.”

*துன்பம் எரித்து அழித்த பின்பும் தோற்றமழியாது தான் நிற்கும் நிலைக்கு எரிந்த வைக்கோற் படைப்பை உவமை கூறிய அழகுக்கு ஈடு ஏது? எத்தனை பொருத்தமான உவமை இது!*

## நா. பா. வின் முத்துக்களில் சில

| | ரூ. |
|---|---|
| ■ கலித்தொகை பரிபாடல் காட்சிகள் | 25.00 |
| ■ மகாபாரம் – அறத்தின் குரல் | 200.00 |
| ■ குறிஞ்சிமலர் | 140.00 |
| ■ பொன் விலங்கு | 175.00 |
| ■ பாண்டிமாதேவி | 250.00 |
| ■ மணிபல்லவம் | 330.00 |
| ■ துளசிமாடம் | 75.00 |
| ■ சத்திய வெள்ளம் | 150.00 |
| ■ மணிவண்ணன் கவிதைகள் | 68.00 |
| ■ பழந்தமிழர் கட்டிடக்கலையும் நகரமைப்பும் | 30.00 |

# தமிழ்ப் புத்தகாலயம்

ஃப்ளாட் எண் G3/8, மாசிலாமணி தெரு
பாண்டி பஜார், தி.நகர் சென்னை–600 017
✆ 434 5904

மின் அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

வெப் தளம் : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50megs.com